# தேனருவி நதியாகி...!



## 1

இனிமை! இனிமை! இனிமை!

பார்த்துக் கொண்டிருக்கும்போதே குப்பென்று எழுந்து நாலாபுறமும் பல நிறங்களில் தண்ணீர் பாய்ச்சி அடிக்கிற ஃபவுண்டன் போலவா?

கவியரசனால் மறக்கவே முடியவில்லை அந்தக் குரலை! எவ்வளவு இனிமை! ஆழம்! அழகு!

இன்று பிற்பகல் நடந்தது!

தவறுதலாக ஒரு அழைப்பு போனில் வந்தது.

"ஹலோ!" என்று அந்தப்புறம் ஒலித்த குரலைக் கேட்டவுடன் ஒரு நிமிடம் ஒன்றுமே ஓடவில்லை.

"பாட்டும் நானே! பாடலும் நானே! பாடலின்போது நடிகர் சிவாஜிகணேசன் கையசைத்தவுடன் உலகமே ஸ்தம்பித்து நின்றாற் போலக் காட்டுவார்களே அதே போல தன்னைச் சுற்றியிருக்கிற எல்லாமும் ஸ்தம்பித்து விட்டாற்போல உணர்ந்தான்.

குளிர்ந்த அருவி நீர் தன்மேல் பாய்ச்சப்பட்டாற் போல உணர்ந்தான்.

ஒரு நிமிடம் ஒன்றும் பேசவில்லை. மீண்டும் அந்தக் குரல்.

"ஹல...லோ..!" என்று ராகம் போடவும் நிலவுலகுக்கு வந்தான்.

"மேடம்! சுரேஷ் இருக்கானா?"

"சுரேஷா? அப்படி யாரும் இல்லையே!" என்றது குரல்.

"ஓ..! சாரி.. மேடம்.. ராங் நம்பர்" என்றான். தொடர்பைத் துண்டித்துக் கொண்டான்.

துண்டித்துக் கொண்டதற்குப் பிறகுதான் தோன்றியது 'அவ்வளவு சீக்கிரம் பேச்சை முடிக்காமல் இன்னும் ஏதாவது ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசியிருக்கலாமோ.. இந்த மாதிரிக் குரல்கள் கிடைப்பது எவ்வளவு கடினமான விஷயம். இப்படிக் கோட்டை விட்டு விட்டோமே?' என்று தன்னையே நொந்து கொண்டான்.

"ஸார்..!" என்று வந்து நின்றாள் சுஷ்மிதா.



உலக அழகி சுஷ்மிதாவுக்கு நேரடி பிரதி அவள் என்று அவனுக்கு ஒரு எண்ணம். கவியரசனுக்கு அவள் உடுக்கிற விதம் பிடிக்காது. ஆனால், அவளுடைய உழைப்புப் பிடிக்கும்.

"சொல்லுங்க... சுஷ்மிதா?" என்றான்.

"ஸார்..! நெக்ஸ்ட் வீக்ல ஒரு கமிட்மெண்ட் பண்ணி யிருக்கீங்க..! இருபதாம் தேதி..." என்றாள்.

"ம்.. ம்.. ஞாபகம் இருக்கு? ஏற்பாடு ஆரம்பிச்சிட்டீங் களா?"

"ஸார்! அந்த மாடல் பொண்ணு ரொம்ப என்னமோ மக்கர் பண்றாப்ல..." என்று கொஞ்சினாள் சுஷ்மிதா.

"சரி.. நீயே.. மாடலா நடிக்கறியா?" என்றான்.

"இந்தக் கிண்டல்தானே வேண்டாங்கறது" என்றாள் சுஷ்மிதா.

சட்டென்று அவனுக்குத் தோன்றியது. இந்த யோசனை கூட நன்றாகத்தான் இருக்கிறது. சுஷ்மிதாவுக்கென்ன? நன்றாகத்தான் இருக்கிறாள்.

"ஹலோ! சுஷ்மிதா... நான் நிஜமாத்தான் சொல் றேன்!" என்றான்.

"ஸார்! அவ்வளவுதான்..! என் ஹஸ்பெண்ட் ருத்ரமூர்த்தி இருக்காரே.. சிவதாண்டவம் ஆடிடுவாரு" என்றாள்.

கவியரசன் முகவாய்க்கட்டையை நீவிக் கொண்டான்.

"உங்க ஹஸ்பெண்ட் நம்பர் குடுங்க. நான் பேசறேன் இன்னைக்கு... லஞ்ச் அவரோட..." என்றான்.

சிரித்தான்.

எப்போதுமே கவர்ச்சிகரமாகச் சிரிக்கிற அவளது சிரிப்பைப் பார்க்கிற யாருமே ஒரு நிமிடம் வேலை ஓடாதது போல் நிற்பதைப் பார்த்திருக்கிறாள்.

"சார்! நான் நம்பர் தரேன்! ஆனா... என்னை மாட்டி விட்றாதீங்க!" என்றாள். குரலில் கொஞ்சம் பயமும் கலந்திருந்தது!

ஆனால்!

பிற்பகல் கணவன் வந்தபோதும் கவியரசனின் அறையில் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் பேசிய பின்பு அவன் வெளியே வந்தபோது மலர்ந்த முகத்தோடு வந்ததைப் பார்த்து கஷ்மிதாவுக்கு ஆச்சரியமான ஆச்சரியம்.

கணவன் விடைபெற்றுப் போனதற்குப் பின் ஆச்சரியமாக முதலாளியிடம் விசாரித்தாள். அவன் நடந்ததைச் சொன்னான்.

கஷ்மிதாவின் கணவன் சுரேந்திரன் கவியரசனின் அறைக்கு வந்தபோது தயக்கத்துடன் வந்தான். தனது சுழல் நாற்காலியை லேசாய் சுழற்றியபடி கம்ப்யூட்டரில் ஆழ்ந்திருந்த கவியரசன் எழுந்து நின்று கைகொடுத்து வரவேற்கவும் கொஞ்சம் திணறிப் போனான்.

பரஸ்பரம் விசாரிப்புக்குப் பின்பு "சார்! என்ன விஷயமா வரச் சொன்னீங்க?" என்று ஆர்வமாக விசாரித்தான் சுரேந்திரன்.

கவியரசன் சிரித்தான்!

"சொல்றேன்! சொல்றேன்! எல்லாம் நல்ல விஷயம் தான்" என்றான்.

மறுபடியும் இரண்டு மூன்று தொலைபேசி அழைப்புகள் பேசி முடித்துவிட்டு,



"வாங்க..! சாப்பிட்டுட்டே பேசலாம்!" என்று தனது தனியறைக்கு அழைத்துப் போனான்.

தேவைப்பட்ட நேரங்களில் சற்றே ஓய்வெடுப்பதற்காக ஒரு அறையும், சாப்பிடுவதற்காக ஒரு தனி டைனிங் டேபிளுடன் கூடிய ஒரு சாப்பாட்டறையும் இருந்தது.

ஓவல் வடிவத்தில் இருந்த அந்தப் பெரிய டைனிங் டேபிளில் சுரேந்திரனை அருகில் அமர்த்திக் கொண்டான்.

"சார்! நான் சொல்லப் போற விஷயத்தை மனசுல வாங்கிக்குங்க" என்றான்.

"சொல்லுங்க... சார்!" என்றான்.

"சார்! உங்க வைஃப் கஷ்மிதாவை அடுத்த அட்வர்டைஸ்மெண்ட்டுக்கு மாடலா போடலாமான்னு நினைக்கறேன்" என்றான்.

சுரேந்திரன் கொஞ்சம் அதிகமாகவே அதிர்ந்து போனான்.

"சார்! ரொம்ப அதிர்ச்சியாப் பாக்காதீங்க! எங்க அட்வர்டைஸ் ஏஜென்சியை பத்தி உங்களுக்குத் தெரியுமில்ல."

"அது... ஓகே!" என்றான்.

"அதான்... சார்! எங்ககிட்டே ஒரு மாடல் இருக்காங்க! ஆனா... ரொம்பப் பிரச்சினை பண்றாங்க... யாராவது ஒரு ஏஜெண்ட்டைப் பிடிச்சு... கஷ்டம்... சார்..." என்றான்.

"சார்! மாடல்னா... எங்க மதர் ஒத்துக்க மாட்டாங்க. கஷ்மிதாவோட ஃபாமிலியிலயும்... ஒத்துக்க மாட்டாங்க..." என்றான் தயக்கத்துடன்.

சுரேந்திரன் சொல்வதைக் காதில் வாங்கி மனதில் இறக்கினாற் போல் சற்று நேரம் மௌனம் காத்தான் கவியரசன்.

மறுத்தால் எங்கே இருக்கிற வேலைக்கு ஆபத்து வந்து விடுமோ என்ற கவலையில் ஆழ்ந்தான் சுரேந்திரன். நல்ல சம்பளம் கொடுத்தான். அந்த சம்பளத்தில்தான் வாழ்க்கை லகுவாக ஓடிக் கொண்டிருந்தது.

'இனிமேல் வேறு இடத்தில்.. வேலை.. தேடி..!' என்று யோசிக்க ஆரம்பித்தான். அதைப் புரிந்து கொண்டவன் போல அழுத்தமான மௌனத்தைச் சற்று நீட்டித்த கவியரசன் பிறகு வாய் திறந்தான்.

''சார்! இந்தப் படத்துல ஒரு குடும்பத் தலைவியாத் தான் வர்றாங்க.. ரொம்ப டீசன்டான விஷயம்தான். அதனால ஒத்துக்கலாம். அது மட்டுமல்ல.. இந்த மாதிரி டீசன்ட்டான.. விஷயங்களுக்கு மட்டும் மாடலிங் செய்தா.. போதும்.. எங்க கம்பெனியில எடுக்கிற விஷயங்களுக்கெல்லாம் மட்டும் யூஸ் பண்ணிக்கிறேன்'' என்றான்.

கொடுக்கப் போகிற தொகையைச் சொன்னான். தொகையைக் கேட்டவுடன் சுரேந்திரனுக்கு சப்ஸம் தோன்றியது. கூடவே கவலைகளும் தோன்றின.

''அதான், சார் விஷயமே! அவ்வளவு பணம்ன்னு வர ஆரம்பிச்சா இன்னும் இன்னும்ன்னு ஆசை வரும். உங்க கம்பெனின்னா ஓ.கே.! ஆனா.. அதே மாதிரி வேற கம்பெனிகளுக்குப் போனா.. எங்க குடும்ப வாழ்க்கை பாதிச்சாக்கூடாதில்லே...'' என்றான்.

கவியரசன் மௌனமாக உள்வாங்கினான்.

''சார்..!'' என்றான் சுரேஷ். பிறகு தழுதழுத்த குரலில் ''கஷ்மிதாவை என்னால இழக்க முடியாது..'' என்றான்.

கவியரசன் முகம் மலரப் புன்னகைத்தான்.

''ஐ கேன் அண்டர்ஸ்டாண்ட்'' என்றான். மறுபடியும் முகவாய்க்கட்டையை நீவிக் கொண்டு யோசித்தான். பிறகு சொன்னான்.

''சரி..! இப்பவாவதுதானே பிரச்சினை சால்வ்ட்..! அந்த வருஷத்துக்கு அக்ரிமெண்ட் போட்டுக்றேன். உங்களுக்கும் நல்லது. எங்களுக்கும் பிரச்சினை சால்வ்ட். வேற கம்பெனிக்கும் போக முடியாது'' என்றான். இன்னும் சற்று நேரம் கவியரசன் பேசிய விதத்தில் சுரேந்திரன் மறுக்க முடியாத சூழ்நிலையை மட்டுமல்ல மகிழ்ச்சியாகவே ஒத்துக்கொள்கிற மாதிரியும் செய்தான்.

கணவன் வெளியே வந்தபோது சிரித்துக் கொண்டே வருவதைப் பார்த்தவுடன் விசாரித்த கஷ்மிதாவிடம் முழுப் பேச்சு வார்த்தையையும் சொல்லாமல் விஷயம் சாதகமாக முடிந்ததைப் பற்றி மட்டும் சொன்னான்.

கஷ்மிதா சிரித்தாள்.

''தெரியும்.. சார்! நீங்க பேசினாக் கரைச்சிருவீங்கன்னு..'' என்றாள்.

மகிழ்ச்சியாகச் சிரித்தார்கள்!

தனது அறையை விட்டுப் போக யத்தனித்த கஷ்மிதாவை மறுபடியும் அழைத்து கவியரசன் சொன்னான்.

''கஷ்மிதா! உங்க ஹஸ்பெண்ட் உன்னை ரொம்ப ரொம்ப நேசிக்கிறான். யு ஆர் லக்கி..'' என்று.

லேசாக முகம் சிவக்கத் தலையசைத்து விட்டு நகர்ந்தாள்.

இன்று பகல் நடந்த அந்த நிகழ்வுகள் எல்லாம் நினைவு வர எழுந்து அமர்ந்து கொண்டான்.

எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் தனது பேச்சில் கரைத்து விடுகிற சாமர்த்தியம் அவருக்கு உண்டென்று எல்லாரும் பேசிக் கொள்வார்கள். அப்படிப்பட்டவனுக்கு எல்லோரையும் தனது விருப்பத்துக்கு ஆட்டிப் படைக்கிற தானே மயங்கிப் போய்க் கிடப்பது குறித்து ஆச்சரியமாக இருந்தது.

மணியைப் பார்த்தான்!

இரவு மணி பனிரெண்டு!

இப்படியெல்லாம் தூக்கம் வராமல் தவித்தது எப் போது? காலேஜ் படிக்கும்போது ஏதோ ஒரு பெண்ணைப் பார்த்தபோது இரண்டு நாள் இந்த மாதிரி இருந்தது. அதுவும் கூட மூன்றாம் நாளே தெளிந்து விட்டது.

அதற்குப் பிறகு..!

இப்போதுதான்!

அனிச்சைச் செயல் போல செல்போனை எடுத்தான்.

சுழற்றினான்!

அந்தப் பக்கம் அதே குரல்! குறும்பாகப் புன்னகைத்த படி சொன்னான்.

"ஹலோ! சுரேஷ்.. டேய்.. என்னடா.. கிடைக்கவே மாட்டேங்கறே.." என்றான்.

"ஹலோ! இது சுரேஷ் நம்பர் இல்லே!"

"ஓஹோ.. அப்புறம்.. வேற யாராம்..?"

அந்தப்புறம் இருந்து வந்த பதிலில் வெகுவாக அதிர்ந்து போனான்.

முகமெல்லாம் முத்து முத்தாக வியர்வைத் துளிகள் அரும்பியது.





## 2

"டேய்! என்னங்கடா.. இப்படிக் கடுப்பேத்தறீங்க! நீங்க போட்டிருக்கிற சென்டெல்ல உயிரே இல்லைடா! சென்டன்னு நச்சுன்னு நெஞ்சுக்குள்ள இறங்கணும். விஷுவலாவும் இஃபெக்டிவ்வா இருக்கணும். இத்தனை யும் நடக்கணும்னா ஜிங்கிள்ஸ் நல்லா இருக்கணும்டா.." என்றான் கவியரசன் கடுப்பாக.

உதவியாளர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்து விழித்துக் கொண்டிருந்தார்கள்.

இரண்டே நிமிடங்கள் ஓடக்கூடிய விதத்தில் ஒவ் வொரு விளம்பரமும் அமைய வேண்டும். அது சொல்கிற செய்தி அந்தப் பொருளைப் பற்றிய விஷயத்தை மனதில் பதிய வைக்க வேண்டும்.

'உஜாலாவுக்கு மாறிட்டோம்' என்று சொல்கிற வாக் கியம் எப்படி அன்றாட வாழ்க்கையில் சாதாரணமாக வேறு ஒரு விஷயத்தைச் சொல்கிற போதும் கூட பரிமாறிக் கொள்ளப்படுகிறதோ அதுபோல் தனது விளம்பர வாச கங்கள் அமைய வேண்டும் என்று நினைப்பான் கவியரசன்.

பெரிய பெரிய நிறுவனங்கள் இருக்கக் கூடிய துறை யில் அவனது நிறுவனம் அவனது வித்தியாசமான சிந்தனைக்காகவே ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு விளம்பரம்!

அம்மாவும், அப்பாவும் உறங்கிக் கொண்டிருக்கையில் ஒரு குழந்தை நள்ளிரவில் எழுந்து பாத்ரூமுக்குப் போகிறது. குழாயில் இருந்து தண்ணீர் ஒழுகுகிற சத்தம் கேட்டு அம்மாவும், அப்பாவும் வந்து எட்டிப் பார்க்கிறார்கள். குழந்தை சோப் பவுடரை சிறிய பக்கெட்டில் போட்டு நுரை தள்ள வைத்துக் கொண்டிருக்கிறது. அம்மா கண்ணாலேயே என்ன செய்யறே என்று கேட்க குழந்தை கொள்ளை அழகாய்ச் சிரிக்கிறது.

"ம்மா! நீதான்.. என்னைத் துவைக்கவே விடமாட்டேங்கறே?" என்று சொல்கிறது.

"இல்லடா! சோப் பவுடர் கை எரியும்டா.." என்று அம்மா அணைத்துக் கொஞ்ச..

அப்பா சிரிப்புடன் குழந்தையும், மனைவியும் அணைத்துக் கொண்டு செல்கிறார்.

"கவலையே வேண்டாம்! நான் இனிமே.. சோப் பவுடர் வாங்கித் தரேன். கை எரியாது சுகமான வாசனை.. பாப்பாவுக்கும் சந்தோஷம். அம்மாவுக்கும் சந்தோஷம்" என்று.

"பாப்பாவுக்கும் சந்தோஷம். அம்மாவுக்கும் சந்தோஷம். குழந்தை குறும்பு செய்தால்.. கூட!" என்று விளம்பர வாசகம் அமைத்தார்கள்.

அந்த வாக்கியம் மிகவும் பிரபலமாகிப் போனது. முழுக்க முழுக்க கவியரசனின் சிந்தனையில் இருந்து உதித்தது. அதற்குப் பிறகு கவியரசனின் கம்பெனிக்கு மவுசு கூடிவிட்டது. அதுபோக அவன் வேறு பல பணிகளும் செய்து கொண்டிருந்தான்.

இன்றைக்கு எதுவுமே ஓடவில்லை!

எப்போதும் கவியரசன் கோபித்துக் கொள்கிற விதத்துக்கும், இன்றைக்குக் கோபித்துக் கொள்கிற விதத்துக்கும் ஒரு வித்தியாசம் இருந்தது.



திட்டுவதில் கூட அவனது பாணி வேறாக இருக்கும். கன்னா பின்னாவென்று திட்டமாட்டான். கேலிப் பேச்சிலேயே சரி செய்வான்.

"டேய்! லண்டன் மியூசியத்திலிருந்து அழைப்பு வந்திருக்குடா..." என்பான்.

"எதுக்குண்ணா?" என்று உதவியாளர்கள் கேட்டால் "உன் மூளையை பார்வைக்கு வைக்கிறார்களாம். ரொம்பக் கனமான மூளையில்லே.." என்பான்.

அவர்கள் புரியாமல் பார்ப்பார்கள்.

"பாதுகாப்பா.. யூஸ் பண்ணாத மூளையா வேணுமாம்" என்பான்.

குட்டு வாங்கியவனும் அசடு வழியச் சிரிப்பான்.

வேலை வாங்கி விடுவான். உதவியாளர்கள் சொல்வார்கள்.

"அண்ணா! வலிக்காம வேலை வாங்கறீங்க" என்று அவன் புன்னகையுடன் சொல்வான்.

"அப்பத்தாண்டா நேரகாம சம்பளம் குடுக்க முடியும்" என்பான்.

எத்தனை மாடல் பெண்களைப் பார்த்திருக்கிறான். மேக்கப்புடன் மட்டுமே அழகாக இருக்கிற பெண்கள். மேக்கப் இல்லாமலும் அழகாக இருக்கிற பெண்கள். வடிவமான பெண்கள்.

வடிவம் இல்லாமல் புத்திசாலித்தனமான பெண்கள். வடிவும் புத்திசாலித் தனமும் இணைந்த பெண்கள்.

பெரும்பாலும் இளம் பெண்களுடன்தான் அவன் வேலை செய்வது! அதனாலேயோ என்னவோ. பெண்களின் பால்

அம்மாவும், அப்பாவும் உறங்கிக் கொண்டிருக்கையில் ஒரு குழந்தை நள்ளிரவில் எழுந்து பாத்ரூமுக்குப் போகிறது. குழாயில் இருந்து தண்ணீர் ஒழுகுகிற சத்தம் கேட்டு அம்மாவும், அப்பாவும் வந்து எட்டிப் பார்க்கிறார்கள். குழந்தை சோப் பவுடரை சிறிய பக்கெட்டில் போட்டு நுரை தள்ள வைத்துக் கொண்டிருக்கிறது. அம்மா கண்ணாலேயே என்ன செய்யறே என்று கேட்க குழந்தை கொள்ளை அழகாய்ச் சிரிக்கிறது.

"ம்மா! நீதான்.. என்னைத் துவைக்கவே விடமாட்டேங்கறே?" என்று சொல்கிறது.

"இல்லடா! சோப் பவுடர் கை எரியும்டா.." என்று அம்மா அணைத்துக் கொஞ்ச..

அப்பா சிரிப்புடன் குழந்தையும், மனைவியும் அணைத்துக் கொண்டு செல்கிறார்.

"கவலையே வேண்டாம்! நான் இனிமே.. சோப் பவுடர் வாங்கித் தரேன். கை எரியாது சுகமான வாசனை.. பாப்பாவுக்கும் சந்தோஷம். அம்மாவுக்கும் சந்தோஷம்" என்று,

"பாப்பாவுக்கும் சந்தோஷம். அம்மாவுக்கும் சந்தோஷம். குழந்தை குறும்பு செய்தால்.. கூட!" என்று விளம்பர வாசகம் அமைத்தார்கள்.

அந்த வாக்கியம் மிகவும் பிரபலமாகிப் போனது. முழுக்க முழுக்க கவியரசனின் சிந்தனையில் இருந்து உதித்தது. அதற்குப் பிறகு கவியரசனின் கம்பெனிக்கு மவுசு கூடிவிட்டது. அதுபோக அவன் வேறு பல பணிகளும் செய்து கொண்டிருந்தான்.

இன்றைக்கு எதுவுமே ஓடவில்லை!

எப்போதும் கவியரசன் கோபித்துக் கொள்கிற விதத்துக்கும், இன்றைக்குக் கோபித்துக் கொள்கிற விதத்துக்கும் ஒரு வித்தியாசம் இருந்தது.



திட்டுவதில கூட அவனது பாணி வேறாக இருக்கும். கன்னா பின்னாவென்று திட்டமாட்டான். கேலிப் பேச்சிலேயே சரி செய்வான்.

"டேய்! லண்டன் மியூசியத்திலிருந்து அழைப்பு வந்திருக்குடா..." என்பான்.

"எதுக்குண்ணா?" என்று உதவியாளர்கள் கேட்டால் "உன் மூளையை பார்வைக்கு வைக்கிறார்களாம். ரொம்பக் கனமான மூளையில்லே.." என்பான்.

அவர்கள் புரியாமல் பார்ப்பார்கள்.

"பாதுகாப்பா.. யூஸ் பண்ணாத மூளையா வேணுமாம்" என்பான்.

குட்டு வாங்கியவனும் அசடு வழியச் சிரிப்பான்.

வேலை வாங்கி விடுவான். உதவியாளர்கள் சொல்வார்கள்.

"அண்ணா! வலிக்காம வேலை வாங்கறீங்க" என்று. அவன் புன்னகையுடன் சொல்வான்.

"அப்பத்தாண்டா நோகாம சம்பளம் குடுக்க முடியும்" என்பான்.

எத்தனை மாடல் பெண்களைப் பார்த்திருக்கிறான். மேக்கப்புடன் மட்டுமே அழகாக இருக்கிற பெண்கள். மேக்கப் இல்லாமலும் அழகாக இருக்கிற பெண்கள். வடிவமான பெண்கள்.

வடிவம் இல்லாமல் புத்திசாலித்தனமான பெண்கள். வடிவும் புத்திசாலித் தனமும் இணைந்த பெண்கள்.

பெரும்பாலும் இளம் பெண்களுடன்தான் அவன் வேலை செய்வது! அதனாலேயோ என்னவோ, பெண்களின் பால

ஏற்படக்கூடிய இனக்கவர்ச்சி அவனுக்கு ஏற்படவில்லை போலும்!

ஒருவேளை அவன் மனத்தைத் தாக்கக் கூடிய பெண் இன்னும் அவன் வாழ்க்கையில் வரவில்லையோ!

ஒன்று மட்டும் நிச்சயம்!

அவன் மனம் கவர்ந்து அவனோட வாழப் போகிற பெண்ணுக்குக் குரல் இனிமையாக இருக்க வேண்டும்.

அழகுன்னா சிவப்பு மட்டும்தான் அழகு என்கிற மாதிரி விஷயங்களில் அவனுக்கு நம்பிக்கையில்லை.

சில பெண்களிடத்தில் கண் பார்வை மனதை மயக்கும் வண்ணமாக இருக்கும்!

சில பெண்களிடத்தில் நடை, உடை, பாவனை சிறப்பாக இருக்கும்!

எல்லாவற்றையும் ரசிப்பான்! ஆனால் யாருமே அல்லது எதுவுமே ஏற்படுத்தாத பாதிப்பை அந்தக் குரல் அவனுக்குள் ஏற்படுத்தியிருந்தது! அந்தக் குரல் படுத்துகிற பாடுதான் இன்றைக்கு வேலையே ஓட மாட்டேன் என்கிறது என்று தெரிந்தது.

''அண்ணா! நீங்க இன்னைக்கு சரியில்லை! ப்ளீஸ்! நீங்க உங்க ரூமுக்குப் போங்க..! நாங்களே மண்டையை உருட்டி ஒரு விளம்பர வாசகம் கண்டு பிடிக்கிறோம்.'' என்றார்கள் அனில்குமாரும் பாவண்ணனும்.

''தொலைங்கடா!'' என்று சலித்தாற்போல் சொல்லி விட்டுத் தனது அறைக்கு வந்தான்.

ஏ.சி.யின் குளிர்ச்சி அவனுக்கு இதமாக இருக்கவில்லை. மாறாக டென்ஷனை அதிகப்படுத்தியது.



நேற்றிரவு வேர்த்துப் போனாற்போலவே இன்றும் வேர்த்துப் போனது.

என்ன வார்த்தை கேட்டு விட்டாள்? அந்தப் பெண்?!

பெண்ணா..! அவள்..!

எவ்வளவு ஆசையாகப் பேசினோம்!

நண்பர்கள் சொல்லக் கேட்டிருக்கிறான். ''டேய்! முதல்ல கோபப்படுவாங்கடா.. அப்புறம் படிஞ்சு வருவாங்கடா!'' என்று.

ஒவ்வொருவனும் ''எனக்கு நாலு பேர் கெல் பிரண்ட்ஸ்'' என்று ஏதோ பெண் பிரண்ட் ரேன்ஜுக்குப் பேசிக் கொள்வார்கள் அப்போதெல்லாம் அவனுக்குக் கோபம் வரும். கடுப்பாகச் சொல்வான்.

''ஆண்.. பெண் ஈர்ப்பு சாதாரண விஷயம்.. அதுக்கு ஏண்டா.. இவ்வளவு சாயம் பூசறீங்க?'' என்பான்.

''உனக்கென்னடா.. மச்சி! எப்பப் பாரு அழகான பொண்ணுங்களோடவே நடமாடறே!'' என்று ''பொறாமை'' படுவார்கள்.

'அதனாலதாண்டா..! எனக்கு அழகின் வசீகரமும் தெரியும். விஸ்லங்கங்களும் தெரியும்' என்று எண்ணிக் கொள்வான் சொல்ல மாட்டான்! அப்படிப்பட்டவனுக்கு நேர்ந்த அனுபவம்!

சொல்லவே கூடாது! இந்த மானக்கேட்டை மட்டும் யாரிடமும் சொல்லவே கூடாது. ஆனால் இதை இதோடு விடவும் கூடாது.

எப்படிக் கேட்டாள்!

''என்.. சார்! உங்களுக்கெல்லாம் வேற வேலையே கிடையாதா? இல்லே எங்களுக்குத்தான் வேற வேலை

இல்லையா? நேரங்காலம் தெரியாம.. தொல்லை பண்ணிகிட்டு.. இனியொரு தடவை போன் வந்துருச்சு.. மவனே! போலீஸ் கம்ப்ளெயின்ட்தான்!" என்று சொல்லிவிட்டு வெட்டி விட்டார்கள்.

அவமானத்தால் முகம் வாடிப்போனது கவியரசனுக்கு. பல்லைக் கடித்துக் கொண்டான்.

செல்லமாக வளர்ந்தவன்! ஆனால் அதற்காக சோம்பேறித் தனமாக இருந்தவனில்லை. தனது சொந்த முயற்சியில் இரண்டு மூன்று நிறுவனங்களை நிர்வகிக்கிறான்.

அப்படிப்பட்டவனைப் பார்த்துக் கடைசியாக அந்தப் பெண் கேட்ட கேள்வி அவனைத் துளைத்தெடுத்தது.

அந்த வார்த்தைகள்தான் இப்போதும் அவன் மனத்தில் ஓடியது.

ஜீரணிக்க முடியவில்லை! ஏதாவது செய்ய வேண்டும் என்றே தோன்றியது.

மணி பார்த்தான்!

பிற்பகல் இரண்டு மணி!

உதவியாளர் அந்தப் பெண்மணி எட்டிப் பார்த்தாள்.

"ஐயா! சாப்பாடு.. எடுத்து வைக்கலாங்களா..? அம்மா ரெண்டு மூன்று தடவை போன் பண்ணிட்டாங்க" என்றாள்.

"சாப்பிட்டாச்சா? சாப்பிட்டாச்சா?" என்று வீட்டில் இருந்து தொடர்ந்து போனில கேட்டாங்க.

அதைத் தவிர்க்கவாவது எதையாவது சாப்பிட வேண்டும் என்று எண்ணிக் கொண்டவன்.



"சரி.. எடுத்து வைங்க ஆயாம்மா!" என்றான் எழுந்தான்!

மறுபடியும் ஒரு முறை பேசி விளக்கம் சொல்லலாமா? என்று மனதில் ஒரு யோசனை தோன்றியது.

தன் மனத்தின் மீதே அவனுக்குக் கோபம் பெருகியது.

'என்ன மனசு.. இது? ரோஷம் கெட்ட மனசு? எவ்வளவு மோசமான கேள்வியைக் கேட்டிருக்கிறாள். அந்தக் கேள்வியை மட்டும் வேறு யாராவது எதிரில் இருந்து கொண்டு கேட்டிருந்தால் துவம்சம் செய்திருப்பான். இன்னும் போய் அந்தப் பாட்டிகிட்டே பேச்சு வார்த்தை வேண்டுமா?' என்று இன்னொரு மனசு எச்சரித்தது.

குழப்பத்தோடயே சாப்பிட்டான்! என்ன சாப்பிட்டான் என்று தெரியவில்லை. சாப்பிட்டு முடித்த பின் தான் நினைவு வந்தது. வீட்டில் இருந்து போன் வரும். "என்ன ஐட்டம் நல்லா.. இருந்துச்சு? சாப்பிடப் பிடிச்சுதா?" என்று.

சாப்பாடு முடித்து விட்டு கை கழுவி கடமைக்காக என்னென்ன ஐட்டம் இன்றைக்கு சாப்பிட்டிருக்கிறோம் என்று ஒரு முறை பார்த்துக் கொண்டான்.

மீண்டும் அறைக்கு வந்தவன்!

தனது நடத்தையில் தெரிந்த குழப்பம் அவனுக்கே எரிச்சலாக இருந்தது.

"சே! இது சரி வராது! போய் வேலையைப் பார்க்கலாம்.." என்று எழுந்தபோது அது நிகழ்ந்தது.

செல்போனில் மெசேஜ் வந்தது! அசிரத்தையாகப் படிக்க ஆரம்பித்தவனின் முகத்தில் 1000 வாட்ஸ் பல்பின் ஒளிபோல் வெளிச்சம் பரவியது. கடைசி வரியைப் படிக்கும் வரை! அந்த வரிகளில்..!

# 3

செய்தி ஆங்கிலத்தில் இருந்தது!

ஆர்வமாகப் படிக்கலானான்!

("ஐம் சாரி! அன்நெசஸரிலி ஐ ஹேவ் ஸ்கோல்டட் யு - ஐ டோண்ட் நோ ஹூ யு ஆர் ஐ டோண்ட் ஹேவ் எனி இன்டென்ஷன் ஆஃப் நோயிங் ஆல்ஸோ. ப்ளீஸ் டோண்ட் டிஸ்டர்ப் மி ஐ அம் ஃபிஃப்டி ஃபைவ் இயர்ஸ் ஓல்ட் அண்ட் ஐ அம் நாட் இண்ட்ரஸ்ட்டட் இன் எனி பிரண்ட்ஷிப்.)

ஐ அம் சாரி! தேவையில்லாமல் உன்னைத் திட்டி விட்டேன். நீங்க யாரோ எனக்குத் தெரியாது. தெரிந்து கொள்ளவும் எனக்கு விருப்பமில்லை. இனிமேல் என்னைத் தொல்லை செய்யாதீர்கள். எனக்கு ஐம்பத்தைந்து வயசு ஆகிவிட்டது. இந்த மாதிரி நட்புக்களெல்லாம் இனி எனக்குத் தேவையில்லை என்ற பொருளில் இந்த அந்த மெசேஜைப் படித்தவுடன் அவனுக்குக் குழப்பம் மேலிட்டது.

நண்பர்கள் சொல்லியிருக்கிறார்கள். சில இளம் பெண்கள் கூட இந்த மாதிரி மெசேஜ் கொடுப்பதுண்டு. தேடிக் கண்டு பிடித்துப் பழகுவதில் ஒரு சுவாரசியம் இருக்கட்டும் என்று நினைப்பார்கள் போலிருந்தது.

தனக்குள் சிரித்துக் கொண்டான்.



மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டே மேலும் கீழும் நடந்தான்.

வேறொரு இடத்தில்!

"எம்மா! உன்னை யாரு இந்த மாதிரியெல்லாம் மெசேஜ் குடுக்கச் சொன்னது என்று அந்தக் குறிப்பிட்ட ஒருவருக்கு மண்டகப்படி. அர்ச்சனை எல்லாம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

* * *

"டேய்! ப்ளீஸ்டா.. ராகவ்..! எனக்காக இதைச் செய் யேன்டா" என்று கேட்ட கவியரசனை வியப்பாகப் பார்த்தான் அந்த நண்பன் ராகவ்.

"டேய்! எப்படா... நீ இப்படியெல்லாம் ஆரம்பிச்சே?"

"எப்பவோ ஆரம்பிச்சேன். நீ இப்ப செஞ்சு தர முடியுமா.. முடியாதா?"

"இங்க பாரு! எனக்கொண்ணும் பெரிய பிரச்சினை யில்லே! உங்க குடும்பத்துலதான் பிரச்சினை வரும்!"

"ஆமா! குடும்பம்! அதை வேற ஏன்டா ஞாபகப்படுத் தறே! நானே எப்படா.. பிச்சுக்கலாம்ன்னுட்டு இருக்கேன்!"

"அதான்.. அந்தப் பாவம் வேற எனக்கு வேணுமாக்கும்?"

"என்னடா, பெரிய பாவத்தைக் கண்டீங்க! ஏதோ ஒரு நம்பர்ல லேடி வாய்ஸ் ரொம்ப ஸ்வீட்டா.. இருக்கு..! மறக்க முடியாமல் தவிக்கறேன். என் குரல் பார்ட்டிக்குத் தெரிஞ்சு போச்சு...! அதனால என் குரல் கேட்டாலே ஆஃப் பண் ணிடறாப்ல..! இல்லே.. கடிக்கறாப்ல...! நீ பேரு பேரு மட்டும் கண்டு பிடிச்சுக் குடுடான்னு கேட்டா. பெரிய பிகு பண்றே!"

"பிகு பண்ணலடா! உனக்கு இது தேவையான்னு பாக்கறேன்" என்றான்.

"தேவையா.. இல்லையாங்கறதை அப்புறம் பாக்கலாம். முதல்ல கண்டு பிடிப்போம்!" என்றான்.

"சரிடா.." என்றான் ராகவ். தன்னுடைய செல்போனிலிருந்து அழைத்தான்.

"ஹலோ..!" என்றான்.

"ஹலோ..!" என்றது குரல்.

"மேடம்.. யார் பேசறது?"

"நீங்க.. யார் பேசறது?"

ஒரு கணம் இடைவெளி கொடுத்தான்.

"நீங்க யார் பேசறது? அதை முதல்ல சொல்லுங்க."

"மேடம்! எங்க மிஸஸ். பிரண்டு... சுந்தரிதானே?" என்றான்.

நண்பனைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினான் கவியரசன் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டான்.

"அது யாரு உங்க மிசஸ்...!"

"என் மிசஸ்... பரிமளா.. மேடம்!"

"ஹலோ! எனக்கு பரிமளாவையும் தெரியாது.. ஊர்மிளாவையும்.. தெரியாது. எத்தனை பேர் இப்படி ராங் கால்ல தொல்லை குடுக்கறதுக்குன்னே கிளம்பியிருக்கீங்க?" என்றாள். "பொடக்"கென்று ஆப் செய்து விட்டார்கள்.

ராகவின் முகம் சுண்டிப் போனது.

"வேணும்டா... எனக்கு?" என்று நொந்து கொண்டான். "என்னடா.. ஆப்டரால் பிரண்டுக்காக இதுகூடத் தாங்க மாட்டியா?" என்று தாஜா செய்தான்.



"தாங்கலாம்.." என்று யோசனையாகச் சொன்னவன் நண்பனிடம் சொன்னான்.

"டேய்.. நிஜம்தாண்டா! குரல் நிஜமாவே நல்லா இருக்கு!"

"பாத்தியா! குரலோட மகிமையில இல்லாத மிஸஸ். பரிமளாவையே படைச்சுட்டே...!" என்று கவியரசன் சிரித்தான்.

"ஆமடா! ஏதாவது லேடீஸ் நேம் சொன்னாத்தான் மேற்கொண்டு பேசுவாங்கடா.. பரிமளா.. யாரோ... எவரோ.. வாழ்க..!" என்றான்.

சிரித்தான்.

இருவரும் சிரித்தார்கள். அப்போது ராகவ் உற்சாகமாக குதித்தான்.

"ஐடியா?" என்றான்.

"ம்.. சொல்லு.. சொல்லு!" என்று உற்சாகமானான் கவியரசன்.

"என் பிரண்ட் ஒருத்தன் பிரைவேட் பாங்க்ல இருக்கான். டேட்டா பேஸ்ல கலெக்ட் பண்ணி வச்சிருப்பாங்க. நம்பரைக் குடுத்துக் கேட்போம்" என்றான்.

கேட்டார்கள்!

"இரண்டு மணி நேரம் டைம் குடுங்க.. சொல்றேன்!"

"சரிடா!" என்று உற்சாகமாக செல்போனை ஆப் செய்து விட்டு கவியரசனை பார்த்து மகிழ்வாகச் சிரித்தபடி சொன்னான்.

"டேய்! நீ அவர்ல்ல நரேன்கறான்..." என்றான்.

''சரி..!'' என்று தனது அலுவலகத்திலேயே அமர்ந்து காத்துக் கிடக்கிற கவியரசனைப் பார்த்து ராகவ்வுக்கு ஒரே சிரிப்பு. சிரித்தால் கோபித்துக் கொள்வான். இருப்புக் கொள்ளாமல் அவன் நடமாடவும் பார்த்து விட்டு ஒரு யோசனை செய்தான்.

''டேய்! நீ உன் ஆபீஸ்க்குப் போ.. உன்னோட பிராஜக்ட் சம்பந்தமா.. ஏதாவது வேலை பாரு.. நினைவும் மாறும். இப்படியே இருந்தே பைத்தியம் பிடிக்கும்'' என்றான்.

கவியரசனுக்கும் அது சரியென்றே தோன்றியது.

போனவன் வேலையில் ஆழ்ந்து விட்டான். ''அண்ணா! நல்ல ஐடியா க்ளிக் ஆகியிருக்கு..'' என்று உதவியாளர்கள் சொல்லக் கேட்டான். ஐடியா பிடிக்கவே மேற்கொண்டு டிஸ்கஷனில் ஆழ்ந்து ஒரு வடிவத்துக்குக் கொண்டு வந்தான்.

முடித்து நிமிரும்போது மூன்று மணி நேரம் ஓடியிருந்தது!

''என்னடா.. இது நண்பனைக் காணவில்லையே! என்று ஏங்கிப் போய் போனில் அழைத்தான்.

''டேய்! நான் ஆன் தவே.. இன்னும் அரை மணி நேரத்திலே கூப்பிடறேன்னு சொல்லியிருக்கான்'' என்றான்.

''நேர்ல.. போலாமாடா?''

''வேண்டாம்டா.. நேர்ல போனா.. அவனுக்கும் பிரச்சினை ஆயிடும்!'' என்றான்.

''சரி!'' என்றான் சுரத்தில்லாமல். சரியாக அரை மணி நேரம் கழித்து பெயர் சொன்னார்கள்.



''பெயர் தமயந்தி!'' என்று தெரிந்தவுடனே கவியரசன் மறுபடியும் உற்சாகமானான்.

''விலாசம்?'' என்றார்கள்.

''பக்கத்துலதாண்டா.. சைதாப்பேட்டை!''

''அப்பா.. சரி..! கிளம்பு!''

''கிளம்பறதா..''

''ஆமடா! நேர்ல போலாம்டா!''

''டேய்! உனக்குக் கிறுக்குத்தான் பிடிச்சிருக்கு!''

''ஆமடா..! கிறுக்கேதான்.. பிடிச்சிருக்கு..!'' என்றான் கவியரசன் அலட்டிக் கொள்ளாமல்.

என்ன சொன்னாலும் கேட்கமாட்டான் என்று தெரியும்.

''சரிடா! எதுக்கும் வேற மாதிரி அப்ரோச் பண்ணி கன்ஃபர்ம் பண்ணுவோம்டா..'' என்றான்.

வழியில் இருந்த நண்பனின் அலுவலகத்தில் இறங்கி அவன் செல்போனில் பேசினார்கள்.

''ஹலோ! தமயந்தி மேடம் இருக்காங்களா?''

''ஸ்பீக்கிங்..'' என்றது அந்தக் குரல். நண்பன் ஸ்பீக்கருடன் கூடிய செல்போனில் பேசியதால் அவனாலும் கேட்க முடிந்தது.

''குப்''பென்று முகம் மலரச் சிரிக்கிற நண்பனை விசித்திரமாகப் பார்த்தபடி நின்றான் ராகவ்.

''மேடம்..! நாங்க.. செல்வலக்ஷ்மி பேங்க்ல இருந்து பேசறோம்.. உங்களுக்கு பர்சனல் லோன் எதுவும் தேவையிருக்குமா?''

''இல்லையே! வேண்டாமே!'' என்று ''ஓ.கே. மேடம்!'' என்று ஆப் செய்தார்கள்.

புயல் வேகத்தில் புறப்பட்டுப் போய் விலாசம் கண்டு பிடித்தார்கள்.

வீட்டு வாயிலில் நின்றபடி "டேய்! இதோடா.. நான் கழண்டுக்கிறேன். நீயாச்சு.. தமயந்தியாச்சு" என்று கழன்று கொண்டான் ராகவ்.

கடைசி நேரச் சந்தேகம் போல வீட்டுக் கதவின் முன்னால் நின்றபடி மீண்டும் தன் செல்போனில் நம்பரை அடித்தான்.

உள்ளே செல்போன் சங்கீதம் பரவியது. அதே நேரம் கதவு மணியையும் அடித்தான்.

"ஹலோ... யாருங்க!" என்று பேசியபடியே கதவைத் திறந்த அந்த ஒல்லியான பெண்மணியைப் பார்த்துக் கவியரசன் கிட்டத்தட்ட மயக்கம் போடாத குறையாக நின்றான்!

பேசிய அம்மாவுக்கு.. இல்லையில்லை.. பாட்டிக்கு.. ஐம்பது.. இல்லை.. அறுபது.. இல்லை அறுபதுக்கு மேலேயே இருக்கும்போல இருந்தது.

விழித்துக் கொண்டு நின்றான் கவியரசன்.



## 4

ஒரு மாதிரித் தேறிக் கொண்டான்!

"தமயந்தி அம்மா!" என்றான் கேள்விக்குறியாக.



"உங்களுக்குத் தமயந்தி வேணுமா? இல்லே தமயந்தி யோட அம்மா.. வேணுமா?" என்றார் அந்தப் பாட்டி.

'கிழவிக்கு ஜோக் வேறு கேட்குதா?' என்று எண்ண மிட்டபடியே ஒரு புன்னகையை வழிய விடுகிறாற்போல் நடித்தான்.

"நோ.. நோ..! எனக்கு தமயந்தி மேடம்தான் வேணும்" என்றான்.

"ம்..!" என்று கெத்தாகத் திரும்பியவர்.

"நான் தமயந்தியோட அம்மா..!" என்றார்.

"தமயந்தி யாரோ உன்னைப் பார்க்க வந்திருக்காங்க.." என்றபடி உள்ளே போனார்.

அவன் தயக்கத்துடன் உள்ளே போனான். கூட்டிப் பெருக்கிக் கொண்டிருந்தாள் ஒரு பெண். வேலைக்காரப் பெண்மணி போலும்.

"உட்காருங்க! அம்மா வருவாங்க.." என்று போனாள்.

சென்ற முறை பேசியபோது தமயந்தி சொன்னது நினைவு வந்தது.

"பாருங்க.. தம்பி! ரெண்டு விஷயம் புரிஞ்சுக்குங்க. முதலாவது செல்போன்ல பேசி நேரத்தை வீணாக்கற அளவுக்கு எனக்கு நேரம் கிடையாது. ரெண்டாவது நீங்களும் கூட அந்த மாதிரி நேரத்தை வீணாக்க முடியாது. ஏதோ ஒரு ரூரல் ராங் கால்ல கிடைச்சதுல வேலை கெட்டுப் போய் இப்படித் தூத்திகிட்டுத் திரியறீங்களே.. இது தேவையா? லைப் இஸ் மோர் பிரஷியஸ்..! வால்யுபுள்.. அதை உருப்படியாகக் கழிக்கப் பாருங்க..! பெஸ்ட் ஆப் லக்.." என்று வைத்து விட்டார்.

அவர் பேசி முடித்தவுடன் அவனுக்கு மூச்சு வாங்கியது. 'அப்பாடா..' என்று அவன் பெருமூச்சு விட்டுக் கொண்டான்.

கவியரசன் அவர் பேசிய விதம் குறித்து வருத்தப் படவில்லை. அவர் பேசிய விதத்தில் இருந்த தெளிவு அவனை சிந்திக்கச் செய்தது என்பதால் அந்தக் குரலின் மேலாக கவர்ச்சி இன்னும் அதிகரித்தது.

எவ்வளவு கனமான ஒரு விஷயத்தை எவ்வளவு லகுவாகச் சொல்லி விட்டார். கருத்து மண்டையிலடித்தாற் போல இறங்கினாலும் குரலின் இனிமையாலோ என்னவோ வலிக்கச் செய்யவில்லை.

ரசிக்கத்தான் செய்தான்!

சொல்லப் போனால் 'அந்தக் குரலுக்குடையவர் யாருன்னு பார்க்க வேண்டும்' என்ற வெறியைத் தானே அதிகப்படுத்தியது.

"இதோ.. வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறான்.

அதே சமயம்!

ஹாலின் இரண்டு பக்கத்திலிருந்தும் கதவுகள் திறக்க இரண்டு பேர் வந்தார்கள்.

ஒருவர் நடுத்தர வயது!

ஒருவர் இளம்பெண்!

இருவரும் அழகாக இருந்தார்கள்.

'யாராக இருக்கும்?' என்று யோசிக்கையிலேயே அதில் வலதுபுற ஹாலிலிருந்து வந்த பெண்மணி.

"சொல்லுங்க..! நான்தான் தமயந்தி.." என்று எதிரில் அமரவும் அவனுக்கு உள்ளே ஏமாற்றம் ஏற்பட்டது.



நிஜமாகவே குரலுக்குரியவர் நம்பது நம்பத்தைந்து வயது மதிக்கத் தக்கவராய் இருந்தார்.

அதே சமயம் எதிர் வழியிலிருந்து வந்த பெண்ணும் அழகான புயலைப் போல அவனை ஒரு பொருட்டாகவே கருதாமல் கடந்து சென்றாள்.

மனமெல்லாம் அந்தப் பெண்ணின் பின்னாலே போக முகம் மட்டும் எதிரில் இருந்தவரை நோக்கத் தான் சொல்ல வந்திருந்ததைச் சொல்ல ஆரம்பித்தான்.

மெல்லிய குரலில் தான் சொல்ல வேண்டியதைச் சொல்லி முடிக்கிற நேரம் அந்த இளம் பெண் வந்து நின்றாள்.

"அம்மா..?" என்று கேள்விக்குறியாகப் பார்த்தாள்.

தமயந்தி சொன்னார்.

"வர்த்தினி.. நான் சொல்லலே.. அன்னைக்கு செல் போன்ல என்னைக் காண்டாக்ட் பண்ணின தம்பின்னு.." என்றார்.

வர்த்தினியின் கண்களில் கோபம் தெறித்தது. "ஓ! நீங்கதானா.. அது?" என்றாள்.

குரலில் இளக்காரம் தெரிந்தது.

"உங்களுக்கெல்லாம் வேற வேலை கிடையாதா?" என்றாள் காட்டமாக.

தமயந்தி குறுக்கிட்டார். "வர்த்தினி.. அவசரப்படாதே."

அம்மாவை நோக்கிக் கோபமாகத் திரும்பினாள். "என்னம்மா.. அவசரப்படறது? நீ கொஞ்சம் பேசாம இரு.." என்று மறுபடியும் கோபமாகத் திரும்பினாள்.

"மிஸ்டர்..! ஏதோ.. ஒரு ராங்கால் வந்துட்டா.. அதுல பேசினாவங்க குரல் நல்லா இருந்தா.. பின்னாலியே அலைவீங்களா? வேற பொழப்பே கிடையாதா?"

அவனுக்கும் கோபம் பொங்கியது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான்.

"மேடம்..! நீங்க தப்பாய் புரிஞ்சுகிட்டீங்க?"

"என்ன சார்.. தப்பாய் புரிஞ்சுகிட்டோம். இப்படி வீட்டைக் கண்டு பிடிச்சு வந்து உட்கார்ந்துகிட்டிருக்கீங்களே..? வெட்கமாயில்லை."

"ஏய்.. வர்த்தினி.. போதும்.. நிறுத்து..?" என்று தமயந்தி கத்தினார்.

"நீ வாடி.. இங்கே?" என்று இழுத்துக் கொண்டு போனார்.

"என்னடி.. நீ? கொஞ்சம் கூட மேனர்ஸ் இல்லாமல்.." என்று அம்மா சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் எதிரே வந்த வேலைக்காரி காபி கொண்டு வருவதைப் பார்த்து.

"ஆமா.. அந்தாளுக்கு.. காபி வேறயா?" என்று கடுப் பானாள்.

"வர்த்தினி.. ஸ்டாப் திஸ் நான்சென்ஸ். நீ கொண்டு போய்க் குடு வேலம்மா.." என்று சொல்லிவிட்டுப் போனது வரை அவனுக்குக் காதில் விழுந்தது.

பல்லைக் கடித்துக் கொண்டு நின்றாள். உள்ளே போன தமயந்தி "என்ன வர்த்தினி இப்படி நடந்துக்கறே?" என்றார் வருத்தம் தோய்ந்த குரலில்.

"என்னம்மா.. விவரங்கெட்டத் தனமாய் பேசறே! நீதானே.. எந்தக் கூறு கெட்ட பயலோ.. தொடர்ந்து



என்னை டிஸ்டர்ப் பண்றான்னு.. புலம்பினே.. ஆனா.. அந்தக் கூறுகெட்ட ஆளு வீடு தேடி வந்து உட்கார்ந்து கிட்டிருக்கான். நீ அவனுக்கு உபசாரம் பண்றே?" என்று பொரிந்தாள்.

"வர்த்தினி பொறு! ஆள் ரொம்ப டீசண்டாத்தான் இருக்காரு. என்ன விஷயம் ஏதுன்னு கேட்டு அப்புறம் நமக்கு ஏதாவது மறுப்புத் தெரிஞ்சா.. நாகரீகமா சொல் விடலாம்" என்றார்.

மகள் மறுபடியும் கோபமானாள்.

"அம்மா! ஐ டோன்ட் லைக் இட்! அப்பா வேற இல்லை! அப்பா வர்ற ஆறு மாசத்துக்குள்ள ஏதாவது புதுத் தலைவலியை வர வச்சுராதே.." என்றாள்.

"சரிடி! நான் பாத்துக்கறேன்.. விடு.." என்று அம்மா சொல்லவும் முறைத்து விட்டு டைனிங் ஹாலில் இருந்த சேரில் தொப்பென்று அமர்ந்தாள்.

அம்மா மறுபடியும் ஹால் நோக்கி நகர்வதைப் பார்த்தவள்.

"ம்மா..." என்று அழைத்தாள். பிறகு சொன்னாள்.

"ஜஸ்ட் ஃபைவ் மினிஸ்ட்! டிஸ்போஸ் ஹிம் ஆப்" என்றாள்.

தமயந்தி ஒரு முறை முறைத்து விட்டு ஹாலுக்கு வந்தார்.

அவர் வருவது தெரிந்ததும் சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு எதுவும் அறியாதவன் போல நின்று கொண்டான் கவியரசன்.

"காபி சாப்பிடுங்க. மிஸ்டர் கவியரசன்" என்றார் உபசாரமாக.

அந்தக் கணத்தில் இப்படியாவது அந்தக் காபியைச் சாப்பிட வேண்டுமா என்று தோன்றியது. ஆனால் உடனே அவனது வழக்கமான பிடிவாதக் குணம் சொன்னது.

'விடக் கூடாது! இன்றைக்கு ஒரு மணி நேரமாவது இங்கே உட்கார்ந்து அந்தப் பெண்ணுக்குக் கடுப்பேத்த வேண்டும்' என்று எண்ணிக் கொண்டான்.

வேண்டுமென்றே தான் சொல்ல வந்த விஷயத்தை இழுத்தடித்துச் சொன்னான்.

பதினைந்து நிமிடத்திற்கு மேல் பொறுமையை இழந்த வர்த்தினி எட்டிப் பார்த்தாள்.

கவியரசன் வேண்டுமென்றே மிக மெல்லிய குரலில் அதுவும் தமயந்திக்கு மட்டும் கேட்கும்படியாகப் பேசிக் கொண்டிருந்தான்.

வர்த்தினி உள்ளேயிருந்து புயல் போல் வந்தாள்.

வந்து நின்றாள்.

''அம்மா! எங்கேயோ போகணும்னு சொன்னியே!'' என்றாள்.

தமயந்தியும் உடனே கைக்கடிகாரத்தைப் பார்த்தார். ''ஆமா போகணும்'' என்றார்.

''சரிங்க.. தம்பி! நான் மறுபடியும் உங்களைச் சந்திக்கறேன்.''

''மேடம்! விசிட்டிங் கார்டு..!'' என்றான். ''தரேன்!'' என்று உள்ளே எடுப்பதற்காகப் போனார்.

வர்த்தினி கோபமாக அவனைப் பார்த்தாள்.

''மிஸ்டர்..!''



''கவியரசன்.''

''என்ன அரசனோ.. ஐ டோண்ட் கேர்! இனிமே இங்க வர்ற வேலையெல்லாம்.. வேண்டாம்'' என்றாள். ஆனால் அடுத்த கணம்.

முகத்தில் புன்னகையைத் தேக்கியபடி ஆனால் வார்த்தைகளில் அமிலம் கலந்து அவன் வீசிய வார்த்தைகளை கேட்டு நிலை குலைந்து போனாள்.

''ஹலோ! மிஸ்.. தென்றல்..! ரொம்ப மெனக்கெடாதீங்க நான் எங்கே போறது வர்றதும்கறதை நான் மட்டும் தான் தீர்மானிப்பேன்'' என்றான்.

அவள் வெடுக்கென்று திரும்பி உள்ளே போவதை ரசனையுடன் பார்த்தபடி நின்றான்.



## 5

அறைக்குள்ளே நுழைந்தவுடனே பொருட்களையெல்லாம் வீசி வீசி எறிகிற மகளைக் கவலையுடன் பார்த்த தமயந்தி கேட்டார்.

''வர்த்தினி! உனக்கு என்ன ஆச்சு?''

''என்ன ஆகணும்? என் வீட்ல வந்து எனக்கே ஒருத்தன் அல்வா குடுத்துட்டுப் போறான். நான் அவனை அனுப்பு அனுப்புங்கறேன். நீ உட்கார வச்சுப் பேசிகிட்டிருக்கே.'' என்று பொரிந்தாள் வர்த்தினி.

தமயந்தி சிரித்தார்.

"ஏய்! நீ இப்படிக் கோபிச்சுக்கற அளவுக்கு ஒண்ணும் நடக்கலே. வீடு தேடி வந்துட்டாரேன்னு கொஞ்ச நேரம் பேசினேன். அவ்வளவுதான்."

வர்த்தினி சந்தேகமாக அம்மாவைப் பார்த்தாள்.

"அவ்வளவுதானா? அதுக்காகவா அவ்வளவு நேரம் பேசினே அந்தாளு என்னைக் கிண்டலாப் பார்த்துட்டுப் போறான்" என்றாள்.

"இத பாருடி வர்த்தினி! நான் பாங்கல இருக்கேன். அதுவும் மனேஜரா.. எங்க ஆபீஸ்ல சொல்ற முதல் பாடம் என்ன தெரியுமா? பிளைண்ட்டா பேசுங்க. நீங்க பேசற விதத்துக்காகவும், நடந்துக்கற விதத்துக்காகவுமே கஸ்டமர்ஸ் வரக்கூடும்னு. அதனாலதான் உட்கார வச்சிப் பேசினேன்" என்றார்.

வர்த்தினிக்கு அதை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. அவளுக்குத் தெரியும். அம்மா யாரையுமே எடுத்தெறிந்து பேச மாட்டார். அம்மா நடந்து கொள்கிற விதத்துக்காகவே நிறையப் பேர் அந்த வங்கியில் கணக்கு வைத்துக் கொள்வார்கள்.

கார், நல்ல சம்பளம் என்று கொடுத்திருக்கிற கம்பெனிக்குத் தான் நியாயம் செய்ய வேண்டாமா என்று வாதாடுவார்.

"ஆமா! எப்பப் பாரு! இப்படியொரு விஷயத்தைச் சொல்லி வாயை அடைச்சிடுவீங்க!" என்றாள். முணு முணுப்பாக.

அம்மா கிளம்பிப் போனதற்குப் பிறகும் அவளுக்குக் கோபம் அடங்கவில்லை.

'என்ன கொழுப்பிருந்தால்.. நம்ம வீட்டுக்குள்ள வந்து நின்று கொண்டு 'நான் வருவதும் போவதும் நான்தான்



தீர்மானிப்பேன்' என்று சொல்வான். திமிர் பிடித்தவன்' என்று எண்ணிக் கொண்டாள்.

என்ன செய்தாலும் இரண்டு வாடிக்கையாளர்களைக் கொண்டு வந்து அறிமுகப்படுத்தி விட்டால் போதும். அம்மா.. அவனுக்கு ராஜ மரியாதை செய்வார்.

பெருமூச்சு விட்டாள். அதுவோ கோபத்தில் அனலாகக் கொதித்தது.

* * *

"டேய்! ராகவ்! அந்த வர்த்தினியைக் கடுப்பேத்தாம விடறதில்லைன்னு முடிவு" என்ற கவியரசனை பெருத்த ஆச்சரியத்தோடு பார்த்தான் ராகவ்.

"டேய்! உனக்கு இதுக்கெல்லாம் வேற நேரமிருக்கா?" என்றான்.

"நேரம் பண்ணிக்க வேண்டியதுதான். இது கௌரவப் பிரச்சினைடா.. எனக்கு!"

"ஓஹோ.. இது எங்கே போய் முடியும்னு தெரியலை.."

"எங்கயோ போய் முடியட்டும். ஏதோ இடத்துல முடிஞ்சு தானே ஆகணும். பாக்கலாம். அதையும்" என்றான்.

ராகவ் சிரித்து விட்டான்.

"என்னடா.. சிரிப்பு?"

"இல்லே! அப்புறம்.. நீ அந்த காபியைக் குடிச்சுட்டுத் தான் வந்தியா?"

"ச்சே! மனுஷன் செய்வானா.. அந்தக் காரியத்தை! டம்ளரைத் தூக்கி அந்த ஓரமா வச்சுட்டேன். தமயந்தி மேடமும் நான் காபி குடிச்சுட்டேன்னு நினைச்சுட்டாங்க. ஆனா.. நான் தொடவேயில்லை" என்றான்.

ராகவ் தலையாட்டிக் கேட்டுக் கொண்டான்.

''கேவலம்.. அந்தக் காபிக்காகவா.. நான் அங்கே போனேன்?''

''பின்னே வேற எதுக்காகப் போனே?''

''அந்தக் குரலுக்காகத்தான்.''

ராகவ் கொஞ்சம் அதிர்ந்தாற்போல பார்த்தான். ''டேய்! அவங்களுக்கு அம்பத்தைஞ்சு வயசாகுதுங்கற.''

''போடா! இந்த விஷயத்திலெல்லாம் வயசே கிடையாது.''

''அடப்பாவி! இது வேண்டாம்டா!''

''போடா! உனக்கு உலகமே புரியலை ஃபைனல் ரிசல்ட் பாரு.''

''டேய்! அப்புறம்.. அந்தப் பொண்ணு உன்னைச் சுட்டெரிச்சுடும்.''

''வரட்டும்..! என்கிட்டே வரட்டும்! சுட்டெரிக்கறது யாருன்னு தெரிஞ்சு போகும்'' என்றான் கவியரசன்.

கவியரசனின் குரலிலும் நடத்தையிலும் திடீரென்று ஒரு மாற்றம் தெரிந்தது.

''சரிடா! இப்ப பண்ணிட்டிருக்கிற பிராஜக்டை கம்ப்ளீட் பண்ண வேண்டியிருக்கு'' என்றான்.

வேலைக்குள் நுழைந்தான்.

''கஷ்மிதா.. திரும்பும்போது அப்படி வெடுக்குன்னு திரும்பாதே! ப்ரேமுக்குள்ள வரணும்.. கவனிச்சுக்க..'' என்று சொல்லிக் கொண்டிருந்தான் கேமரா மேன்.

கவியரசன் வந்து ஸ்டுடியோவுக்குள் நுழைந்ததும் நிலைமை மாறியது.



கஷ்மிதா முதல் முறையாகச் செய்வதால் அவளுக்குள் தயக்கம் இருந்தது போலும். சிறு சிறு தவறுகள் செய்து கொண்டிருந்தாள்.

''இத பார்! கஷ்மிதா.. உன் குழந்தைக்கு இந்த மருந்தை சாப்பிட்டவுடனே உடம்பு நல்லாயிருக்குங்கற சந்தோஷத்தை இப்படியா செயற்கையா.. எந்த விதமான உணர்ச்சியுமில்லாமக் காட்டுவே! கண்ல எவ்வளவு சந்தோஷம் வரணும். முகத்திலே எப்படி உற்சாகம் கொப்பளிக்கணும்.''

கவியரசனே இறங்கி நடித்துக் காட்டினான். அதற்குப் பிறகு கஷ்மிதா ஓரளவு சிறப்பாகச் செய்தாள்.

'பேக் கிரவுண்ட்' பார்த்து சரி செய்வதற்கே நேரம் எடுத்தது.

ஒவ்வொரு விளம்பரத்திலும் குறிப்பிட்ட நிறங்களின் ஆதிக்கம் இருக்கும் என்பதால் அந்தக் கம்பெனி விரும்புகிற நிறங்களின் ஆதிக்கம் இருக்கற மாதிரி பார்க்க வேண்டியிருந்தது.

மறுபடியும், மறுபடியும் பார்த்து விவாதம் செய்தார்கள். திருத்தினார்கள். ஒவ்வொரு முறையும் மெருகேறியது என்றாலும் கவியரசனுக்கு திருப்தி தருகிற ஒரு ப்ராஜக்ட் தான் வெற்றி பெறும் என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால் அவர்களும் ஒத்துழைத்தார்கள்.

ஒவ்வொரு முறை வெற்றி பெறுகிற போதும் கவியரசனும் தன் கீழ் பணி புரிபவர்களுக்குத் தயங்காது பரிசுகள் கொடுப்பான்.

அன்று அவர்கள் வேலை முடிக்கற போது மணி பத்தாகிவிட்டது.

...படுக்கைக்குச் செல்லும்போது மணி பனிரெண்டாகி விட்டது.

எப்போதும் ஒரு மணி நேரமாவது ஏதாவது புத்தகங்கள் படிப்பான். அதற்குப் பிறகுதான் படுக்கைக்குச் செல்வான்.

அன்றைக்குப் படுக்கைக்குச் செல்லும்போது அவனுக்குள் வித்தியாசமான உணர்வுகள் நிறைந்திருந்தன. சுஷ்மிதாவுக்குப் பதிலாக அந்த விளம்பரத்தில் வர்த்தினி நடித்தால் எப்படியிருக்கும் என்ற கற்பனை மனத்துக்குள் ஓடியது.

வர்த்தினியைக் காட்டிலும் தமயந்தியை அவனுக்கு மிகவும் பிடித்தது.

நல்ல கம்பீரம்! நடை, உடை பாவனைகளில் நேர்த்தி. பேச்சும், குரலும் ஆளும் கூட அழகு.

வயதுக்கு மீறிய ஒரு அழகு இருந்தது. கண்டிப்பாக தமயந்தி மேடத்திடம் ஒரு நட்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

நண்பன் சொன்னது நினைவுக்கு வந்தது. அதைத் தூர ஒதுக்கினாற்போல் தள்ளி விட்டு விட்டு செல்போனை எடுத்தான்.

'பதினொரு மணிக்குக் கூப்பிடுகிறோமே? தேவையா?' என்று யோசித்தான்.

உடனே இப்படித் தான் அழைக்கும்போது வர்த்தினியின் முகம் போகப் போகிற போக்கை எண்ணியவுடன் அவனுக்குள் சுவாரசியம் கிளம்பியது.

வேண்டுமென்றே அழைத்தான்!

அவன் உள்மனது சொன்னது. கண்டிப்பாக வர்த்தினி தான் போனை எடுப்பாள் என்று.



எதிர்பார்த்தாற் போலவே வர்த்தினிதான் போனை எடுத்தாள்.

"ஹலோ..! நான் கவியரசன் பேசறேன்" என்றான்.

அந்தப்புறம் ஒரு நிமிடம் மௌனம் நிலவியது. பிறகு வர்த்தினியின் குரல் ஒலித்தது.

"அம்மா.. இல்லேலோ!" என்று.

"மேடம்! தமயந்தி மேடம் இருக்காங்கன்னு எனக்குத் தெரியும். தயவு செய்து அவங்ககிட்டே குடுக்கறீங்களா?"

"அவங்க.. இப்போ பேசமாட்டாங்க?" என்றாள் வர்த்தினி.

அம்மா பாத்ரூமுக்குள் போயிருக்கும் தைரியம் அவளுக்கு.

"பேசுவாங்க.. மேடம்! நீங்க போய் அவங்ககிட்டே கவியரசன் பேசறான்னு சொல்லுங்க.. லைன்ல வருவாங்க" என்றான்.

அவள் வாய்க்குள் ஏதோ முணுமுணுப்பது இந்தப்புறம் அவன் காதில் விழுந்தது.

சிரித்துக் கொண்டான். ஆனால் காத்திருந்தான். இரண்டு நிமிடங்களில் தமயந்தி லைனில் வந்தார்.

"என்னங்க.. கவியரசன்! இந்த நேரத்துல.." என்றார்.

"மேடம்! இப்பத்தான் டெலிவிஷன் எடுத்தேன். பத்து மணி வரை வொர்க் இருந்தது. இப்பத்தான் வீட்டுக்கு வந்தேன் காலையில மனசு மாறலாம். இல்லைங்களா! அதான் சொல்லிடலாம்னு" என்றான்.

"சொல்லுங்க."

"மேடம்! எங்க கம்பெனி அக்கவுண்ட்ட உங்க பேங்குக்கு மாற்றிடலாம்னு இருக்கேன். கோடிக் கணக்கில

டர்ன் ஓவர் இருக்கும். அதோட இப்ப ஆரம்பக்கட்டமா ஒரு பத்து லட்சம் டெபாசிட் செய்யலாம்னு பாக்கறேன்" என்றான்.

தமயந்தியின் முகம் பிரகாசமானது.

"சியலி! எப்ப பேங்குக்கு வர்றீங்க?" என்றார் ஆவலாக.

"நாளைக்கே?" என்றான்.

தமயந்தி முறைக்கிற மகளைச் சட்டை செய்யாமல் எழுந்து போய் வெளியே போய்ப் பேசிவிட்டு வந்தார்.

எவ்வளவு தெளாவெட்டாகப் பேசினான் அந்த ஆள்.

'கவியரசன்னு சொல்லுங்க.. அவங்க பேசுவாங்க..' என்று வர்த்தினிக்குக் கோபம் பொங்கியது.

அப்பா இல்லாத சமயங்களில் அம்மாவின் படுக்கையில் படுத்து செல்லம் கொஞ்சுகிற மகள். இப்போது கோபத்தோடு தனது அறைக்குப் போய் கதவை சாத்தி விட்டாள்.

பேசி முடித்து விட்டு தமயந்தி "டீ... வர்த்தினி.. கவியரசன் நாளைக்கு எங்க பாங்குக்கு.. வர்றாராம்" என்று சொல்லிக் கொண்டே திரும்பிப் பார்த்தார். மகளைக் காணவில்லை.

அவளது படுக்கையறைக் கதவைத் தள்ளிப் பார்த்தார். பூட்டியிருந்தது. அதைப் பெரிது படுத்தாமல் மகிழ்ச்சி யுடன் போய்ப் படுக்கையில் படுத்துக் கொண்டார்.

மகளோ கொதித்துப் போய் வேறு விதமான திட்டங்கள் போட்டுக் கொண்டிருந்தாள்.





# 6

கவியரசன் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தான். தமயந்தி மேடம் தன்னிடம் பேசும்போது இடையிலே வேண்டு மென்றே அந்தச் செய்தியைப் போட்டு வைத்தான்.

"மேடம்! என்னன்னு தெரியலே! உங்க டாட்டருக்கு என்னைப் பிடிக்கலே. ஆனா, நான் ஏன் உங்ககிட்டே பேசறதுல இவ்வளவு ஆர்வம் காட்டறேன்னு நான் உங்க கிட்டே சொல்லிட்டேன். ஆனா, அவங்களுக்குப் பிடிக்க லேன்னா.." என்று இழுப்பதற்கு முன்பாக தமயந்தி குறுக்கிட்டாள்.

"அவ கிடக்கிறா.. கவியரசன்! அவ சின்னப் பொண்ணு. அவ பிரண்ட்ஸ் நிறைய பேர் இந்த ராங் கால்ஸ் தொல்லை பற்றி நிறைய அவகிட்டே புலம்புவாங்க.. போல இருக்கு! அதனால.. போன் மூலமா வந்த பிரண்ட் ஷிப்னு அவளுக்கு ஒரு கடுப்பு" என்றாள்.

"ஓ.கே. மேடம்! அது சரி..! அந்த விஷயத்தை என்னால புரிஞ்சுக்க முடியுது. ஆனா.. எனக்கென்னவோ.. உங்களை ரொம்பப் பிடிச்சுது. அதனால உங்க பாங்குக்கு.. நிறைய கஸ்டமர்ஸ் பிடிச்சுக் குடுக்கலாம்னு இருக்கேன்.. அது மட்டுமல்ல என்னோட கம்பெனி அக்கவுண்ட்ஸே கூட உங்க பாங்குக்கு.. மாத்திரலாம்னு பாக்கறேன்.. ஆனா.. ஏதாவது முக்கியமான விஷயமா உங்ககிட்டே பேசலாம்னு வரப்போ.. இவங்க.. போனை உங்ககிட்டே

குடுக்காம விட்டுட்டாங்கன்னா.. என்ன பண்றதுன்னு கவலையா.. இருக்கு..!'' என்றான் குரலில் ஏகப்பட்ட கவலையைத் தேக்கி.

அவன் கவலை கண்டு தமயந்தியே கொஞ்சம் உருகித் தான் போனார்.

''கவியரசன்! உங்க கால் வரும்போது சிங்டோன் அதுக்குத் தகுந்தாற் போல வச்சுக்கறேன். அப்ப நானே எடுத்தர்றேன்'' என்றார்.

''தாங்க்ஸ்.. மேடம்! தாங்க்ஸ் மேடம்!'' என்றான் புளகாங்கிதம் அடைந்தவன் போல.

அதற்குப் பிறகு தான் செய்கிற தொழிலைப் பற்றி யெல்லாம் அவரிடம் வேண்டுமென்றே விரிவாகப் பேசினான். தன்னுடைய தொழிலைப் பற்றி தமயந்தி விரிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதைக் காட்டிலும் எப்படியாவது வர்த்தினியை எரிச்சல் படுத்த வேண்டும் என்பதே அவன் நோக்கமாக இருந்தது.

அந்த நோக்கம் வெற்றிகரமாகத்தான் நிறைவேறிக் கொண்டிருந்தது. அந்தப் பக்கம் வர்த்தினி தலையணை ஒன்றை எடுத்துப் பிய்த்துப் போட்டுக் கொண்டிருந்தாள். அந்தக் காட்சியை மட்டும் கவியரசன் பார்த்திருந்தால் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்பான்.

அந்நேரத்தில்தான் தமயந்தி மகளிடம் ''டீ வர்த்தினி! கவியரசன்.. நாளைக்கு பிராஞ்சுக்கு வர்றாராம்..'' என்று சொன்னார்.

தமயந்தி சொன்னது முற்றிலும் காதில் விழுந்தால் கூட வேண்டுமென்றே காதில் விழாதது போல் கதவைத் திறக்க விரும்பாது அமைந்திருந்தாள்.

தமயந்தி பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் வர்த்தினி அதோடு அந்த விஷயத்தை விட்டு விடத் தயாராகவில்லை. அதன் விளைவு அன்று மாலை தமயந்திக்குப் புரிந்தது.

* * *

''வாங்க வாங்க!'' என்று கலகலச் சிரிப்புடன் வரவேற்றார் தமயந்தி.

கவியரசன் அழுத்தமான ஒரு புன்னகையுடன் வங்கிக்குள் நுழைந்தான். இப்போது மேனேஜர் அறையில் இருந்தார்கள்.

''மேடம்! இவரு மிஸ்டர் ஜோசப். என்னோட நண்பர்.. பெரிய கிரியேட்டிவ் டைரக்டர். எங்க அட்வர்டைஸ் மெண்ட் கம்பெனிக்கும் இவருக்கும் டை அப் இருக்கு. நிறைய கன்ஸர்ன்ஸ்க்கு இவரு விளம்பரப் படங்கள் தயாரிச்சுகிட்டிருக்காரு.. ரொம்ப பேமஸ்..'' என்றான்.

''அப்படீங்களா! ரொம்ப சந்தோஷம்'' என்றார் தமயந்தி.

ஜோசப் விளக்கம் சொன்னார். நடுத்தர வயதுக்கும் கீழே இருந்தார். தூய வெண்ணிற பேண்ட்டும், சட்டையும் அணிந்திருந்தார். அளவான உடம்பு. லேசான முன் வழுக்கை. பிரெஞ்சு தாடி வைத்திருந்தார்.

''ஆமா.. மேடம்! புதுசா.. ஒரு யூனிட் பண்றோம். அதோட அக்கவுண்ட் இங்கே வச்சுக்கலாம்னு கவியரசன் சொல்றாப்ல'' என்றான் ஜோசப்.

''ரொம்ப சந்தோஷம்.. சார்!'' என்றார் தமயந்தி அளவான புன்னகையுடன்.

''மேடம்! எப்பவும் பத்து இலட்சத்துக்குக் குறையாமல் பணம் இருப்பில் இருக்கும். அது மட்டுமல்ல.. மேடம்

எனக்கு ஒரு பழக்கம் என்னன்னா.. ஒவ்வொரு பிராஜக்ட் முடிஞ்சவுடனேயும், வர்ற இலாபத்துல.. ஒரு பகுதியை பாங்க்ல டெபாசிட்டா வச்சுக்குவேன். அதுவும் என் மனைவி பேர்லயோ.. ஜாயிண்டாவோ..! என்னா.. இது மாதிரி கலைத்துறையில வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வரும்..! அதனால ஒரு குறிப்பிட்ட அளவு இன்வெஸ்ட் பண்ணிக்கறது நல்லதில்லீங்களா..?"

"ஆமாம்!" என்றார் தமயந்தி.

"கொஞ்சம் வீடுகள்ல இறக்கி இருக்கேன்" என்று ஜோசப் சொல்லும்போது கவியரசன் 'குபுக்'கென்று சிரித்தான்.

"கொஞ்சம்னா.. கொஞ்ச நஞ்சமில்லீங்க.. மேடம் சென்னையில நாலா புறமும் வளைச்சுப் போட்டிருக்கான்.." என்றான்.

"ஆமா! வீடுகள்ல என்னைக்கிருந்தாலும் வாடகை வரும். ஒரு சேஃப்டிதானுங்களே..!"

"ஆமா! ஒரே மாதிரியான முறையில இன்வெஸ்ட் பண்ணக் கூடாதுங்கறான்.. கொஞ்சம் சொத்துக்களில்.. கொஞ்சம் நிலங்கள்ல.. கொஞ்சம் பாங்க் டெபாசிட்டா.. கொஞ்சம் நகைகள்லன்னு.. வச்சுக்கறதுதான்.. நல்லது.." என்றார் தமயந்தி.

"ஆமா மேடம்!"

"முதலீட்டுக்காகன்னு இப்ப யாருகிட்டே கன்ஸல்ட்டேஷனுக்குப் போனாலும் இப்படித் தான் சொல்றாங்க." என்றார் தமயந்தி.

அன்றைக்கே கணக்கு ஆரம்பித்தார்கள்.

தமயந்திக்கு மிகவும் மகிழ்ச்சி!

தமயந்தி முதலில் நகரின் மையத்தில் பெரிய கிளையொன்றில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவரது



பணியின் தன்மையைப் பார்த்தும், பணி மூப்பு அடிப்படையிலும் நகரத்தில் இருந்து சற்றுத் தள்ளியிருந்த புறநகர்ப் பக்கத்தில் இருந்த வங்கிக் கிளைக்கு மேலாளராகப் போட்டிருந்தார்கள்.

முதலில் இருந்த வங்கிக் கிளையில் அங்கு பெரிதாக முதலீடு திரட்ட வேண்டிய அவசியம் இருக்கவில்லை. ஆனால், இந்தக் கிளையில் மேலாளர் பொறுப்பில் இருந்ததால் எல்லாவற்றிலும் கவனம் செலுத்த வேண்டியிருந்தது. அந்தப் புறநகர்ப் பகுதியில் குடியிருப்புக்கள் இருந்தன. சற்றுத் தள்ளிக் குடிசைகளும் இருந்தன. இவை தவிர இப்போது தொழில் மையமாகவும் உருவாகிக் கொண்டிருந்தது.

ஆர்வம், உண்மை, உழைப்பு இரண்டும் இருக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்று வங்கி நிர்வாகம் அவருக்கு அந்தப் பொறுப்பைக் கொடுத்திருந்தது.

தமயந்தி ஐம்பதுகளில் இருந்தார். ஒரு மகள்.. ஒரு மகன்.

மகன் நல்ல அரசுப் பணியில் இருந்தான். வெளியூரில் இருந்தான். மனைவி, ஒரு குழந்தை என்று. அவன் குடும்பத்தை கவனிக்க அவனுக்குப் பொழுது போதுமானதாக இருந்தது.

மகள் ஹம்சவர்த்தினி. இப்போதுதான் பட்டப் படிப்பை முடித்திருந்தாள். மேலே முதுகலைப் பட்டப் படிப்பில் எம்.பி.ஏ. படித்துக் கொண்டிருந்தாள்.

எல்லாருக்கும் செல்லம் என்பதால் அவளது கருத்துகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பாள். பல நேரங்களில் அவளது கருத்துக்கள் நியாயமாகவே

யாரையாவது பிடிக்காமல் இருக்கும். சில நேரங்களில் தீவிரமாக வெறுக்கவும் செய்வாள். போய் விட்டால்

''காரணமில்லாமல் வெறுக்கிற அந்தக் குணம் மட்டும் உன்கிட்டே இல்லாம இருந்தா.. நீ ரொம்ப அருமையான பொண்ணுடி'' என்பான் சகோதரன் சந்திரகுமார்.

''போடா!'' என்று பழித்துக் காட்டிவிட்டுப் போவாள். இத்தனைக்கும் அவளைக் காட்டிலும் ஒன்பது வயது மூத்தவன். வீட்டில் எல்லாம் அறிவுரை சொல்லிச் சொல்லி இப்போது அண்ணி இருக்கும்போது மட்டும் ''போடா'' என்பதைக் கைவிட்டு.. ''வா.. அண்ணா! போ அண்ணா'' என்று பேசுவாள்.

வர்த்தினியின் 'வெடுக் வெடுக்'கென்ற பேச்சு ஆரம்பத்தில் அண்ணி சுதாவுக்கு வருத்தமாக இருந்தது. ஆனால் மனதில் எதுவும் வைத்துக் கொள்ளாதவள் என்று புரிந்து போனதால் அதைப் பற்றி லட்சியம் செய்வதில்லை. பழகிக் கொண்டாள்.

சில நேரங்களில் வர்த்தினியின் நடத்தை அவளுக்கு ஆச்சரியம் அளிக்கும். அண்ணனும் தங்கையும் ஷாப்பிங் போகிறேன் என்று போவார்கள். வரும்போது விலை உயர்ந்த கடிகாரங்கள் காட்டுவாள்.

''அண்ணி! எனக்கு இந்த ரெண்டு செட் கடிகாரம் அண்ணன் வாங்கித் தந்தான்'' என்பாள். பிறகு சற்றுக் கழித்து ''டண்டடய்ட்'' என்று குரல் கொடுத்தபடி இன்னொரு பையை எடுத்து நீட்டுவாள்.

புத்தம் புதிய கடிகாரங்கள் இரண்டே செட் அதில் இருக்கும். அந்த இரு [illegible]களையும் பார்த்தால் கவனம் கொடுத்துத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது தெரியும். சுதா வியப்பாய்ப் பார்க்கையிலேயே சந்திரகுமார் சொல்வான்.

''சுதா! இது நான் வாங்கலே! வர்த்தினி அவளோட பாக்கெட் மணியில சேத்து வைச்ச பணத்திலே இருந்து உன் பிறந்த நாளைக்காக வாங்கியிருக்கா..'' என்பான்.

சுதாவுக்கு மனமும் முகமும் நெகிழும்.

''போதும்..! நோ.. சென்டிமென்ட்ஸ். அதிருக்கட்டும்.. போன வாரம்.. நூறு ரூபாய் என்கிட்டே கடன் வாங்கினியே.. அண்ணி.. அதைக் குடு'' என்று நிற்பாள்.

சந்திரகுமார் மனைவியைப் பார்த்துச் சிரிப்பான். அவன் சத்தம் இல்லாமல் நூறு ரூபாயைக் கொடுத்து விடுவான்.

''அது..!'' என்று செல்லமாக மிரட்டி விட்டுப் போவாள்.

அதே வர்த்தினி சுதாவின் அண்ணி ஏதோ தன்னை ஒரு விதமாக விமர்சித்து விட்டாள் என்பதால் கொஞ்சம் கூடத் தயங்காமல் தூக்கி எறிந்து பேசி விட்டாள்.

தனது அண்ணி செய்தது தவறு என்று தெரிந்ததால் சுதாதான் இடையில் சிக்கிக் கொண்டு தவித்துப் போனாள்.

''அண்ணி! நீ என்னோட அண்ணி! நீ பேசலாம். ஆனா.. ஷி ஹேஸ் நோ பிஸினஸ் டு கமென்ட் அபவுட் மி..'' என்று பொரிந்து தள்ளி விட்டாள். சுதாவுக்கும் சங்கடமாகப் போய் விட்டது.

''புரியுது.. வர்த்தினி! ஆனா, எல்லாரும் ஒரே மாதிரி இருக்கறதில்லையில்லே! எனக்காக நீ எங்கண்ணியைப் பொறுத்துக்கணும்'' என்றாள் தஞ்சமாக.

அந்தக் கணத்தில் வர்த்தினி நெகிழ்ந்து போனாள்.

''பரவாயில்லை! சுதா அண்ணி ஈகோ பார்க்காமல்.. ஒத்துக் கொள்கிறார். நீ எப்படி எங்க வீட்டு மனுஷங்களைப் பத்திப் பேசலாம் என்று கொடி பிடிக்காமல் உண

மையை ஒத்துக் கொள்கிறாள். அதுவே பெரிய விஷயம் என்று தோன்றியது.

சட்டென்று சிரித்தாள்.

''ஆமா! அண்ணி நீ ரொம்ப நல்ல அண்ணி! உனக்காகத்தான் பொறுத்துக்கணும்'' என்றாள்.

இரண்டு பெண்களும் சமாதானமாகிக் கொள்வதைப் பார்த்த சந்திரகுமார் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

மனைவியை எவ்வளவு நேசித்தானோ அதே அளவு பிரியம் தங்கையின் மீது வைத்திருந்தான். இரண்டு பேருக்குள்ளும் உறவுச் சிக்கல்கள் ஏற்பட்டால் தன் பாடு திண்டாட்டம் என்ற கவலை அவனுக்கு இருந்தது. ஆனால் தரக் குறைவாய் தன்னை விமர்சித்த சுதாவின் அண்ணி மீதான வெறுப்பு அவளுக்கு மாறவேயில்லை. ஆனால் வெளிப்படையாகக் காட்ட மாட்டாள். சுதாவின் அண்ணி வந்தாலே எழுந்து நழுவி விடுவாள். சகோதரனிடம் தனியாகச் சொன்னாள்.

''அண்ணா! உனக்காகவும், அண்ணிக்காகவும் தான் பொறுத்துக்கிட்டேன்.. ஆனா.. அந்தம்மாவை யாருக்குமே பிடிக்கறதில்லே. எல்லாருமே ஒரு விதமாத்தான் பேசறாங்க..'' என்றவள் பிறகு ஒரு பெருமூச்சு விட்டாள்.

''என்ன செய்யறது? குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை'' என்றான்.

முதல் சந்திப்பிலேயே அவளுக்கு கவியரசனைப் பிடிக்காமல் போனவுடன் தமயந்திக்கும் கொஞ்சம் கவலையேற்பட்டது. தனக்குப் பிடிக்கவில்லையென்றால் மகள் ஒரேயடியாக ஒதுக்கி விடுவாளே என்ற கவலை ஒரு பக்கம். மறுபுறம் மகள் இப்படித் தூக்கி



யெறிந்து பேசியதால் ஒரு நல்ல கஸ்டமரை இழந்து விடுவோமோ என்ற பயம் ஒரு புறம். ஆனாலும் எதையும் மனதில் வைத்துக் கொள்ளாதவளாய் கவியரசன் ஜோசப்பை அழைத்து வந்தவுடன் மனம் நெகிழ்ந்து போனார்.

கொஞ்சம் அதிகமாகவே உபசரித்தார். கவியரசனும் அதை விரும்பியவனாகவே நடந்து கொண்டான். அது மட்டுமல்ல 'இரண்டே நாட்களில் எந்த விதமாக உபசரிப்புக் கிடைக்கிற மாதிரி நடந்து கொண்டேன் பாத்தியா?' என்பதைக் காட்டுவது போல் ராகவ்வையும் உடன் அழைத்துக் கொண்டு வந்திருந்தான்.

ராகவ் உண்மையிலேயே ஆச்சரியப்பட்டுப் போனான்.

தமயந்தியின் அறைக்கு வெளியே ஜோசப் கணக்கு ஆரம்பிப்பதற்காக அமர்ந்திருந்தார்கள்.

''என்னடா.. மாய மந்திரம்.. இது?'' என்றான் ராகவ் ஆச்சரியமாக.

''ஒரு மாய மந்திரமும் இல்லே! தமயந்தி மேடம்.. பேங்க்.. ஆபீஸர்! அவங்க பேங்குக்குத் தேவை டெபாசிட்.. தமயந்தி மேடத்துக்குத் தேவை நல்ல பேரு! எனக்குத் தேவை தமயந்தி மேடத்துக்கிட்டே நல்ல பேரு! யோசிச்சுப் பார்த்தேன்.. நம்ம ஜோசப்புக்கு ரெண்டு மூணு பாங்கில அக்கவுண்ட் இருக்கு. புதுசா ஒரு அக்கவுண்ட் ஆரம்பிக்கணும்னான். அவங்க வீட்டுக்குப் பக்கமா வேற போச்சு.. எல்லாத்தையும் இணைச்சு யோசிச்சு.. இப்படி ஒரு ஏற்பாடு பண்ணினேன்'' என்றான்.

மெல்லிய குரலில் தான் பேசிக் கொண்டார்கள்.

''டேய்! இது என்னவோ காதைச் சுத்தி மூக்கைத் தொடற மாதிரி இல்லே! நீ ஒரு அக்கவுண்ட் ஆரம்பிச்சு.. உன் அந்தஸ்தைக் காட்டிர வேண்டியதுதானே!''

"அது ரொம்ப ஈஸி! ஆனா.. நான் மட்டும் இல்லே! என்னைச் சுத்தியிருக்கிறவங்களும் லேசுப்பட்ட ஆளுங்க இல்லேன்னு.. அவங்களுக்குப் புரியணுமில்லே..!"

"அப்படிப் போடு அருவாளை!" என்று சிரித்தான் ராகவ்.

"வேண்டாம்டா! பெண்களுக்கு எதிரா வன்முறை கூடாதுன்னு சட்டமே வந்துருச்சு.." என்றான்.

ராகவ் விழித்தான். "என்னடா.. உளர்றே?" என்றான்.

"இல்லடா. அருவாளை எல்லாம்.. போடக் கூடாதுடா.." என்றான் கவியரசன் தன் வலக்கையால் வலத் தொடையை நீவியபடி.

ராகவ் ஒரு நிமிடம் கடுப்பானான். தீவிழி விழித்துப் பார்த்தான். ஆனால் சட்டென்று சிரித்தான்!

இருவரும் சிரித்தார்கள்!

அதற்குள்ளாக ப்யூன் வந்து "சார், மேனேஜரம்மா.. கூப்பிடறாங்க..!" என்று அழைக்கவே போனார்கள்.

வங்கியில் அடிக்கப்பட்ட காலண்டர்கள் கொடுத்தார் தமயந்தி.

"ரொம்பத் தேங்க்ஸ்!" என்று திரும்பத் திரும்பச் சொன்னார்.

"பரவால்ல.. மேடம்! இன்னும் ரெண்டு நாள்ல இன்டஸ்ட்ரியலிஸ்ட் ப்ரெண்ட் ஒருத்தன் வரேன்னு சொல்லியிருக்கான்..! அடுத்த வாரத்துல நம்ம கம்பெனி அக்கவுண்ட் ஓப்பன் பண்ணிடலாம்.." என்றான்.

தமயந்தி சிரித்தார். மத்தாப்புச் சிதறல்களாகச் சிரித்த அந்த சிரிப்பு பார்க்க மிகவும் அழகாக இருந்தது.



மிகவும் மரியாதை கொடுத்து அவர்களை வழியனுப்பி விட்டு தனது அறைக்கு வந்தார்.

காஷியர் உள்ளே வந்து "மேடம்! அருமையான கஸ்டமர் மேடம்! எனக்கு அவரைத் தெரியும். நிறைய கம்பெனி கள்ன்னு வச்சிருக்காரு.." என்று ஜோசப்பைப் பற்றிச் சொல்லவும் தமயந்தியின் மனம் மிகவும் மகிழ்ந்து போனது.

அதே நேரம்!

செல்போன் ஒலித்தது!

கணவர் வெளிநாட்டில் இருந்து அழைத்தார். தமயந்தியும் ஆசையாக செல்போனைக் கையிலெடுத்தார்.

"என்னது! எவனோ... செல்போன் காலராமே! வீட்டுக்கே வந்துட்டானாமே! எத்தனை தடவை சொல்லியிருக்கேன்... கண்ட பயலையும் உள்ளே விடாதேன்னு..! ஏதாவது டெபாசிட்.. கிபாசிட்டுன்னு சொல்லிகிட்டுத் தொல்லை குடுக்கப் போறானுங்க.. உனக்கு அதெல்லாம்.. புரிஞ்சுக்கற அளவுக்கு விபரம்.. பத்தாது.." என்று குரலெடுத்துக் கத்தவும் தமயந்தி இடை புகுந்தார்.

"இல்லல்லே! அவரு.. ரொம்ப நல்ல.."

"என்னத்தடி நல்ல ஆளு! வர்த்தினி ரொம்ப டென்ஷன் ஆகறா.. அறிவு கெட்டத் தனமா.. எதுவும் செஞ்சு.. வைக்காதே" என்று மேலும் கத்த தமயந்தி மனம் வாடிப் போனார்.

போனை ஆப் செய்யும்போது முகம் கறுத்துப் போய்க் கிடந்தது.

கோபம் முழுவதும் மகளின் மேல் திரும்பியது.

## 7

தமயந்தியின் முகம் அப்படிக் கடுப்பாகி எப்போதும் பார்த்ததில்லை வர்த்தினி.

அன்று மாலை!

வங்கியிலிருந்து வரும்போதே முகத்தை ஒரு மாதிரி வைத்துக் கொண்டு வந்தார்.

"சரி.. ஆபீஸில் ஏதோ பிரச்சினை போல இருக்கிறது" என்று எண்ணிக் கொண்டாள் வர்த்தினி. ஆனால் வீட்டிற்கு வந்தவுடனே அந்த மாதிரி சமயங்களில் மகள் பேசுகிற நகைச்சுவையில் இளகி விடுவார். மனம் மாறி விடுவார். ஆனால், இன்றைக்கு வந்தவுடனே தனது அறைக்குச் சென்று அறைக் கதவை அறைந்து சாத்திக் கொண்டார்.

வர்த்தினியின் முகம் ஒரு மாதிரிப் போய் விட்டது. தானாகவே போய்க் கதவைத் தட்டினாள்.

"அம்மா.. என்னம்மா? உடம்புக்கு சரியில்லையா?" என்றாள்.

"உடம்புக்கென்ன கேடு.. நல்லாத்தான் இருக்கு.." என்றார்.

"ஓ..! அப்ப மனசு சரியில்லையோ."

"இத பார்றி! இப்ப எதுக்கு என்னைத் தொல்லை பண்ணிகிட்டிருக்கே? போய் உருப்படியா ஏதாவது வேலை இருந்தா.. பாரு!"



அம்மா எப்போதாவது இப்படித் திட்டத்தான் செய்வார்கள். ஆனால் அதில் ஒரு செல்லம் இருக்கும். தன்னை மீறிய குரல் குழைவு தெரியும். அன்பு தெரியும். இவ்வளவு கடுமை இருக்காது.

வர்த்தினியின் கண்களில் கண்ணீர் நிறைந்தது. வெடுக்கென்று திரும்பித் தனது அறைக்குப் போய் விட்டாள். இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த தமயந்தியின் தாய் பேத்தியின் அறைக்குள் நுழைந்தாள்.

"என்னடா.. ராஜாத்தி!" என்றார்.

"பாட்டி.. இந்த அம்மாவுக்கு என்ன ஆச்சு?" என்றாள் ஆதங்கத்துடன்.

"அது ஒன்னும் இல்லம்மா.. ஆபீஸ்ல ஏதாவது தப்புப் பண்ணியிருப்பாளாயிருக்கும். டோஸ் வாங்கியிருப்பா.. விடு.." என்றார் ஆறுதலாக.

"போ.. பாட்டி..!" என்ன டோஸ் வாங்கிட்டு வந்தாலும் என்கிட்டே கோபப் பட மாட்டாங்க.." என்றாள் மறுபடியும் புகார் போல.

"கொஞ்ச நேரம். விடு! தானா.. வருவா.." என்று பேத்தியை சமாதானப்படுத்தினார் பாட்டி. ஆனால் அம்மா.. ஒன்றும் சமாதானமாய் போகிறாற் போல மகளுக்குத் தெரியவில்லை.

இரவும் கூட அந்தப் பாராமுகம் தொடர்ந்தது. இரவு நேர உணவு மட்டும் தாயும், மகளும் சேர்ந்துதான் உண்பார்கள்.

இன்றைக்கு அதற்கும் கூட தமயந்தி வரவில்லை. ரொம்பவும் வேலையிருப்பவர் போலக் கம்ப்யூட்டரின் முன்னால் அமர்ந்து கொண்டிருந்தார்.

# 7

தமயந்தியின் முகம் அப்படிக் கடுப்பாகி எப்போதும் பார்த்ததில்லை வர்த்தினி.

அன்று மாலை!

வங்கியிலிருந்து வரும்போதே முகத்தை ஒரு மாதிரி வைத்துக் கொண்டு வந்தார்.

"சரி.. ஆபீஸில் ஏதோ பிரச்சினை போல இருக்கிறது" என்று எண்ணிக் கொண்டாள் வர்த்தினி. ஆனால் வீட்டிற்கு வந்தவுடனே அந்த மாதிரி சமயங்களில் மகள் பேசுகிற நகைச்சுவையில் இளகி விடுவார். மனம் மாறி விடுவார். ஆனால், இன்றைக்கு வந்தவுடனே தனது அறைக்குச் சென்று அறைக் கதவை அறைந்து சாத்திக் கொண்டார்.

வர்த்தினியின் முகம் ஒரு மாதிரிப் போய் விட்டது. தானாகவே போய்க் கதவைத் தட்டினாள்.

"அம்மா.. என்னம்மா? உடம்புக்கு சரியில்லையா?" என்றாள்.

"உடம்புக்கென்ன கேடு.. நல்லாத்தான் இருக்கு.." என்றார்.

"ஓ..! அப்ப மனசு சரியில்லையோ."

"இத பார்றி! இப்ப எதுக்கு என்னைத் தொல்லை பண்ணிகிட்டிருக்கே? போய் உருப்படியா ஏதாவது வேலை இருந்தா.. பாரு!"



அம்மா எப்போதாவது இப்படித் திட்டத்தான் செய்வார்கள். ஆனால் அதில் ஒரு செல்லம் இருக்கும். தன்னை மீறிய குரல் குழைவு தெரியும். அன்பு தெரியும். இவ்வளவு கடுமை இருக்காது.

வர்த்தினியின் கண்களில் கண்ணீர் நிறைந்தது. வெடுக்கென்று திரும்பித் தனது அறைக்குப் போய் விட்டாள். இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த தமயந்தியின் தாய் பேத்தியின் அறைக்குள் நுழைந்தாள்.

"என்னடா.. ராஜாத்தி!" என்றார்.

"பாட்டி.. இந்த அம்மாவுக்கு என்ன ஆச்சு?" என்றாள் ஆதங்கத்துடன்.

"அது ஒண்ணும் இல்லம்மா.. ஆபீஸ்ல ஏதாவது தப்புப் பண்ணியிருப்பாளாயிருக்கும். டோஸ் வாங்கியிருப்பா.. விடு.." என்றார் ஆறுதலாக.

"போ.. பாட்டி..!" என்ன டோஸ் வாங்கிட்டு வந்தாலும் என்கிட்டே கோபப் பட மாட்டாங்க.." என்றாள் மறுபடியும் புகார் போல.

"கொஞ்ச நேரம். விடு! தானா.. வருவா.." என்று பேத்தியை சமாதானப்படுத்தினார் பாட்டி. ஆனால் அம்மா.. ஒன்றும் சமாதானமாய் போகிறாற் போல மகளுக்குத் தெரியவில்லை.

இரவும் கூட அந்தப் பாராமுகம் தொடர்ந்தது. இரவு நேர உணவு மட்டும் தாயும், மகளும் சேர்ந்துதான் உண்பார்கள்.

இன்றைக்கு அதற்கும் கூட தமயந்தி வரவில்லை. ரொம்பவும் வேலையிருப்பவர் போலக் கம்ப்யூட்டரின் முன்னால் அமர்ந்து கொண்டிருந்தார்.

பாட்டி- தமயந்தியின் அறைக்குப் போய்,

"என்னடி.. தமயந்தி..! அந்தப் புள்ளே சாப்பிடறதுக்காகக் காத்துகிட்டிருக்கா.. நீ வரலையா?"

"இத பாரும்மா..! என்னைத் தொல்லை பண்ண வேண்டாம்னு.. சொல்லு..! நான் முக்கியமான கணக்கு வழக்கில இருக்கேன்." என்றார்.

வர்த்தினிக்குக் கோபமே வந்து விட்டது!

"அவங்க கிடக்கிறாங்க.. நீ டிபன் வை பாட்டி..." என்று நன்றாகச் சாப்பிட்டாள்.

மறுநாள் காலையிலும் அம்மா இதே போலவே நடந்து கொண்டார்.

முதல் நாள் வந்த பதிலில் ஹம்சவர்த்தினி ஓரளவுக்குத் திருப்தியாகி இருந்தாள்.

'சரி! அம்மாவுக்கு நிஜமாவே ஏதோ பிரச்னை போல இருக்கு..! அதுவும் பைனான்ஸ் மேட்டர்ன்னா அப்படித் தான் இருக்கும்' என்று சமாதானம் செய்து கொண்டாள். ஆனால் மறுநாள் காலையும் அம்மா தன்னைத் தவிர்ப்பது போல் தோன்றியது.

அலுவலகம் போனதும் இடையில் அழைப்பார் என்று எதிர்பார்த்தாள். இந்த மாதிரி அம்மா கோபித்துக் கொண்டு போனால் கல்லூரியில் உணவு இடைவேளையின் போது அழைப்பார். ஆனால் இன்றைக்கு அதுவும் அழைக்க வில்லை.

மனதில் கொஞ்சம் கவலை ஏற்பட்டது! தான் ஏதாவது தவறாக நடந்து கொண்டோமா என்று எண்ணிக் கொண் டாள்.



அம்மா வந்தவுடன் கேட்க வேண்டும் என்று எண் ணிக் கொண்டாள். அம்மா வருவதற்காக முன்னாலிருந்த அந்தப் பெரிய சிட்அவுட்டில் அமர்ந்து கொண்டிருந்தாள்.

தமயந்தி அன்றைக்கும் தாமதமாக வந்தார். ஏழு மணி இருக்கும்!

எல்லாக் கோபத்தையும் மறந்தவள் போல,

"அம்மா..!" என்று ஆசையாக வந்த மகளைப் பார்த்து ஒரு நிமிடம் மனம் நெகிழ்ந்தது. ஆனால் உடனே கணவர் தொலைபேசியில் பேசியது நினைவு வந்தது. இது நாள் வரை அப்படியெல்லாம் பேசாத கணவர்!

அதுவும் இந்த வயதில்!

என்ன இருந்தாலும் மகள் ஓடி வருகையில் முகத்தில் அடித்தாற் போல திரும்பிக் கொள்ளவும் மனது இடம் தரவில்லை!

"என்ன?" என்றார்.

வழக்கமான "என்னம்மா?" என்ற குழைந்த குரலாக அது இருக்கவில்லை. லேசான ஒரு எரிச்சல் இருந்தது. நேற்றைய கடுமை இல்லை என்றாலும் குரலில் கோபம் இருந்தது.

வர்த்தினியால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. அம்மாவின் பின்னாலேயே அம்மாவின் அறைக்குப் போனாள்.

"அம்மா! எதுக்கு என்மேலே கோபமா இருக்கே?" என்று கேட்டாள்.

இரண்டு கால்களையும் தரையில் ஊன்றிக் கொண்டு அடம் பிடிக்கிற குழந்தை போல் அவள் நிற்கிற கோலம்

கண்டு தமயந்திக்கு அவள் சின்னக் குழந்தையாக இருக்கிறபோது நிற்கிற விதம் நினைவுக்கு வந்தது.

"நீ என்னடி சொன்னே? அப்பாகிட்டே!" என்றார் இறுகிய குரலில்.

"என்ன சொன்னேன்?" என்றாள் வர்த்தினி. கேட்கும் போதே முந்தைய நாள் அப்பாவிடம் பேசியது நினைவுக்கு வந்தது.

"அப்பா!" என்றாள் குரலில் கொஞ்ச கலக்கம் தொனிக்க.

"என்னம்மா?" என்றார்.

"அப்பா..! இந்த அம்மா செய்யறது எதுவும் நல்லால்லே" என்றாள் புகார் செய்யும் குரலில்.

"என்ன செய்தா?" என்றார் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டே சீனிவாசன்.

வழக்கமாக அம்மாவும், மகளும் பொய்ச் சண்டை போட்டுக் கொள்வார்கள். அப்படித்தான் ஏதோ என்று எண்ணிக் கொண்டார்.

மகள் தொடர்ந்து சொன்ன செய்தி கேட்ட அவருக்குக் கவலையாகிப் போனது.

"அப்பா! யாரோ ஒருத்தன் போன வாரமெல்லாம் நேரம் காலம் பார்க்காம செல்போன்ல கூப்பிட்டுகிட்டிருந்தான்னு என்கிட்டே சொல்லிட்டிருந்தாங்க... அவன் என்னமோ உங்க வாய்ஸ் ரொம்ப ஸ்வீட்டாயிருக்குன்னு சொன்னானாம். அதுக்கு இந்த அம்மா சும்மாயிருந்திருக்கணும். ரியாக்ஷன் காட்டாம இருந்திருக்கணும். ஏதோ பிடிச்சுத் திட்டியிருப்பாங்க.. போல இருக்கு.. அவன் கட் பண்ணிட்டான்."

"ம்..!" என்றார் கவனமாக.



"அதுக்கப்புறம்.. "சரிப்பா! நான் திட்டிட்டேன் நீ யார் பெத்த புள்ளையோ! நான் இதுவரைக்கும் யாரையும் அந்த மாதிரித் திட்டினதில்லே! ஆனா.. இனிமே என்னைத் தொந்தரவு பண்ணாதே! என்னா.. எனக்கு வயசு அம்பத்தைஞ்சுன்னு மெசேஜ் குடுத்திருக்காங்க."

"ஐயய்யோ! இது தேவையில்லாத வேலையாச்சே!" என்றார் அப்பா.

"ஆமப்பா! அதுக்கப்புறம்.. அந்தாள் யாரைப் பிடிச்சானோ.. என்னவோ.. பாத்தா.. நேத்திக்கு வீட்டுக்கே வந்து நிக்கறான். கொஞ்சம் வசதியான ஆள் மாதிரித் தெரியுது. பாத்தா.. டீசண்டாத் தெரியறாப்பல.. ஆனா.. இந்த ராங்கால் மூலமா வந்ததாலே எனக்குப் பிடிக்கலே..!"

"அது கரெக்ட்தான்!"

"அது மட்டுமில்லப்பா.. அந்தாள ஏதோ டெப்பாசிட் தரேன்னு சொல்லியிருக்காப்பல.. அதனால.. ராஜ உபசாரம்தான்.. நீங்களும் ஊர்ல இல்லே! அண்ணனும் கூப்பிட்ட உடனே வர்ற தூரத்துலயா இருக்கான்?"

"நீ ஏம்மா.. பயப்படறே! நான் நம்ம பக்கத்து வீட்டுக் கந்தசாமிகிட்டே சொல்லிட்டு வந்திருக்கேன். அதுவுமில்லாம நாம் டெனன்ட் முகுந்தன்கிட்டயும்தான் சொல்லியிருக்கேன். வேற ஏதாவது பிரச்சினைன்னா என் ஆபீசுக்கு ஒரு போன் போடு. அடுத்த நிமிஷம் ஆள் வந்து நிப்பாங்க.." என்றார் ஆறுதலாக.

"அது அப்படித்தான்! ஆனா.. நாம எதுக்குத் தேவையில்லாத தலைவலியை வரவழைச்சுக்கணும்.. நீங்க கொஞ்சம் அம்மாவைக் கண்டிச்சு வைங்க.. அந்த ஆள் முன்னாடி என்னை இன்ஸல்ட் பண்றாங்க" என்றாள் அழாத குறையாக.

குரலில் கோபம் ஏறியது!

"ஓ..!" என்று கொஞ்சம் தணிந்தாள் வர்த்தினி.

'அப்பா! ஓவரா ரியாக்ட் பண்ணிட்டாரு போல இருக்கு..!' என்று எண்ணிக் கொண்டாள்.

"அம்மா.. ப்ளீஸ்..! புரிஞ்சுக்க! காலேஜ் வட்டாரத்துல.. வெளியிடங்கள்ல இந்த செல்போன் பிரண்ட்ஷிப்னால.. எத்தனை பிரச்சினைகள் ஏற்பட்டிருக்குன்னு.. உனக்குத் தெரியாது.." என்றாள்.

"நீயும் ஒரு விஷயம் புரிஞ்சுக்க..! நானும் ஒண்ணும் சின்ன வயசுப் பொண்ணில்லே! அம்பத்தஞ்சு வயசை முழுங்கியிருக்கேன். ஒரு பாங்க்ல மானேஜரா இருக்கேன்..! நானும் உலகத்தைப் பாத்திருக்கேன். எனக்கென்னவோ சுய சிந்தனையோ.. சுய அறிவோ இல்லாத மாதிரி என்னை நடத்தாதே.." என்றார்.

வர்த்தினி செயலற்றவளாக அம்மாவைப் பார்த்தாள்.

"அம்மா! நான் உன் மக! இப்ப வந்த உன்னோட வாடிக்கையாளரை விட நான் முக்கியம்னு எப்ப நினைக்கறியோ.. அப்ப நான் இதைப் பத்திப் பேசறேன்" என்றாள்.

தமயந்தி கோபம் தணிந்தாற் போல் நின்றார்.

"ஆமா! இனிமே என்னோட கஸ்டமர்ஸைப் பத்தி நீ பேசாதே.." என்றார் ஏதோ முக்கியமான விஷயம் படிப்பவர் போல ஏதோ ஒரு பைலைக் கையில் எடுத்துக் கொண்டார்.

வர்த்தினி ஏமாற்றத்துடனும், கையாலாகாத கோபத்துடனும் தனது அறைக்குப் போனாள்.

கொஞ்ச நேரம்!



பழைய அதிர்ச்சிகரமான நினைவுகள் எல்லாம் வந்து போயின!

'அம்மா.. ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கறாங்க!

'சிக்கப் போறது பெரிய புதை குழி தெரியுமா? அந்தக் கவியரசனோ.. கன்றாவி அரசனோ.. அவன் சிரிப்பிலேயே ஒரு கவர்ச்சி.. இருக்கு..! கிண்டலா அவன் பாக்கறப்போ.. எனக்கே எப்படியோ இருக்கு.. ஒரு கோ-எட் காலேஜ்ல படிக்கற, எப்படிப்பட்ட ஆண்களோடவும் இயல்பாய் பழகற எனக்கே.. அவன் பார்வை பிடிக்கலேன்னா.. நீ எப்படி சமாளிப்பே! எனக்கென்னவோ.. அந்த ஆள்.. வெறும் வாடிக்கையாளரா உன்னைச் சந்திக்க வரலே! ஏதோ திட்டத்தோடதான் வந்திருக்காப்ல..!' என்று ஏதேதோ சொல்ல வேண்டுமென்றுதான் அம்மாவின் அறைக்குப் போனாள். ஆனால், அம்மாவின் கோபம் பார்த்து சுவற்றில் அடித்த பந்து போலத் திரும்பி வந்து விட்டாள்.

ஏதோ கதைப் புத்தகத்தை எடுத்துக் கொண்டாள்! அவளுக்குப் பிடித்த நாவலாசிரியை எழுதியது..! எப்போதும் அவரது நாவல் படித்தால் மனம் தெளிவு பெறும். படித்த கதைகளைக் கூடத் திரும்பத் திரும்ப படிக்கிற மாதிரி நயமாக எழுதுவார். ஏதோ ஒரு பக்கத்தைப் புரட்ட..

'வாழ்க்கையைச் சந்தித்துத்தான் ஆக வேண்டும்! பிரச்சினைகளைக் கண்டு பயப்பட்டால் அவை நம்மைக் கபளீகரம் செய்து விடும். மாறாக.. பிரச்சினைகளை எதிர் கொண்டால் நாம் அவைகளை விழுங்கி விடலாம்.' என்ற வரிகள் ஏதோ அசரீரி ஒலித்தாற்போல் அவள் கண்களில் பட்டன.

மனத்தைத் தேற்றிக் கொண்டாள்!

என்னதான் தேற்றிக் கொண்ட போதிலும்.. இரவு படுக்கும்போது அந்த பயங்கர நினைவுகள் வந்து அழுத்தின.

இரவு பதினோரு மணியிருக்கும்!

திடுக்கிட்டு விழித்தாள்! முகம் முத்து முத்தாக வியர்த்திருந்தது!

மறக்கவே முடியாத அந்தக் காட்சிகள் மீண்டும் நிதர்சனம் போல எதிரே நின்றன.. உடல் நடுங்கியது.

படுக்கையின் அருகில் இருந்த சுவிட்சைப் போட்டாள்! அறையில் விளக்கெரிந்தது.

உணர்வுகள் சமனப்படக் கொஞ்ச நேரமாகியது.. மனது என்னென்னவோ எண்ணித் தத்தளித்தது.

அன்றைக்கு உறக்கம்.. முற்றிலும் பாதிக்கப் புரண்டு, புரண்டு படுத்தாள்.

தனியாகப் படுக்க எப்படியோ இருந்தது! எழுந்து பாட்டியின் அறைக்குப் போனாள்.

"பாட்டி! உன்கிட்டே படுத்துக்கறேன்" என்றாள்.


"படுத்துக்கடா.. ராஜாத்தி!" என்றார் பாட்டி வரலட்சுமி.

பாட்டியின் அணைப்பில் ஆதரவாக உணர்ந்தாலும் இன்னொரு புறம் இரண்டு முகங்கள் அவளருகில் வந்து போவது போல் போயின!

அதில் ஒன்று கவியரசனுடையது!

'இதுவரைக்கும் கோபமே காட்டாத எனக்கும் அம்மாவுக்குமே முறைக்க விட்டுட்டே இல்லே! இரு... வச்சுக்கறேன்' என்று கறுவிக் கொண்டாள்!





# 8

"இத பாரு! நீ பெரிய கிரியேட்டிவ் டைரக்டர்னு பேசிக்கறாங்க" என்றான் ராகவ்.

"அது எவன்டா அந்தத் தப்பெல்லாம் செய்யறவன்" என்று சிரித்தான் கவியரசன்.

"ஊரு உலகத்துல நிறைய பேரு இருக்காங்களே! ஒரு முக்கியமான விஷயம் இல்லாதவங்க."

கவியரசனுக்கும் கொஞ்சம் புரிந்தாற்போல இருந்தது. ஆனாலும் புரியாதவன் போல பார்த்துக் கொண்டிருந்தான். தெரிந்து கொள்ளாதவன் போலவே கேட்டான்.

"என்ன.. அது முக்கியமான விஷயம்?"

"அதான்டா..! உத்திரப் பிரதேசம்.. மூளை.." என்றான்.

கவியரசன் கோபமோ.. எந்த விதமான பாதிப்போ காட்டாமல் சொன்னான்.

"அந்த மாதிரி.. ஆளுங்களை உனக்குத்தானே.. புரியும்.. எனக்குப் புரியாதில்லே.." என்றான்.

ஆட்காட்டி விரலைத் தன் நெற்றிக்கு நேரே நீட்டி.. தனக்குத்தானே நொந்து போன குரலில் சொல்லிக் கொண்டான்.

"வேணுண்டா.. ராகவா.. உனக்கு..!" என்று

ரசித்துச் சிரித்தான் கவியரசன்.

'ம்..!' என்று தனக்குள்ளாகவே முனகிக் கொண்ட ராகவ் மேலும் சொன்னான்.

''எனக்கு மூளையில்லேங்கறதைக் கேட்டவுடனே ரசிச்சுச் சிரிக்கற.. பிரண்டு.. என் நிலைமை பாத்தியா..?'' என்றான்.

அதற்கும் கவியரசன் சிரித்தான்.

''டேய்.. போதும்டா.. விஷயத்துக்கு வாடா'' என்றான் ராகவ்.

''விஷயம்.. என்னடா..! அடுத்ததா.. தமயந்தி.. மேடம்..'' என்று ஏதோ கவியரசன் சொல்லி வர ராகவ் கடுப்பானான்.

''டேய்! என்டா.. இப்படியாயிட்டே! அந்த தமயந்தி மேடம் மேட்டரே எனக்குப் பிடிக்கலே..! நான் பேச வந்ததே வேற.. நீ என்னன்னா.. தமயந்தி.. வர்த்தினின்னு.. சை..! நம்ம வேலையைப் பாக்கலாண்டா..'' என்றான் சலிப்புடன்.

''நம்ம வேலைதாண்டா.. இது!'' என்றான் கவியரசன்.. சற்றும் சளைக்காமல்.

''எதுடா.. நம்ம வேலை? அந்த அம்மா.. வயசென்ன.. உன் வயசென்ன..?'' என்றான் ராகவன். இப்போது அவன் குரலில் கோபம் மாறி வருத்தம் தொனித்தது.

''டேய்! இதுக்கெல்லாம்.. வயசைப் பத்தின கவலையே இல்லை! வயசுக்கும்.. இதுக்கும் சம்பந்தமே.. இல்லை..'' என்றான் கவியரசன் பிடிவாதமாக.

இப்போது ராகவ் கண்களில் கவலை தோன்றியது. கோபமாகச் சில வார்த்தைகள் பேசினான். அவன் பேசிய



வார்த்தைகளின் பொருள் புரிந்த கவியரசன் ஓங்கி அவனை அறையாத குறையாக வெறித்துப் பார்த்தான்.

ராகவ் எழுந்தான்.

''நான் அப்புறம்.. வர்றேன்..'' என்று வெளியேறுகையில் கவியரசனின் கண்களில் கோபம் எகிறியது.

''வரவே.. வராதே.. போ!'' என்றான் அவனும் கோபமாக.

ராகவ் அந்த வார்த்தைகள் காதில் விழாதவன் போலப் போய் விட்டான்.

கவியரசன் மனதில் சொல்ல வொண்ணாத வருத்தம் நிறைந்தது.

* * *

''இந்த பைல் இல்லே! இது லீவர் பைல். எனக்கு ஆர்டினரி பைல் போதும்..'' வாங்கிக் கொண்டு திரும்பினாள் ஹம்சவர்த்தினி.

கலகலவென்று இருவர் சிரிக்கும் குரல் கேட்டது. யதேச்சையாகத் திரும்பினாள்.

கண்கள் அவளையறியாமல் அகல விரிந்தன.

கவியரசனும், இன்னொரு பெண்ணும் அங்கே நின்று கொண்டிருந்தார்கள்.

கவியரசன் அவளைப் பார்க்கவில்லை!

''சுஷ்மிதா இதுல தமாஷ் என்னன்னா... இப்ப நான் போன் பண்ணினாலே போதும். அந்த லேடி அடுத்த நிமிஷம் லைன்ல வாராங்க.'' என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

''அதானே! உங்க சிரிப்புக்கும்.. பேச்சுக்கும் யாராவது மயங்காம இருக்க முடியுமா?'' என்றாள் சுஷ்மிதா.

அப்போதுதான் ஹம்சவர்த்தினியைக் கவனித்தான். உடனே கவனிக்காதவன் போல கஷ்மிதாவின் காதில் ஏதோ முணுமுணுத்தான். பிறகு கஷ்மிதாவிடம் நெருங்கி நின்று கொண்டான்.

"அப்புறம்.. கஷ்மிதா! சுரேந்திரன் என்ன சொல்றாரு..!" என்றான்.

"அது.. என்ன சொல்லும்..! அது பாட்டுக்கு இருக்கு. நீங்கதான் பெரிய வாய்ப்பூட்டு போட்டுட்டீங்களே!"

"அப்ப இனிமே நம்ம என்ஜாய்மெண்ட்டுக்குத் தடையில்லேன்னு.. சொல்லு.." என்றான்.

கஷ்மிதா சிரித்தாள்!

"அதென்ன.. கவியரசன்! எப்பவும் உங்களுக்கு மேரீட்.. விமன்.. பிரண்ட்ஷிப்தான்.. பிடிக்குது.."

"ஒவ்வொருத்தர்க்கு.. ஒவ்வொரு விஷயம். பிடிக்குது. ஒண்ணு புரிஞ்சுக்கோ. டேலண்டுக்கும்.. மேரேஜுக்கும் சம்பந்தமில்லை. சொல்லப் போனா.. கல்யாணம் ஆனவங்க.. எல்லா விதத்திலும் அனுபவசாலிகளா இருப்பாங்க.. பிராப்ளம்ஸ்.. சால்வ் பண்றதுல.." என்று சொல்லி முடிக்குமுன்பாக ஹம்சவர்த்தினி குறுக்கிட்டாள்.

"பேஷ்! பேஷ்! ரொம்ப நல்லாருக்கு!" என்றான்.

அப்போதுதான் பார்ப்பவன் போலப் பார்த்தான் கவியரசன்.

"ஓ..! வர்த்தினி.. மேடம்!" என்றான் அலட்சியமாக.

"ஆமா..! வர்த்தினிதான்..! மிஸ்டர்.. எங்கம்மாவை பேங்குக்கே.. போய் எதுக்குப் பாக்கறீங்க?" என்றாள் கோபமாக.



"இதென்னடா.. வம்பாய் போச்சு! அவங்க பேங்கல மேனேஜர்.. நான்.. கஸ்டமர்.. போய்ப் பாக்கறேன்.." என்றான்.

"ம்..!" என்றாள் வர்த்தினி கிண்டலாக.

"எப்போலேர்ந்து.. கஸ்டமர்!"

"அது தெரியாதா? உங்கம்மாவைப் பார்த்த நாள்லருந்தே கஸ்டமர்தான்."

"ச்சீ.. அசிங்கமாய் பேசாதீங்க.."

"ஹல்லோ! நீங்கதான் அசிங்கமா நினைக்கறீங்க! நான் அவங்க பேங்கல கஸ்டமர்.. புரியுதா?" என்றான்.

"யு.. யு.." என்று அவன் பல்லைக் கடிக்க கஷ்மிதா சுவாரசியமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

"ஆர்.. எஸ்.. டி.. யு.. வி..!" என்று அவன் அடுக்க வர்த்தினி கையை உயர்த்தினாள்.

"ப்ளீஸ்! என்னை முட்டாள் பண்ணாதீங்க. உங்களாலே எங்கம்மாவுக்கும் எங்கப்பாவுக்குமே பிராப்ளம் வரும் போல இருக்கு.." என்றாள் குரலில் கொஞ்சம் வேதனையும் கலந்திருந்தது.

கவியரசன் ஒரு நிமிடம் ஆழமாகப் பார்த்தான். பிறகு சொன்னான்.

"மேடம்! கண்டிப்பா.. உங்கப்பாவுக்கும், அம்மாவுக்கும் என்னால பிரச்சினை வந்திருக்காது. அவங்க என்னைக் கஸ்டமராத்தான் ட்ரீட் பண்றாங்க. ஆனா.. நீங்கதான் அவருக்குக் கோபம் வர்ற மாதிரி சொல்லி ஏத்தி விட்டுட்டீங்க..." என்றான்.

அவள் வெறித்துப் பார்த்தாள். 'அம்மா இந்த ஆளிடம் தங்கள் வீட்டுப் பிரச்சினையைக் கூடச் சொல்லியிருக்கிறாள் போலும்' என்று தோன்றவும் அவளுக்கு இன்னும் கோபம் அதிகமாகியது.

"எங்க அம்மா.. சொன்னாங்களா?"

"ஆமா..!" என்றான்.

வர்த்தினி கேலியாகச் சிரித்தாள்.

"ரொம்ப கெட்டிக்காரர்தான்.. மிஸ்டர்! இந்த லேடி சொன்ன மாதிரி.. வயசு வித்தியாசம் இல்லாம எல்லாரையும் எப்படிக் கவர் பண்ணணும்னு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கு.

"தூணுக்குப் புடவையைக் கட்டினால் கூட..." என்று அவள் முடிக்கும்முன்பாக,

"மேடம்..! யாகாவாராயினும் நா காக்க!" என்றான்.

"என்ன மிஸ்டர்.. நா காக்கறது! நான்தான் போன்லயே மறுபடியும் மறுபடியும் தொல்லை குடுக்கறதைப் பார்த்தேனே. உங்களுக்கென்ன மரியாதை."

"மேடம்! வேண்டாம்!"

"என்ன.. வேண்டாம்! எல்லாரையும் உங்களால் வளைச்சுப் போட முடியாது மேன்.." என்ற கணத்தில் சற்றும் எதிர்பாராத விதமாக அவன் கை ஓங்குவது தெரிந்து அவள் கை தடுத்தது.

"வில் யு ப்ளீஸ் ஸ்டாப் இட்!" என்று அவன் கத்த பதிலுக்கு அவளும் கை ஓங்கினாள். அறைந்தும் விட்டாள்.

"கவியரசன்... உன்னைச் சும்மா விட மாட்டேன்.." என்று கறுவிக் கொண்டே நகர்ந்தாள்.



"நானும் உன்னை சும்மா விட மாட்டேன்.. போங்க போங்க உங்கம்மா.. கிட்டே சொல்லுங்க.. எல்லாரையும் கூட்டிட்டு வாங்க.." என்றான் சத்தமாக.

அவள் திரும்பினாள்.

"ஹலோ! அம்மாகிட்டே சொல்லமாட்டேன். நானே டீல் பண்ணுவேன்.." என்றாள்.

திரும்பி நடந்தாள்!

கஷ்மிதா இந்த நடப்புக்களை எல்லாம் பார்த்துத் திகைத்துப் போனாள். ஆனால் கவியரசனோ எதுவும் நடக்காதது போல்.

"நீ.. வா.. கஷ்மிதா.." என்றான். கடை நோக்கி நகர்ந்தார்கள்.

"அந்தப் பொண்ணு என்ன அப்படி.." என்று கஷ்மிதா ஆரம்பிக்க..

"தப்பு.. என் மேலயும்தான். நானும் கை ஓங்கியிருக்கக் கூடாதில்லே.." என்றான் கவியரசன்.

பெரிய டிபார்ட்மெண்டல் ஸ்டோர் அது! அரைமணி அவர்கள் அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்ததில் நேரம் போனது தெரியவில்லை. கஷ்மிதாவை அழைத்துச் செல்ல கணவனும் வரவில்லை என்பதால் கவியரசனே வீட்டில் இறக்கி விட்டு வருவதாக ஏற்பாடு. அதனால்தான் இந்த வழியில் வந்தார்கள்.

கஷ்மிதா அதற்குப் பிறகு சிந்தனையிலேயே வந்தாள்.

"என்ன.. கஷ்மிதா! அந்தக் கான்செப்ட் நல்லா.. வந்திருக்கு.. இல்லே!" என்று பேச்சை மாற்றினான் கவியரசன்.

"சார்.. திடீர்னு.. என்கிட்ட ஏன் அப்படி நடந்துக்கச் சொன்னீங்க.." என்றாள் கஷ்மிதா.

காரை ஓட்டிக் கொண்டிருந்த கவியரசன் முகவாய்க் கட்டையை தீவிக் கொண்டான்.

"எல்லாம் காரணமாத்தான்..."

"சார்! அந்தப் பொண்ணைத் தேவையில்லாம சீண்டீங்களோ.." என்றாள்.

"எல்லாம் தேவையாத்தான்" என்றான் அவன் அலட்டிக் கொள்ளாமல்.

"சார்.. அது என்ன? அவங்க அம்மா பத்தி என்னமோ.. சொன்னாங்க.." என்றாள்.

அவன் சொன்னான். கொஞ்சம் விவரமாகவே சொன்னான். பிறகு திடீரென்று.

"அட.... நீ என்ன? என்னை இண்டர்வ்யூ எடுத்துகிட்டிருக்கே..?" என்று கடிக்கவும் அவள் பேச்சை வேறு திக்கில் மாற்றினாள்.

"சார்...! அந்தக் கிரியேட்டிவ் டைரக்டரை விட நீங்க டீல் பண்ற விதமே நல்லா இருக்கு.." என்றாள்.

"அது எனக்கும் தெரியும்! சில சமயங்கள்ல அவன் விஷயங்களைச் சொதப்பறதைப் பார்த்தாலே எனக்கும் கோபம் வரும். ஆனா.. ஒரு பொருள்ன்னா.. பிராண்ட்ன்னு இருக்கற மாதிரி அவனுக்கு ஒரு பேரு இருக்கு.." என்றான் கவியரசன்.

"சார்! நான் சொல்றேன்னு.. தப்பா நினைக்காதீங்க..! ஒரு விளம்பரம்னு வரும்போது அது நல்லா மனசிலே போய் இறங்கி உட்காரணும். இப்ப ஏர் டெல் விளம்பரங்கள்லாம் பாருங்க.. ஒரு நயம் இருக்கும். எத்தனை தடவை பார்த்தாலும் ஒரு புன்னகை மலரும்" என்றாள்.



"ஆமா.. எனக்கும் கூட அந்த குலோப் ஜாமுன் சாப்பிட்டுட்டு எத்தனை ஓடினாங்க.. என்று அப்பா கேட்கும்போது குழந்தை ரெண்டுன்னு சொல்லிட்டு ஓடுமே.. அப்படி ஒரு சிரிப்பு வரும்.." என்றான்.

"உங்களுக்கு அந்த மாதிரித் திறமை நிறைய இருக்கு. நீங்களே செய்யலாம்.." என்றாள்.

"ஆமா.. அந்த மாதிரி ஐடியா இருக்கு.. ப்யூச்சர்ல செய்யலாம்னுதான் இருக்கேன்.. அதனாலதான் ஸ்டுடியோன்னு கிடியோன்னு வச்சிருக்கேன். ஆனா.. இப்ப வளர்ற நிலைமையில இருக்கறதுனால.. அதுல கவனம் செலுத்த முடியலே.." என்றான்.

"அது மட்டுமில்லாம.. வேற வேற விஷயங்கள்லே கவனம் போகுதோ.." என்றாள் கஷ்மிதா. வாழைப் பழத்தில் ஊசியேற்றுவது போல. அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான். பிறகு முகத்தில் தீவிர பாவத்துடன் சொன்னான்.

"ஆமா! இது இப்ப எனக்குப் பிரெஸ்டிஜ் இஷ்யூ ஆயிருச்சு.." என்றான்.

கஷ்மிதா.. திடீர்ன்னு கவலையானாள்.

"சார்.. அவங்க அடிச்சது.." என்று இழுக்க..

"அடியா.. அது! என்னமோ ஏதோ ஒரு பூ வந்து மேல விழுந்தாப் போல இருந்தது..." என்று சிரித்தான். "அது இல்ல பிரச்சினை..." என்றான்.

"சார்! எனக்குப் பிரச்சினை புரிஞ்சுது.." என்றாள் கஷ்மிதா.

கேள்விக்குறியாக அவன் பார்க்க அவள் பிரச்சினை எது என்பதைச் சொன்னாள்.

கவியரசன் ஆச்சரியமாகப் பார்த்தான். பிறகு மெல்லிய தாக பெருமூச்சு விட்டான்.

"ஆமா..!" என்றான்.

கஷ்மிதாவின் கண்களில் குறும்பு மிளிர்ந்தது. அவன் அதைக் கண்டு கொள்ளாதவன் போலத் தொடர்ந்தான்.

"அதனாலதான்..!" என்று சற்று நேரம் அமைதி யானான்.

"சார்..! இது சுத்தி வளைச்சு.. இன்னும் சொல்லப் போனா.. காதைச் சுத்தி மூக்கைத் தொடற சமாச்சாரமாத் தெரியலே.." என்றாள்.

"ம்.. அப்படித்தான்.. தெரியுது.. ஆனா.. எனக்கு வேண்டியது நடந்தே ஆகணுமே.." என்றான்.

"சரி.. சரி..!" என்று சிரித்தாள் கஷ்மிதா. கவியரசன் சிரிக்கவில்லை. ஆனால் மிகவும் சீரியஸாகச் சொன்னான்.

"கஷ்மிதா ஒரு சிஸ்டர் மாதிரி நினைச்சு.. இதை யெல்லாம்.. சொல்லிட்டிருக்கேன்" என்றான்.

"நோ பிராப்ளம் சார்! ஆனா, அந்தப் பொண்ணு என்னை சிஸ்டரா நினைக்கல போல இருக்கு.." என்றாள்.

இருவரும் சிரித்தார்கள்.

அதே நேரம்!

வீட்டையடைந்த ஹம்சவர்த்தினி தன் கையில் இருந்த பொருள்களையெல்லாம் வீசி சோபாவில் எறிந்தாள் கோபமாக.

பாட்டி வரலட்சுமி திகைத்துப் போய்ப் பார்த்தார்.



# 9

மறுநாள் காலை.

முகம் வாடி அமர்ந்திருக்கிற மகளைப் பார்த்தார் தமயந்தி.

"என்னடி.. இன்னும் சாப்பிடலையா? காலேஜுக்குப் போகலையா."

உச்சுக் கொட்டினாள் மகள்.

"ஏன்.. என்ன ஆச்சு?"

அவள் ஒன்றும் சொல்லவில்லை. அதே நேரம் பாட்டி கொண்டு வந்து காபியை நீட்ட வாங்கிக் கொண்டாள்.

"ஏண்டி.. உனக்கு அம்மா காபி போட்டுக் கொண்டு வந்து குடுக்கணுமா?" என்றார் தமயந்தி.

வரலட்சுமி தமயந்தியை உறுத்துப் பார்த்தார்.

"ஏண்டி, தமயந்தி... அந்தக் குழந்தையை எதுனா சொல்லிகிட்டே இருக்கே" என்றார்.

தமயந்தி ஒன்றும் பேசவில்லை. தனக்கும் நீட்டிய காபியை வாங்கிக் கொண்டார்.

"நீயே கேளு.. பாட்டி!" என்றாள் ஹம்சவர்த்தினி. தமயந்திக்கு கொஞ்சம் மனம் இளகியது. தேவையில் லாமல் தான் மகளிடம் கோபித்துக் கொள்கிறோமோ என்று தோன்றியது.

அம்மாவின் கோபத்தை அலட்சியம் செய்தவராக மகளின் அருகில் போய் அமர்ந்து கொண்டார். ஜெயவர்த்தினி பாராமுகமாகவே அமர்ந்திருந்தாள்.

"இத பாரு..! வர்த்தினி.. நான் சொல்றேன்னு கோபிச்சுக்காதே..! நீ ஏன் அந்தப் பையனை இவ்வளவு சீரியஸா எடுத்துக்கறே! ஏதோ ராங் கால் கனெக்ஷன்ல வந்தான்கறதுக்காகவா.. இருக்கட்டும்டி.. அவன் அப்படித் தூக்கித் தூக்கிப் பேசினது எனக்கும்தான் பிடிக்கலை. ஆனா, அதுக்கு அவன் ஏதோ காரணம் சொன்னான். எனக்கும் அது சரின்னு பட்டுது. அந்தக் காரணத்தைச் சொன்னா நீ எப்படியும் நம்பப் போறதில்லே! அந்தப் பிரச்சினையை என்கிட்ட விடு. இப்ப ஏன் முகம் வாடி இருக்கே! அதுக்கு பதில் சொல்லு."

"எனக்கு.. எனக்கு.. மீனா ஞாபகம் வந்துடுச்சு.." என்றாள்.

உதடுகள் பிதுங்கின. கண்கள் கலங்கியது.

"அடப் பொண்ணே!" என்று அம்மா ஆரத் தழுவிக் கொண்டார்.

"வர்த்தினி! அதைக் கொஞ்சம் கொஞ்சமா மறக்க முயற்சி பண்ணு!" என்று பக்கத்தில் அமர்ந்து தேற்றினார்.

அன்றைக்குப் புறப்படும் போதும், அம்மா காரில் கொண்டு போய் டிராப் செய்யும்போதும் முகம் வாடி அமர்ந்திருந்த மகளைத் தேற்றுவதற்கு எவ்வளவோ முயற்சி செய்தார்.

முடியவில்லை.

இரவும் கூட அவளுக்கு அதே நினைவு வாட்டியது.

* * *



"ஏலேய்! எடுபட்ட பயலே! இங்க வாடா!" என்று குரலெழுப்பிய தாயைக் கண்டு கொள்ளவே இல்லை முத்து.

"என்னாத்துக்குக் கத்தறே" என்றபடி உள்ளே வந்தான்.

"ஏலேய்! ஜாமான் கேட்டுகிட்டு ஆள் நிக்குதில்லே.. எடுத்துக் குடு.." என்றாள் அம்மா.

"இந்தா.. வாரேன்" என்று போனான்.

"அண்ணாச்சி.. ஷாம்பு.. குடு" என்று நின்றது ஒரு வாண்டு.

"இந்தா.. ஏலே! உங்கம்மாவை வரச் சொல்லு. காசு பாக்கி தரணும்" என்றான் முத்து.

"அம்மா.. சொல்லித்தான் அனுப்பிச்சாங்க. இப்ப வாங்கிட்டு வா! அப்புறம் காசு கொண்டு தாரேன்னு அண்ணாச்சிகிட்ட சொல்லிப்புட்டு வான்னு" என்றது வாண்டு.

"க்கும்..! அது மட்டும் விவரமா சொல்லியனுப்பிச்சுடு வாங்களே.." என்று முணுமுணுத்த அண்ணாச்சி முத்து ஷாம்பு பாக்கெட்டை எடுத்துக் கொடுத்தான்.

வாண்டு நகர்ந்தது.

அண்ணாச்சி என்று அழைக்கப்பட்டாலும் முத்துவுக்கு வயது இருபத்திரண்டுதான். அந்தக் காலத்தில் பள்ளிக்குப் போக மாட்டேன் என்று அடம் பிடித்து சாதித்துக் காட்டியவன். அவன் அப்பா உயிரோடு இருக்கும்போது வற்புறுத்தி பத்தாவது வரை அனுப்பி வைத்தார். எஸ்.எஸ்.எல்.சி. பெயில்.

"எடுபட்ட பயலே! நான்தான் பொட்டலம் கட்டிப் பொழப்பை நடத்தறேன்.. நீயாவது உருப்படுவியாக்

க்கும் பாத்தா.. என்னமோ ஏகப்பட்ட கிரித்திரியம் செய்யறே" என்று வருத்தப்பட்ட அப்பாவிடம் சொன்னான்.

"என்னங்கய்யா நீங்க! நான் படிக்க மாட்டேன்னா சொன்னேன்.. படிப்பு வரமாட்டேங்குது ஆட்டம் காட்டுது.. என்னை என்ன பண்ணச் சொல்றீங்க..?" என்றான்.

"விடு.. சனியனை! நீ கடையின்னாலும் பாத்துக்க.. நான் மார்க்கெட்டுக்குப் போயி காய்கறி வாங்கியாரேன்.. நீ கடையைப் பாத்துக்க" என்றார்.

அவனும் பார்த்துக் கொண்டான்.

படிப்புத்தான் வரவில்லையே தவிர மற்றபடி வியாபாரத்தில் கெட்டி. கலகலப்பாகக் கலாட்டா செய்து கொண்டே வியாபாரம் செய்வான்.

"யக்கா! தேங்காத் தண்ணி கேட்டியில்ல.. இந்தா எடுத்து வச்சிருக்கேன்.." என்று கொடுப்பான். கொடுத்து விட்டு,

"யக்கா! தேங்காத் தண்ணி எதுக்கு..?" என்பான்.

"அது ஒண்ணுமில்ல. தம்பி! தேங்காய்த் தண்ணி விட்டுச் சட்டினி அரைச்சா ரொம்ப நல்லா இருக்கும்.." என்பாள் அந்தப் பெண்மணி.

அந்த ஊருக்கே அவர்களது கடை ஒன்றுதான்.

பசங்குடி கிராமம் ரெண்டுக்கெட்டான் கிராமம். பெரிய நகரம் என்று சொல்ல முடியாது. கிராமம் என்றும் சொல்ல முடியாது. ஆனால் அவர்கள் வசிக்கிற பகுதியில் நான்கைந்து தெருக்களுக்கு அதுதான் கடை. எனவே ஓரளவு வியாபாரம் ஆகியது. ஆனால் கடையும் இரண்டும் கெட்டான்தான்.



பெரிய கடை என்றும் சொல்ல முடியாது. அதற்காக பெட்டிக்கடை என்றும் சொல்ல முடியாது.

"ஏந்தம்பி என்னதிது. அரிசியில இத்தனை கல்லு.." என்றால்,

"யக்கா! அப்பப்பக் கல்லைக் கடிச்சாத்தான் பல்லோட பலம் தெரியும்" என்று சமாளிப்பான். ஆனால் அடுத்த முறை ஆளை விட்டு அரிசியைச் சுத்தம் செய்து வைப்பான்.

இளம் பெண்கள்கூட அவன் கடைக்கு வருவார்கள். இயல்பாகப் பேசுவார்கள்.

பள்ளிக் கூடத்துக்குப் போகிற பெண்கள், பையன்கள் மாதக் கணக்கு வைத்துக் கொள்வார்கள். அப்போது அவனுக்கு இருபது வயதுதான் இருக்கும். திடீரென்று அவனது அப்பா ஏதோ ஆக்ஸிடெண்டில் மாட்டி இறந்து போனார்.

அதற்குப் பிறகு அவன் குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான்.

நல்லவேளையாக ஒரே ஒரு அக்காதான். அந்த அக்காவுக்கு நகையெல்லாம் அப்பா சேர்த்து வைத்திருந்தார். பணமும் சேர்த்து வைத்திருந்தார். இருந்தாலும் அவனும் அம்மாவுமாகச் சேர்ந்து மாப்பிள்ளை தேடினார்கள்.

எத்தனை முறைதான் வெட்கப்படுவா
எங்க அக்கா
எத்தனை முறைதான் காபி குடுப்பா
எங்க அக்கா

என்று யாரோ பாடினதைப்போல மாப்பிள்ளை பிடிப்பதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. இத்தனைக்கும்

அவள் சகோதரி லட்சணமாக இருப்பாள். ஆனால் நல்ல கறுப்பு செல்வலட்சுமி என்று பெயர்.

முத்து அப்போது ஒரு முடிவு எடுத்துக் கொண்டான். தானும் திருமணம் செய்து கொள்வதென்றால் ஒரு கறுப்புப் பெண்ணைப் பார்த்துத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று.

முத்துவே நல்ல கறுப்பு நிறம்தான். அதனால் "நம்மை மாதிரி கறுப்பான ஒரு பொண்ணுக்குத்தான் கை கொடுக்க வேண்டும்" என்று எண்ணிக் கொள்வான்.

அப்பா இருந்திருந்தால் கூட அப்படிப்பட்ட பெண்ணைத் தான் தேடிக் கொடுக்கச் சொல்லியிருப்பான்.

அம்மா "ஏலேய்.. முத்து..! எத்தினி வாட்டி அளைக் கறது காபியைக் குடி.." என்று அழைத்தாள் அம்மா.

"இந்தா! காபியா.. அது! கறுப்புக் கலரு தண்ணீ 'கறுப்புத்தான் எனக்குப் பிடிச்ச கலரு' என்று சொன்னா அதுக்குன்னு காபியுமா கறுப்பாக் குடிப்பாக?" என்பான்.

அம்மா சிரித்தாள்.

"ஏலேய்! பாலு ஊத்தித்தான் இருக்கேன். சும்மா சாப்பிடு. அப்புறம்.. இந்த நக்கல், கிண்டல் எல்லாம்.. கடைக்கு வாரவககிட்டே வச்சுக்க" என்றாள்.

"யம்மோவ்! எதுக்கு இந்தக் கஞ்சத்தனம் பண்றே! அக்காவுக்குக் கல்யாணம் பண்ணியாச்சில்லே.. இனி.. என்ன பெரிய செலவு?" என்றான் கடுப்பாக.

"அப்புறம்.. உனக்குக் கல்யாணம் பண்ண வேண்டாமா? பரிசம் போடாண்டாமா?" என்றாள் அம்மா.

முத்து சிரித்தான்.



"யம்மோவ்! நீ சுக பிச்சம் பண்றதுக்கு என் பேரைச் சொல்லிப்புட்டே!" என்றான்.

"சரி.. அப்படித்தான்.. வச்சிக்கிடு.. போ.." என்றாள் அம்மா.

இப்போதெல்லாம் அம்மா மெது மெதுவாகத் தன் கல்யாணம் பற்றிக் கனவு காண ஆரம்பித்து விட்டாள் என்பது புரிந்தது.

"யம்மாவ்! எனக்கு இருபத்திரண்டுதானே.. ஆச்சு! மெதுவாப் பாத்துக்கிடலாம்.. என்ன?" என்றான்.

அம்மா ஒன்றும் பேசவில்லை. ஏதோ ஒரு வேலையிருப்பவள் போல் நகர்ந்தாள்.

முத்து புதியதொரு அரிசி மூட்டையை எடுத்து வைத்தான். அவர்கள் கடை வைத்திருக்கிற பகுதியில் பெரும்பாலானவர்கள் அன்றைக்கு அரிசி வாங்கிச் சமைக்கிறவர்கள்.

கணவன் கொண்டு வந்து கொடுக்கப் போகிற கூலியை நம்பி சமையலுக்குச் சாமான் வாங்கிப் போவார்கள். அடுத்த நாள் வந்து முந்தின நாள் காசைக் கொண்டு வந்து கொடுப்பார்கள். சில நேரங்களில் கணவன்மார்கள் அந்தக் கூலியைக்கூட "தண்ணி"க்குத் தாரை வார்த்து விட்டு வந்தார்களென்றால் அடுத்த நாள் அந்தக் காசும் கிடைக்காது. ஆனாலும் பெரும்பாலான ஏழைப் பெண்மணிகள் ரோஷக்காரர்களாக இருப்பார்கள்.

கணக்காகக் கொண்டு வந்து குடுப்பார்கள். சில பெண்கள் அவனிடம் "முத்து! மளிகைச் செலவை ஜாஸ்தியா எழுதிக் குடு. இந்தப் பாழாப் போன மனுஷன் தினக்கும் தண்ணியை போட்டுட்டு வந்துடறாரு..

திகள்னு ரெண்டு நாளைக்குக் காசு தரலேன்னா.. நாங்க எங்கன போய் நிப்பேன்'' என்பார்கள்.

அப்படி ஆரம்பித்த பழக்கம் கிட்டத்தட்ட ஐம்பது பேருக்கு மேல் சேர்த்து 'டெய்லி சீட்' என்று ஆரம்பித்தான். 'தினம் ரெண்டு ரூபாய்' என்று நூறு நாள் வசூல் செய்து நூறாவது நாள் வெறும் 2% கழித்துக் கொண்டு கொடுத்து விடுவான்.

''ஏலேய்! வட்டிக்கு விடுலே! காசு பாத்தர்லாம்'' என்று ஊர்க்காரர்கள் சொன்னபோது அவன் சொன்னான்.

''இந்தா அய்த்தான்! எனக்கு ஊர்க்காசு வேண்டாம். ஏதோ அந்த அக்காக்கள்ளாம் வந்து அழுவுறாங்க.. பானையில ஒளிச்சு வச்சாலும் சரி.. அந்த மனுஷன் கண்டு பிடிச்சுப் போடறான். காசை எடுத்துப் போடறான். ஏதோ அவுக காசு உருப்படியாகட்டும்னு வாங்கி என் கிட்டே வக்கறேன். அந்தக் காசை நான் எடுத்துக்கறதில்லே! 2% பணத்தில கூட பள்ளிக் கூடத்துப் புள்ளைகளுக்கு நோட்டு வாங்கித் தரேன்'' என்றான்.

பெரியவர்கள் வாயை மூடிக் கொண்டார்கள்.

இந்த மாதிரி உதவிகளினால் அவனுக்குப் பிரச்சினைகளும் வந்தன.

ஒரு நாள்!

கடையில் சரக்குகளைப் பிரித்து அந்தந்தப் பெட்டியில் கொட்டிக் கொண்டிருக்கிறான்.

''அதெவண்டா..! என்ற பொண்டாட்டி கிட்ட காசு வாங்கி சீட்டு நடத்துறவன்'' என்று குடிவெறியில் கத்திக் கொண்டு வந்தான் வெள்ளையன்.



''அது யாரு உங்க பொண்டாட்டி!'' என்றான் முத்து அலட்டிக் கொள்ளாமல்.

அம்மா கூட எட்டிப் பார்த்தாள் கவலையோடு.

முத்து அம்மாவிடம் கண்ணைச் சிமிட்டினான். பிறகு திரும்பி,

''வெள்ளையண்ணே! நீங்க இப்ப ஒத்தை ஆளா இல்லே! ஆள் சரியில்லே! வீட்டுக்குப் போயிடுங்களாம்..'' என்றான் அமைதியாக.

''டேய்! எல்லாம் சரியாத்தாண்டா இருக்கேன். நான் கேட்டதுக்கு பதில் சொல்லு..''

''அண்ணே! என்ற வியாபாரம் குடுக்கல், வாங்கல் சம்பந்தமா நான் யாருகிட்டேயும் பேசறதில்லே தெரியாதா? நீங்க போய் உங்க பொஞ்சாதிகிட்டே கேளுங்க'' என்றான்.

''அடேய்! அவளுக்கு.. லொள்ளு ஜாஸ்தியாப் போச்சு.. இங்க இருக்காங்களே மாதர் சங்கத்துக்காரிக.. சொல்லிக் குடுத்துருக்காளுங்க.. என்னமோ 'வன் கொடுமைச்' சட்டமாமே..! அதுல உள்ளே வச்சிருவேன்னு மிரட்டுறா..'' என்றான் குழறிக் கொண்டு.

முத்துவுக்கு சிரிப்பு வந்தது.

''ஆமா.. பின்னே! உன் ஆம்பளைத் தனத்தை நீ அடிக்கறதுல காட்டினின்னா.. அவுக எத்தனை நாளைக்குப் பொறுத்துக்குவாங்க.. குடிச்சுப் போட்டுக் காசை வேஸ்ட் பண்றே! அவுக என்கிட்டே சீட்டுப் போட்டுக் காசை உருப்படி பண்றாக.''

''ம்.. நீயும் அவளோட கட்சி..!'' என்றான். குழறலான அந்தக் குடி போதையிலும் ''அப்புறம்.. எத்தனை கட்டினா..'' என்று விவரமாகக் கேட்டான்.

பழக்கமில்லாத குரல்! புதுக் குரல்!

குனிந்து சோப்புக் கட்டிகளை அலமாரியில் அடுக்கிக் கொண்டிருந்த முத்து.

"ஆரது?" என்று எட்டிப் பார்த்தான் முத்து.

"நான்தான்" என்று குரல்.

அந்தப் புதிய பெண்!

நேற்றுத்தான் இந்த ஊருக்கு வந்ததாகச் சொன்னாளே அந்தப் பெண்!

யார் வீட்டுக்கு வந்ததாகச் சொன்னாள்? ம்.. தில்லையக்கா வீட்டுக்கு.

முத்து ஒரு துணியை எடுத்துக் கைகளைத் துடைத்துக் கொண்டு வந்தான்.

"இருக்குங்க.. மேடம்! இந்த வட்டாரத்துக்கே நாம தான் மெயின் கடை. நம்மகிட்டே இல்லாதது எதுவுமே இல்லை!"

"ம்..!" என்று 'களுக்'கென்று சிரித்தாள். ஏதோ ஒரு ஆங்கிலப் பெயரைச் சொல்லி "அந்த க்ரீம் இருக்கா?" என்று கேட்டாள்.

அவன் விழித்தான். "அது என்னாது?" என்றான்.

"முகத்துக்குப் போடற க்ரீம்" என்றாள் அந்தப் பெண்.

"அது.. இங்கன.. எங்க கிடைக்கும்? மெடிக்கல் சாப்புல இல்ல கிடைக்கும்?"

"குப்புற விழுந்தாலும் மீசையில மண் ஒட்டலேன்னு எங்க ஊருல சொல்வாங்க.."

தன்னை மறந்து அவன் கைகள் தனது அரும்பு மீசையைத் தடவின. சட்டென்று அந்த மர அலமாரியை



நோக்கித் திரும்பி கனகாரியமாகப் பெப்ஸோடெண்டைத் தேடி எடுத்துக் கொடுக்கிற அந்த நேரம் பூராவும் அந்தப் பெண் கண்களில் குறும்பு கொப்பளிக்க நின்று கொண்டிருந்தாள்.

"இந்தாங்க.. மேடம்" என்று நீட்டினான்.

"எங்க.. பேரு.. மேடம்.. இல்லே!" என்று இழுத்து நீட்டினாள்.

"பின்னே?" என்றான். பதிலுக்காகக் காத்திருந்தான்.

"மீ.. னா.." என்று ராகம் போட்ட அவள் "அதுக்காக பேர் சொல்லிக் கூப்பிடாதீங்க" என்று நொடித்து விட்டுப் போனாள்.

'அப்புறம்... எதுக்கு பேரைச் சொல்லிட்டுப் போறாக?' என்று சிரித்துக் கொண்டான்.

இரண்டு மூன்று நாட்களுக்குள்ளாகவே காலை முதல் இரவு வரை பலமுறை சின்னப் பரிமாற்றங்கள் நடந்தது.

கேலி, கிண்டல் எல்லாம் ஆரம்பித்திருந்தது. எல்லா வற்றைக் காட்டிலும் முத்துவுக்கு ஒரு விஷயம் மிகவும் பிடித்திருந்தது.

மீனாவும் நல்ல கறுப்பாக இருந்தாள்! ஆனால் மூக்கு முழியெல்லாம் திருத்தமாக இருந்தது. இப்போதுதான் பிளஸ் டூ முடித்துவிட்டு வந்திருந்தாளாம்.

கோவில் சிலை போல கண்ணைக் கவர்கிற வகையில் கட்டுக் கோப்பான உடல் வாகோடு இருந்தாள்.

பெண் கறுப்பாக இருக்க வேண்டும் என்ற தனது முதல் நிபந்தனைக்கு ஒத்து வருகிறது என்றவுடனே முத்துவுக்குக் கொள்ளை மகிழ்ச்சி. அதிலும் தில்லை யக்கா குடும்பமும் சாதாரண குடும்பம்தான். பெரிய

அந்தஸ்து பேதமும் இல்லை. ஒரே ஜாதியின் உட் பிரிவுகள் என்பதால் அதிலும் பெரிய பிரச்சினை வரப் போவதில்லை என்று தெளிவானான்.

மீனாவின் அகன்ற விழிகள், அவள் சிரிக்கும்போது பளிச்சென்று மின்னும் வரிசைப் பற்கள் என்று எல்லாவற்றி லுமே ஒரு வசீகரம் இருந்தது. முத்துவும் இப்போதெல் லாம் உற்சாகமாக நடமாடினான்.

தெருவுக்கென்று இருந்த பொதுக் குழாயில் நாள் முழுதும் தண்ணீர் வரும். காலை நேரத்தில் பெண்கள் போட்டி போட்டுக் கொண்டிருப்பார்கள் என்பதால் முத்து அந்தப் பக்கம் போக மாட்டான். அவனுக்கு வியாபாரத் தையும் கவனிக்க வேண்டியிருக்கும். அதனால் பத்து மணிக்கு மேல்தான் பைப்படிக்குப் போவான்.

வீட்டுக்குத் தேவையான அளவு தண்ணீர் பிடித்துக் கொடுத்து விட்டுத் தங்கள் புழக்கடையில் இந்த திறந்த வெளி பாத்ரூமில் குளிப்பான். அன்று அவன் தண்ணீர் பிடிக்க நின்று கொண்டிருந்தபோது மீனா வந்தாள்.

"நானும் ரெண்டு குடம் தண்ணீர் பிடிச்சுக்கறேன்" என்றாள்.

"புடிங்க.. தாராளமா.. புடிங்க! இதென்ன எங்க அப்பன் வீட்டு சொத்தா.. பொதுப் பைப்பு.." என்று வம்பளந்தபடி தன் குடத்தை நகர்த்தினான்.

"ஏன்..! உங்க அப்பன் வீட்டு சொத்தாயிருந்தா எனக்குத் தரமாட்டீங்களா?" என்றாள் அப்பவும் அவளது மதுரை பாஷையிலேயே.

"ஐய! அது அம்மாகிட்டேயில்ல கேக்கணும்" என்றான்.

"அம்மா.. புள்ளையாக்கும்..!" என்றாள் கேள்வி போல.



"ஆமா.. பின்னே! அவுகளுக்கு என்னை விட்டா யாரு இருக்கா..! எனக்குத்தான் அவுகளை விட்டா யாரு இருக்காக..." என்றான் உண்மையான நெகிழ்ச்சியுடன். ஆத்மார்த்தமாக அவன் சொல்வதைக் கேட்டதனாலோ என்னவோ அவள் கிண்டலாக எதுவும் பேசவில்லை. ஆனால் அவன் சொன்னதை மனதில் வாங்கிக் கொண் டாள் என்பதை மறுநாளே செயலில் காட்டினாள்.

மறுநாள்!

முத்து குளித்து விட்டு வீட்டுக்குள் வரும்போது அம்மாவுக்கு அருகில் அமர்ந்து கொண்டு மீன் வறுத்துக் கொண்டிருந்தாள்.

"வாங்க!" என்று இயற்கையாக அவனைப் பார்த்துச் சிரித்தாள். அவன்தான் கூச்சத்தோடு சட்டென்று சட் டையை எடுத்து மாட்டிக் கொண்டான்.

"என்ன செய்யறீக?" என்றான்.

"இல்லே! அத்தைக்கு.. எங்க வீட்டு மீன் வறுவல் ரொம்பப் பிடிச்சுதில்லே.. அதான் எப்படி செய்யறேன்னு செஞ்சு காட்டறேன்" என்றாள்.

"அத்தையா..!" என்று ஆச்சரியமாகப் பார்க்க அவள் அது ஒரு சாதாரண விஷயம் போல் அடுப்பை நோக்கித் திரும்பிக் கொண்டாள்.

முத்துவுக்கு உள்ளுக்குள்ளே ஏதோ செய்கிறாற்போல இருந்தது.

'ஆஹா! தூண்டில் வீசுகிறாற்போல இருக்குதே' என்று எண்ணிக் கொண்டான்.

இரண்டு நாள் போயிருக்கும்.

முத்து அன்றைக்குப் பக்கத்திலே இருக்கிற பட்டணம் போய் வந்தான். வரும்போது அழகான ஒரு செல்போன் வாங்கி வந்தான்.

"எத்தினி.. விலை?" என்றாள் கண்களை அகல விரித்து.

"இரண்டாயிர ரூபா!" என்றான்.

"ரொம்ப அழகா.. இருக்கு.." என்றாள்,

"உனக்கும் ஒண்ணு வாங்கித் தரட்டா?"

"எனக்கா? ஆம்பளைங்ககிட்ட எதுவும் வாங்கினா பெங்கக்கா.. ஒத்துகிட மாட்டாளே.."

"நீ ஒத்துக்கறியா.. சொல்லு! வாங்கியாறேன்.." என்றான்.

"ம்.." என்று அழகாக யோசித்தாள். பிறகு,

"ம்.." என்றாள் ஒப்புதல் போல.

"சரி.. வாங்கியாறேன்.. நாளைக்கே!"

மறுபடியும் மனம் மாறியவள் போலச் சொன்னாள்,

"ஐய.. வாண்டாம்! அப்புறம். நீங்க என்னைத் தப்பா நினைப்பீக.." என்றாள்.

"இல்லல்லோ! தப்பா.. நினைக்க மாட்டேன். நீ மட்டும் வாங்கிட்டீன்னா.. அப்புறம்.. நான் உன்னையத்தான் எப்பவும் நினைச்சுகிட்டிருப்பேன்" என்றான்.

அவள் கண்கள் படபடவென்று அடித்துக் கொண்டன. அவன் விழுங்கியதுபோல் பார்ப்பது தெரிந்து அவள் அவசரமாக எதையோ செய்கிறாற்போலக் குனிந்து நிமிர்ந்தாள்.

"வாங்கித் தரவா?" என்றான் ஆர்வமாக.



"ம்..!" என்றாள் இரண்டு ஆட்காட்டி விரல்களின் நகங்களையும் இணைத்துக் கொண்டு.

அவன் கண்களில் மகிழ்ச்சி பொங்கப் புன்னகைத்தான். அவள் உடனே கவலையாக அவனைப் பார்க்கலானாள்.

"அக்கா.. திட்டுமே.." என்றாள்.

"நான் வாங்கித் தந்தேன்னு சொல்லாதே. உங்க ஸ்கூல் பிரண்ட்ஸ்னு யாரோ வாங்கித் தந்தான்னு சொல்லிடு.." என்றான்.

அவள் ஒரு நிமிடம் யோசித்து விட்டு,

"ம்.. வர்த்தினியக்கா.. வாங்கித் தந்தாகன்னு சொல்லிடறேன்" என்றாள் உற்சாகமாக.

• • •

"நீதான்.. செல்போன் வாங்கித் தந்தியாம்" என்று தில்லையக்கா.. கேட்டபோது சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவித்த தவிப்பு இப்போது நினைவுக்கு வந்தது. அதற்குப் பிறகு நடந்த எல்லாமும் நினைவில் வந்து போனது.

கவியரசன் மேல் கோபம் இரண்டு மடங்காகப் பெருகியது. அப்போதுதான் அந்த முடிவைச் செய்தான்.

டெலிபோன் எண்களைச் சுழற்றினான். அந்தப் பக்கம் கவிஞன் லைனில் வந்தார்.

"அங்கிள்! நான் ஹம்சவர்த்தினி பேசறேன்" என்றாள்.

"ஹலோ! குட்டிப் பெண்ணே! நல்லாயிருக்கியா?" என்றார் உற்சாகமாக.

"அங்கிள்! நான் ஒண்ணும் குட்டிப் பெண்ணில்லே!" என்றாள் செல்லச் சிணுங்கலுடன்.

அவர் கலகலவென்ச் சிரித்தார்.

''அது சரி! உங்கப்பன் தடியன். இதுக்கொண்ணும் அப்ஜெக்ஷன் சொல்ல மாட்டான்னு நினைக்கறேன்.. எப்ப வர்றான்?'' என்றார்.

''எப்படியும் ரெண்டு மாசமாவது ஆகும்'' என்றான்.

''சரிடா.. என்ன விஷயம் சொல்லு?''

''அங்கிள்! எனக்கு ஒரு செல்போன் தொல்லை, எனக்குன்னாக் கூடப் பரவாயில்லை அம்மாவுக்கு..'' என்றான்.

கமிஷனர் குபீரென்று சிரித்தார்.

''அப்படிப் போடு! வுட்டா.. பாட்டிகளுக்குக் கூட தொல்லை கொடுப்பானுங்களாட்ட இருக்கு..'' என்றார்.

''சரி.. சொல்லு!'' என்றார்.

சொன்னான்.

''அங்கிள்! பழக்கமானதென்னமோ ராங்கால் மூல மாத்தான். ஆனா இப்ப என்னவோ தான் கஸ்டமர்ன்னு சொல்லிட்டு பாங்குக்கு வர்றானாம். அம்மா வேற ஏமாளி! ஏதும் ஆபத்து வந்துருமோன்னு பயமா இருக்கு...'' என்றான்.

''ம்...!'' என்று முகவாய்க் கட்டையை நீவிக் கொண்டார்.

''ஏண்டா! உங்கம்மா பாங்க் மானேஜர் உலகம் தெரிஞ்சவங்க.. அவங்க தப்பாவா முடிவெடுப்பாங்க..?'' என்றார் மென்மையாக.

''தெரியலே.. அங்கிள்..! ஆனா அந்தாளை எனக்குப் பிடிக்கலை. ஏதோ ஒரு விதத்துல என்னை டிஸ்டர்ப் பண்றான்'' என்றான்.



கமிஷனரும், குடும்ப நண்பருமாகிய எபினேசர் யோசித்தார்.

''ஓ.. கே.. டா! நான் விசாரிக்கறேன்'' என்றார்.

''ஆமா.. அங்கிள்! நல்லா மிரட்டி விடுங்க.. அங்கிள்..! இனிமே எங்க வீட்டு ஏரியாப் பக்கமே தலை காட்டக் கூடாது'' என்றான் காட்டமாக.

எபினேசர் ''சரிடா! டென்ஷனாகாதே!'' என்று சொன்னவர் சிந்தனையுடன் போனை வைத்தார்.

உடனடியாக தனது உதவியாளை அழைத்தார். விவரம் சொன்னார்.

''கவியரசன் பத்தி விசாரிங்க..'' என்றார்.

விசாரித்தார்கள்!

* * *

''ம்..!'' என்று ஹம்சவர்த்தினி பேசும்போது எப்படி முகவாய்க் கட்டையை நீவிக் கொண்டாரோ அதே போல் இப்போதும் முகவாய்க் கட்டையை நீவிக் கொண்டார்.

''சார்! கவியரசனோட ஃபாதர் முன்னாள் அரசியல்வாதி. பத்து வருஷமா அரசியல்ல இருந்து ஒதுங்கியிருக்காரு. நல்ல வசதியான குடும்பம். பூர்வீகச் சொத்தே நிறைய இருக்கு. ஆனாலும் அந்தப் பையன் சுய உழைப்புலதான் வாழ்வேன்னு ஏதேதோ பண்ணிகிட்டிருக்கான் போல இருக்கு...'' என்று விவரமாகச் சொன்னார் அந்தப் பி.சி.

'அப்புறம்.. ஏன்.. இந்தப் பொண்ணு இப்படிச் சொல்றா...' என்று எண்ணிக் கொண்டார்.

''சரிப்பா! எதுக்கும்.. நேரடியா பையனை இங்க கூட்டிட்டு வாங்க.. நான் பேசிக்கறேன்..'' என்றார்.

* * *

"சார்! அந்த ஏஜெண்ட்கிட்டே ஒரு மாடல் கேட்டிருந் தீங்களாம்.. ப்ரொஃபைல் கொண்டு வந்திருக்கான்'' என்றான் அஸிஸ்டென்ட்.

"கொண்டு வரச் சொல்லு!'' என்றான் கவியரசன்.

வெகுநேரம் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தான். "இல் லல்லே! அப்படி வேண்டாம். நான் சொல்லற பிராடக்ட் டேட நேச்சரை புரிஞ்சுக்குங்க..! ஆமா! ரேடியோவிலயும் விளம்பரங்கள் செய்வோம்'' என்றான்.

"பேசிக் கொண்டே அந்த கான்ஃபரன்ஸ் அறையை விட்டு வெளியே வந்தார்கள். ஏஜெண்ட் விடை பெற்றுக் கொண்டு போனார்.

"அப்புறம்.. வேற என்ன விஷயம்?'' என்று மறுபடியும் அஸிஸ்டென்ட்டிடம் கேட்க. அவன் முகத்தில் லேசான திகில் தெரிந்தது.

"சார்!'' என்றான் தயக்கத்துடன்.

எப்போதாவது எதையாவது தப்பாகச் செய்து விட்டால் அப்படி நிற்பான். அதே போல நிற்கிறான் போலும் என்று எண்ணிக் கொண்ட கவியரசன்.

"என்னப்பா! எதுல சொதப்பி விட்டே?'' என்றான் லேசான புன்னகையுடன்.

"இல்லை சார்! அதில்லை சார்!'' என்றான் தயக் கத்துடன்.

"சஸ்பென்ஸ் தாங்கலப்பா!'' என்றான் கடுப்புடன்.

"சார்! கமிஷனர் ஆபீஸ்ல இருந்து பேசினாங்க..'' என்றான்.

"ஆமா! அந்த ரோட் ஷோவுக்கு பர்மிஷன் ஏதோ கேட் டிருந்தேன்.''

* * *



"அது.. இல்லை.. சார்! உங்களை ஏதோ விசாரிக்கணுமாம். யாரோ நம்பவர்த்தினியாம் உங்களைப் பத்திக் கமிஷனர்கிட்டே ஏதோ கம்ப்ளெயிண்ட் ஓலைக் குடுத் திருப்பாங்க போல இருக்கு...'' என்று தடுமாறினான்.

கவியரசன் அலட்சியமாக நின்று கொண்டிருந்தவன் காலை ஊன்றி நின்றான் அழுத்தமாக.

"ம்!'' என்றான்.

"உங்களை கமிஷனர் ஆபீஸுக்கு வரச் சொல்றாங்க'' என்றான் கவலை நிறைந்த குரலில்.

"எப்ப?''

"இப்ப.. இன்னைக்கே!'' என்றான்.

கவியரசன் அதற்குள் ஒரு நிலைக்கு வந்து விட்டான். "சரி.. போய்ப் பார்க்கறேன். இந்தக் கமிஷனர்கிட்டே இன்னும் பழக்கமாகலையேன்னு நினைச்சேன்!'' என்றான் இலகுவாக.

அலட்டிக் கொள்ளாமல் அவன் புறப்படுவதைப் பார்த்த உதவியாளர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். கண்களில் கவலை தெரிந்தது.

கவியரசன் அவர்களின் தோளைத் தட்டிக் கொடுத்தான். "டோண்ட்... வொர்ரி.. மேன்! ஐ கேன் மானேஜ்'' என்றான்.

காரை எடுக்கும் வரை கூட நின்றார்கள்.

"சார்! நாங்களும் கூட வரட்டா?'' என்றார்கள். அவர்கள் கவலை நிறைந்த முகம் பார்த்து வாஞ்சையாய்ப் புன் னகைத்தான்.

"கவலைப்படாதீங்கப்பா...'' என்றான். காரை ஸ்டார்ட் செய்தான். அந்த நேரத்தில் சொன்னான்.

"எதுக்கும் அப்பாவுக்கு சொல்லிடுங்க..." என்றான்.

கவியரசனின் கார் இந்தப் புறம் போனவுடனே அந்தப் பக்கம் அப்பா தியாகேஸ்வரனுக்கு போன் செய்தார்கள். விஷயம் வாங்கிக் கொண்ட தியாகேசவரனின் நெற்றியில் முடிச்சுக்கள் விழுந்தன.



# 11

"குட் மார்னிங்.. சார்!" என்றான் கவியரசன்.

கமிஷனர் நிமிர்ந்து பார்த்தார். ராங் கால் பேர்வழி என்றால் பார்ப்பதற்கே ஒரு மாதிரி ஆளா இருப்பான் என்று எதிர்பார்த்தார் போலும். புருவங்கள் ஒரு முறை ஏறி இறங்கின.

"குட்மார்னிங்!" என்றார். "உட்காருங்க!" என்றார்.

"மிஸ்டர்.. ம்..!"

"கவியரசன்.."

"ம் மிஸ்டர் கவியரசன்.. என்னதிது ஏதோ ராங் கால் தொல்லைன்னு கம்ப்ளெயின்ட் வருது.." என்றார்.

"ரிட்டன் கம்ப்ளெயின்ட்டா.. சார்?" என்றான் கவியரசன்.

கமிஷனர் கொஞ்சம் உஷாரானார்.

"ரிட்டன் கம்ப்ளெயின்ட்டா... இல்லையான்னு உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. நீங்க யாரு... என்ன பண்ணிகிட்டிருக்கீங்கன்னு.. சொல்லுங்க.." என்றார்.

"சார்! நான் கவியரசன்..! தியாகேசவரன் கேள்விப்பட்டிருக்கீங்களா.. அவரோட... சன்!"

"ஓ..!" என்றார் கமிஷனர் காற்றுப் போன பலூன் போல. நம்சவர்த்தினியின் பேச்சைக் கேட்டுக் கொண்டு இதில் இறங்கியிருக்கக் கூடாதோ என்று தோன்றியது.

கவியரசனுக்கு அவரது முகத்தில் ஏற்பட்ட மாற்றம் குறித்து உள்ளே புன்னகை கிளம்பியது. ஆனால் பணிவாகவே சொன்னான்.

"சார்! நம்சவர்த்தினி மேடம்தான் உங்ககிட்டே ஏதாவது சொல்லியிருப்பாங்கன்னு நினைக்கறேன். அவங்கதான் என்னைத் தப்பாப் புரிஞ்சுகிட்டிருக்காங்க.. ஆக்சுவலா நான் ராங் கால்ல பேசினது தமயந்தி மேடத்தோட.. அவங்களே அனுப்பின மெசேஜ் பாருங்க.." என்று காட்டினான்.

கமிஷனர் படித்துப் பார்த்தார்.. பிறகு நெற்றியைத் தடவிக் கொண்டார்.

"நான் நடத்தறது இவன்ட்மேனேஜ்மென்ட் தொழில். நான் கௌரவக் குறைச்சலா நடந்துக்குவேனா.. யோசிங்க!" என்றான் மேலும் ஐந்து நிமிடங்கள் பேசினான்.

அதே நேரம்!

கமிஷனர் அலுவலக போன் அடித்தது. அந்தப் பக்கம் கலெக்டர் பேசினார்.

"கமிஷனர்.. சார்! தியாகேசவரன் தெரியுமா? அவரோட சன்னை ஏதோ என்கொயரிக்குக் கூட்டிட்டு வந்திருக்கீங்களாமே..! ஸ்ட்ராங் எவிடென்ஸ் இருக்கா..?"

"இல்லை.. சார்! நம்ம குடும்பத்துக்கு வேண்டிய பொண்ணு ஓரலா.. கம்ப்ளெய்ன்ட்.. குடுத்துச்சு.." என்றார் தயக்கமாக.

"எதுக்கும் அப்பாவுக்கு சொல்லிடுங்க..." என்றான்.

கவியரசனின் கார் இந்தப் புறம் போனவுடனே அந்தப் பக்கம் அப்பா தியாகேஸ்வரனுக்கு போன் செய்தார்கள். விஷயம் வாங்கிக் கொண்ட தியாகேசவரனின் நெற்றியில் முடிச்சுகள் விழுந்தன.



## 11

"குட் மார்னிங்.. சார்!" என்றான் கவியரசன்.

கமிஷனர் நிமிர்ந்து பார்த்தார். ராங் கால் பேர்வழி என்றால் பார்ப்பதற்கே ஒரு மாதிரி ஆளா இருப்பான் என்று எதிர்பார்த்தார் போலும். புருவங்கள் ஒரு முறை ஏறி இறங்கின.

"குட்மார்னிங்!" என்றார். "உட்காருங்க!" என்றார்.

"மிஸ்டர்.. ம்..!"

"கவியரசன்.."

"ம் மிஸ்டர் கவியரசன்.. என்னதிது ஏதோ ராங் கால் தொல்லைன்னு கம்ப்ளெயின்ட் வருது.." என்றார்.

"ரிட்டன் கம்ப்ளெயின்ட்டா.. சார்?" என்றான் கவியரசன்.

கமிஷனர் கொஞ்சம் உஷாரானார்.

"ரிட்டன் கம்ப்ளெயின்ட்டா... இல்லையான்னு உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. நீங்க யாரு.. என்ன பண்ணிகிட்டிருக்கீங்கன்னு.. சொல்லுங்க.." என்றார்.



"சார்! நான் கவியரசன்..! தியாகேசவரன் கேள்விப் பட்டிருக்கீங்களா.. அவரோட சன்!"

"ஓ..!" என்றார் கமிஷனர் காற்றுப் போன பலூன் போல. ஹம்சவர்த்தினியின் பேச்சைக் கேட்டுக் கொண்டு இதில் இறங்கியிருக்கக் கூடாதோ என்று தோன்றியது.

கவியரசனுக்கு அவரது முகத்தில் ஏற்பட்ட மாற்றம் குறித்து உள்ளே புன்னகை கிளம்பியது. ஆனால் பணிவாகவே சொன்னான்.

"சார்! ஹம்சவர்த்தினி மேடம்தான் உங்ககிட்டே ஏதாவது சொல்லியிருப்பாங்கன்னு நினைக்கறேன். அவங்கதான் என்னைத் தப்பாப் புரிஞ்சுகிட்டிருக்காங்க.. ஆக்சுவலா நான் ராங் கால்ல பேசினது தமயந்தி மேடத்தோட. அவங்களே அனுப்பின மெசேஜ் பாருங்க.." என்று காட்டினான்.

கமிஷனர் படித்துப் பார்த்தார்.. பிறகு நெற்றியைத் தடவிக் கொண்டார்.

"நான் நடத்தறது இவன்ட்மேனேஜ்மென்ட் தொழில். நான் கௌரவக் குறைச்சலா நடந்துக்குவேனா.. யோசிங்க!" என்றவன் மேலும் ஐந்து நிமிடங்கள் பேசினான்.

அதே நேரம்!

கமிஷனர் அலுவலக போன் அடித்தது. அந்தப் பக்கம் கலெக்டர் பேசினார்.

"கமிஷனர்.. சார்! தியாகேசவரன் தெரியுமா? அவரோட சன்னை ஏதோ என்கொயரிக்குக் கூட்டிட்டு வந்திருக்கீங்களாமே..! ஸ்ட்ராங் எவிடென்ஸ் இருக்கா..?"

"இல்லை.. சார்! நம்ம குடும்பத்துக்கு வேண்டிய பொண்ணு ஒரலா.. கம்ப்ளெயின்ட்... குடுத்துச்சு.." என்றார் தயக்கமாக.

"ம்..! பையன் எப்படித் தெரியறாரு.."

"சார்! ஒண்ணும் பிரச்னையில்லாத மாதிரிதான் தெரியுது. அனுப்பிடறேன்.. சார்."

"ஆமா.. அனுப்பிடுங்க..! தியாகேசவரன் அப்புறம்.. மேலே பேசுவார்.." என்றார் கலெக்டர்.

ஒன்றுமே தெரியாத குழந்தையைப் போல அமர்ந்து கொண்டான் கவியரசன்.

"சரிங்க.. தம்பி! அந்தப் பொண்ணு ஏதோ தப்பாப் புரிஞ்சுகிட்டு கம்ப்ளெயின்ட் பண்ணிட்டா.. விடுங்க.." என்று கமிஷனர் சமாதானத்துக்கு வந்தார்.

"எனக்கொண்ணும் வருத்தமில்லை.. சார்!" என்று எழுந்தான். "நைஸ் மீட்டிங்.. யூ சார்!" என்று கைகுலுக்கினான்.

நகர்ந்தான்.

காரில் ஏறும்வரை சாந்த சொரூபியாக இருந்தவனின் முகம் காரில் கிளம்பும்போது கடுகடுவென்று மாறியது.

* * *

"அப்பா! பிரச்சினையெல்லாம் ஒண்ணும் இல்லப்பா.." என்று அவன் அப்பாவை சமாதானம் செய்வதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

"என்ன.. சின்னப்பிள்ளை விளையாட்டெல்லாம்.. விளையாடிகிட்டு.." என்று கடிந்த அப்பா அவன் விளக்கத்திற்குப் பிறகு அமைதியாகி விட்டார்.

கவியரசன் அமைதியடையவில்லை.

இதற்கொரு முடிவு கட்ட வேண்டும்! முகம் கடுகடுவென்றே இருந்தது.



காரைக் கொண்டு போய்க் கல்லூரி வாசலில் நிறுத்திக் கடத்திக் கொண்டு போய்.. பாடம் புகட்டி விடலாமா.. என்று நினைத்தான். ஆனால் அதனையெல்லாம் பெரிதாக பயந்து விட மாட்டாள்.

அப்படியென்றால்..!

எது அவளுக்குப் பிடிக்கவில்லையோ அதையே செய்ய வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான்.

மாலை ஐந்தரை மணி வரை காத்திருந்தான்.

நேராக தமயந்தியின் வங்கிக்குப் போனான்.

தமயந்தியிடம் பேசினான்.

இருவருமாகச் சிரித்துக் கொண்டு வெளியே கிளம்புவதை பாங்க் ப்யூன் சுவாரசியமாய்ப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அதே நேரம்,

போன் ஒலித்தது. எடுத்தாள்.

"நான் ஹம்சவர்த்தினி பேசறேன். அம்மா இருக்காங்களா?" என்றாள்.

"அம்மா.. இப்பத்தானே கிளம்பினாங்க... வழக்கமா வருவாரே கவியரசன் அவரோட போனாங்க?"

"ஓ!"

ஹம்சவர்த்தினி ஒருவிதமான தளர்ச்சியுடன் போனை வைத்தாள்.

'எவ்வளவு முயற்சி செய்தோம்! கடைசியில் இப்படித் தோல்வியாகி விட்டதே' என்ற தன்னிரக்கம் மேலிட்டது.

காலையில் நடந்த நிகழ்வே அவளுக்கு மனக் கஷ்டத்தை ஏற்படுத்தி விட்டது.

"ஆஹா... இன்றைக்கு [illegible] பேசுகிறது கவியரசனுக்கு" என்று கனவில் இருந்தாள்.

கல்லூரி நேரத்தில் செல்போன் பயன்படுத்திக் கொள்ள அனுமதி இல்லையென்பதால் உணவு இடைவேளை வரை காத்துக் கொண்டிருந்தாள்.

உணவு இடைவேளையின் போது கவிஞனுக்கு போன் அடித்தாள்.

"அதெல்லாம்.. வேணும்கற மட்டும் மிரட்டியாச்சு. இனிமே உன் வழிக்கே வரமாட்டான் பாரு.." என்று அவர் உறுதி சொல்வார் என்று எதிர்பார்த்தால் அவர் அவளையே மிரட்டினார்.

"ஏம்மா! நம்சவர்த்தினி எப்படிருந்து இப்படியாவே என் வேலையையே கெடுத்தியே!" என்று சலித்துக் கொள்ளவும்.

"அங்கிள்!" என்றாள் புரியாதவளாய்.

"சிட்டியிலே பெரும்புள்ளியோட மகளம்மா..! தியாகேசவரன்னு கேள்விப்பட்டிருக்கியா? அவரோட மகள் கலெக்டர்கிட்டே இருந்து எனக்கு டோஸ்.. தமயந்தியென்னம்மா.. சின்னப் பொண்ணா.. அவங்களைக் காப்பாத்திக்க அவங்களுக்குத் தெரியும். நீ உன் வேலையைப் பாரும்மா..." என்றார் கடுப்புடன்.

"சாரி! உங்களுக்குத் தொந்தரவு குடுத்ததுக்கு மன்னிச்சுடுங்க சார்!" என்று ஆப் செய்து விட்டாள்.

"மன்னிப்பெல்லாம்.. எதுக்கம்மா..!" என்று அவர் ஏதோ சொல்ல வந்ததைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. நல்ல வேளையாக அன்று பிற்பகல் இரண்டு மணி நேர வகுப்புகளும்



சுவாரசியமாகவே இருந்ததால் இந்த விஷயத்தை மறந்து இருந்தாள். ஆனால் கல்லூரி முடிந்தவுடனே மீண்டும் அதே ஞாபகம் வந்தது.

முதுகலைப் பட்டப் படிப்பில் இரண்டாம் ஆண்டில் இருந்தாள்.. இந்த செமஸ்டர் முடிந்தால் படிப்பு முடிந்தது. மேல் படிப்பு படித்ததற்கான முதிர்ச்சி அவளிடத்திலே இருந்தது. ஆனாலும் இந்த செல்போன் விவகாரத்தில் மட்டும் அவள் தன்னையும் மீறி ஆங்காரம் அடைந்தாள்.

வீட்டுக்குப் போனாள். யோசித்தாள். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தாள். சாட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக்காரன் காலில் விழுவது நல்லது என்று தோன்றியது.

அம்மாவிடமே பேசி விடலாம். இந்த செல்போன் விவகாரம் எத்தனை ஆபத்தில் கொண்டு போய் விடும் என்பதை விளக்கி விடலாம் என்று எண்ணிக் கொண்டாள்.

அம்மா கிளம்பி விட்டாரா என்று தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம். போன் செய்தாள்.

அம்மா கவியரசனுடன் போயிருக்கிறாராமே..! எங்கே போயிருப்பார்கள்.

மீண்டும் கவலை தோன்றியது!

அம்மாவுக்காவது வயதுக்கேற்ற நடத்தை இருக்கக் கூடாதா என்று தோன்றியது.

கவலையில் ஆழ்ந்து விட்டாள்!

கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே காத்திருந்தாள். மணி ஆறானது!

ஏழு.. எட்டு.

ஒன்பது.

பத்தே ஆகிவிட்டது!

அம்மாவின் கார் சத்தம் கேட்டது!

அப்போதுதான் ஹம்சவர்த்தினி அந்த முடிவைச் செய்தாள்.

அம்மாவிடமும் பேசக் கூடாது!

பேசுவதற்கு வேறு இடம் இருக்கிறது! அங்கே பேசிக் கொள்ளலாம், என்று.

* * *

இன்றைக்கு!

கவியரசன் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தான்.

நேற்றைய நாள் அவனுக்கு வெற்றிகரமான நாளாக இருந்தது.

கமிஷனர் மிரட்டுவதற்காகக் கூப்பிட்டது போய் அவரே மிரண்டு போனார் என்பதால் தமயந்தி மேடம் தன் விருப்பத்துக்கு இணங்கி ஒத்துழைப்பார் என்று அவன் எதிர்பார்த்தது.

மகள் ஹம்சவர்த்தினி தனக்கு என்ன செய்தாள் என்பதையே அவரிடம் சொல்லவில்லை. மாறாக மலர்ந்த முகத்துடன் அவரது அலுவலகத்திற்குப் போனாள். ஆனால் மகள் என்ன செய்தாள் என்று தமயந்திக்குத் தெரிந்திருந்தது.

கமிஷனர் போன் செய்து விஷயம் சொல்லியிருப்பார் போலும். கவியரசன் வந்து வருத்தப்பட்டால் என்ன செய்வது என்ற கவலையில் ஆழ்ந்திருந்தபோது கவியரசன் சிரித்த முகத்துடன் வந்தது அவருக்குள் நிம்மதியை ஏற்படுத்தியது.



"வாங்க.. வாங்க.. கவியரசன்" என்று வரவேற்றார்.

கவியரசனும் மலர்ந்த சிரிப்புடன் எதிரில் அமர்ந்து கொண்டான். அவன் எதும் பேசும் முன்னரே,

"கவியரசன்..! ஐ ம் வெரி.. சாரி..!" என்றார்.

"எதுக்கு?" என்றான் எதும் அறியாதவன் போல.

"என்ன கவியரசன்..! புரியாத மாதிரிக் கேக்கறீங்க! என் பொண்ணு அநாவசியமா உங்களுக்குப் பிரச்னை பண்ணிட்டா!" என்றார்.

"நீங்கதான் சொல்லிட்டீங்களே.. அநாவசியமான்னு. விடுங்க!" என்றான்.

"இல்ல.. கவியரசன்.." என்று மேலும் ஏதோ சொல்ல ஆரம்பிக்க அவன் கையுயர்த்தினான்.

"மேடம்..! அதை விடுங்க..! நிஜம்மாவே நீங்க நடந்து போன அந்த விஷயத்துக்காக வருத்தப்படற மாதிரி இருந்தா... ஒன்னு செய்ங்க..!" என்றான்.

தமயந்தி உடனே ஆர்வமாக "என்ன சொல்லுங்க!" என்றார்.

சொன்னான்.

தமயந்தி சிந்தனையில் ஆழ்ந்தார்!

"உங்களுக்காக.. ஆனா.. எங்க ஃபாமிலியில.." என்று இழுக்க.

"மேடம்! நம்ம மனசுக்கு சந்தோஷமான ஒண்ணு நடக்குதுன்னா.. எதுவுமே தப்பில்லே!" என்றான்.

"ஆமா! நானும் அப்படி நினைக்கறவதான்."

"அப்புறம்.. என்ன? கிளம்புங்க.. லெட்ஸ் என்ஜாய்" என்றான்.

"இல்லே!" என்று தயங்க.

"பார்த்தீங்களா.. பின் வாங்கிட்டீங்க! நமக்குப் பிடி... எதுவும் செய்ய நமக்கு உரிமை இருக்கு. நம்ம ஆசை... அவங்களையும், இவங்களையும் கேக்கணும்."

மெல்ல மெல்லக் கரைகிற மாதிரித் தெரிந்த... அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

அந்த நேரத்திலதான் ஹம்சவர்த்தினி போன் செய்த...

தமயந்தி தனக்காக இவ்வளவு நேரம் ஒதுக்கு... என்றும் இவ்வளவு சந்தோஷமாக நேரம் கழிப்பாள் என்... அவன் எதிர்பாராதது.

ஒரு வழியாக தமயந்தி கிளம்பும்போது இரவு ஒன்... மணிக்கு மேலாகி விட்டது. அவர் காரில் தனியாகப் போ...தால் அவனும் பின்னாலேயே காரில் போனான்.

வீட்டுக்கருகே போனதும் "வாங்க! கவி.." என்று ... உள்ளே அழைத்தார்.

"வேண்டாம்.. மேடம்! உள்ளே வந்தா எனக்... உதையே விழும்!" என்று கலகலவென்ச் சிரித்தபடி அவன் காரைக் கிளப்பிக் கொண்டு போனான்.

வீட்டுக்குள் நுழையும்போது விசிலடித்துக் கொண்டு நுழைய குடும்பத்தினர் ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

ரஞ்சனி அமைதியாக வந்து பரிமாறினாள்.

"எப்பா! எதுக்கு இந்த விசிலு! போலீஸ் ஸ்டேஷ...னுக்குப் போயிட்டு வந்ததுக்கா?" என்று தியாகேசவரன் கிண்டலாகக் கேட்க,

"ஆமா. பின்னே! இதுவரைக்கும் போகாத இடமில்லே!" என்றான் அவனும் சளைக்காமல்.



"ஏன்! அந்த பங்களாவுக்கு இந்த பங்களாவுக்குன்னு பர்மிஷன் வாங்கப் போன இடம்தானே?"

"அப்படித்தானே போயிருக்கிறேன். இப்படி கம்பெனி கிடைக்காமப் போனதில்லையே. அப்புறம் அப்படிக் கம்பெனியின்டையும் உடைச்சுட்டு வந்ததில்லையே.." என்றான்.

தியாகேசவரன் சிரித்தார்.

"அம்மா! பையன் ரொம்ப சந்தோஷமா இருக்கான். இப்ப பச்சை மிளகாயையே வச்சாலும் ரசிச்சு சாப்பிடுவான்" என்று மருமகளிடம் சொல்ல ரஞ்சனி சிரித்தாள்.

"அப்பா.. கிடைக்காரு! ரஞ்சனி!" என்றவன் டைனிங் டேபிள் மேல் இருக்கிற பதார்த்தப் பாத்திரங்களைத் திறந்து பார்த்தான்.

"செம ஜூட்டம்ஸ்.. மாதிரி இருக்கு!" என்று விசிலடித்தான்.

அன்றிரவெல்லாம் மகிழ்ச்சியாகவே நடமாடிய மகன் மறுநாள் காலையிலும் அதே போலப் புறப்பட்டுப் போக சிந்தனையுடன் பார்த்துக் கொண்டார்.

ரஞ்சனியிடம் ஏதோ சொல்லிச் சிரிக்க "ஆமா.. மாமா!" என்று அவளும் சிரித்தாள்.

அலுவலகத்தில் கஷ்மிதா கூடக் கேட்டாள். "என்ன சார்! கண்ணெல்லாம் குறும்பு வழியுது" என்று.

"ஆமா! எதிரியை வீழ்த்தின சந்தோஷத்துல இல்ல இருக்கோம்." என்றான்.

"யாரு.. எதிரி? ஹம்சவர்த்தினியா! ஆனா அவங்கம்மா மட்டும் பிரண்டா?" என்று சிரித்தான்.

அவளும் சிரித்தாள்.

"எப்படி சார் இப்படிப் பெரிய மீனெல்லாம் உங்க வலையில சிக்குது" என்று அவள் சிரிக்க,

"சிக்குதே..!" என்று சிரித்தபடி திரும்பினான்.

கண்களில் கனல் தெறிக்க ஹம்சவர்த்தினி இருவரையும் முறைத்தபடி நின்றிருந்தாள்.

## 12

கவியரசன் திகைத்துப் போய் நின்றிருந்தான்!

அப்படியொரு காரியம் ஹம்சவர்த்தினி செய்து கொண்டிருந்தாள்.

கவியரசனின் மார்பில் புரண்டு அழுது கொண்டிருந்தாள்.

சற்று நேரத்திற்கு முன் அவன் திரும்பிப் பார்த்தபோது ஹம்சவர்த்தினி கண்களில் கனல் தெறிக்க நின்றிருந்தாள்.

'ஆஹா! நம்ம ஆபீஸுக்குள்ளேயே வந்து விட்டாளா!' என்ற நினைப்புடன் கவியரசன் அவளை நோக்கி முழுசாகத் திரும்பினான்.

"வாங்க.. மேடம்!" என்றான் முகத்தில் எதையும் காட்டிக் கொள்ளாமல்.

வந்தாள்!



தனது கான்ஃபரன்ஸ் அறைக்கு அழைத்துச் சென்றான். அமைதியாகவும், அழுத்தமாகவும் அவனோடு வந்தாள்.

அவன் சைகையாலேயே எதிரிலிருந்த இருக்கையைக் காட்டினான். அவள் ஒருவிதமாக முறைத்தபடி அவனைப் பார்த்தாள்.

"நான் ஒன்றும் உட்கார்ந்து கான்ஃபரன்ஸ் நடத்த வரலை" என்றாள்.

"ஓ.கே.. தென்! எதுக்கு வந்திருக்கீங்கன்னு சொல்லுங்க.." என்றான் கவியரசன். மறுபடியும் அதே அழுத்தமான அமைதியுடன்.

"மிஸ்டர்.. கவியரசன்..! நானும் எத்தனையோ விதமான மனிதர்களைப் பார்த்திருக்கேன். ஆனா.. உங்களை மாதிரி வக்கிரமான ஆளைப் பார்த்ததில்லை."

அவன் நெற்றி சுருங்கியது. கண்கள் இடுங்கினாற் போல் ஆகி விட, தீவிழி விழித்தான்.

"வாட் டு யூ மீன் பை தட்?"

"ஐ மீன் வாட் ஐ சே?"

"வாட் டு யு சே தென்?"

"வாட் ஐ ம் சேயிங் இஸ் ஆர் யு நாட் அஷேம்ட்.. உங்களுக்கு ஆள் வித்தியாசமே தெரியாதா? நூறுக்குப் புடவை கட்டி விட்டாலும்.. வழிய ஆரம்பிச்சிடுவீங்களா? எங்க அம்மா வயசு என்ன?" என்று அவள் முடிப்பதற்கு முன்பாக அவன் கை ஓங்கி அவளது கன்னத்தில் இறங்கியது?

ஹம்சவர்த்தினி திகைத்துப் போய் கன்னத்தைப் பிடித்தபடி நின்றாள்.

ஒரு கணம்தான்!

இப்போது கொதித்துப் போவது அவன் முறையானது. "என்னைப் பத்தி என்ன தெரிஞ்சு இந்தக் கேள்வியை வந்து கேட்கறீங்க.. என்னை மட்டுமல்ல, உங்கம்மாவையும் சேர்ந்து கேவலப்படுத்தறீங்க..! அவங்களை நான் எதுக்கு விடாமத் துரத்திப் பிடிச்சு சந்திச்சேன்.. தெரியுமா? சே..! அதெல்லாம் உங்களுக்குச் சொன்னாப் புரியாது.." என்று படபடவென்று பொரியவும், அவள் உடைந்தாள்.

பொங்கிப் பொங்கி அழுதாள்!

அவன் மார்பில் சாய்ந்து அழுதாள். அவன் சட்டையை பிடித்தபடி உலுக்கினாள்.

"நீங்க எதுக்காக வந்திருந்தாலும்.. சரி.. எங்கம்மாவை விட்டுருங்க..! எனக்கு இந்த செல்போன் பிரண்ட்ஷிப் பிடிக்கலே.. பிடிக்கலே..! பிடிக்கலே..!" என்று கதறி அழுகிற அவளை யோசனையுடன் பார்த்தான்.

மெல்லிய பூக்குவியல் போல அவள் தன் மேல் படர்ந்த வண்ணம் அழுவதை அவன் ஒருவிதக் கையாலாகாத் தனத்துடன் பார்த்தான்.

மெல்லத் தோள்களை தடவிக் கொடுத்தவன் அழ விட்டான்!

சற்றுக் கழித்துத் திடுக்கிட்டவள் போல விலகினாள். முகம் சிவந்து போக அவள் நிற்பது பார்த்து அவனுக்கு வியப்பு!

"ப்ளீஸ்! இப்ப நீங்க எமோஷனலா இருக்கீங்க! உட்காருங்க.." என்று ஆசுவாசப்படுத்தினான்.

அவள் சிவந்து போன தனது மூக்கு நுனியைக் கர்ச்சீப்பில் துடைத்தபடி அமர்ந்தாள்.



ஆயாவை அழைத்து காபி கொண்டு வரச் சொன்னான். அவள் தயக்கத்துடன் வாங்கிக் கொண்டாள்.

அவள் காபியைக் குடிக்கட்டும் என்பது போல தனிமை கொடுத்து விலகினான். அவள் கண்ணாடி ஜன்னல் வழியாகப் பார்த்தாள்.

வெளியறையில் நின்றபடி தன் கீழ் பணிபுரிவோர்களுக்கு இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்துக் கொண்டிருந்தான். கம்பீரமாகத்தான் இருந்தான்.

சட்டென்று அவன் மார்பில் சாய்ந்து அழுதது நினைவுக்கு வந்தது. அப்போது தன் மனதில் பளிரென்று வந்து தாக்கிய அந்த உண்மையை அவள் அறிவு ஏற்க மறுத்தது.

மீண்டும் தன் கையில் ஒரு காபி கோப்பையோடு உள்ளே நுழைந்தான் கவியரசன்.

"மேடம்! தயவு செய்து புரிஞ்சுக்குங்க..! ஆரம்பத்துல இருந்தே.. நீங்க என்னை அவமானப்படுத்திக்கிட்டே இருக்கீங்க! இப்பக் கேட்ட கேள்வி ரொம்பப் பயங்கரமான கேள்வி! ஆனா, ஒன்னு புரிஞ்சுக்குங்க..! உங்க மதர் எனக்கு பிரண்ட்தான் ஆனா. நீங்க நினைக்கிற மாதிரியில்லே..! அது வேற மாதிரி அதுக்கு மேலே நான் எதுவும் சொல்லத் தேவையில்லேன்னு நினைக்கறேன். உங்களுக்கு செல்போன் பிரண்ட்ஷிப் மேல ஏதோ ஒரு அவர்ஷன் இருக்கு. அதுக்கு என்னை பலிகடா ஆக்க நீங்க" என்றான்.

அதில் இருந்த உண்மை அவளைத் தாக்கவே அவள் சற்றே குறுகிப் போனாள். ஏதோ சொல்ல ஆரம்பித்தாள்.

"வேண்டாம்! இப்ப எதுவும் பேச வேண்டாம். நீங்க எதைப் பத்தியாவது சொல்லணும்னு நினைச்சா.. இன்

சொரு.. நான் அதைப் பத்திப் பேசுவோம். இன்னைக்கு எனக்கு ஒரு முக்கியமான வேலையிருக்கு..'' என்றான்.

அவன் காபி குடித்து எழுந்தவுடனே,

''எதுல வந்தீங்க?'' என்றான்.

''ஆட்டோவுலே'' என்றாள் ஹம்சவர்த்தினி.

''ஓ.கே! வாங்க.. நான் டிராப் பண்றேன்'' என்று கல்லூரிக்கு அழைத்துப் போனான்.

இறங்கும்போது அவனிடம் சொன்னாள் ''மேடம்! நான் உங்க மதருக்கு மட்டுமில்லே.. உங்களுக்கும் பிரண்டு தான்.. நீங்க ஏத்துகிட்டா..!'' என்றான்.

அவள் மௌனமாகத் தலையை உருட்டுவதைப் பார்த்து அவனுக்கு ஒரு வியப்பு! புருவங்கள் லேசாக உயர்ந்து இறங்கின.

ஹம்சவர்த்தினி இறங்கிக் கல்லூரிக்குள் போகிற அதே சமயம் அவனுக்கும் அந்த உண்மை உறைத்தது போலும்!

ஸ்டியரிங்கின் மேல் கை பதித்து ஐந்து நிமிடங்களுக்கு மேல் காரிலேயே அமர்ந்திருந்தான். பிறகுதான் காரை எடுத்தான்.

ஆழ்ந்ததொரு பெருமூச்சு எழுந்தது!

ஏனோ ரஞ்சனியின் முகம் பின்னணியில் எழுந்து சோகப் பார்வை பாய்ந்தது போல் தோன்றியது.

* * *

மந்திரித்து விட்ட கோழி போலவே நடமாடிக் கொண்டிருந்தாள் ஹம்சவர்த்தினி.

''என்னடி... என்னடி.. இந்த சேட்டர்பாக்ஸ்... இப்படி அமைதியா இருக்காப்பல. இன்னைக்கு என்ன மௌன விரதமா?'' என்று கேலி செய்தார்கள் தோழிகள்.



ஹம்சவர்த்தினி தனக்குள் சிரித்துக் கொண்டாளே ஒழிய எதுவும் பேசவில்லை.

தானாகப் போய் அப்படி எதற்கு கவியரசன் மார்பில் சாய்ந்து கொண்டு அழுதோம்? அந்தக் கணத்தில் தன் மனத்தில் மின்னல் போன்று மின்னிய உண்மையை யாரிடம் சொல்லிக் கொள்ள முடியும்?

கவியரசனைப் பற்றி நமக்கு என்ன தெரியும்? கல்யாணமானவரா.. இல்லையா என்று கூடத் தெரியாது. அப்படியிருக்கையில் எதற்காக அந்த ஆளை இவ்வளவு சீரியஸாக எடுத்துக் கொண்டோம்.

அம்மாவை சந்திப்பதற்கு எத்தனையோ வாடிக்கையாளர்கள் வீட்டிற்கு வருகிறார்கள். போனில் பேசுகிறார்கள். ஆனால் இந்தக் கவியரசன் அம்மாவோடு தொடர்பு கொண்டபோது மட்டும் ஏன் தனக்கு கோபம் வந்தது.

அம்மாவையும், அடிப்படையில் தான் தப்பாக நினைக்கவில்லை. ஆனால் கவியரசன் தொடர்பு கொண்ட போது மட்டும் தனக்கு ஏன் கோபம் வந்தது.

ஒருவேளை தனக்கு ஏதோ பொஸஸிவ்னெஸ் மாதிரி ஏதாவது பீலிங்கோ?

தலையை உலுக்கிக் கொண்டாள்.

ஏன்... புத்தி இப்படியெல்லாம் போகிறது? மீளவும் வகுப்பில் கவனம் செலுத்தினாள். ஆனால் மீண்டும் அந்த உண்மை தாக்குவதிலிருந்து அவளால் தப்பிக்கவே முடியவில்லை.

* * *

''ஏண்டா..! கவியரசா.. அந்தப் பொண்ணு ஆபீசுக்கே வந்தாளாம்'' என்றார் தியாகேசுவரன்.

"ம்..!" என்றான் கவியரசன் ரிமோட்டில் டி.வி. சேனல்களை மாற்றியபடி.

"டேய்! எத்தனை நாள் சொல்றேன். ஒரு சேனல் போட்டமா.. ஒழுங்காப் பாத்தமான்னு இருன்னு" என்று அருகில் வந்து அமர்ந்தாள் அம்மா.

"போம்மா! உங்க மாதிரி சீரியல் பாத்துட்டு.. கண்ணு மூக்கு கலங்க.. கவலைப்பட்டுட்டு இருக்க முடியுமா?" என்று சிரித்தான் கவியரசன்.

தந்தையும், மகனும் ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

"ஆஹா! ரெண்டு பேரும் ஒண்ணு சேர்ந்திட்டீங்களா.. இனிமே என் தலையை உருட்டுவீங்க!"

"உருட்டற மாதிரித் தலையா இது? அழகான தலை ஆச்சே!" என்று சிரித்தார் தியாகேசவரன்.

கவியரசன் திரும்பி ரஞ்சனியைப் பார்த்து சிரித்தான்.

"ரஞ்சனி..! உங்க மாமாவைப் பாத்தியா?" என்றான்.

"சரிடா! என்னைக் கலாட்டா செய்றது இருக்கட்டும். நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லு."

கவியரசன் சிரித்துக் கொண்டே எழுந்து தனது அறை நோக்கி சென்றான்.

தியாகேசவரன் விடுவேனா என்று பின்னாலேயே சென்றார்.

"அப்பா!" என்று திரும்பியவன் மறுபடியும் சிரித்தான்.

"அந்தப் பொண்ணு சண்டைக் கோழிதான்" என்று சிரித்தான்.

"அப்புறம்?" என்றார்.



"அப்புறம்.. என்ன? திகர்ன்னு ஒரே கண்ணீர்தான். வெயிலும், மழையும் மாறி மாறிப் பெஞ்ச மாதிரி" என்று மறுபடியும் சிரித்தான்.

தன்னையறியாமல் அவன் கைகள் மார்பை நீவிக் கொண்டன.

"நல்ல பொண்ணுப்பா..!" என்று தன் அறைக்குள் புகுந்து கொண்டான்.

தியாகேசவரன் சிந்தனையுடன் திரும்பவும் ஹாலுக்கு வந்தார். அவருக்குள் ஆழ்ந்த சிந்தனை தோன்றியது.

மனைவியிடம் கவலையுடன் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

அதே நேரம்!

பால்கனியில் நின்றபடி நிலவொளியைப் பார்த்துக் கொண்டிருந்தான் கவியரசன்.

மனம் ஏனோ உல்லாசமாக உணர்ந்தது. தமயந்தி மேடத்திடம் பழக வேண்டும் என்ற எண்ணம் தோன்றிய தற்கு வேறு காரணங்கள் இருந்தன. ஆனால் ஹம்ச வர்த்தினியைச் சீண்ட வேண்டுமென்று தோன்றியதற்கு என்ன காரணம்? அதிலென்ன அப்படி ஒரு சந்தோஷம்.

அத்தனை சந்தோஷமும் இன்றைக்குக் காலையில் மார்பில் புரண்டு அழுத அந்தக் கணத்தில் மாறி விட்டதே ஏன்?

மனம் திடீரென்று வேறு நிலைக்குத் தாவி விட்டதே ஏன்? இனிமேல் ஹம்சவர்த்தினியை பழைய மாதிரி சீண்டவே தோன்றாது என்ற முடிவுக்கு வந்தான்.

"அத்தான்!" என்ற குரல் கேட்கவும் திரும்பினான்.

"சொல்லு ரஞ்சனி..!" என்றான்.

"நீங்க இன்னும் சாப்பிடலே!" என்றாள் ரஞ்சனி.

"ஆமா.. இல்லே!" என்று டைனிங் டேபிளுக்குப் போனான். சாப்பிட்டான்!

வழக்கமான கலாட்டா சிரிப்பு எதுவும் இல்லாமல் மௌனமாகச் சாப்பிட்டான். அப்பாவும், அம்மாவும் கூட இருந்தும் ஏனோ அவனிடம் பேச்சுக் கொடுக்கவில்லை.

அமைதியாகச் சாப்பிட்டு விட்டு எழுந்து போனான். எப்போதும் சற்று நேரம் எதையாவது படிப்பான். அன்று படித்தான். ஆனால் புத்தகத்தில் மனம் செல்லவில்லை.

புத்தகத்தை மார்பின் மேல் சாய்த்துக் கொண்டு விட்டத்தைப் பார்த்துக் கொண்டு படுக்கையில் சாய்ந்திருந்தான். நேரம் ஓடியது.

ஒரு மணி நேரம் போயிருக்கும்! நேரம் பார்த்தான்.

மணி பத்து!

உறங்கலாமா என்று யோசித்தான். உறக்கம் வராது என்றும் தோன்றியது.

அதே நேரம்!

"அத்தான்!" என்று வந்து நின்றாள் ரஞ்சனி.

"என்னடா?" என்றான் கவியரசன் வாஞ்சையாக.

"அத்தான்! பால்.. மில்க்.. தூத்!" என்று கிண்டல் செய்தபடி பால் டம்ளரை நீட்டினாள்.

"ஓ.. தேங்க்ஸ்!" என்று வாங்கிக் கொண்டான்.

பால் சாப்பிடும்போது கூட அவன் முகத்தில் ஓடிய புன்னகையை ரஞ்சனி கவனித்தாள்.



அவள் முகத்தில் ஆழ்ந்த சிந்தனை ஓடியது.

அத்தானை இப்படி அவள் பார்த்ததில்லை.. கொஞ்சம் தளர்வான முக பாவனையுடனே அறையை விட்டு வெளியேறினாள்.

வேலை நிறைய இருக்கிறது. அடுக்களையில் மேற்பார்வை செய்து வேலை முடித்து விட்டு வந்து அவள் படுக்கையறையில் எட்டிப் பார்த்த போது கவியரசன் பால்கனியில் நிலவைப் பார்த்தபடி நின்றிருந்தான்.

ரஞ்சனியைத் திரும்பிப் பார்த்தான்!

"தூக்கம் வர்லே!" என்றான்.

"ஓ..!" என்ற ரஞ்சனி திரும்பினாள்.

"ரஞ்சனி..!" என்று அழைக்க.

"அத்தான்! இன்னும் அடுக்களையில் கொஞ்சம் வேலையிருக்கு.." என்று போனாள்.

பாத்திரங்களை ஒழுங்கு செய்வது போல பாவனை செய்து விட்டு பாத்ரூமுக்குள் புகுந்து கொண்டாள்.

பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொள்ளவில்லை. அழுது தீர்த்தாள்!

புரண்டு புரண்டு படுத்தாள் நறும்சவர்த்தினி! ஒரு பக்கம் முதன் முதலாக ஒரு ஆண்மகன் மார்பில் தானாகப் போய்ப் புரண்டு அழுததை நினைக்கும் போது அவளுக்கு வெட்கமாக இருந்தது. ஆனால் அதற்குப் பிறகு தோன்றிய எண்ணங்கள் குறித்தும், தன்னைக் குறித்தும் அவளுக்கு அச்சம் தோன்றியது. ஆனால் இந்த மாதிரி ஒரு வேதனை அவளுக்குச் சுகமாகவும் இருந்தது. அது குறித்த அதிர்ச்சியும் இருந்தது.

ஒரு வழியாக உறக்கம் கண்களைத் தழுவிய போதும் கனவில் கவியரசன் முகம் வந்து நின்றது.

அதற்குப் பின்னாலே ஒரு செல்போன் மெல்ல மெல்ல பெரிதாகி நெருக்கத்தில் வந்து முகத்தில் மோதியது. அந்தக் கனவில் இருந்து மீள முடியாமல் ஆழ்கிற போதே அதற்குப் பின்னே மிக மிக இளமையான அந்த முகம் தோன்றியது.

"வேண்டாம்.. வர்த்தினி! நான் பட்டது போதாதா? நீயுமா.. வேண்டாம்.. வேண்டாம்" என்று தலைவிரி கோலமாக அழுதது.

வர்த்தினி திடுக்கிட்டுப் போய் எழுந்தாள். முகத்தில் முத்து முத்தாக வியர்வைத் துளிகள் அரும்பி நின்றன.

நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொண்டது. மேல் மூச்சம், கீழ் மூச்சம் வாங்க ஒரு அலறலுடன் படுக்கையில் எழுந்து அமர்ந்தாள்.

## 13

ஹம்சவர்த்தினி எவ்வளவுக்கெவ்வளவு கவலையில் ஆழ்ந்திருந்தாளோ அவ்வளவுக்கு நேர்மாறாக கவியரசன் மகிழ்ச்சியில் இருந்தான்.

மனசெல்லாம் ஒரு பரவசம்.

உலகமே ஒளி மயமானதாக இருந்தது. பொதுவாக அளவாக சிரிப்பவன் எடுத்ததற்கெல்லாம் சிரித்தான்.

அவனுக்குக் கீழே வேலை செய்பவர்கள் கூட ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"எல்லாம் நேத்து வந்துட்டுப் போச்சே அந்தப் பொண்ணோட மகிமை" என்று அனில்குமாரிடம் முணுமுணுத் தாள் கஷ்மிதா.

"அப்படியா சொல்றீங்க.." என்று ஆச்சரியமானான் அனில்குமார்.

"அப்படித்தான் நினைக்கிறேன்" என்றாள் கஷ்மிதா.

"ஹல்லோ! என்ன விளையாடறீங்களா? அப்ப ரஞ்சனி மேடம் சும்மாயிருப்பாங்களா?" என்றான் அனில்குமார் கவலையுடன்.

"அதெல்லாம் பெரிய இடத்து விவகாரம் உனக்கும்.. எனக்கும் அதைப் பத்தி என்ன?" என்றாள் கஷ்மிதா.

அதே நேரம்!

அந்தப் பக்கம் வந்த கவியரசன்,

"எந்தக் கோட்டையைப் பிடிக்க இப்படி சதியா லோசனை நடக்குது.." என்றான்.

"இல்ல.. சார்! நேத்து வந்தாங்களே ஹம்சவர்த்தினி அவங்க ரொம்ப ஸ்மார்ட்டா இருக்காங்களாம்" என்றாள் கஷ்மிதா அலட்டிக் கொள்ளாமல்.

"ம்..! அப்படியா சொன்னே!" என்றான் கவியரசன்.

"அதே.. தான்.. சார்.. சொன்னேன்" என்றான் அனில் குமார் அவசரமாக.

கவியரசன் நம்பவில்லை. ஆனால் காட்டிக் கொள்ள வில்லை.

கான்ஃபரன்ஸ் அறையில் உள்ள ஒரு பெரிய கண் ணாடியின் எதிரில் நின்று பார்த்தான்.

"அவ்வளவு வெளிப்படையாகவா முகத்தில் தெரிகிறது?" என்று எண்ணிக் கொண்டவன் இரண்டு கன்னங்களையும் தடவிக் கொண்டான். தனக்குள் சிரித்துக் கொண்டான்.

சிரித்துக் கொண்டே தனது மேஜைக்கு வரவும் போன் ஒலித்தது.

எடுத்தான்.

அப்பா பேசினார். ஒரு நிமிடம் பேசிவிட்டு, "இந்தா ரஞ்சனி பேசணுமாம்" என்று அந்தப் பக்கம் போனை நீட்டினார் போலும்.

ரஞ்சனி பேசினாள்.

"அத்தான்.. இப்ப உங்களுக்குக் கொஞ்சம் டைம் இருக்குமா?"

"ஏம்மா?" என்றான்.

"கொஞ்சம் ஷாப்பிங் போகணும்" என்றாள்.

"சரி.. வர்றேன்" என்றான்.

நேற்றிலிருந்து பொங்கிய உற்சாகமெல்லாம் திறந்து விட்ட குழாயிலிருந்து ஓடி மறைகிற தண்ணீராக மறைந்து போனது.

• • •

"ஏண்டி.. வர்த்தினி.. டல்லடிக்கறே.." என்றார்கள் தோழிகள்.

நீரஜா உற்சாகமாக வந்தாள்.

"ஏய்! மத்தியானம் காலேஜ் லீவாம்.."

"எதுக்கு?"



"அதாண்டி..! நம்ம காலேஜ் டீம் நேஷனல் லெவல் கபடில ப்ரோக்ராம்ல ஜெயிச்சுட்டு வந்தாங்களே. அதுக்கு.."

"ஓ..!"

"என்னடி பண்ணலாம்?" என்று திட்டம் போட ஆரம்பித்தார்கள்.

"ஹேய்! வர்த்தினி.. ஷாப்பிங்.. போலாமா?" என்றாள் நீரஜா.

"நான் பணம் கொண்டு வரலையே!" என்றாள் வர்த்தினி.

"உனக்கென்னடி.. நான் குடுக்கறேன் அப்புறம் அம்மாகிட்டே போய் வாங்கிட்டாப் போச்சு.."

உச்சுக் கொட்டினாள் ஹம்சவர்த்தினி.

"எங்க போகணும்கறீங்க?" என்றாள் அசுவாரசியமாக.

"டிரஸ் எடுக்கலாம்டி.." என்றாள்.

"போடி! எங்கிட்டே ஹாப் எ டஜன் டிரஸ்ஸஸ் இன்னும் போடாம புதுசா இருக்கு" என்றாள் ஹம்சவர்த்தினி.

"சரி.. வேண்டாம்! எங்களுக்கு செலக்ட் பண்ணிக் குடு.. உன்னோட செலக்ஷன் நல்லாருக்கும்" என்றார்கள்.

"சரி.. வர்றேன்..!" என்றாள் அரை மனதாக.

"நேரம்டி..! உன்னையெல்லாம் இப்படி தாங்க வேண்டியிருக்கு.." என்றாள் நீரஜா.

ஹம்சவர்த்தினி பெரிதாக ஒன்றும் கண்டு கொள்ளவில்லை.

போனார்கள்! ஆனால் போனதற்குப் பிறகு ஹம்ச வர்த்தினியின் மனம் உற்சாகமானது.

கொஞ்சம் வெளியே வந்ததும் நல்லதாகப் போயிற்று என்று தோன்றியது.

''ஏ! இந்த ஜீன்ஸ் நல்லா இருக்கா.. பாரு!'' என்றாள் அனிதா.

''நல்லா இருக்கு..! இதுக்கு டாப்ஸ் என்ன எடுக்கப் போறே'' என்றாள் ஹம்சவர்த்தினி.

நான்கைந்து பேராக கும்பலாக நின்றிருந்தார்கள்.

ஹம்சவர்த்தினி மனமும்கூட மாறியது.

''சரிடி! நானும் ரெண்டு டிரஸ் எடுக்கறேன்'' என்று தேர்ந்தெடுத்தாள்.

கலகலவென்ற சிரிப்போடு நின்று கொண்டிருந்த போதுதான் அந்தப் பக்கம் பார்த்தாள்.

ஒரு நிமிடம் மூச்சு நின்று விடும்போல இருந்தது. கவியரசன் நின்று கொண்டிருந்தான்.

அங்கிருந்து பார்த்தால் முழுதும் அவன் உருவம் தெரியவில்லை. ஆனால் அவள் உள்ளுணர்வு சொன்னது.

அவனாகத்தான் இருக்க வேண்டும்!

தன் உள்ளுணர்வும் ஆழ்மனதும் அழுத்தமாகச் சொன்னதே அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது என்பதால் சிரித்துக் கொண்டே திரும்பியதும் முழுமையாகத் தெரிந்தான்.

அவனே தான்!

'சே! கொடுமை கொடுமைன்னு கோயிலுக்குப் போனா அங்க ரெண்டு கொடுமை ஆடிகிட்டு வந்ததாம்' என்று சலிப்புடன் நினைத்துக் கொண்டாள்.



கவியரசன் அவளை கவனிக்கவில்லை. நேற்று இல்லாத மாற்றம் என்பது போல அவன் முகத்தில் அப்படியொரு மலர்ச்சி!

கல்லாவுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான். முதலாளி போலும் அவர் அவனிடத்தில் சிரித்துப் பேசிக் கொண்டே பில் செலுத்துகைகளை வாங்கிக் கொண்டிருந்தார்.

பக்கத்தில் இருந்த டேபிளின் மேல் தேர்ந்தெடுத்து வைத்திருந்த துணிகளின் அடுக்குகளுக்கு முதுகைக் காட்டியபடி நின்று கொண்டிருந்தாள்.

ஹம்சவர்த்தினி தான் அவன் பார்வையில் பட வேண்டாம் என்பதற்காக நீரஜாவின் முதுகுக்குப் பின்னால் மறைந்து கொண்டாள்.

அதே நேரம்!

அந்த இளம்பெண் அவனருகில் வந்து நின்றாள். மிகவும் அன்பாக அந்தப் பெண்ணைப் பார்த்தான் கவியரசன்.

ஏதோ சொல்லிக் கொண்டே அந்தப் பெண் அவனை நிமிர்ந்து பார்த்து சிரிக்க அவனும் அதே போல் ஏதோ சொல்லிச் சிரிப்பது மௌனப் படம் போல அவள் பார்வையில் ஓடியது.

வயிற்றுக்குள் ஏதோ பிசைகிறாற்போல இருந்தது. ''வாங்க அத்தான்!'' என்று அழைப்பது வாயசைப்பில் தெரிந்தது பிறகு அவளோடு நகர்ந்தான்.

''ஏய்! என்னடி எங்கயோ பராக்குப் பாத்துகிட்டிருக்க'' என்று நீரஜா அவள் முதுகில் தட்ட சுயநினைவுக்கு வந்தவள் போல் திரும்பினாள். டிரஸ் செலக்ஷனில் மனம் செலுத்தினாள்.

"ஏய்! இங்க பாருடி! நேரங்கால மட்டியிருக்கிற ஜட்டு மெல்லாம் நல்லாருக்கு.. இல்லே!" என்று அழைத்தாள் அனிதா.

கொஞ்ச நேரம் கவனம் மாறியது.

கொஞ்ச நேரம்தான்! பிறகு மறுபடியும் பார்வை அந்தப் பக்கமே ஓடியது.

இப்போது சேலைகள் பகுதியில் கவியரசனும், அந்தப் பெண்ணும் நின்று கொண்டிருந்தார்கள்.

கவியரசன் ஏதோ ஒரு சேலையைக் கை காட்ட விற்பனைப் பெண் தன் மேல் அதைப் பொருத்திக் காட்டினாள். பிறகு அந்தப் பெண்ணின் மேலும் அதைப் பொருத்திக் காட்ட அவன் பாராட்டும் விதமாக உதடுகளை ஒருவிதமாகச் சுளித்துக் கொண்டு ஆட்காட்டி விரலையும், பெருவிரலையும் ஒன்றாக்கி 'சூப்பர்' என்று சைகை செய்வது தெரிந்தது.

"சே! இதைப் பார்த்து நமக்கு என்ன ஆகப் போகிறது?" என்ற எண்ணத்துடன் மீண்டும் திரும்பி செலக்ஷனில் ஆழ்ந்தாள்.

பத்து நிமிடங்களுக்கு மேல் போயிருக்கும். இப்போது முற்றிலுமாக மனத்தைத் திருப்பி ஏதோ ஒரு உடையை பொருத்திக் கண்ணாடி முன் நின்று பார்க்கையில் நேர் பின்னாலே அவன் வந்து நிற்பது தெரிந்தது.

வேண்டுமென்றே முகத்தில் ஆச்சரியம் காட்டித் திரும்பினாள்.

"ஹலோ!" என்றாள்.

"ஹலோ!" என்றான் அவனும்.

"துணிமணி செலக்ஷனா?" என்றான் கவியரசன்.



"ம்..! பிரண்ட்ஸ்க்கு கொஞ்சம் செலக்ட் பண்ண வந்தோம் அப்படியே..."

"நீங்களும் எடுக்கறீங்களாக்கும்!" என்றான் கவியரசன்.

"ம்.. நீங்க?" என்றாள்.

"நானும் டிரஸ் செலக்ஷன்தான்.. ஆனா.. எனக்கில்லே..!" என்றான்.

"ஓ! நீங்க தனியாக வரலையாக்கும்" என்றாள்.

அதே சமயம்!

"சின்னையா! சின்னம்மா கூப்பிடறாங்க" என்று வந்து நின்றான் டிரைவர்.

அவன் திரும்பாமலேயே அவனிடம் சொன்னான் "செலக்ஷன் முடிச்சிட்டுக் கூப்பிடச் சொல்லு" என்று.

திரும்பவும் ஹம்சவர்த்தினியிடம் திரும்பினான். "மாடர்ன் டிரஸ்லகூட ரொம்ப ஷோவியா போட மாட்டேன். அப்படிப் பிடிக்கறதில்லே. புடவைகள் நிறைய வச்சிருக்கேன்" என்றாள்.

"நம்ம சண்டை முடிஞ்சு சமாதானமாயிட்டோம் கறதுக்கு அடையாளமா ஒரு சாரி பிரசண்ட் பண்ணினா அப்செட் பண்ணிக்குவீங்களா?" என்று கேட்டான்.

சின்னம்மா, சின்னையா என்ற சொற்பிரயோகங்கள் ஏற்கனவே அவளுக்குள் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. குறைந்த பட்சம் கிடைக்கிற பரிசையாவது வாங்கிக் கொள்வோம் என்ற ஏக்கம் தோன்றியது.

சட்டென்று புன்னகைத்தாள்!

"சரி! ஆனா.. செலக்ஷன் உங்களுதா இருக்கணும்" என்றாள்.

தோழிகளிடம் திரும்பி "இருங்கடி... ஒரு நிமிஷம் வந்துர்றேன்" என்று போனான்.

புடவைகள் பகுதியில் அந்தப் பெண் நின்றாள்.

"இது ரஞ்சனி" என்று அறிமுகப்படுத்தினான். அதற்கு மேல் விவரிக்கவில்லை. ஆனால் அந்தப் பெண்ணிடம் மட்டும் சிரிப்புடன் சொன்னான்.

"நான் சொல்லலே! ஹம்சவர்த்தினி" என்று அறிமுகப் படுத்தினான்.

"என்னதான் முகம் மலர்ந்தாற் போலக் காட்டிக் கொண்டாலும் ஒரு நிமிடம் அந்தப் பெண்ணின் முகம் கூம்பி மலர்ந்ததை ஒரு நொடியில் கண்டு கொண்டாள் ஹம்சவர்த்தினி. அந்த நேரம் அவள் ஈகோவை திருப்திப் படுத்தியது என்றுதான் சொல்ல வேண்டும்.

"ஹலோ! ரெண்டு பேரும் தள்ளி நில்லுங்க" என்று ஏதோ கோதாவில் இறங்கிறவனைப் போல கவியரசன் சேலை செலக்ட் செய்ய பெண்கள் இரண்டு பேரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். புன்னகைத்துக் கொண்டார்கள்.

"அத்தான் நல்லா செலக்ட் செய்வாங்க" என்றாள் ரஞ்சனி.

"ஓ! எங்க அப்பா கூட" என்றாள் ஹம்சவர்த்தினி.

மேற்கொண்டு என்ன பேசுவதென்று தெரியாதவர்களாக முகத்தில் செயற்கையான புன்னகையுடன் நின்று கொண்டிருந்தார்கள்.

கவியரசன் ஒரு வழியாக செலக்ட் செய்து முடித்தான். திரும்பி ஹம்சவர்த்தினியைப் பார்த்தான். புடவையைக் காட்டினான்.



"பிடிச்சதா?" என்றான்.

உண்மையாகவே ஹம்சவர்த்தினி தன் உள்ளம் பறிபோனாற் போல் உணர்ந்தாள். அவள் நிறத்துக்குப் பொருந்துகிற வகையில் ஆழ்ந்த சுத்தரிப்பூ நிறத்தில் புடவை ஓரத்தில் வெள்ளையில் எம்ப்ராய்டரி பூக்கள் போட்டாற் போல் கட்டினால் மிகவும் வசதியாக இருக்கிற மாதிரிப் புடவை!

ஹம்சவர்த்தினியின் முகம் உண்மையாகவே மலர்ந்தது.

"பியூட்டிஃபுல்" என்றாள்.

கவியரசன் தன் முகவாய் கட்டையை நீவியபடி ஆழ்ந்து பார்த்துக் கொண்டு நின்றான்.

ஹம்சவர்த்தினி நிமிர்ந்து பார்த்தவள் அவன் பார்வையில் கவரப்பட்டவளாக நின்றாள்... ஒரு யுகம் நகர்ந்தாற் போல அவர்கள் நிற்க ரஞ்சனியின் முகம் வாடியது.

சந்தடி செய்யாமல் நகர்ந்து தான் செலக்ட் செய்த புடவைகளுக்கு பில் போடச் சென்று விட்டாள்.

சட்டென்று இரண்டு பேரும் முகம் சிலுப்பிக் கொண்டு திரும்பினார்கள்.

ஹம்சவர்த்தினி திடுக்கிட்டுப் போனவளாய்த் தோழியைத் தேடினாள் பார்வையில். அவர்கள் அந்த ஹாலின் ஒரு ஓரமாக நின்றபடி சுவாரசியமாக வேடிக்கை பார்த்தபடி நின்றார்கள்.

அவனும் முகம் சிவக்கத் திரும்பி ரஞ்சனியைத் தேடினான். ரஞ்சனி தங்கள் ரெண்டு பேருக்கும் முதுகைக் காட்டியபடி பில் போடும் பக்கத்தில் நிற்பதைப் பார்த்தான்.

அவன் படுகிற அவஸ்தையை அவன் சுவாரசியமாகப் பார்த்தபடி நிற்பதைப் பார்த்தவுடன் மென்று விழுங்கிய படி சொன்னாள்.

"இப்ப.. புடவை.. எதுக்கு?"

அவன் புன்னகைத்தான். எதையோ புரிந்து கொண்ட தன்மை அதில் இருந்தது.

"என் திருப்திக்காகன்னு வச்சுக்குங்களேன்" என்றான்.

"சரி.. நான் வரேன்" என்று நகர்ந்தாள்.

எதிலிருந்தோ தப்பினாற்போல ஓடுகிற அவளைப் புன்னகையுடன் பார்த்தபடி அவனும் பில் போடும் இடத்துக்குப் போனான்.

"யார்டி... அது?" என்று தோழிகள் கிசுகிசுக்க.

"எங்கம்மா பேங்க்ல.. கஸ்டமர்டி.." என்று சொன்னாள்.

"அவங்கம்மா.. பேங்க்ல கஸ்டமராம்டி.." என்று அவர்கள் கிண்டலாய் ஒருவரையொருவர் பார்க்க அவள் கண்டு கொள்ளாமல் சிந்தனையிலாழ்ந்தாள்.

மனைவியோடு வந்தவன் இப்படி வேற்றுப் பெண்ணை விழுங்கினாற் போல பார்க்கிற ஆளாக இருக்கிறான் என்று எண்ணிக் கொண்டாள்.

புடவையைக் கொண்டு வந்து அவன் கொடுக்கையில்,

"தாங்க்ஸ்!" என்று வாங்கிக் கொண்டாள்.

"அவங்க!" என்று தேடினாள்.

"ரஞ்சனியா? காருக்குப் போயிட்டா" என்றான்.

தலையாட்டி விட்டுக் கிளம்பினார்கள் அவளும் தோழி களும்.



நீரஜாவின் காரில் அவர்கள் ஏறுகிற அதே சமயம் கடையை விட்டு வெளியே வர அவள் மறுபடியும் நெருங் கினான்.

"கவியரசன்!" என்றாள்.

"ம்..!" என்று நின்றான்.

"உங்க வைஃப் ரொம்ப அழகாயிருக்காங்க" என்று சொல்லிவிட்டு காருக்கு ஓடினாள்.

கவியரசன் தன் நெடிய உருவத்தைக் காருக்குள் திணிப்பதற்கு முன்பு நின்று ஒரு விசித்திரப் பார்வை பார்ப்பதை அவள் உணர்ந்து கொள்ளவில்லை.



# 14

தனிமையில் அமுது தீர்த்தாள் ஹம்சவர்த்தினி!

இப்போது முழுமையாகப் புரிந்தது!

முதல் முதலாகக் கவியரசனைப் பார்த்தவுடனே தன் மனத்தில் ஈர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் வந்தது செல்போன் தொடர்பினால் என்பதால் வெறுப்பு ஒரு பக்கம்.

நேரில் பார்க்காமலோ பேசாமலோ இருந்தால் மனம் மாறிவிடும் என்ற நப்பாசையினால்தான் உருட்டியும் மிரட்டியும் பார்த்திருக்கிறோம். அவரோ "வைய வைய வைரக்கல் திட்டத் திட்டத் திண்டுக்கல்" என்பது போல் அசைந்தே கொடுக்கவில்லை. அது மட்டுமில்லாமல்

அம்மாவிடம் நட்பை வளர்த்துக் கொண்டு விட்டார். இப்போதும் அம்மாவுக்கும் அவருக்கும் இடையே ஏதோ ஒரு ரகசியம் இருக்கிறது என்று அவளது உள்மனது சொன்னது. ஆனால் இன்றைக்குத்தான் புரிந்து கொண்ட உண்மைக்குப் பிறகு மற்றது எதுவும் முக்கியமில்லாததாகப் போய்விட்டது.

இனி என்ன நடக்கும்?

இன்னொருத்தியின் கணவனைத் தான் நினைக்க வேண்டுமா? அது சரி.. எந்த ஊர், என்ன பேர் என்றெல்லாம் கேட்டுக் கொண்டா அன்பு முளைக்கிறது. ஆமாம், முளைக்கிறது என்றுதான் சரியான வார்த்தை. விதை எப்படி மண்ணோடு போராடி மண்ணைத் துளைத்துக் கொண்டு புறப்படுகிறதோ அதைப் போலத் தானே அன்பும் முளைக்கிறது. மறுபடியும் மனம் அதே கேள்விக்கு வந்து நின்றது.

இனி என்ன நடக்கும்?

"என்ன நடக்கும்? மரியாதையை காப்பாத்திக் கொண்டு ஒதுங்கிக் கொள்ள வேண்டியதுதான்."

மணி பார்த்தாள். ஐந்து மணியாகி இருந்தது.

நல்ல வேளையாக இன்று பாட்டி இல்லை. எப்போதுமே ஹம்சவர்த்தினிக்குத் தனிமை பிடிக்காது. அதனாலேயே தமயந்தி பாட்டியை ஊருக்கு அனுப்ப மாட்டார். இந்த முறை மகன் வற்புறுத்திக் கேட்கவும் அனுப்பி வைத்தார்.

"பாட்டியை உங்களுக்கேயென்று சாசனமா எழுதிக் கொடுத்திருக்கு" என்று உரிமையாக மகன் சண்டை போட்ட விதம் பார்த்து சிரித்துக் கொண்டு அனுப்பி வைத்தார்.



வீட்டுக்கு வந்த ஹம்சவர்த்தினி வேறு சமயமாக இருந்தால்,

"அம்மா! வீட்டுக்கு வந்துட்டேன்" என்று போன் செய்வாள். உடனே அம்மாவோ அப்பாவோ யாராவது கொஞ்சம் முன்னாலேயே புறப்பட்டு வந்து விடுவார்கள். இன்று அப்படியெல்லாம் போன் செய்யக் கூடத் தோன்றவில்லை.

'ஆமா! பூதமா வந்து முழுங்கிடப் போகுது!' என்று சலிப்புடன் எண்ணிக் கொண்டாள். ஆனால் அவளுக்குத் தெரியவில்லை. நீரஜா போன் செய்து அம்மாவிடம் சொல்லியிருக்கிறாள் என்று.

அம்மா பர்மிஷன் போட்டுவிட்டுக் கிளம்பி வந்து விட்டார்.

"என்னடி.. மத்தியானம் காலேஜ் இல்லையாம் நீரஜா போன் பண்ணினா. அதான்.. நீ தனியா இருப்பியேன்னு வந்தேன்." என்றபடி உள்ளே நுழைந்த அம்மாவிடம் எதையும் காட்டிக் கொள்ளாமல் புன்னகைத்தாள்.

"என்னடி.. கண்ணெல்லாம் ஒரு மாதிரி இருக்கு?" என்றார். தமயந்தி, கண்டு பிடித்து விட்டார்.

"தெரியலம்மா! தலைவலியா இருந்துச்சு.." அப்புறம்.. காலேஜ்ல எங்க புரஃபசர்கிட்ட வேற திட்டு" என்று சமாளித்தாள்.

"ஓ.. மூட் அவுட்டா?"

"ஆ.. மா!" என்றாள் அசுவாரசியமாக. "சரி.. எங்க யாவது வெளிய போலாமா?" என்றார் தமயந்தி.

"இல்லம்மா.. வேண்டாம்!" என்றாள்.

"ம்..'' என்று யோசித்தார் தமயந்தி.

"என்னம்மா..!'' என்று மகள் கேட்கவும்,

'இல்லடி.. அபிஷியலா.. ஒரு பார்ட்டி இருக்கு.. போகணும்' என்று தனக்குள் முணுமுணுத்தார்.

அதே நேரம்!

வீட்டுக்கு முன்னாலே ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து கவியரசன் இறங்குவதைப் பார்த்த ஹம்சவர்த்தினிக்கு ஒரே நேரத்தில் மகிழ்ச்சியும், வருத்தமும் ஏற்பட்டன.

அவனைப் பார்த்தவுடனே தன்னிச்சையாகத் தனக்குள் ஒரு மகிழ்ச்சி பொங்குகிற அதே நேரத்தில் இந்த மகிழ்ச்சியால் என்ன பயன் என்ற சலிப்புணர்வும் ஏற்பட்டது.

"ஹலோ.. மேடம்!'' என்று நுழைந்தான் கவியரசன்.

"வாங்க கவியரசன்!'' என்று அம்மா முகமலர வரவேற்ற அதே கணத்தில் அவள் லேசாக புன்னகைத்துத் தலையசைப்புடன் வரவேற்றாள்.

"மேடம்! நாங்க பிரண்ட்ஸாயிட்டோம்..'' என்று கவியரசன் சிரிக்க அவளும் அம்மாவிடம் புன்னகைத்தாள்.

"தட்ஸ்.. ரியலி.. குட்! உட்காருங்க'' என்று பாராட்டிக் கொண்டார் தமயந்தி.

"பேசிகிட்டிருங்க'' என்று கவியரசனின் முகம் பார்க்காமல் அம்மாவின் பக்கம் அரை வட்டமாகத் திரும்பிச் சொல்லிவிட்டு அறைக்குள் செல்கிற ஹம்சவர்த்தினியின் முதுகை அவன் பார்வை துளைத்தது.

அப்போதுதான் அந்த வார்த்தைகளை அவன் சொன்னான்.



திரும்புவாளா? என்பதுபோல ஹம்சவர்த்தினி திகைத்து நின்றாள்.

* * *

கண்ணாடியின் முன்னாலே நின்று அப்புறமும் இப்புறமுமாகப் பார்த்தாள் ஹம்சவர்த்தினி.

முகம் மலர்ந்து கிடந்தது!

இந்த நிமிடம் வரை நிகழ்ந்த நிகழ்வுகள் மனதுக்குள் ஓடின.

தங்கள் வீடு தேடிக் கவியரசன் வந்தது அவளுக்கு ஒரு விதத்தில் மகிழ்ச்சியாக இருந்தாலும் அந்த நேரத்தில் எதற்காக வந்தான் என்று யோசனையாகவும் இருந்தது. தான் வேறு இன்னும் அம்மாவிடம் புடவைப் பரிசு பற்றிச் சொல்லவில்லை.

கவியரசன் அவள் அறை நோக்கிப் போவதைப் பார்த்தபடி அந்த வார்த்தைகளைச் சொன்னான். வேண்டுமென்றே சத்தமாகச் சொன்னான் என்று புரிந்தது.

"மேடம்! என்னோட கசின் ரஞ்சனின்னு பேரு! எங்க வீட்லதான் வளர்ந்தா. அவளுக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சிருக்கோம். யாராவது நல்ல மாப்பிள்ளை இருந்தா சொல்லுங்க!'' என்று.

ஹம்சவர்த்தினி அறைக்குள் அப்போதுதான் நுழைந்தவள் அப்படியே நின்றாள்.

'அப்படீன்னா..! ரஞ்சனி அவரோட வைஃப் இல்லையா?'

ஏதோ வில்லிலிருந்து விடுபட்ட அம்பு போல மனம் மேலே மேலே பறந்தது.

அதே சமயம்!

"டீ! வர்த்தினி..! தம்பிக்கும் எனக்கும் காபி போட்டியா.." என்று அம்மா குரல் கொடுக்க "சரிம்மா" என்று பதில் குரல் கொடுத்தாள்.

பால் அடுப்பில் பொங்கும்போது பார்க்க அழகாக இருக்கிற மாதிரி இருந்தது.

பளிச்சென்ற எவர்சில்வர் பாத்திரம் அழகாகத் தெரிந்தது.

முதல் முதலாக கவியரசனுக்கு காபி கொடுத்து உபசரிக்கக் கூடாது என்று பிடிவாதம் பிடித்தது நினைவுக்கு வந்தது. ஆனால் இப்போது அதே கவியரசனுக்குக் காபி போடுவதற்குள் மனம் இறக்கை கட்டிக் கொண்டு பறக்கிறது. என்று தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

'அது சரி! கவியரசன் எதற்காக இவ்வளவு சீக்கிரம் வர வேண்டும். ஒரு வேளை ரஞ்சனி தன் மனைவி இல்லை என்று எனக்குத் தெரிய வேண்டும் என்று நினைக்கிறாரோ' மனம் இன்னும் வேகமாக குதிரையிலேறிப் பறந்து.

"டீ! கவியரசன் வேண்ணா கொஞ்ச நேரம் இருக்கேங்கறாரு.. நான் மீட்டிங் போயிட்டு வந்துடட்டுமா?" என்று கேட்கிற அம்மாவிடம் மௌனமாக "சரி" என்று தலையாட்டினாள்.

ஏனோ அம்மா பார்க்காத சமயங்களில் கவியரசன் குறுகுறுவென்று தன்னைப் பார்க்கிறாற் போலத் தோன்றியது.

அம்மா தனது காரை எடுத்துக் கொண்டு கிளம்பும் நேரம் கவியரசன் ஹால் சோபாவில் அமர்ந்து கொள்ள அவள் அம்மாவை வழியனுப்பி விட்டு வந்தாள்.



"ஹம்சவர்த்தினி.." என்று அழைத்தான். கவியரசன். அவள் தயக்கத்துடன் எதிரில் அமர்ந்தாள்.

"நீங்க கிளம்பினதுக்கப்புறம் ரஞ்சனி ஒரு விஷயம் சொன்னாப்பல..! புடவை மட்டும் தனியா கிஃப்டா கொடுக்கக் கூடாதாம் பிளவுஸ் பிட்டும் குடுக்கணுமாம்."

"ம்..!" என்றாள் கீழே பார்த்தபடி.

"அப்புறம்.. மறுபடியும் நானும் அவளும் கடைக்குப் போய் ரெடிமேட் பிளவுஸாவே எடுத்துட்டு வந்துட்டோம்" என்றான்.

சின்னப் பொட்டலத்தை நீட்டினான்.

வாங்கிக் கொண்டாள்.

"பிரிச்சுப் பாருங்களேன்!" என்றான்.

பிரித்துப் பார்த்தாள். கொள்ளை அழகாக இருந்தது. புடவைக்கு மேட்சாக அதே நிறத்தில் அதே போல வெள்ளை நிறத்தில் எம்பிராய்டரி வேலை செய்து..!"

அவள் முகம் மலர்ந்தது.

"ரொம்ப நல்லாருக்கு..!" என்றாள் முகம் மலர்ந்து.

"என் செலக்ஷன் எப்பவுமே தப்பாகாது.." என்றான்.

அவள் அவன் முகம் பார்த்தாள். அவனும் சளைக்காமல் பார்த்தான். கடைசியில் அவள்தான் பார்வையைத் தாழ்த்திக் கொள்ள வேண்டியதாய்ப் போயிற்று.

அவன் ஒரு விதமாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பு அவள் மனமெல்லாம் நிறைத்து பரவசம் கொடுத்ததோடு என்னவோ செய்தது.

"தனியா இருக்கறதுன்னா பயமோ?" என்றான்.



அவள் ஒரு வித தயக்கத்துடன் சொன்னாள்.

"பயம்னு இல்லே! ஆனா.. பிடிக்காது" என்றாள்.

மறுபடியும் அதே விதமாகச் சிரித்தான்.

"இந்தச் சிரிப்புக்கு என்ன அர்த்தம்" என்று முணுமுணுத்தாள்.

"முடிஞ்சாக் கண்டு பிடி" என்றான். திடீரென்று அவள் ஒருமையில் பேச ஆரம்பித்தது அவளுக்கு ஏனோ வித்தியாசமாகவே படவில்லை.

சற்று நேரம் கனமான மௌனம் நிலவியது. அவள் கரகரத்த குரலில் சொன்னாள்.

"அந்த பிளவுஸ் சரியா.. இருக்கான்னு.. பார்த்துச் சொல்றது!" என்றான்.

அவள் அவனிடமிருந்து விடுபட்டால் போதும் என்பது போல எழுந்தாள்.

அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டு உடுத்த ஆரம்பித்தாள்.

புடவை மிகவும் அழகாக இருந்தது.

'அவன் கேட்டால்... உடனே உடுத்திக் கொண்டு அவன் முன்னாலே போய் நிக்கணுமாக்கும்?' என்று அறிவு முரண்டு பிடித்தது. மனமோ அதைக் கண்டு கொள்ளவே இல்லை.

கண்ணாடியின் முன்னாலே இந்தப் புறமும் அந்தப் புறமும் அசைந்து பார்த்தும் பிடித்துப் போனது என்ற வுடனே அறை விட்டு வெளியே வந்தாள்.

கவியரசன் கையில் ஏதோ ஒரு பத்திரிகையை வைத்துக் கொண்டு புரட்டிக் கொண்டிருந்தான். அதற்கு



மேலும் பொறுமையில்லாமல் எழுந்து நிற்கிற நேரத்தில் அவள் ஹாலுக்குள் நுழைந்தாள்.

கண்களில் பாராட்டும் கிறக்கமும் நிறைந்திருக்க அவன் பார்த்துக் கொண்டு நிற்கையில் அவள் மௌனமாக அவன் எதிரே போய் நின்றாள்.

ஓரிரு நிமிடங்களை அவன் எதுவும் பேசாமல் நிறக அவள் மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்.

கவியரசன் அவளை விழுங்கினாற் போல பார்த்துக் கொண்டு நின்றான்.

"கவி..!" என்றாள் ஹம்சவர்த்தினி கிசுகிசுப்பாக.

"ம்..!" என்றான் அவனும்.

மறுபடியும் மௌனம்.

அதைத் தாங்க மாட்டாதவர்கள் போல எதிரெதிரே சோபாவில் அமர்ந்தார்கள்.

"வர்த்தினி!" என்றான்.

"ம்..!"

"ரொம்ப அழகா இருக்கே!" என்றான்.

"தாங்க்ஸ்." "இனிமேத் தனியா இருக்கறது பத்திப் பயப்பட வேண்டிய அவசியமில்லே." அவன் என்ன சொல்கிறான் என்பது புரிந்திருந்தும் புரியாதவள் போல.

"ஏன் அப்படிச் சொல்றீங்க?" என்றாள் மெல்லிய குரலில்.

"துணையா இருக்க பர்மிட் பண்ணினா. தனியா விடாம பாத்துக்குவேனில்லே!" என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. சற்று நேரம் மௌனமாக அமர்ந்திருந்தாள்.

கவியரசன் முகவாய்க் கட்டையை தீவியபடி தன்னை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருப்பது புரிந்தும் அவளால் வாயைத் திறக்க முடியவில்லை.

"வர்த்தினி" என்றான் கெஞ்சுவது போல்.

அவள் சட்டென்று எழுந்தாள்.

அவனும் எழுந்தான். அவள் மெல்ல நின்று காலியாக இருந்த காபி டம்ளர்களை எடுத்துக் கொண்டு சமையலறை நோக்கிப் போனாள்.

வைத்து விட்டுத் திரும்புகிற அந்த இடைவெளியில் அவன் உள்ளே நுழைந்தான்.

அவள் பதில் எதிர்பார்த்தாற் போல நின்றாள்.

"ஸா! நான் கேட்டுகிட்டேயிருக்கேன்" என்று அவன் மேலே ஏதும் பேசுவதற்குள்ளாகவே அவள் அவன் மார்பில் முகம் பதித்துக் கொண்டாள்.

அவன் மறுபடியும் அதே போலக் கிறக்கமாகச் சிரிக்க அவள் தலையை உயர்த்தாமல் தன் வலது கையை மட்டும் உயர்த்தி அவன் இதழ்களைப் பொத்தினாள்.

அந்த உள்ளங்கையில் அவன் இதழ் பதிக்க சட்டென்று கையை விலக்கிக் கொண்டதோடு தானும் விலக முயற்சிக்கையில் அவன் இறுக அணைத்துக் கொண்டான்.

சற்று நேரம் உலகம் மறந்தார்கள்.

மெல்ல விலகினாள் ஹம்சவர்த்தினி.

"முன்னாலே ஹாலுக்குப் போலாம்" என்றாள். அவன் அதே கிறக்கப் பார்வையுடன் தொடர்ந்தான்.

"வர்த்தினி! ரஞ்சனி என் வைஃப்ன்னு நினைச்சுட் டேன்னவுடனே எனக்குத் தாங்கலை. மேட்டரைக்



கிளியர் பண்ணிடணும்னு ஓடி வந்தேன்.. தெரியுமா?" என்றான்.

"நான் மட்டும் என்னவாம்? ரஞ்சனி உங்க வைஃப்பா இருப்பாங்களோன்னு நினைச்சு எப்படித் துடிச்சுட்டேன்.. தெரியுமா?"

"வெளிய போடான்னு கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையா விரட்டின ஹம்சவர்த்தினியா இது?" என்று அவன் சிரிக்க.

அவள் சோகமாக முகத்தை வைத்துக் கொண்டாள்.

"ஆமா! அதான் எனக்கும் கவலையா இருக்கு" அவன் சிரித்தான்.

"ஹேய்! நான் இல்ல கவலைப் படணும். நீ எப்பப்ப அடிப்பியே, எப்பப்ப சிரிப்பேன்னு நான் உஷாரா இல்ல இருக்கணும்" என்றான்.

"ஐம் சாரி..!" என்றாள்.

"எதுக்கு?" என்றான் குறும்பாக.

"அடிச்சதுக்கு?" என்றாள் ஹம்சவர்த்தினி.

"ஆனா.. அதை நீ காம்பன்ஸேட் பண்ணலை."

"பண்ணிட்டேனே" என்றாள்.

"எப்படி?" என்றான்.

அவள் தனது புடவையைக் காட்டிச் சொன்னாள்.

"ஐ ம் சாரி. தட் இஸ் வை ஐ ஆம் இன் சாரி" என்றாள்.

"ஐ ம் சாரி! ஐ ஆம் இன்.. சாரி..!" ஹேய்.. ஐ லைக் இட்.." என்று சிரித்தான் கவியரசன்.

அவளும் சிரித்தாள். ஆனால் இரண்டு பேருக்குமே தெரிந்திருந்தது. இன்னமும் தெளிவாக்கிக் கொள்ளப் படாத விஷயங்கள் தம்மிடம் இருக்கின்றன.. என்று.

# 15

"ஹேய்.." என்று கிசுகிசுப்பாக யாரோ அழைக்கும் குரல் கேட்டுத் திரும்பினாள் மீனா.

"வா.." என்பது போல் சைகை செய்து கொண்டிருந்தான் முத்து.

"என்ன?" என்றாள் அவளும் சைகையில்.

"இங்க வாங்கறேன்" என்று பல்லைக் கடித்தான் முத்து.

போனாள்!

அருகில் போய் "என்ன?" என்றாள் சைகையில் மீனா. ஊருக்கு வந்து எழெட்டு மாதம் ஆகியிருந்தது. இந்த எழெட்டு மாத காலத்தில் அவனுக்கும் அவளுக்கும் இடையே ஒரு நட்பு உருவாகி இருந்தது.

போக வர அவனைக் கிண்டல் செய்வதில் ஆரம்பித்தது அது. மீனா பார்ப்பதற்கு அமைதியான பெண்ணாக இருந்து கொண்டு இப்படியெல்லாம் கிண்டல் செய்வாளா என்று அவனுக்கு ஆச்சரியம்.

ஒரே வாரத்தில் அவனும் கிண்டல் செய்ய ஆரம்பித்தான்.

"கருமாண்டி!" என்று அவள் முணுமுணுத்து விட்டுப் போக.



"எம்மா! கருவாச்சி.. உனக்கு இந்த குசும்பா" என்று பதில் சொல்வான்.

"நான் கருவாச்சியா இருந்தா என்ன? அதுக்கு நான் கட்டிக்கப் போறவன் இல்லே.. கவலைப்படணும்" என்று வாயடித்தாள் மீனா.

"ஆமா.. பெரிய மன்மத ராசாவா.. வரப்போறான்.. போவியா?" என்று அவன் பதில் தாக்குத் தாக்கினான்.

அவள் முறைத்தாள். ஆனால் அந்த முறைப்பில் கோபம் இருக்கவில்லை என்பது அவனுக்குத் தெரிந்தது.

அடுத்த நாள்!

"இந்தாங்க கடைக்காரரே! சோப்பு குடு.. லைஃபாய் சோப்பு" என்றாள்.

"ஆமா.. என்ன சோப்பு போட்டா என்ன செய்ய? நிறம் வந்துடவா போகுது?" என்பான் வேண்டும் என்றே.

"சோப்பு அழுக்குப் போறதுக்கு. நிறத்தை மாத்தறதுக்கு இல்லே! அது சரி.. நான் என்னத்துக்கு நிறத்தை மாத்திக்கிடணும்? உன்னைய மாதிரி ஒரு கறுப்பன் எனக்குக் கிடைக்காமயா.. போவான்!" என்றாள்.

"இது நல்லாயில்லே! பிறவு.. நீயே எனக்கு மாப்பிள்ளையா வாயேன்னு கேட்பே போல இருக்கே?" என்று நூல் விட்டுப் பார்த்தான்.

"ஐயோ! நினைப்புத்தானே பொழப்பைக் கெடுக்குது?" என்று நொடித்து விட்டு போனாள். சிரிப்புடன் பார்த்துக் கொண்டான் முத்து.

'மீனா.. முத்து..! மீனா.. முத்து..' என்று சொல்லிப் பார்த்துக் கொண்டான்.

"ஏலேய்! என்னடா தன்னைப் போல பேசிக்கிட்டு திரியறே" என்று அப்பா அதட்டவும்தான் பூமிக்கு வந்தான்.

'ஏதோ லீவுக்கு அக்கா வீட்டுக்கு வந்து போகிற பெண்ணை கணக்குப் பண்ணத் திட்டம் போடுகிறோமே இது நடக்கிற காரியமா?' என்று எண்ணிக் கொண்டான்.

எதற்கும் கேட்டுப் பாத்து விடுவோமே என்று எண்ணிக் கொண்டான். அடுத்த நாள் கேட்டும் விட்டான்.

"என்ன மீனா.. பிளஸ் டூ முடிச்சுட்டு மேல் படிப்பு படிக்கப் போறியாக்கும்?"

"ஆமா! மேல் படிப்புக்கு எங்கிட்டுப் போறது? ஏதோ இம்புட்டு நாளும் நாறப் பொழப்பு பொழச்சாச்சு. இனிமேக் கொண்டு படிப்பும் வேண்டாம்.. ஒண்ணும் வேண்டாம். அப்படியே படிக்கணும்னா யாரு பணம் குடுப்பாக!" என்றாள்.

"ஏன்.. நாறப் பொழப்புன்னு சொல்லுதே!" என்றான் முத்து.

மீனாவின் குடும்பம் ஏழ்மையான குடும்பம். இரண்டு மூன்று பெண் குழந்தைகள். ஒரேயொரு சகோதரன். சகோதரனுக்குப் பெரிய படிப்பு இல்லை. அவன் சம்பாதிப்பது வயதான பெற்றோர்களைப் பராமரிப்பதற்கும், தன் குடும்பத்தைப் பராமரிப்பதற்குமே போதுமானதாக இருந்தது. ஆனாலும் எப்படியோ தட்டுத் தடுமாறி இரண்டு பெண்களுக்குத் திருமணம் செய்து வைத்து விட்டான்.

மீனாதான் கடைசி! அதிலும் மீனா படிப்பில் சுட்டியாக இருந்தாள். மீனாவையாவது எப்படியாவது படிக்க வைக்கலாம் என்று ஆசை. டென்த் முடித்திருந்தாள்.



சென்னையில் தூரத்து உறவினர் குடும்பம் ஒன்று இருந்தது. ஒரு நாள் அவர்கள் மீனாவின் ஊருக்கு வந்த போது சொன்னார்கள்.

"மீனாவை கையோடு அனுப்பி வையுங்க! எங்க வீட்டுக்குப் பக்கத்திலேயே ஒரு கார்ப்பரேஷன் ஸ்கூல் இருக்கு. சேர்த்து விட்டுர்றோம். காலையிலயும் சாயங்காலமும் எங்களுக்கு அவளால முடிஞ்ச வேலையைச் செய்யட்டும்" என்றார்கள்.

மீனாவின் சகோதரனும் அனுப்பி வைத்தான். மீனா போன புதிதில் கொஞ்ச நாள் நன்றாக வைத்துக் கொண்டார்கள். அதற்குப் பிறகு வேலைப் பளு முழுதும் அவள் மேல் சார்ந்தது.

சில நாள் காலையில் எழுந்து சமையலும் கூடச் செய்வாள். துணி துவைத்து அதற்குப் பிறகு தான் கிளம்ப முடியும்.

மாலையில்தான் சற்று நேரம் படிப்பதற்குக் கிடைக்கும். அதுவும் ஆறு மணிக்குள்ளாக வீட்டு வேலைகளை முடிக்க வேண்டும். அப்போதுதான் படிக்கலாம். ஊரிலிருந்து அழைத்து வரும்போது வீட்டுப் பெண்ணாக நடத்துவோம் என்றார்கள். ஆனால் கொஞ்ச நாளிலேயே வேலைக்காரப் பெண்ணாகத்தான் நினைத்தார்கள் என்று தெரிந்தது. ஆனால் அவள் வீட்டுக்குச் சொன்னால் வருத்தப்படுவார்களே என்று எதுவும் சொல்ல மாட்டாள். ஆனால் உடல் இளைத்துப் போனாள்.

ஒரு நாள்!

அவளது அக்கா அவளைப் பார்க்க வந்தவள் அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த இடம் இவற்றையெல்லாம் பார்த்து மனம் வாடிவிட்டாள்.

"இந்தாடி.. மீனா! ஏதோ உதவிக்குன்னு கேட்டா கனோனுதான் அனுப்பிச்சோம். சொத்துக்கில்லேன்னாலும் சுய மரியாதை உள்ளவக நாம.." என்று பொரிந்து தள்ளி விட்டாள்.

மீனாதான் பொறுமையாகச் சொன்னாள்.

"அக்கா.. வந்தது வந்தாச்சு! இன்னும் ஒரு ஆறு மாசம் படிப்பிருக்கு.. முடிச்சுட்டு வந்தர்றேன்" என்றாள்.

என்றாலும் அக்கா.. வீட்டுக்காரர்களின் உறவினர்கள் மூலமாக ஜாடை, மாடையாகத் தன் கருத்தைச் சொல்லி விட்டாள். அதற்குப் பிறகு நிலைமையில் முன்னேற்றம் இருந்த போதும், சகோதரி கருத்தரித்ததால் அவர்களுக்கு உதவி தேவை என்பதால் அவர்கள் ஊருக்கு வந்து விட்டாள்.

சென்னையில் இருக்கையில் மீனா இருந்த வீட்டில் பக்கத்து வீட்டுப் பெண் ஹம்சவர்த்தினியின் தோழி, நீரஜா மீனா படுகிற பாட்டையெல்லாம் வந்து சொல்லுவாள்.

என்னவோ தெரியவில்லை! ஹம்சவர்த்தினிக்கு மீனாவின் பால் பரிவு ஏற்பட்டது. உதவிகள் செய்தாள்.

மீனாவும் "அக்கா.. அக்கா..!" என்று பாசமாகப் பழகினாள்.

மீனாவின் தேவைகளுக்குத் தன்னால் இயன்ற உதவி செய்வாள்.

நீரஜா வீட்டுக்குப் போகும்போதெல்லாம் மீனாவும் அங்கு வருவாள். மீனா தனது பள்ளி அனுபவங்களை சுவையாகச் சொன்னால் அவர்கள் தங்களது கல்லூரி அனுபவங்களை சுவைபடச் சொல்லுவார்கள்.

தோழிகளாகி விட்டார்கள்.

இப்போது முத்து படிப்பைப் பற்றிக் கேட்கவும் எல்லாவற்றையும் கொட்டி விட்டாள் மீனா.

"சரி.. போனாப் போகுது.. விடு நான் வேணா ஏதாவது ஹெல்ப் பண்ணட்டுமா.." என்றான் முத்து.

"இல்ல.. முத்து..! அக்காவுக்குக் குழந்தை பிறந்து ஒரு வருஷமாகட்டும். அடுத்த வருஷம் தபால்ல படிக்கத் தரேன்" என்றாள் மீனா.

"அதெல்லாம்.. கல்யாணத்துக்கப்புறம்.. நான் கூடப் படிக்க வைப்பேன்.." எனவும் மீனா புரிந்தவள் போல.

"யாருக்குக் கல்யாணம்?" என்றாள் ஆச்சரியமாக.

"யாருக்கு? நம்ம ரெண்டு பேருக்கும்தேன்.."

மீனா மறுபடியும் அதே ஆச்சரியம் குறையாமல் சொன்னாள்.

"அப்படீன்னு யாரு சொன்னா?" என்று.

"யாரு சொல்லணும்? நம்ம ரெண்டு பேரும்தேன் சொல்லணும்.. பாரு..! உனக்கு என்னைப் பிடிச்சிருக்கு. எனக்கும் உன்னைப் பிடிச்சிருக்கு? பெரியவுக கிட்டே பேசிட்டு.. பண்ணிக்கிட வேண்டியதுதான்."

"ஆசைதான்!" என்று சொல்லிவிட்டு நகர்ந்தாளே தவிர கோபம் காட்டவில்லை. அவள் கோபப்படவில்லை என்பதிலேயே அவனுக்குச் சம்மதம்தானே என்று அவனுக்குப் புரிந்து போனது. ஆனால் மேற்கொண்டு அது பற்றிப் பேசவில்லை.

யோசித்து ஒரு முடிவுக்கு வரட்டும் என்று விட்டு விட்டான். ஆறு மாத கால இடைவெளியில் அவளது

அக்காவுக்குக் குழந்தை பிறந்திருந்தது. மீனாவின் பெற்றோர்கள் சகோதரன் குடும்பமும் எல்லாரும் வந்து போனார்கள்.

எல்லாரிடமும் அக்காவும், தங்கையும் ஒன்று போல முத்துவையும், அந்த குடும்பத்தையும் நல்லபடியாகவே சொல்லி வைத்தார்கள் என்று தோன்றியது.

நான் கேட்டாக் கொடுத்து விடுவார்கள் என்ற நம்பிக்கையில் இருந்தான். அதனால் கொஞ்சம் உரிமை எடுத்துக் கொண்டு பழகினான்.

இப்போது ஆர்வத்துடன் தனது கையைக் குனிந்து பார்க்கிற அவள் கண்கள் படபடப்பதை ஆசையுடன் பார்த்துக் கொண்டான்.

"பாத்தியா.. புள்ளே..! செல்போனு" என்றான்.

"ஐயோ... ரொம்ப நல்லாருக்கு.." என்றாள்.

"சிலையன்ஸ்.. புள்ளே..! உனக்கு..!" என்றான்.

"எனக்கா?" என்றாள் ஆர்வமாக உடனே முகம் வாடவும் செய்தது.

"என்ன?" என்றான்.

"இல்லே! இதை நான் எப்படி போய் வீட்ல வச்சுக்கறது?" என்றாள்.

"ஓ..." அது வேற பிரச்சினை இருக்கோ?

"இதா.. புள்ளே! நான் எனக்குன்னும் வாங்கியிருக்கேன். நம்ம ரெண்டு பேரும்.. பேசிக்கிட்டா.. ஃப்ரீயாக்கும்" என்றான்.

அவளுக்கும் ஆசையாக இருந்தது.



எப்படிச் செயல்படுத்துவது என யோசித்தான். அந்த முறை பப்ளிக் பூத்திலிருந்து ஹம்சவர்த்தினியிடம் பேசும்போது சொன்னான்.

"மக்கா! நான் காசு சேர்த்து ஒரு செல்போன் வாங்கியிருக்கேன். வீட்ல ஒத்துகிட மாட்டாக. நீ வாங்கிக் குடுத்தேன்னு சொல்லிட்டுமாக்கா.." என்றான்.

"சரி" என்றாள் ஹம்சவர்த்தினி.

"பாவம்.. அவளோட ஆசையை ஏன் கெடுப்பானேன்" என்று எண்ணிக் கொண்டாள்.

"அது சரி! எதுனா வேணுன்னாக் கேளு!" என்றும் சொன்னாள்.

அப்போது ஹம்சவர்த்தினிக்குத் தெரியவில்லை. மீனா எவ்வளவு பெரிய சிக்கலில் மாட்டிக் கொள்ளப் போகிறாள் என்று.

* * *

"ஏய்! என்ன எல்லாம் தூங்கிட்டாங்களா?" என்று திகைத்தான் முத்து.

"ஆமா! என்னா.. இந்த நேரத்துக்குக் கூப்புடறே" என்றாள் மீனா.

"என்னடி! பேச ஆரம்பிச்சுட்டியா? இந்தாடி! போய்க் கொல்லைப் புறத்தில பேசு..." என்றாள் அக்கா.

மீனா.. 'இது.. இதைத்தானே எதிர்பார்த்தேன்' என்பது போல் எழுந்து பின்னாலே போனாள்.

மீனாவின் அக்கா கணவன் மிகவும் நல்லவன். மீனாவை நன்றாகவே கவனித்துக் கொண்டான். நல்ல சுதந்திரமும் கொடுத்திருந்தான். அதனால் மச்சானிடம்

மீனாவுக்குப் பயம் இருக்கவில்லை. அதுவுமில்லாமல் அவள் வாயடிப்பதைப் பார்த்து அவன் ரசிப்பான்.

"எம்புள்ள! என்னதிது... உன் தங்கைக்கு இத்தனை வாயாகாது" என்பான் மனைவியிடம்.

"ம்.. பிளஸ் டூ படிச்சிருக்கா இல்லா! அந்தக் கொழுப்பு.." என்பாள் மனைவி.

"அடுத்த வருஷம்.. மேல்படிப்புக்கு சேத்து விட்டாலாம் புள்ளே.." என்பான்.

"ஆமா! நெட்டையோ குட்டையோ ஒரு ஆளைப் பிடிச்சுக் கண்ணாலம் கட்டி விடாம.." என்று அக்கா இழுக்க அவன் சொன்னான்.

"அடப்போ.. புள்ளே! உங்க வுட்ல வச்சு அதுதான் ஏதோ படிக்கணும்னு நினைக்குது. அதைப் படிக்க வப் போம்.." என்றான்.

மீனா சுதந்திரமாக இருந்தாள். அதனால் முத்துவிடம் அவள் நட்பு நன்றாகவே வளர்ந்தது.

"ஓ.. புள்ளே! என்ன.. பண்றே!"

"ம்.. நெல்லுக் குத்தறேன்.." என்று சிரித்தாள் மீனா.

"நெல்லா.. குத்தறே! இளிச்சவாயன் கிடைச்சிருக் கேன்னு காது குத்தறே!" என்றான் முத்து.

"வேண்டாம்.. விடுங்க!" என்றாள்.

"விட முடியாமத்தானே எழவு.. இந்த நேரங் கெட்ட நேரத்துல கூப்பிடறேன்."

"ஏன்.. கடையில யாரும் இல்லையாக்கும்?"

"ஆமா.. பத்து மணிக்கு வந்து யாரு என்னத்தை வாங்கப் போறா.. ஏதோ விடாம சும்மா தொறந்து வச்சிருக்கேன்" என்றான்.



"அம்மா.. இல்லையாக்கும்?"

"அதான்.. என்னமோ இருமிகிட்டே கெடந்தாக. அக்கா வந்து ஆஸ்பத்திரிக்கு கூட்டிகிட்டுப் போனா. என்னமோ டெஸ்ட்டெல்லாம் எடுக்கணுமாம். அதான்.. நானும் நாளைக்கு டவுனுக்குப் போறேன். வாரதுக்கு ரெண்டு நாளாகும்" என்றான்.

"ஓஹோ..." என்றாள், பிறகு "பாவம்யா.. நல்லாப் கவனி! நீதான் அவங்களுக்கு.." என்றாள்.

"அதெல்லாம்.. எவ்வளவு செலவானாலும் நல்லாப் பாத்துக்கிடறதுதான்.." என்றான்.

"ஆமா! எங்க அக்காதான் சொல்லுவா.. அம்மாவை நல்லாப் பாத்துக்கற ஆம்பளைதான் பொண்டாட்டியை யும் நல்லா பாத்துக்குவானாம்!"

"அப்படிப் போடு!" என்று சிரித்தான் முத்து.

"அப்புறம்.. கடைய இன்னா பண்ணப் போறே.." என்றாள்.

"லீவுதான்.. ஆமா.. என்ன வியாபாரம் தட்டுக் கெட்டுப் போகுது. அப்புறம் தேவைப் பட்டா ஒரு ஆளைப் போட வேண்டியதுதான். அதான் முதலாளியம்மா.. பக்கத்துலயே இருக்கீக இல்லே!" என்றான்.

"அதெல்லாம்.. நான் பாத்துக்குவேன். ஆனா ஊர்க்காரவுக ஒரு மாதிரிப் பேசிப்புடுவாக இல்லே!"

"அது சரி! அம்மா சரியானதும் முத வேலையா.. கண்ணாலம்தான்."

"அது சரி.. அந்தக் கனவெல்லாம்.. அப்புறம் காணு! இப்ப அம்மாவைக் கவனி" என்றாள்.

"ஆமா.. மீனா! நீ அம்மாவுக்காக பிரே பண்ணிக்க.." என்றாள்.

"சரி.. தினமும்.. இந்தப் பக்கத்துல... கோயிலுக்குப் போயி அர்ச்சனை பண்ணிட்டு வாரேன்" என்றாள்.

"ஏய்.. மீனா!" என்று அழைத்து வேறு பேச "புள்ளை அழுகுது" என்று ஓடி விட்டாள்.

என்ன சாக்கு சொல்லி கோயிலுக்குப் போவது என்று யோசிக்கையில் ஊரில் அவளது அம்மாவுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லை என்று தகவல் வந்தது.

"யக்காவ்! அம்மாவுக்கு உடம்பு சரியாகனும்னு நம்ம அம்மன் கோயிலுக்குப் போய் கும்பிட்டுட்டு வர்றேன்" என்று கிளம்பினாள்.

நாற்பத்தெட்டு நாட்கள் பூஜை என்று போனாள். சின்னக் குடத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு போய் ஊற்றி விட்டுக் கோயிலில் வழிபட்டு வந்தாள்.

செல்போனும் அந்த நாற்பத்தெட்டு நாட்களுமாகச் சேர்ந்து அவள் வாழ்க்கையை புரட்டிப் போடப் போகின்றன என்று அவளுக்குத் தெரியவில்லை.



## 16

அழகான சின்னக் குடம் ஒன்றை எடுத்துப் போவாள்.

அந்தக் கோயில் கொஞ்சம் புராதனமானது. பெரிய கோயில் இல்லையென்றாலும் சிற்ப வேலைப்பாடுகள்



அமைந்தது அவளது அறிவுக்கெட்டிய வகையில் அவற்றை ரசித்தாள்.

முத்துவின் அம்மாவுக்காக வேண்டிக் கொள்வதை மனதில் வைத்துக் கொண்டு தன் அம்மாவுக்காகப் போவதாக வீட்டில் சொல்லி விட்டுப் போய் இரண்டு பேருக்கும் வேண்டிக் கொண்டிருந்தாள்.

ஏதோ நாயக்கர் காலத்துச் சிற்பங்கள் என்றும் நாயக்கத் தளபதி ஒருவர் கொங்கு நாட்டுக்குப் போகிற வழியில் அந்த ஊரில் தங்கியதாகவும் பிடித்துப் போய் அங்கே அந்தச் சிறிய அம்மன் கோயில் கட்டியதாகவும் வரலாறு.

அரச மரத்தடி விநாயகருக்குத் தண்ணீர் ஊற்றி விட்டு அம்மன் கோயில் பிரகாரம் சுற்றி விட்டு சிறிய மண்டபத்தில் வந்து அமர்ந்தாள்.

வழக்கமில்லாத வழக்கமாக ஏதோ ஆள்நடமாட்டம் அதிகமாக இருந்தாற் போல உணர்ந்தாள். ஆனால் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை.

நீளமான கரும் கூந்தல் அசைய கறுப்பான முகத்தில் இரண்டு பெரிய கண்களும் ஏதோ வெள்ளியில் அம்மனுக்குக் கண் பதித்தாற்போல உயிரோட்டமாக இருக்கத் தான் மற்றவர் கவனத்தைக் கவர்கிறோம் என்பது அவளுக்குப் புரியவில்லை.

கோயில் சிலை போன்ற கவர்ச்சிகரமான திண்ணென்ற உடல் அமைப்பும் அவளது கவர்ச்சிக்குக் காரணம்.

அன்றைக்குக் கோயிலைச் சுற்றியிருந்த பிரகாரத்தில் எதேச்சையாகத் திரும்பிப் பார்த்தாள்.

யாராரோ காமிரா வைத்துக் கொண்டு நின்றார்கள்.

சுவாரசியம் கிளம்பியது!

நின்று வேடிக்கை பார்த்தாள்!

மண்டபத்தில் இருந்த சிலைகள் காமிராவில் பதிந்து கொண்டிருந்தார்கள் என்பது புரிந்தது.

அருகில் போய், தொலைவில் நின்று என்று விதவிதமாய் படம் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

சற்று நேரம் நின்று விட்டாள்.

அர்ச்சகரிடம் கேட்டாள் "சாமி! என்ன பண்றாங்க."

"என்னமோ... டாகுமென்டரி எடுக்கறாங்களாம்" என்றார்.

"ஆமா... சாமி! நான் கூட நினைச்சேன். நம்ம ஊரு சிற்பமெல்லாம்.. ரொம்ப நல்லா இருக்கேன்னு..." என்றாள் அவள்.

"சரி.. சரி.. நீ கிளம்பு சகட்டுமேனிக்கு எல்லாத்தையும் படம் பிடிக்கிறார்கள். நான் கிளீனா சொல்லிட்டேன்.. கர்ப்பக் கிருகத்தை மட்டும் போட்டோ பிடிக்கப்படாதுன்னு. அசந்து நின்னேன்னாக்க உன்னையும் காமிராவுக்குள்ளே மடக்கிப் போட்டுருவாங்களாக்கும்" என்று சிரித்தார்.

அவளும் வேகமாக நகர்ந்தாள்.

கோயில் வாசலை அடைகிறபோது திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்ததில் எதிரே யாருடனோ மோதிக் கொண்டாள்.

"சாரி... சாரி" என்று அவள் ஒரு பக்கம் முணு முணுக்க அவனும்,

"சாரி.. சாரி..!" என்றான்.

வெள்ளைக் கலர் தாவணியில் ஏதோ அம்மன் சிலையே இறங்கி வந்தாற்போல் நிற்க அந்த இளைஞனின் கண்கள் விழுங்கினாற் போலப் பார்த்தன.



விதிர் விதிர்த்துப் போனாள்.

குடத்தைத் தாவிப் பிடித்துக் கொண்டு வெக்கென்று வெக்கென்று வெளியேறினாள். சற்று தூரம் சென்றவுடன் திரும்பிப் பார்த்தாள்.

உயரமாய் இருந்தான். நல்ல நிறமாய் இருந்தான். இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு நின்றான். கலகலவென்று சிரித்தான்.

வேகவேகமாக வெளியே நடந்தவள் சற்று தூரம் போன பின்,

"ஏம் புள்ளே! இப்படி ஓடறே" என்று யாரோ கேட்க நடையின் வேகத்தைக் குறைத்தாள்.

வீடு வந்து சேரும் வரையிலும் கூட அந்த இளைஞனின் பார்வையும், சிரிப்பும் அவளைத் துரத்தின என்றுதான் சொல்ல வேண்டும்.

வீட்டுக்கு வந்தும் கூட அவளுக்குப் படபடப்பு அடங்கவில்லை. விஷயம் அதோடு நின்று விடவில்லை.

* * *

அன்று பிற்பகல்!

அக்கா உறங்கிக் கொண்டிருந்தாள். சமையல் வேலைகள் எல்லாம் முடித்த பின்தான் அவள் துணிமணிகளைத் துவைப்பது.

துவைத்துக் காயப் போட்டுக் கொண்டிருந்தாள். பின் கட்டில் கொடி கட்டியிருந்தார்கள்.

மீனாவின் அக்கா வீடு சிறியது என்றாலும் கூட முன்னும், பின்னும் இடம் இருந்தது. முன்னாலே இரண்டு மூலைகளிலும் இரண்டு தென்னை மரம் இருந்தது. அதே

போல பின்னாலும் இரண்டு தென்னை மரங்கள் இருந்தன. அதுபோல வீட்டைச் சுற்றிலும் செடி கொடிகள் வைத்திருந்தார்கள். அதுவுமில்லாமல் தெருவின் முனையில் இருந்தது. அவர்களது பின்கட்டுப் பகுதியில் நின்று பார்த்தால் முத்துவின் கடை தெரியும்.

முத்துவின் கடையோடு அந்தச் சின்னத்தெரு முடிந்தது.

'என்ன... முத்துவிடமிருந்து செய்தி ஒன்றும் வரவில்லையே' என்ற யோசனையில் இருந்தாள் மீனா.

அப்போதுதான் அந்தக் கார் மெதுவாக அவர்களது வீட்டுப் பின்கட்டுக்கு முன்னாலே ஊர்ந்தது.

'நம்ம ஊர்ல ரெண்டு மூணு கார் தானே இருக்கு? அதுவும் பெரிய மிராசுதார்கள் வீடுகளில் இருந்தது. அவர்கள் கார் எல்லாம் இந்தத் தெருவுக்குள் வருவதற்கே வாய்ப்பில்லை' என்று எண்ணியபடி ஆச்சரியமாகப் பார்க்கையிலேயே அந்தக் கார் வழுக்கிக் கொண்டு அவள் நின்ற இடத்துக்கு நேர் எதிராக நின்றது.

காரிலிருந்து அந்த நெட்டை இளைஞன் இறங்கினான். நாலைந்து துணி தோளில் கிடக்க குழந்தையின் துணியை உதறிப் போட மத்தளித்துக் கொண்டிருந்த மீனா திகைப்புடன் பார்த்தாள்.

அவன் புன்னகையுடன் வேலிக்கு அந்தப் புறமாக வந்து நின்றான்.

"மேடம்! கொஞ்சம் தண்ணி கிடைக்குமா?" என்றான்.

அவள் தலையைத் திகைப்புடனேயே உருட்டினாள்.

"முன்னாடி வாங்க!" என்று போனாள்.



அவன் காரை வளைத்துத் திருப்பி அவர்கள் வீட்டு முன்பு நிறுத்தி விட்டு இறங்கி உள்ளே வந்தான். கார் சாவி கையில் சுழன்று கொண்டிருந்தது.

அவள் வாசலிலேயே நிறுத்தி செம்பு நிறையத் தண்ணீர் கொடுத்தாள்.

"டம்ளர் ப்ளீஸ்!" என்றான்.

அவள் உள்ளே போய் டம்ளர் எடுத்து ஊற்றிக் கொடுத்தாள்.

"மடக் மடக்" கென்று குடித்தான்.

"உங்க வீடு... ரொம்ப அழகா இருக்கு!" என்றான்.

மறுபடியும் அவள் பேந்தப் பேந்த விழித்தாள்.

"வீட்டுக்குக் கூப்பிட மாட்டீங்களா..." என்றான்.

"இல்லே! அக்கா வீட்ல தூங்கறாங்க..."

"சரி... சரி...! நான் டிஸ்டர்ப் பண்ணலே" என்று சொல்லிவிட்டுப் போனான். கேட் கதவைத் திறந்தான் மறுபடியும் அவளைப் பார்த்துச் சிரித்து விட்டு,

"மேடம்! யூ ஆர் வெரி பியூட்டிஃபுல்" என்றான்.

மீனாவின் முகம் 'குப்'பென்று வேர்த்தது. திகைத்துப் போய் நின்றாள்.

• • •

"ஏய்... மீனா!" என்ற கிசுகிசுப்பான முத்துவின் குரல் கேட்டு விழித்தாள்.

இரவு பத்து மணியாகி இருந்தது.

அக்காவின் கணவனும், அக்காவும் உறங்கி விட்டார்கள். கூலி வேலைக்காரன் என்பதாலும், வேறெந்தக் கெட்ட...

பழக்கங்களும் இல்லை என்பதாலும் இரவு ஏழு மணிக்கு வீட்டுக்கு வந்தால் குளித்து விட்டு கொஞ்ச நேரம் குழந்தையைக் கொஞ்சி மகிழ்வான். பிறகு உணவு முடித்து நேரத்திலேயே உறங்கி விடுவான்.

அக்காவும் குழந்தையோடு நாள் முழுக்க பொழுது கழிப்பதால் அவளும் உறங்கி விடுவாள். அதனால் தான் பத்து மணிக்கு முத்து அழைப்பது.

ஒரே ஒரு நாள் மட்டும்!

உறக்கத்தில் விழித்த அக்கா கேட்டாள்.

"யாரடி.. அது- இந்த நேரத்துல" என்றாள்.

"பக்கால! நீரஜா அக்காவும், ஹம்சாக்காவும் அப்பப்ப பேசுவாக. நான்தான் இந்த நேரத்துக்குக் கூப்பிடச் சொல்லி இருக்கேன்" என்றாள்.

அக்கா அதற்குப் பிறகு எதுவும் கேட்பதில்லை. தன் மேல் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்று உறுத்தலாக இருக்கும். ஆனால் என்ன செய்வது என்று சமாதானம் சொல்லிக் கொள்வாள்.

இன்று திடீரென்று அவளுக்கு உதித்தது. இன்று காலையிலிருந்து முத்துவை நினைக்கவே இல்லை. எல்லாம் அந்தப் புது ஆள் செஞ்ச கலாட்டா என்று எண்ணிக் கொண்டாள்.

'முத்துவிடம் சொல்லலாமா?' என்று யோசித்தாள். 'வேண்டாம். நேரில் கிளம்பி வந்து சண்டைக்குப் போய் விடுவான்' என்று எண்ணிக் கொண்டாள்.

"முத்து..!" என்றாள். மனதில் சின்ன உறுத்தல் இருந்தது.

"என்ன.. மீனா! ரொம்பப் பிஸியா?" என்றான்.



"ஆமா.. முத்து! அதேன்.. உங்கம்மாவுக்காக வேண்டி கிருக்கேன். நாப்பத்தெட்டு நாள் வெநாயகருக்குத் தண்ணி ஊத்தறேன்னு வேண்டியிருக்கேன்" என்றாள்.

முத்து கொஞ்சம் நெகிழ்ந்தான்.

"ஆமா! புள்ளே வேண்டிக்க..! அம்மாவுக்குக் கொஞ்சம் பிரச்சினைதான் போல. டி.பி.ங்கறாங்க. பெருந்துறைப் பக்கம் ஆஸ்பத்திரி இருக்கில்ல. அங்கன அட்மிட் ஆகணுமாம். நான்தேன் இருக்கணும்.." என்றான் குரலில் வருத்தம் தொனிக்க.

"அப்புறம்.. கடை!" என்றாள்.

"அதேன்! மச்சான் ஒரு ஆளைக் கொண்டு வந்து விட தேன்னாரு.. நீயும் கொஞ்சம் கவனிச்சுக்க" என்றான்.

"அதெல்லாம்.. நான் பாத்துக்கிடறேன். நீங்க அம்மாவைக் கவனிங்க" என்றாள்.

"புள்ளே! அம்மாவுக்குச் சீக்கிரம் சரியானப் போதும். நம்ம கல்யாணம் பேசிடலாம்" என்றான்.

"சரி" என்றாள் சிம்பிளாக.

இன்றைக்கு ஏனோ அவன் கல்யாணம் என்று பேசியவுடனே எப்போதும் எழுகின்ற சந்தோஷம் எழவில்லை. அது அவளுக்கு ஆச்சரியமாகவும் திகிலாகவும் இருந்தது.

* * *

கல்லூரிக்குப் புறப்பட்டாள் ஹம்சவர்த்தினி! போன் ஒலித்தது!

ஓடிப்போய் எடுத்தாள்!

"என்னம்மா.. காலேஜுக்குக் கிளம்பிட்டியா.." என்றார் அப்பா.

"ஆமப்பா!" என்றாள்.

"அம்மா.. கூடவா.. போறே?" என்றார்.

"ஆமப்பா!"

"அம்மா.. எங்கே?"

"அம்மா.. பாத்ரூமில..."

"சரி..! அப்புறம் ஒண்ணும் பிரச்சினையில்லயே..."

"என்ன பிரச்சினை?" என்றாள்.

"அதாம்மா..! சொன்னியே! அந்தக் கவியரசனோ.. புவியரசனோ.. அந்தாள்னால தொல்லை எதுவும் இல்லையே!"

ஒரு நிமிஷம் திகைத்துப் போனாள் ஹம்சவர்த்தினி.

'இப்போது அப்பாவுக்கு என்ன சொல்லுவது? தானே கண்டதை அவரைப் பற்றிப் புகார் சொல்லியாகி விட்டது.'

நீண்டதொரு பெருமூச்சு விட்டாள். வேறு விதமாக ஆரம்பித்தாள்.

"அப்பா! யாரோ.. தியாகேஸ்வரனாம்.. அவரோட பையனாம்."

"ஓ..! தியாகேஸ்வரனா.. தங்கமான மனுஷனாச்சே! அவரு பையன்னா, நல்ல பையனாத்தாம்மா இருக்கணும்."

அவள் இறங்கிய குரலில் சொன்னாள்.

"ஆமப்பா! கமிஷனர் அவர் கூட சொன்னாரு. நான் அவரு கிட்டே புகார் பண்ணிட்டேன். அவரு கவியரசனைக் கூப்பிட்டு விசாரிச்சுட்டுச் சொன்னாரு. நல்ல பையம்மா..! உனக்கொண்ணும் பிரச்சினை இருக்காதுன்னு' என்றார்.



"ம்..!" என்றார் அப்பா சிந்தனையுடன்.

"சரிம்மா! அப்ப ஒண்ணும் பெருசாக் கவலைப்படாம படிப்பைக் கவனி. அப்ப அம்மாகிட்ட நான் இது பற்றி பேச வேண்டாமே?" என்றார்.

"வேண்டாம்ப்பா" என்றாள்.

"சரி.. அம்மா.. வந்துட்டாளா? கூப்பிடு" என்றார்.

கூப்பிட்டாள்.

அம்மா வந்து சற்று நேரம் பேசினார். பிறகு மகளிடம் திரும்பி,

"என்னடி.. வர்த்தினி..! நீ.. ஆட்டோல போறியா?" என்றார்.

"ஏம்மா!" என்றாள்.

"இல்லடி! நம்ம அம்மன் கோயில்ல அபிஷேகத்துக்கு குடுத்திருக்கேன்.. அதான்."

"சரி..!" என்றாள்.

அறைக்குள் ஏதோ எடுக்கிறாற்போல் போய் யோசித்தாள். கவியரசனுக்கு மெசேஜ் கொடுத்து வரச் சொல்லலாமா என்று.

என்ன ஆச்சரியம்?

ஹாலில் அழைத்த குரல் கேட்டது!

"வாங்க! கவியரசன்" என்று அம்மா பேசுவது தெரிந்தது.

அகஸ்மாத்தாக வெளியே வருவது போல வந்தாள்.

"ஹலோ.. மேடம்!" என்றான் கவியரசன் கண்கள் மின்ன.

"ஹலோ" என்றாள் அடக்கமாக.

"அம்மா! சொல்ல மறந்துட்டேன். எனக்கு நீரஜா ஒரு புடவை கிஃப்ட் குடுத்தா." என்றாள்.

கவியரசன் அந்த வாக்கியத்தின் மூலமாகத் தனக்கு விடுக்கப்பட்ட செய்தியைப் புரிந்து கொண்டான். நறும்ச வர்த்தினி அறைக்குள் போய்ப் புடவையும், பிளவுசையும் எடுத்து வந்து காட்டுவதை வெளியாள் போல் பார்த்துக் கொண்டு நின்றான்.

"பரவால்லையே! சூப்பரா இருக்கே" என்று அம்மா ஆச்சரியமானார். "பரவால்லே! நீரஜாகூட இவ்வளவு நல்லா செலக்ட் செஞ்சிருக்காளே" என்றார்.

"பிறகு இன்னைக்கு உடுத்திட்டுப் போயேண்டி" என்றார்.

"சரிம்மா!" என்றாள்.

அதற்குள் அம்மா கவியரசனிடம் திரும்பி "கவியரசன்! நீங்க எந்த வழியாப் போறீங்க?" என்றார்.

அவன் சிரித்தான்.

"நீங்க எந்த வழியாகப் போகச் சொல்றீங்களோ அந்த வழியிலே!" என்றான்.

அம்மா சந்தேகமாகத் திரும்பி மகளைப் பார்த்தார்.

"ஏண்டி! நீ கவியரசன் கூடப் போறியா?" என்றார்.

கவியரசன் குறும்பாக அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

"வேற வழியில்லைன்னாப் போறேன்" என்றாள்.

கவியரசன் சிரிப்பை அடக்கிக் கொண்டு நின்றான்.

அம்மா நிம்மதியாகப் புறப்பட்டுப் போக,

அவன் கோபம் போலக் கேட்டான்.

"வேற வழியில்லேன்னாத்தான் வருவீங்க?"

"ஆமா..!" என்று கலகலவெனச் சிரித்தபடி அவள் வீட்டுக் கதவைச் சாத்திப் பூட்டினாள்.

"ம்..! இரு பேசிக்கறேன்" என்று அவன் முணு முணுப்பதை அலட்டிக் கொள்ளாமல் பார்த்துச் சிரித்தாள்.



# 17

அடுத்த நாள்!

கோயிலுக்குப் போவதற்கு மிகவும் ஆர்வமாகப் புறப்பட்டாள் மீனா.

எப்போதும் ஏதோ ஒரு புடவையை ஏனோ தானோ வென்று உடுத்திக் கொண்டு செல்பவள் அன்றைக்கு கொஞ்சம் அலங்காரம் செய்து கொண்டாள்.

அந்த ஓட்டு வீட்டின் எரவாரத்தில் செருகி வைத் திருந்த கண்ணாடியை எடுத்து முகம் பார்த்தாள்.

'கறுப்புத்தான்! ஆனாலும் அழகாகத்தான் இருக் கிறோம்' என்று எண்ணிக் கொண்டாள்.

குடத்தை எடுத்துக் கொண்டாள்!

"யக்காவ்! நான் கோயிலுக்குப் போயிட்டு வரேன்" என்று புறப்பட்டாள்.

"போயிட்டு வாடி!" என்று குரல் கொடுத்தாள். அக்கா பின் கட்டில் குழந்தையை குளிக்க வைத்துக் கொண்டிருந் தாள்.

சென்னையில் இருந்தபோது அருகில் இருந்த மாநகராட்சிப் பள்ளிக்குப் போய் வந்தாள். அவர்கள் இருந்த வீட்டின் காலனி பகுதியில் இருந்து இரண்டு மூன்று பேராகப் போய் வருவார்கள்.

அங்கே இருக்கும் வரைக்கும் அவளுக்கு ஒரு பய உணர்ச்சி இருந்தது. அடுத்தவர்கள் வீட்டில் இருக்கிறோம். ஏதாவது சின்னத் தவறு நிகழ்ந்தால் கூட அதைப் பூதாகாரமாக்கித் தன் மேல் தான் தவறு என்று செல்லி விடுவார்கள் என்ற பயம் இருந்தது. அதனால் எச்சரிக்கை யாகவே இருந்து கொண்டாள். ஆனால் எப்போது அக்கா வீட்டுக்கு வந்தாளோ அப்போதிலிருந்தே சுதந்திரக் காற்றை சுவாசிக்கிறாற்போல உணர்ந்தாள்.

மகிழ்ச்சியாக இருந்தாள்! அந்த மகிழ்ச்சியில் தான முத்துவிடம் கூட தைரியமாகப் பழகினாள். ஆனால் இன்றைக்கு மனசு அவளுடைய கட்டுப்பாடு இல்லாத போல உணர்ந்தாள்.

முத்து அடிக்கடி சொல்வான். "ஏ.. புள்ளே! மீனா.. நீ ரொம்ப அழகு தெரியுமா?" என்று. ஆனால் அவன் சொல்வதைக் காட்டிலும் மிகவும் அழகான நகரத்து இளைஞன் ஆங்கிலத்தில் சொன்னதும் அவளுக்குள் பெரிய தாக்கம் ஏற்பட்டு விட்டது.

"இன்னும் அந்த ஆட்கள் ஊரில்தான் இருப்பார்களா?" என்ற எதிர்பார்ப்புடன் கிளம்பினாள்.

எப்போதும் கோவிலுக்குள் போனால் குழாயில் தண் ணீர் பிடிப்பது விநாயகருக்கு தலையில் ஊற்றிக்



கொண்டு வந்த பூக்களை விநாயகர் தலையில் வைத்து கற்பூரம் ஏற்றுவாள். பிறகு அக்கம் பக்கம் பார்க்காமல் நேராப் பின்னால் அமைய அம்மன் கோவிலுக்குள் நுழை வாள்.

யாரிடமும் நின்று அரட்டை அடிக்க மாட்டாள். தெரிந்தவர்களைப் பார்த்தால் நின்று ஒரிரு வார்த்தைகள் பேசுவாள். ஆனால் கோவிலுக்கு வந்த காரியத்தை முடித்துக் கொண்டு கிளம்பி விடுவாள். வீட்டுக்குப் போய் அக்காவுக்கு சமைக்க வேண்டும்.

காலையில் மச்சானுக்கு ஏதோ ஒரு வகை செய்து கொடுத்தனுப்பி விடுவாள். பிற்பகலில் அக்காவுக்கு காரம் குறைவாக சமைப்பாள். குழந்தைக்குப் பாலூட்டுகிறாள் என்று பார்த்துப் பார்த்துக் கவனிப்பாள்.

"ஊ.. மீனா.. நீ அம்மா மாதிரி பாத்துக்கறடி!" என்று அக்கா பாராட்டுவாள்.

தனக்கும், மச்சானுக்குமாகக் காரமாக காய்கறி வகைகள் செய்து கொள்வாள். அது மச்சான் வருகிற நேரமாகப் பார்த்து மாலையில் செய்வாள்.

எல்லோரையும் பார்த்துப் பார்த்து கவனிப்பதால் அவளை அவர்களும் நன்றாக கவனித்துக் கொண்டார்கள்.

மீனாவின் மச்சான் மனைவியிடம் சொல்வான். "ஏம் புள்ளே! மீனா ரொம்பப் பொறுப்பான புள்ளே இல்லே! எங்கம்மாவும் வர முடியலியே! உங்கம்மா வூட்டுக்கும் போற சூழ்நிலையில்லையே! என்னடா பண்றதுன்னு யோசிச்சுகிட்டுக் கிடந்தேன்; நல்ல வேளை புள்ளை தெய்வமாட்ட வந்துச்சு" என்று பாராட்டுவான்.

எப்போதாவதுதான் அக்கம் பக்கம் போவாள் என்பதால் அவளைக் குறித்து அவர்கள் கவலைப்படாமல் இருந்

தார்கள். அதுவே ஒருவேளை தவறாகிப் போனதோ என்னவோ?

மீனா கோவிலுக்கு அருகில் வந்து விட்டாள். கண்கள் தன்னையறியாமல் சுழன்று பார்த்தன.

தேறு நின்றாற்போலவே கால்கள் நின்று கொண்டிருந்தன. மனதில் ஆர்வம் பொங்கினாற் போல உணர்ந்தாள்.

பிள்ளையாருக்குத் தண்ணீர் ஊற்றிய போதும் கற்பூரம் ஏற்றிய போதும் கண்கள் யாரையோ தேடினாற் போலவே இருந்தன!

அவன் கண்ணில் படவேயில்லை!

லேசான ஏமாற்றம் மனதில் கவ்வ அம்மன் கோவில் பிரகாரத்தில் நடந்தாள்.

அப்போது அவன் அந்தக் கோடியில் நின்றாற் போலத் தோன்றியது. அந்த சமயத்தில் அவன் சட்டென்று ஒரு காரியம் செய்தான்.

தனது வீடியோ காமிராவில் அவள் அசைந்து நடந்து வருவதைப் பதிவு செய்தான். அருகில் வந்ததற்குப் பிறகு தான் அவளுக்குப் புரிந்தது. முகத்தில் பீதி கிளம்பியது!

"ஐயோ! என்னாத்துக்கு.. போட்டோ பிடிக்கறீங்க" என்று தடுமாறினாள்.

"ஒண்ணும் செய்ய மாட்டோம் குடுத்துடுவோம்" என்று சிரித்தான்.

கையோடு காண்பித்தான்.

நன்றாகவே இருந்தது. தன்னையறியாமல் புன்னகைத்தாள், "எதுக்கும் எடுத்து என்கிட்டே குடுத்துடுங்க" என்றாள்.

"குடுத்தர்றேன் ஊருக்குப் போகுமுன்னே குடுத்தர்றேன்" என்றான்.

"எப்ப போவீக!" என்றாள் கண்கள் படபடக்க.

"ஏலோ! இந்தக் கேள்வி உங்களுக்கே நல்லா இருக்கா?" என்றான்.

ஒரு நிமிடம் விழித்து விட்டுப் பிறகு புரிந்து கொண்டாள்.

"சரி! எப்ப வரைக்கும் இருப்பீக!" என்றாள்.

"இது நல்லா இருக்கு!" என்று சிரித்தான்.

"ஒரு வாரம் இருப்பேன்" என்றான். பிறகு குறும்பாகச் சிரித்தபடி.

"பிள்ளையாருக்குத் தண்ணி ஊத்திகிட்டே யாரையோ தேடுன மாதிரி இருந்துச்சு.." என்றான்.

அவள் தன் திருட்டுத் தனத்தை கண்டு பிடித்து விட்டானே என்று ஒரு கணம் மிரண்டாலும் சமாளித்தாள்.

"இதுல என்ன இருக்கு? ஊருக்குப் புதுசா யாரோ வந்திருக்காக அவுகள்ளாம் இருக்காகளா போயிட்டாங்களான்னு பார்க்கக் கூடாதா?" என்றாள்.

"அடிச்சா.. பாரு.. பாயிண்ட்ல" என்று சிரிக்க,

"நான் என்னா அடிச்சேன்?" என்றாள். மறுபடியும் சிரிப்பு.

"அது சரி..! நான் யாருன்னு கேட்க மாட்டீகளா?" என்றான் அவளைப் போலவே இழுத்து.

"சொல்லாமயா போயிருவீக?" என்றாள் அவள்.

தான் இப்படி வாயடிப்பது குறித்து அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது.

"நான் ரிதீஷ்... ஃபிரம் சென்னை! கேமரா மேன்... போட்டோ கிராபர்" என்றான்.

"ஓ."

"நீங்க..?"

"நான் என்னைத்தான்னு சொல்லிக்க? என் பேரு மீனா. எங்க ஊரு மதுரை. எங்க அக்காவுக்குக் குழந்தை பிறந்திருக்கு உதவிக்கு வந்திருக்கேன்."

"உம்.." என்றான்.

அதே நேரம்!

அப்பா அந்தப் பக்கம் வந்தார்.

"சாமி! இந்தப் பொண்ணு ரொம்ப ஷார்ப்பா இருக்காங்க" என்றான்.

அவருக்குப் புரியாமல் நிற்கவும் அவனே மறுபடியும் சொன்னான்.

"இல்லே! இந்தப் பொண்ணு ரொம்ப புத்திசாலியாக இருக்கு.." என்றான்.

"ஆமா..! நம்ம.. ஊருக்கு வந்திருக்கு. நம்ம.. தில்லையோட.. தங்கச்சி" என்றார்.

ரிதீஷ் மீனாவைப் பார்த்து "மேடம்! ஒரு நிமிஷம் வெயிட் பண்ணுங்க" என்றான்.

டைரக்டரிடம் போனான்.

"சார்!" என்று ஏதோ முணுமுணுத்தான். அவன் அங்கிருந்தே தன்னைப் பார்வையால் அளப்பது தெரிந்து கொஞ்சம் நெளிந்தாற்போல நின்றாள்.

ரிதீஷ் உடனே திரும்பி வந்தவன்!



மீனாவிடம் "மேடம்! ஒரு விஷயம் பேசணும்! உங்க மச்சான் எப்ப வருவாங்க" என்று கேட்டான்.

"எங்க மச்சான்கிட்டயா! என்ன விஷயம்?" என்றாள்.

உள்ளே நடுக்கம் பரவியது!

"இல்லல்லே! நல்ல விஷயம்தான்... பயப்படாதீங்க!" என்றான்.

மெதுவான குரலில் சொன்னாள். "மச்சான் [illegible] ஒரு மணிக்குத்தான் வரும்" என்றாள். ரிதீஷ் மறுபடியும் அப்பாவிடம் பேசினான். அப்பா முகவாய்க் கட்டையை தடவிக் கொண்டார்.

"சரி... எதுக்கும் அவ மச்சான்கிட்டே பேசிக்கோங்கோ" என்றார்.

'ஆமா! அதுதான் நல்லது' என்று ரிதீஷ் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

"சரிங்க மீனா.. மேடம்! நான் இன்னைக்கு உங்க வீட்டுக்கு வரேன்" எனவும் அவள் தலையை உருட்டி விட்டு நகர்ந்தாள்.

கொஞ்ச தூரம் போயிருப்பாள்!

ரிதீஷ் மறுபடியும் வேகமாக நடையை எட்டிப் போட்டு அவளை நெருங்கினான்.

"மேடம்! [illegible] உங்க வீட்ல சாப்பிடலாமா? சாப்பாடு போடுவீங்களா?" என்றான்.

அவள் மறுபடியும் மலங்க மலங்க விழித்தபடி தலையை ஆட்டினாள். விட்டால் போதும் என்பது போல ஓடினாள்.

அவன் பார்வை அவளைத் தொடர்ந்தது.

• • •

அரக்கப் பரக்க சமையல் செய்கிற தங்கையைப் பார்த்து அவனுக்கு ஆச்சரியம்!

"என்னடி... சமையல் தூள் பறக்குது" என்றான்.

பொதுவாகச் சொன்னாள். "மக்காவ் கோயிலுக்கு யாரோ வந்திருக்காக" அதுல ஒருத்தர் என்னோட போட்டோ பிடிச்சாரு."

"ஐயோ! நீ வேண்டாம்னு சொல்லி இருக்கலாம்லோ!" என்றான்.

"நான் நடக்கவே நடக்கவே எடுத்தாக. எனக்கும் காபிச்சாக. அப்புறம் அய்யருகிட்டே என்னவோ பேசினாக. அய்யரும் சரி அவுக வீட்டுக்குப் போய் பேசுங்கன்னு சொன்னாக. நான் புறப்படறப்ப எனக்கும் சமைச்சு வைங்கன்னாரு அதான்" என்றாள்.

அக்கா யோசனையில் ஆழ்ந்தாள்.

"நேத்திக்குக் கூட இந்த வழியா வந்தாரு காரை நிறுத்தித் தண்ணி வாங்கிக் குடிச்சுட்டுப் போனாரு" என்றாள்.

"அப்படியா?" என்ற அக்கா 'அய்யரு சொன்னா தப்பா எதுவும் இருக்காது..' என்று தனக்குத் தானே முணுமுணுத்துக் கொண்டாள்.

இரவு ஏழு மணிக்கு படபடப்பாகக் காத்துக் கொண்டிருந்தாள். அதற்குள் மச்சானிடம் அக்கா எல்லாம் விவரமாகச் சொல்லியிருந்தாள்.

சிதீஷ் வேட்டி சட்டையில் வந்திருந்தான்.

மிகவும் கண்ணியமாகப் பேசினான்.

"சார்! வேற எதுவும் இல்லே! நாங்க இங்கே கொங்கு நாட்டுப் பக்கம் இருக்கற கோயில்கள் பற்றி டாகுமெண்ட்



எடுக்கறோம். இந்த காலை இருக்கற நல்ல விஷயங்களை அதுல காட்டறோம். அதோடு கூட ஒவ்வொரு சிலைக்குப் பக்கத்துலயும் உங்க மீனா மாதிரி பொண்ணுகளை நிக்க வச்சு போட்டோ பிடிப்போம். வீடியோ எடுப்போம் அதுக்குத்தான் உங்க அனுமதி வேணும்" என்றான்.

"ஓ..! அவுக அம்மா அப்பா எதுவும் சொன்னாங்களா!"

"சொல்றதுக்கு ஒண்ணுமேயில்லை! அய்யரோட பொண்ணு கூட சம்மதிச்சிருக்கு" என்றான்.

"அப்ப.. சரி!" என்றான்...!

"சார்! அது மட்டுமில்லை! ஆக்சுவலா எங்களுக்கு மீனாவை மட்டும்தான் வச்சு போட்டோஸ் நிறைய எடுக்கணும். தனியா நிக்கப் பயப்படுவோன்னு கூட ரெண்டு மூணு பொண்ணுங்களை நிக்க வக்கிறோம். அவுகளுக்கெல்லாம் பத்தாயிரம் ரூபா கொடுக்கறதா பேசியிருக்கு. நான் டைரக்டர்கிட்டே பேசிட்டேன். ஒரு சின்ன வீடியோவும் எடுக்கறோம். அதுக்கு மீனாவுக்கு ஒரு லட்ச ரூபா குடுக்கறதா டைரக்டர் சொன்னாரு..."

மச்சான் சந்தேகமாகப் பார்த்தார்.

"நல்ல விதமான படம்தானே!"

"ஆமா! நீங்களே வேண்ணா கூட வந்து பாருங்க.. கூடவே இருங்க" என்றான்.

மச்சான் அதில் சமாதானம் ஆனான். அந்த வாரம் முழுதும் கூடவே இருந்தான்.

தாக் குறைவாக எதுவும் நடக்கவில்லை என்று தெரிந்து நிம்மதியானான்.

குழு ஊருக்குக் கிளம்பும்போது ஒரு லட்ச ரூபாய் கொடுத்தார்கள். அதுவும் தனியாக அவர்கள் வீட்டிலே வைத்து.

நல்ல மனம் படைத்த மச்சான் மாமனார், மாமியாருக்கு போன் செய்து அந்தப் பணத்தை மீனாவின் பேரிலேயே டெபாசிட் செய்தான்.

இது எதுவுமே மீனா முத்துவுக்குத் தெரிவிக்கவில்லை.

விதவிதமான உடைகளில் ஒவ்வொரு சிலைக்குப் பக்கத்திலும் நிற்க வைத்து எடுத்த ஸ்டில்களையும் வீடியோ நாடாக்களையும் பார்த்தபோது,

"அடடே! நாமா.. இவ்வளவு அழகா?" என்று தோன்ற ஆரம்பித்தது.

முத்துவிடம் சொல்லாமல் விட்டதற்கு அவளே ஒரு காரணமும் கற்பித்துக் கொண்டாள். ஒரு வேளை முத்து வேண்டாமென்று சொல்லி விட்டால் அதை மீறிக் கொண்டு செய்ய முடியாது. ஒரு நல்ல வாய்ப்பு பறி போய் விடும் என்று எண்ணிக் கொண்டாள்.

இப்போதெல்லாம் சித்தீஷிடம் நன்றாக வாயடிக்க ஆரம்பித்திருந்தாள்.

கிராமத்துக்கு சற்றுத் தள்ளி ஒரு பெரிய பங்களாவை வாடகைக்கு எடுத்திருந்தார்கள் அந்தக் குழுவினர். ஒரு நாள் அவர்கள் எல்லாரையும் அந்த பங்களாவுக்கு அழைத்துப் போய்க் காண்பித்தார்கள்.

மீனா மற்றும் குழுவினர் ஆச்சரியத்தால் வாயைப் பிளந்தபடி பார்த்து விட்டு வந்தனர்.



"மீனா..! இன்னும் ரெண்டு நாளை வேலையெல்லாம் முடிஞ்சுடும். ஊருக்குப் போகவே பிடிக்கலை. உங்க ஊர் ரொம்ப நல்லா இருக்கு" என்று புலம்பித் தீர்த்தான் சித்தீஷ்.

அன்றைக்கு மறுநாள்

மீனா கோயிலுக்குப் போனபோது சித்தீஷைக் காண வில்லை. படப்பிடிப்புக் குழுவிலும் பாதி பேரைக் காண வில்லை. விசாரித்தாள். மற்றவர்கள் எல்லாரும் ஊருக்குப் போய் விட்டார்களாம். சித்தீஷ் மட்டும் உடல் நலமில்லாமல் அறையில் இருக்கிறானாம்.

போனாள்!

தனியாகப் போகிறோமே என்ற எண்ணமே இல்லாமல் உடம்பு சரியில்லையாமே என்ற பதைப்பில் போனாள்.

வெற்று மார்போடு படுத்துக் கிடந்தான். பதை பதைத்துக் கொண்டு எழுந்தான். அவளும் திடுக்கிட்டுப் போய் வெளியே வந்தாள்.

அவசர அவசரமாக பனியனை எடுத்து மாட்டிக் கொண்டு வரவேற்றான்.

"இல்லே! உடம்பு சரியில்லேன்னு சொன்னாங்க..!" என்று மென்று விழுங்கினாள்.

"ஆமா! கொஞ்சம் தலைவலி. மனசு சரியில்லேன்னு வச்சுக்கயேன்" என்றான்.

"ஏன்.. என்ன ஆச்சு?" என்றாள்.

"நாளையில இருந்து உன்னை.. உங்களையெல்லாம் பார்க்க முடியாதே!" என்றான்.

"ஓ! அதுக்கென்ன.. எப்ப வேணுமானா வாங்க!" என்றாள்.

"வர்லாம். அப்புறம் ஊருக்காரங்க உன்னையல்ல தப்பாப் பேசுவாக.."

"தப்பாய் பேச என்ன இருக்கு? நீங்கதான் எங்க ஃபாமிலி பிரண்டாச்சே!" என்றாள்.

"அதானே! நீ செல்போன் வச்சிருக்கியாமே! நம்பர் குடுக்கறியா?" என்றான்.

கொடுத்தாள்!

"சரி.. நான் அடிக்கடி பேசறேன்" என்றான்.

"பேசுங்க!" என்றாள்.

அந்தக் கணத்தில் தான் எவ்வளவு பெரிய தவறைச் செய்கிறோம் என்று அவளுக்குத் தெரியவில்லை.

## 18

கோயிலைச் சுற்று முற்றும் பார்த்தாள்!

இப்போது வெறுமையாகத் தெரிந்தது!

படப்பிடிப்புக் குழுவினர் மூட்டையைக் கட்டிக் கொண்டு கிளம்பி விட்டார்கள். அதனால் இப்போது கோயில் ஏனோ வெறிச்சோடிக் கிடக்கிறாற் போல இருந்தது.

'ரித்தீஷ் பாவம்! ரொம்ப நல்லவர்' என்று எண்ணிக் கொண்டாள் மீரா.

ஏதோ சில நாட்கள் கனவுலகில் இருந்தாற் போல இருந்து விட்டு இப்போதுதான் நினைவுக்கு வந்தாற் போல உணர்ந்தாள்.



இதற்கிடையில் முத்து இரண்டு மூன்று முறை வந்து விட்டுப் போனான். அப்போதுதான் நடந்த நிகழ்ச்சிகளைச் சொன்னாள்.

முத்துவுக்குக் கவலையாகிப் போனது.

"நீ என்கிட்டக் கேட்டிருக்கலாம் புள்ளே!" என்றான்.

"ஏன்..?" என்றாள் அப்பாவியாக.

"பாரு புள்ளே! தெரியாத ஆளுக போட்டோ எடுக்கறேன்னு கேட்டாலே ஒத்துக்கக் கூடாது. இந்த போட்டோவையெல்லாம் அவன் எத்தனை காபி எடுக்கறானோ... எங்கெங்கே யூஸ் பண்றானோ" என்றான் கவலையுடன்.

"அந்த ரித்தீஷ் பாத்தா... அப்படியெல்லாம் தெரியலே! நல்லவங்களா இருக்கக் கொண்டு தானே வீட்டுக்கு வந்து கேட்டாக..." என்றாள்.

"என்னவோ... முடிஞ்சு போச்சு.. இனிமே கேர்ஃபுல்லா இரு..." என்றான்.

'ஏன் முத்து இப்படியெல்லாம் யோசிக்கிறான் என்று அவளுக்குப் புரியவில்லை. அதிலும் நியாயம் இருக்கிறதோ என்று தோன்றியது. ஆனால் ரித்தீஷும் நல்லவராகத் தானே தெரிகிறார்' என்று என்னென்னவோ நினைத்துக் கொண்டாள்.

பேசவில்லை!

"சரிங்க! இனிமே கேர்ஃபுல்லா இருந்துக்கறேன்" என்று மட்டும் சொன்னாள்.

முத்து அதைக் கேட்டு நிம்மதியானான்.

அந்த நிம்மதி தற்காலிகமானதுதான் என்று அவளுக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை.

* * *

பாத்திரங்களையெல்லாம் ஒழுங்கு படுத்திவிட்டு அக்கா உறங்கி விட்டாளா என்று பார்த்து விட்டு தனது அறைக்குப் போனாள்.

ஓட்டு வீடாக இருந்தாலும் அவளுக்கென்று ஒரு சிறிய அறை கொடுத்திருந்தார்கள்.

கண்களை உறக்கம் தழுவுகிற நேரத்தில் செல்போன் சிணுங்கியது.

எடுத்தாள்!

"ஹலோ! நான் ரித்தீஷ் பேசறேன்" என்றது குரல்.

ரித்தீஷ் பேசுவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அதுவும் இந்த நேரத்தில்!

"சொல்லுங்க.. சார்!" என்றாள்.

"மீனா.. எப்படியிருக்கேம்மா?" என்றான் ஆர்வமாக.

"நல்லா இருக்கேன்.. சார்!" என்றாள்.

"உங்க ஊரை மறக்கவே முடியலை" என்றான் ரித்தீஷ்.

"அப்படீங்களா.. சார்? அப்ப மறுபடி வாங்க" என்றாள்.

"வரணும்!"

"மறுபடியும் படம் எடுக்கப் போறீங்களா சார்?" என்றாள்.

"இல்லே! இந்தத் தரம் நான் மட்டும்தான் வரலாம்னு இருக்கேன்" என்றான்.

"சரிங்க சார்" என்றாள்.

"வந்தா என்னை பாப்பியா?" என்றான்.

"தனியாவெல்லாம் பாக்க விட மாட்டாங்களே.. சார்!" என்றாள்.

"சரி..! ஒண்ணு செய்! கோவிலுக்கு வந்தயில்லே. அதே மாதிரி சாயங்காலமும் கோவிலுக்குப் போறேன்னுட்டு வா..." என்றான்.

"சரிங்க.. சார்!" என்றாள்.

திங்கள், வெள்ளி, சனி ஆகிய நாட்களைத் தவிர மற்ற நாட்களில் கோவிலில் அதிகமான கூட்டம் இருக்காது.

ரித்தீஷ் சார் வந்தால் அந்த நேரத்தில்தான் போய்ப் பார்க்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

யோசித்துக் கொண்டிருக்கும்போதே அந்தப் பக்கம் ரித்தீஷ் மறுபடியும் கேட்டான்.

"என்ன.. யோசனை.. மீனா!" என்று.

"இல்லே! அது எத்தனை தூரம் சரி வரும்னு தெரியலே" என்றாள்.

"அதெல்லாம்.. சரி.. வரும்! என்னமோ உன்னை பாத்துப் பேசணும் போல இருக்கு!" என்றான்.

மீனாவின் மனம் நெகிழ்ந்து போனது.

"சரிங்க.. சார்!" என்றாள்.

"சரி.. அப்ப நாளைக்கே வரேன்" என்றான்.

"சரிங்க சார்!" என்றாள்.

"அப்புறம்.. அந்த பங்களா.. இல்லே! பக்கத்துல ஒரு கெஸ்ட் ஹவுஸ் இருக்கு.. அங்கே!" என்றான்.

"சரிங்க.. சார்!" என்றாள்.

வெள்ளந்தியாக எல்லாவற்றுக்கும் அவள் சரியென்று சொல்வது அவனுக்கே உறுத்தியது போலும். மேலும் பேச்சை வளர்த்தாமல் துண்டித்துக் கொண்டான்.

அடுத்த நாள்!

மீனா வழக்கமாகக் கோவிலுக்குப் போவது போல் புறப்பட்டுப் போனாள்.

செல்போனில் விவரமாக எங்கேயென்று சொல்லியிருக்கிறான்.

கோவிலிலிருந்து ஊருக்குத் திரும்புகிற வழியில் ஒரு இணைப்பாதை போகுது. சட்டென்று உள்ளே நுழைந்து விட்டால் போதும் முன்னாலே கரும்புத் தோட்டம். சற்று நடந்தால் ஒரு தென்னந்தோப்பு. அதைத் தாண்டி ஒரு சின்ன ஓட்டு வீடு. அந்த நிலத்துக்காரர் சென்னையில் இருந்தார். அதை விசாரித்து அவரைத் தேடி நட்புக் கொண்டு அங்கே தங்கிச் செல்வதற்கான அனுமதியை சிதீஷ் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான் என்று அவளுக்குத் தெரியவில்லை.

முன் கதவு வழியாக இல்லாமல் பின் கதவைத் திறந்து அழைத்துக் கொண்டான்.

"சார்!" என்றாள் உற்சாகமாக.

"வா.. வா..!"

"என்ன சார்.. நீங்க மட்டும் எங்க ஊரை மறக்க மாட்டேங்கறீங்க?" என்றாள்.

"அது என்னவோ தெரியலை. என்னவோ உன் ஞாபகமாகவே இருந்துச்சு.." என்றான்.

அவள் விழித்தாள். பிறகு வெட்கம் நிறைந்த குரலில் சொன்னாள்.

"சார் நான் எங்க வீட்டுக்குப் பக்கத்திலே முத்துன்னு ஒருத்தர் இருக்காரு..! அவரைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்" என்றாள்.



"அட்றா.. சக்கை! மீனாவுக்குக் காதல் எல்லாம் வேற இருக்கா" என்றான்.

எச்சரிக்கையானான்.

"அப்புறம் அந்த முத்துகிட்டே இந்த போட்டோ சமாச்சாரம் எல்லாம் சொல்லியாச்சும்" என்றான் லேசாக விசாரிப்பது போல.

"ஆமா! ஆனா ஏனோ முத்துவுக்கு அது பிடிக்கலே" என்றாள் சோகமாக.

சிதீஷ் இன்னும் எச்சரிக்கையானான்.

'அப்படீன்னா.. இன்னும் தள்ளிப் போடாதடா.. மடையா!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

தனது பெட்டியைத் திறந்தான்.

"மீனா.. உனக்காக என்னென்லாம் வாங்கிட்டு வந்திருக்கேன்.. பாரு.." என்றான்.

மீனா கண்கள் படபடக்க எட்டிப் பார்த்தாள். இரண்டு மூன்று கடிதாரங்கள், வளையல்கள் மேக்கப் செட் என்று நிறைய வைத்திருந்தான்.

"இதெல்லாம்.. எனக்கேவா?" என்றாள் வியப்பாக.

"ஆமா..!" என்றான்.

"எதுக்கு?" என்றாள்.

"எதுக்கு? எங்களோட போட்டோ செஷனை வெற்றிகரமா நடத்திக் குடுத்தியே.. அதுக்கு..?" என்றான்.

"ஓ..!" என்றாள் மலைத்துப் போய்!

"சரி.. உட்காரு" என்றான்.

அமர்ந்தாள்.

"என்.. மீனா? உன்னோட முத்து எப்படி? அழகா இருப்பாரா.." என்றான்.

"ம்... அழகா... லட்சணமா இருப்பாரு... ஆனா.. என்னை விடக் கறுப்பு.." என்றாள்.

"ம்.. ஏன் கறுப்பு மாப்பிள்ளையைத்தான் பிடிக்குமா?" என்றான்.

மெல்ல அருகில் அமர்ந்தாள்.

"நான் கறுப்பாத்தானே இருக்கேன்? எனக்கு கறுப்பு மாப்பிள்ளையே போதும்" என்றாள்.

"மீனா! நீ எவ்வளவு அழகுன்னு உனக்குத் தெரியலை. உன் கண்ணெல்லாம் பேசற மாதிரி கண்கள். நீ அப்படியே அசைஞ்சு நடக்கும்போது உன்னோட பின்னல் அசையும் போது பாக்கறதுக்கு பொண்ணுன்னா இதுதான் பொண்ணுன்னு தோணும். நா வேண்ணா நல்ல மாப்பிள்ளையாப் பார்க்கட்டுமா?" என்றான்.

"ஐயோ! வேண்டாம்! முத்து ரொம்ப நல்லவரு.." என்றாள்.

"ம்.. ஓகே!" என்ன தொழில் செய்யறாரு?"

"கடை! மளிகைக் கடை வச்சிருக்காரு."

"பெரிய கடையா?"

"இல்லே! சின்னக் கடைதான்."

"ஓஹோ.. கடை வச்சிருக்கிற அண்ணாச்சியாக்கும்."

"ஆமா..! ஆனா.. ரொம்ப நல்லவரு."

"ஐயோ.. மீனா..! நீ சரியான மக்குப் புள்ளை.. பாரு.. இந்த போட்டோவெல்லாம் பாரு! மகாராணியாட்டமா ஜொலிக்கறே! ஆனா.. நீ என்னடான்னா.. ஏதோ மளிகைக் கடைக்காரப் பயலைக் கட்டிக்கறேங்கறே."



"என்னோட முத்துவைப் பத்தி அப்படியெல்லாம் பேசாதீங்க."

அவன் சிரித்தான்!

"சரி.. பேசலே! அது சரி! உனக்கு நான் இத்தனை தர்றேனே.. நீ எனக்கு என்ன தரப் போறே..!"

"நானே ஏழைப்பட்டவ! நான் என்னத்தைப் பெருசாத் தரப் போறேன்" என்றாள்.

"அதானே! உன்னோட நல்ல மனசுக்கு நீ நல்லா என்னை வாழ்த்தினாப் போதும்" என்றான்.

"வாழ்த்தறதென்ன.. சார்! நான் தினமும் சாமிகிட்டே வேண்டிக்கறேன். சாமி.. சாமி..! ரித்தீஷ் சாரை நல்லா வச்சுக்கன்னு..." என்றாள்.

"தேங்க்ஸ்..." அப்புறம் உன் ஃபேமிலி பத்திச் சொல்லு. பிரண்ட்ஸ் பத்திச் சொல்லு..." என்றான்.

சொன்னாள்.

தனது அக்காவைப் பற்றி, பெற்றோர்கள் பற்றி முத்துவைப் பற்றி, அவள் அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது பற்றி எல்லாம் விளக்கமாகச் சொன்னாள்.

பத்துப் பதினைந்து நிமிடங்கள் ஓடியது!

அவள் முகத்தை ஆழ்ந்து பார்த்துக் கொண்டு ஆழ்ந்து கேட்டான். இரண்டு கைகளையும் இரண்டு கன்னங்களிலும் பதித்துக் கொண்டு ஆர்வமாகக் கேட்கிறாற் போல அமர்ந்திருந்தான்.

அவன் ஆர்வம் பார்த்த மீனா இன்னும் உண்மையாக விவரம் சொன்னாள்.

"காபி சாப்பிடறியா.." என்றான்.

"காபியா? இங்க போடறதுக்கு வசதியிருக்கா?" என்றாள்.

"பிளாஸ்க்ல இருக்கு" என்றான்.

அவள் முன்னாலேயே இரண்டு கோப்பைகளில் ஊற்றினான்.

ஒரு கப்பில் இருக்கிற காபியில் கொஞ்சத்தை ஒரு ஸ்பூனில் எடுத்து வாயில் ஊற்றிப் பார்த்தாள்.

"சர்க்கரை போதலையே!" என்றாள்.

"மீனா! அந்தப் பொட்டலத்திலே பவுடர் சுகர் இருக்கு பாரு.. எடு..!" என்றான்.

அவள் எடுத்துக் கொடுத்தாள்.

இரண்டு கோப்பைகளிலும் போடுவதைப் போல பாவனை செய்து விட்டு ஒன்றில் மட்டுமே கலந்தான்.

மீனா அப்பாவியாய் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். காபிக் கோப்பைகளைக் கொடுத்தான்.

மீனா வாங்கிக் குடிக்க ஆரம்பித்தாள்.

தொடர்ந்து பேசிக் கொண்டிருந்ததாலேயோ என்னவோ தொண்டைக்குள் இதமாக இறங்கியது.

குடித்து முடித்தாள்!

சற்று நேரத்தில் ஏதோ வித்தியாசம் தெரிந்தது. வேறு ஏதோ உலகத்தில் நுழைந்தாற் போல உணர்ந்தாள்.

"சார்..! என்னவோ செய்யுது!" என்று குழறினாள்.

"ஒண்ணும் இல்லே! சரியாய் போயிடும்" என்று அருகில் அமர்ந்து தடவிக் கொடுத்தான்.

பாதி விழிப்பும், பாதி போதையுமாய்...! அவள் ஏதோ சரியில்லை என்று உணர்ந்தாள். ஆனால் அவளால் எதுவும் செய்ய முடியவில்லை.



"சரி.. கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுப்பியாம் என்ன?" என்று இதிலெல்லாம் தேர்ந்தவன் போல எந்த விதப் பதட்டம் இல்லாமல் அவளை இரு கைகளாலும் எடுத்துக் கொண்டு போய் படுக்கையில் கிடத்தினான்.

"சார்! என்னவோ செய்யறது" என்று உளற அவள் முகம் நோக்கிக் குனிந்தான். கிளுகிளுவென்று சிரித்தான்!

அவன் அலட்டிக் கொள்ளாமல் சொன்னான்.

"நான் சிதீஷ் இல்லே! உன்னோட முத்து.. தெரியுதா?" என்றான்.

"முத்துவா.. அதானே பாத்தேன்" என்று குழறிக் கொண்டே ஆடை விலக அவள் படுத்துக் கிடப்பதை இரை நமக்குத்தான் என்று தெரிந்து விட்ட பிறகு அலட்டிக் கொள்ளாமல் பார்க்கிற மிருகம் போல பார்த்துக் கொண்டிருந்தான்.

உள்ளே... உள்ளே என்று அவள் போதையில் ஆழ, அவன் எழுந்து ஒரு பக்கம் செல்போன் காமிராவும், மற்றொரு பக்கம் ஹாண்டி கேமராவையும் தயார் செய்தான்.

மயக்கத்தில் இருந்த மீனாவிடம், "நான்தான் உன்னோட முத்துவாம். நீ என்னோட மீனாவாம் நாம இப்போ சொர்க்கம் போகப் போறோமாம்" என்று உருவேற்றிக் கொண்டே தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டான்.

ஏதோ தப்பு நிகழ்கிறது என்று ஆழ்மனம் சொல்ல, முத்துதானே என்று வெளிமனம் சொல்ல மனக் குழப்பம் நிறைந்த நிலையில், தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாலும் விடுவித்துக் கொள்ள உடல் ஒத்துழைக்க

காமல் குழப்பமான மனோ நிலையில் ஒரு கட்டத்திற்குப் பிறகு மயக்கத்தில் ஆழ்ந்தாள்.

தன் விருப்பம் என்று ஒன்று இல்லாமலேயே உடல் விழித்துக் கொள்ள முழுமையான ஒத்துழைப்பைக் கொடுத்தாள்.

* * *

அரை மணி நேரம் போயிருக்கும்!

விழித்தபோது ஆடையெல்லாம் திருத்தமாக இருந்தாலும் அவளுக்கு வித்தியாசம் புரிந்தது.

முழுமையாகப் புரிந்தது!

இழக்கக் கூடாத ஒன்றை இழந்து விட்டதை உணர்ந்து எழுந்து அமர்ந்தவள்!

"ரிதீஷ் சார் இப்படிப் பண்ணிட்டீங்களே?" என்று அழுதாள்.

அவன் அலட்டிக் கொள்ளாமல் அருகில் அமர்ந்தான்.

"எதுவும் நடக்கலே! புரியுதா? என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா.. சொல்லு.. பண்ணிக்கறேன் இல்லையா? அப்படி ஒண்ணு நடந்ததையே மறந்துட்டு உன்னோட முத்துவைக் கல்யாணம் பண்ணிக்க... புரியுதா?" என்றான்.

அவள் வெறித்துப் பார்த்தாள்!

இப்போது சுத்தமாகத் தெளிந்தாற் போல உணர்ந்தாள்.

திகைப்பும், அதிர்ச்சியுமாக இருந்தாள்.

"புறப்படு... இதுக்கு மேல இங்க இருக்காதே.. வா.. நானே ரோடு வரைக்கும் வந்து விடறேன்..." என்றான்.



அவளுக்குப் புரிந்தது.

தனது கோபமும், அழுகையும் அவனை எதும் செய்யாது! யோசித்துத்தான் முடிவெடுக்க வேண்டும் என்று.

சொல்லவொண்ணாத மனத்திகிலுடன் வீடு போய்ச் சேர்ந்தாள்.

# 19

எண்ணி எண்ணித் தலையே வெடித்து விடும் போல இருந்தது.

அக்காவிடம் சொல்லலாமா? வேண்டாம். அக்கா அடித்தே கொன்று விடுவாள் அல்லது தன்னைத் தானே மாய்த்துக் கொள்வாள்.

மச்சானிடம் வேண்டாம்.. நல்ல மனக்கார மச்சான்.

முத்துவிடம் சொல்லலாமா? கொலை வெறி கொண்டு கிளம்பி விடுவான்.

இனிமேல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மறுபடி அந்த ஆள் அழைத்தால் ஏதாவது சாக்குப் போக்கு சொல்லித் தப்பித்து விட வேண்டும்.

'இனிமேல் எப்படி முத்துவைக் கல்யாணம் செய்து கொள்ள முடியும்? பார்க்கலாம். ஏதாவது ஒரு வகையில் நாடகமாடி முத்துவின் வாழ்க்கையில் இருந்து விலகி விட வேண்டும். பாவம் அதுவாவது நல்ல வாழ்க்கை

வாழட்டும்' என்று விதவிதமாக சமாதானம் சொல்லிக் கொண்டாள்.

காபியிலேதான் எதையோ கலந்து கொடுத்து விட்டான்.

எப்படித்தான் உயிரோடு இப்படி நடமாடிக் கொண்டிருக்கிறோமோ என்று தன்னையே நொந்து கொண்டிருந்தாள்.

அன்றிரவு!

கோவிலுக்குக் கொண்டு போகிற அந்தக் கூடையில் இருக்கிற பொருட்களை எடுத்து வைக்கையில் பார்த்தாள். ஒரு செல்போன் இருந்தது.

காமிராவுடன் கூடிய செல்போன்! நீரஜாவிடமும், நம்சவர்த்தினி அக்காவிடமும் பார்த்திருக்கிறாள். போட்டோக்கள் கூடத் தெரியும்.

'அந்தப் பாழாய்ப் போனவன் தான் போட்டிருக்க வேண்டும்' என்று பொருமிக் கொண்டாள். முதல் வேலையாக வைப்ரெட்டர் மோடில் வைத்தாள். இந்த சனியனை வேறு கொடுத்திருக்கிறான். இன்னும் என்னென்ன நடக்குமோ என்று யோசித்துக் கொண்டிருக்கையிலேயே அழைப்பு வந்தது.

"மீனா! தாங்க்ஸ்! ரொம்ப என்ஜாய் பண்ணினேன்" என்று அவன் கிசுகிசுக்க,

'கட்டையில போறவனே' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டாள். அதை உணர்ந்து கொண்டாற் போல் அவன் சிரித்தான்.

"திட்றயா.. திட்டு.. திட்டு. ஆனா, மறக்காம செல்போனை உன் பக்கத்திலேயே வச்சுக்க. ரெண்டு நாள்



கழிச்சு ராத்திரி பத்து மணிக்குக் கூப்பிடுவேன். கண்டிப்பா.. எடுக்கணும்" என்றான்.

அவள் பதில் பேசாமல் ஆப் செய்தாள். மனதிற்குள் பயமாகவே இருந்தது.

அடுத்த நாள்!

முத்து பேசினான். வழக்கம்போல எதையும் காட்டாமல் பேசினாள்.

"ஏம் புள்ளே! என்னமோ டல்லாப் பேசறே" என்றான்.

அவள் கண்களில் மௌனக் கண்ணீர் தாரதாரவென்று வடிந்தது. விசும்பலை அடக்கியபடி சொன்னாள்.

"கொஞ்சம் உடம்பு சரியில்லே! கொஞ்சம் வேலையும் ஜாஸ்தி..!" என்றாள்.

"ஓ.. சரி சரி..! நல்லா ரெஸ்ட் எடு! இன்னும் ஒரே மாசந்தான்.. அம்மா சரியாயிடுவாக.." என்றான்.. பிறகு திடீரென்று நினைத்துக் கொண்டவன் போல "அடுத்த வாரம் வாரேன் புள்ளே!" என்றான்.

"ம்!" என்றாள்.

இப்போது அரைகுறையாக நினைவுக்கு வந்தது.

"நான்தான் உன்னோட முத்துன்னு நினைச்சுக்கோ..." என்று அவன் சொன்னது.

"கோ"வென்று கதறி அழுதாள். சத்தம் வராமல்தான். முத்து அப்போதே சொன்னானே கண்டவனும் போட்டோ எடுக்க அனுமதிக்காதேன்னு.. நாமதான் புரிஞ்சுக்கலையோ."

வெதும்பி வெதும்பி என்ன ஆகப் போகிறது? என்று விரக்தியானாள். குடும்ப மானத்திற்காகத்தான் உயிர் வாழ வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

அந்த இளம் பெண் தன் வாழ்வில் ஏற்பட்ட புயலைத் தாங்க முடியாமல் தள்ளாடியது என்பதுதான் உண்மை.

அவளது வேதனைகள் அதோடு முடிந்து விட வில்லை.

நாலைந்து நாட்கள் போயிருக்கும்!

இரவு பத்து மணிக்கு செல்போன் அழைப்பு வந்தது.

எடுத்துப் பார்த்தவள் அதிர்ந்து போனாள்! அதில் அவளது படம்!

யாரும் பார்க்கக் கூடாத விதத்தில்... கூட ரிதீஷ்! ஆனால் கெட்டிக்காரத்தனமாக அவனது முகம் தெரி யாமல்!

மீனா மிகவும் பயந்து போனாள்!

அவள் அதை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கையி லேயே அவன் குரல் ஒலித்தது.

''பாத்தியில்ல...! இந்த மாதிரி நிறையப் படம் வச்சிருக்கேன். இப்ப வரைக்கும்..! நான் பாத்து ரசிக் கறதுக்காக! நீ ஒத்துகிட்டா.. அதோட நிறுத்திடுவேன்! இல்லைன்னா.. யார் யாருக்கோ அனுப்புவேன்!'' என்றான் மிரட்டலாக.

''ஏன்.. ஏன்.. இப்படி சித்திரவதை பண்றீங்க?'' என்று தேம்பினாள்.

''உன்னை சித்திரவதை பண்றது என்னோட நோக்கமே யில்லை. உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. ஜஸ்ட் ஒரு மூனு மாசம் வாரத்துக்கு ஒரு தடவை வந்துட்டுப் போயிரு. அப்புறம் நானே உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன்.''



''ப்ளீஸ்! என்னை விட்டுருங்க!'' என்றாள்.

''இத பாரும்மா! உன்னை விடத்தான் போறேன். நான் கேக்கறதை மட்டும் நிறைவேத்திக் குடு'' என்றான்.

அவள் பதில் சொல்லவில்லை. கண்களில் கண்ணீர் வழிந்தோடியது.

''என்ன.. இந்த சனிக்கிழமை வந்தர்றியா?'' என்றான்.

அவள் பதில் சொல்லவில்லை. ஆனால் வருவாள் என்று அவனுக்குத் தெரிந்திருந்தது. ஒருவிதமான சிரிப் புடன் ஆஃப் செய்தான்.

* * *

அலட்டிக் கொள்ளாமல் பேப்பர் படித்துக் கொண்டு அமர்ந்திருந்த அவன் பின்புறம் தோன்றவும் பார்த்தவுட னேயே அவளுக்குள் கொலை வெறி தோன்றியது. ஆனால் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''குட் வந்துட்டியா?'' என்று சிரித்தான்.

அவள் அமைதியாக அமர்ந்திருந்தாள்.

பரபரப்பாக அவன் தயாரானபோது அவள் சொன்னாள்.

''போன தடவை காபியில என்னமோ போட்டுக் குடுத்தீங்களே.. அந்த இழவு சனியனைப் போட்டுக் குடுங்க'' என்றாள்.

''வெரி.. குட்!'' என்றான்.

தீவிழி விழித்தபடி சொன்னாள்.

''மானத்துக்குப் பயந்துதான் வந்தேன். ஆனா இனிமே போட்டோ கீட்டோ எடுத்தீங்கன்னா.. ஊர்ப் பெரியவங்க கிட்டே சொல்லிடுவேன்'' என்றாள்.

அதில் கொஞ்சம் பயம் வந்தது போலும்.

"நீயே செக் பண்ணிக்க?" என்றான்.

செக் செய்தான்.

கஷாயம் குடிக்கிறவள் போல் அந்த காபியை குடித்தாள்.

'இந்த அளவுக்குப் போயாச்சு.. இனி இந்த ஆளையே கல்யாணம் செய்துக்க வேண்டியதுதான்' என்று முடிவு செய்தாள்.

அந்த முடிவிலும் இடி விழுந்தது.

* * *

"ஏன்.. மீனா.. என்ன.. என்கிட்டே பேசவே மாட்டேங்கறே" என்று கேட்டான் முத்து கெஞ்சலாக.

"இல்லே! அக்கா என்னமோ கவனிச்சுப் பாக்கற மாதிரித் தெரியுது" என்றாள் மீனா.

"ஓ.. அப்ப சரி" என்றான். "நீ ஏதோ வாங்கற மாதிரிக் கடைக்கு வாயேன்" என்றான்.

முத்துவைப் பார்த்தால் பாவமாக இருந்தது மீனாவுக்கு. இவன்தான் எவ்வளவு நல்லவன்! கடைக்குப் போனாள்.

"முத்து! உங்கம்மா உடம்பு தேறட்டும். கல்யாணத்தை மெதுவா வச்சுக்கிடலாம்" என்றாள்.

"அதுவும் சரிதான்" என்றான் முத்து.

பொதுப்படையாக பேசி விட்டு ஏதோ ஒரு பொருளை வாங்கிக் கொண்டு வந்தாள். அக்காவின் மகள் இப்போது தவழ ஆரம்பித்திருந்தாள். அவளோடு ஓடுவதில் நேரம் போவது தெரியவில்லை.



மறுபடியும்!

பத்து நாட்களில் அழைப்பு! ஆனால் அந்த முறை அவள் அழுத அழுகையைப் பார்த்தோ என்னவோ ஒரு மாதம் வரை எதுவும் தொந்தரவு செய்யவில்லை. ஆனால் அடுத்த மாதத்தில் இரண்டு மூன்று படங்களாக அனுப்பி வைக்கவும் பயந்து போனாள்.

மூன்று மாதங்கள் ஓடிவிட்டது.

அப்போதுதான்!

மீனாவுக்கு உதித்தது இந்த மாதம் தள்ளிப்போய் விட்டது.

பயமாகி விட்டது! ஆனால் இந்த மூன்று மாதங்களில் வீட்டில் யாருக்கும் எதையும் காட்டிக் கொள்ளாமல் நடமாடிப் பழகிக் கொண்டிருந்தாள்.

இந்த முறை அழைப்பு வந்தபோது அவள் விஷயத்தைச் சொன்னாள்.

அந்தப்புறம் மௌனம் நிலவியது..

"நாளைக்கு வர்றீங்களா? உங்ககிட்டே பேசணும்" என்றாள்.

"வரேன்" என்றான். வந்தான்.

"ப்ளீஸ்! ரித்தீஷ்.. கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க" என்று கதறினாள்.

அவன் விகாரமாகச் சிரித்தான். பிறகு சொன்னான்.

"ஹேய்! என்னை என்ன மடையன்னு நினைச்சயா? அந்த போதையில கூட முத்து முத்துன்னு அவன் பேரைச் சொல்றே! உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறதுக்கு எனக்கென்ன பைத்தியமா?" என்றான்.

அவள் அவனை வெறித்துப் பார்த்தாள்.

"என்ன பாக்கறே..!"

"அப்புறம்.. எதுக்கு.. தொட்டீங்க? உங்களுக்குக் கேவலமாயில்லை.." என்று கேட்டாள் காட்டமாக.

"ஹேய்! நீ யாரை நினைச்சா... என்ன..? எனக்கு வேண்டியது நடந்தாச் சரி" என்றான்.

அந்தக் கணத்தில் அவன் மேல் எல்லையில்லாத ஆத்திரம் தோன்றியது.

தளர்ந்து போய் அமர்ந்தாள்!

"இத பார்றி! இதோட.. விஷயத்தை முடிச்சுக்குவோம். இந்தா இதுல.. ஐம்பதாயிரம் பணம் இருக்கு.. உனக்குத் தான் யாராரோ சென்னையில பிரண்ட்ஸ் இருக்காங்களே அவங்ககிட்டே கேட்டின்னா நல்ல டாக்டரா சொல்வாங்க. போய்க் கலைச்சுட்டு.. எனக்கு போன் பண்ணு.. இன்னும் ஒரு ஐம்பதாயிரம் தர்றேன்" என்றான்.

மீனா உள்ளுக்குள் இப்போது தெளிவாகி இருந்தாள், அழுத்தமாக அமர்ந்திருந்தாள்.

'பரவாயில்லை! ஆரம்ப அதிர்ச்சி மாறி இப்போது தேறி விட்டாள் போலும்' என்று எண்ணிக் கொண்டான்.

"என்ன.. நான் சொல்றது?" என்றான் மறுபடியும் விகாரமாகச் சிரித்தபடி.

"இத பாரு! இதுநாள் வரைக்கும் நான் கூப்பிட்டவுடன் நீ வந்திருக்கே இன்னைக்குத்தான் நீ கூப்பிட்டு நான் வந்திருக்கேன். கொஞ்ச நேரம் இரேன்.." என்றாள்.

"இல்லே! இப்ப வேண்டாம்..! நான் எதுட வரேன்.." என்றான்.



"பரவால்லே.. தேறிட்டியே!" என்று சிரித்தான்.

"...பாங்கில் நிறைய காபி வாங்கி வைங்க" என்றாள்.

அவன் கடகடவென்று சிரித்தான்.

கவனக்குறைவாக அந்தப் பணத்தைத் தன் கூடையில் அவள் பத்திரப் படுத்துவதை அவன் புருவம் உயரப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"இப்பப் பழகிப் போச்சு!" என்றாள்.

அவன் விலகி வழி விட உறுதியான நடையில் நடந்து போனாள்.

* * *

"என்ன.. முத்து மச்சான்! வியாபாரமா?" என்று நிற்கிற மீனாவை ஆச்சரியமாய் பார்த்தான் முத்து.

பல நாட்களுக்குப் பிறகு இப்படிக் கலகலப்பாகப் பேசுகிறாள்.

"ஆமா! ஆமா! மணி எட்டாச்சில்லே! கடையைச் சாத்த லாம்னு பாக்கறேன். மணிப் பயல் ஊருக்குப் போயிருக் கான். நாளைக்கு வர்றான். அப்புறம் நாளைக்கு நான் மறுபடியும் ஊருக்குப் போகணும். அம்மாவை அடுத்த வாரம் டிஸ்சார்ஜ் பண்ணிக் கூட்டியாந்திரலாம்" என்றான்.

"முத்து மச்சான்! எனக்கு ஹெல்ப் பண்ணுங்க. ஹம்சவர்த்தினியக்காவும், நீரஜா அக்காவும் எனக்கு கொஞ்சம் துணிமணியெல்லாம் அனுப்பிச்சிருந்தாங்க. அதெல்லாம் அக்காவுக்குத் தெரியாது. தெரிஞ்சாத் திட் டும். ஒரு பேக் தரீங்களா? அதுல போட்டு உங்க பொறுப் புல குடுத்தர்றேன். அப்புறம் வாங்கிக்கறேன்" என்றாள்.

அவன் ஒரு நிமிடம் யோசித்தான். பிறகு "சரி.. குடு. என்னோட டிரங்குப் பெட்டிக்குள்ள வச்சுக்கறேன்" என்றான்.

"ஆனா.. ஒரு கண்டிஷன்..! அதுல லேகிய சம்பந்தப் பட்ட விவரங்கள் எல்லாம் இருக்கு. அதுனால திறந்து பாக்கக் கூடாது" என்றாள்.

"சரி..!" என்றான்.

கொடுத்து விட்டாள். வேறு ஏதோ ஒன்றும் முத்துவின் கடையில் வாங்கிக் கொண்டாள்.

இரவு எட்டு மணியிருக்கும்!

"பக்காவ்! நான் கோயில் அய்யரு பொண்ணைப் பாத்துட்டு வாரேன்" என்று போனாள்.

"சரிடி! சீக்கிரம் வந்துரு" என்றாள் அக்கா.

'நாள் முழுதும் வேலை! கொஞ்ச நேரம் போய் விட்டு வரட்டும்' என்று எண்ணிக் கொண்டாள்.

குறுக்குப் பாதை திரும்புகிற இடத்தில் மட்டும் சுற்று முற்றும் பார்த்து விட்டுச் சரேலென்று நுழைந்தாள்.

வழக்கம் போலப் பின் வாசல் வழியாக நுழைந்தாள்.

சிதீஷ் இது போலப் பெண்களைப் பார்த்திருந்தான். முதலில்தான் பயப்படுவார்கள். பிறகு துணிந்து விடுவார்கள். அதுபோல மீனாவும் இப்போது 'அக்கஸ்டம் ஆகி விட்டாள்.' என்று நினைத்துக் கொண்டான்.

அதே போல மீனா உள்ளே நுழையும் போதே,

"காபி இருக்கா!" என்றாள்.

"ம்.. ம்.. அதெல்லாம் ரெடியா இருக்கு" என்றான்.



"இந்தத் தடவை கொஞ்சம் அதிகமாவே கலக்கவா.. என்னா.. கலைச்சுட்டு வந்தா அப்புறம் கொஞ்ச நாளாகு மில்லே!" என்றான்.

"ம்..! அதுவும் சரிதான்!" என்றாள்.

"அப்புறம் ஒரு கண்டிஷன்.."

"நீங்களுமா!" என்றாள்.

அவன் சிரித்தான்.

"சொல்லு.. நாட்.!" என்றாள்.

கலந்தான்!

மீனா எந்தவிதச் சலனமும் இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் திரும்பி சட்டையைக் கழற்றுகிற நேரத்தில் இன்னும் கொஞ்சம் அவளது டம்ளரில் கலந்தாள் தயாராணவள்!



# 20

தாறு மாறாகக் கிடந்த சிதீஷை வெறுப்பு மண்டப் பார்த்துக் கொண்டு சற்று நேரம் அமர்ந்திருந்தாள் மீனா.

"ஏய்.. என்ன.. பாக்கறே.." என்று குழறினான்.

"ம.. ஒண்ணும் இல்லே!" இன்னும் கொஞ்சம் காபி தரட்டுமா?" என்றாள்.

"மறுபடியுமா?" என்றான் கிளுகிளுத்துச் சிரித்தான்.

"சரி.. சரி.. குடு.. குடு" என்றான்.

மீனா சாவதானமாக எழுந்தாள்.

ஃப்ளாஸ்கில் இருந்து காபியை ஊற்றினாள். முத்துவின் கடையில் இருந்து வாங்கி வந்திருந்த வேறு ஏதோ மருந்தையும் கலக்கினாள்.

"அப்படியே படுத்துகிட்டே... குடிங்க!" என்றாள். அவன் வாயில் ஊற்றினாள்.

"ஹேய்! என்னமோ.. வேற வாசம் வருது" என்றான் குழறலாக.

"இல்லல்லே! அது பக்கத்து ரூம்ல இருந்து வருது. அங்க ஏதோ மூட்டை இருக்கு போல இருக்கு" என்றாள்.

"அதுதானே... பார்த்தேன்...!" என்றான்.

முழு டம்ளரையும் குடிக்க வைத்து விட்டாள்.

சிதேஷ் மறுபடியும் மயக்கத்தில் ஆழ்ந்தபோது அறை முழுக்கத் தேடினாள். அவன் வழக்கமாக வைத்திருக்கிற ஹேண்டி காமிராவைக் காணவில்லை.

கொண்டு வரவில்லை என்பதை உணர்ந்து கொண்டாள்.

அவளுக்கும் போதை இறங்கியிருந்தது! அமைதியாக வெளியேறினாள்.

வீட்டுக்கு வந்தாள்!

நன்றாக வெந்நீர் வைத்துக் குளித்தாள்.

சிறிய மாடத்தில் சிறிய சிறிய சாமி படங்கள் இருந்தன. நின்று பூஜை செய்தாள்.

கண் மூடிப் பிரார்த்தனை செய்தாள். அடிக்கடி இதெல்லாம் செய்கிறவளாதலால் அக்காவுக்கும் இதெல்லாம் வித்தியாசம் தெரியவில்லை.



அக்காவின் குழந்தையோடு சற்று நேரம் விளையாடினாள். மச்சானிடம் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தாள். எல்லாவற்றிலும் ஒரு ஆழ்ந்த அமைதி தெரிந்தது.

அக்காவும், மச்சானும் உறங்கி விட்டார்களா என்று பார்த்தாள்.

அக்கா குழந்தையை அருகில் போட்டுக் கொண்டு மெத்தை விரித்துத் தரையில் படுத்திருக்க மச்சான் கயிற்றுக் கட்டிலின் மேல் படுத்திருந்தான்.

நின்று சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு தனது அறைக்கு வந்தாள்.

சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தாள். பிறகு எழுந்தாள். ஒரு முடிவோடு எழுந்தாள்.

* * *

"ஐயோ! அடிப்பாவி மகளே..! இப்படிப் பண்ணிட்டியே.." என்று அலறல் சத்தம் கேட்டு முத்து திடுக்கிட்டு எழுந்தான்.

அரக்கப் பரக்க வெளியே வந்தான்!

மீனாவின் அக்காதான் அலறியது!

மீனாவின் வீட்டின் முன்னால் சரசரவென்று கூட்டம் சேர்ந்தது. முத்துவின் உடலில் ஏதோ ஆட்டம் கண்டாற் போல் இருந்தது.

அதிர்ச்சியோடு அந்த வீட்டை நோக்கி ஓடினான். கூட்டத்தைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனான்.

அங்கே அந்தக் கொடுமையான காட்சியைக் கண்டான்.

மீனா தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தாள்.

"ஐயோ! மீனா..." என்று அலறிக் கொண்டு அருகில் போனான்.

ஒரு பக்கம் அக்கா மார்பில் அடித்துக் கொண்டு அழ, மச்சான் தாரிணியைக் கைகளில் சேர்த்துப் பிடித்துக் கொண்டு கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தான்.

இரண்டு மூன்று பெரியவர்கள் வந்து இறக்குவதற்கு ஏற்பாடு செய்ய முத்து பொங்கிப் பெருகிய கண்ணீருடன் உதவி செய்தான்.

'ஐயோ! எப்படியெப்படியோ தொடணும்னு இருந்தேனே... கடைசியில இப்படித் தொட வச்சுட்டியேடி' என்று அவனது உள்ளம் ஓலமிட்டு அழுதது.

யார் யாரோ வந்தார்கள்!

போனார்கள்!

உடனடியாக ஆஸ்பத்திரியில் இருந்த சகோதரிக்கு போன் செய்து தான் உடனடியாக வர முடியாது என்பதையும், அம்மாவை பார்த்துக் கொள் என்றும் சொன்னான்.

செய்தி கேட்டு அவன் சகோதரியும் அதிர்ந்து போனாள். அரசல் புரசலாக தன் சகோதரனுக்கு அந்தப் பெண்ணின் மேல் ஆர்வம் என்பதைப் புரிந்து வைத்திருந்தாள். அதனால் அவளும் சோகத்தில் ஆழ்ந்தாள். அம்மாவிடம் அந்த விஷயம் எதுவும் சொல்ல வேண்டாம் என்று சொல்லி விட்டான் முத்து.

ஊரே அதிர்ச்சியில் ஆழ்ந்தது என்றால் பத்து மணிக்கு மேல் வேறு ஒரு செய்தி பரவியது.

படப்பிடிப்புக்காக வந்த குழுவினரில் ஒரு பையன் ஒரு பண்ணை வீட்டில் இறந்து கிடக்கிறான் என்ற செய்தி தான்.

வயதான கிழவிகள் ஒன்றிரண்டு பேர் "ரெண்டுக்கும் என்னமோ சம்பந்தம் இருக்கும் போல இருக்கு" என்று முணுமுணுக்க.



"கிழவி! ஒன்னு கிடக்க ஒன்னு பேசி வம்புல மாட்டிக்காதே! இது லேசுப்பட்ட விஷயமில்லே. போலீஸ் கேஸ்" என்று மகன்கள் மிரட்டி வைத்தார்கள்.

இரண்டு பக்கமும் போலீஸ் வந்தது.

மீனாவின் கேஸில் விசாரித்த போலீஸ் எதுவும் தடயம் கிடைக்காமல் விழித்தார்கள்.

அக்கம் பக்கம் எல்லாமே "ரொம்ப நல்ல பொண்ணு.. இருக்கற இடம் தெரியாது. போறது வர்றது தெரியாது" என்று ஒன்று போல் சொன்னார்கள்.

மச்சானிடம் கேட்டார்கள் ரித்தீஷ் பற்றி "ரொம்ப நல்ல வரு. எங்க பொண்ணைக் கூட படம் எல்லாம் எடுத்தாரு. நேரடியா வீட்டுக்கு வந்துதான் பேசுவான்" என்றார்கள்.

போஸ்ட் மார்ட்டம் போய் அதன் பிறகு பாடியை கொடுத்தார்கள். அதற்குள் பெற்றோர்கள் வந்தார்கள்.

அவர்கள் கதறிய கதறல் ஒரு பக்கம் என்றால் அக்காவும், மச்சானும் 'எங்க வீட்ல வந்து இப்படியாச்சே!' என்று நொந்து போனார்கள்.

எரியூட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்கையில்தான் முத்துவுக்கு மனதுக்குள் தோன்றியது. காரணமாகத்தான் தன்னிடத்திலே ஏதோ ஒரு பையினைக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறாள்.

போலீஸ் வேறு குடைந்து கொண்டிருக்கிறது. இதுவெல்லாம் முடிந்த பிறகுதான் அதை எடுத்துப் பார்க்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

அப்படியே செய்தான்.

இரத்தம் கொதித்துப் போனது.

* * *

செய்தி கேள்விப்பட்ட நீரஜாவும், ஹம்சவர்த்தினியும் காரில் கிளம்பினார்கள். முதலில் அம்மா ஒத்துக் கொள்ளவில்லை. பிறகு அவள் படுகிற அவஸ்தைப் பார்த்து அப்பாவே லீவு போட்டு விட்டு உடன் வந்தார்.

நல்ல வேளையாக எரியூட்டுவதற்கு முன்பே வந்து விட்டார்கள். ஆனால் யார் வீட்டில் மாங்கு மாங்கென்று மீனா உழைத்தாளோ அந்த வீட்டுக்காரர்கள்,

"நல்ல வேளை... நாங்க தப்பிச்சோம். இந்த வீட்ல இப்படி ஏதாவது ஆயிருந்தா.. நாங்கள்ள பதில் சொல்லி இருக்கணும்" என்று புலம்புவதோடு நிறுத்திக் கொண்டார்கள்.

துக்கம் கேட்பதற்குக் கூட வர வேண்டும் என்று நினைக்கவில்லை.

"பாத்தியா... வர்த்தினி! ரெண்டு வருஷம் வெறும் சாப்பாட்டையும், விலை குறைஞ்ச துணிமணியையும் வாங்கிக் குடுத்துட்டு உழைப்பை எவ்வளவு உறிஞ்சினாங்க..! சம்பளம்னுகூட ஒண்ணும் குடுக்கலை. இப்ப எவ்வளவு எளியா கழண்டுகிட்டாங்க" என்று பொரிந்தாள் நீரஜா.

"விடு.. அதுதான் உலகம்! அதிலயும் தூக்குப் போட்டு செத்துருக்கா இல்ல. அதனால வர்றதுக்கு யோசிச்சிருப்பாங்க..." என்றாள் ஹம்சவர்த்தினி.

சற்று நேரம் கனமான அமைதி நிலவியது.

"ஊருக்குப் போனப்புறம் எப்படியும் பத்து நாளைக்கு ஒரு தடவையாவது பேசுவா. ஒரே ஒரு தடவை மட்டும் சொன்னா.. யக்காவ்! நான் காசு சேர்த்து வச்சு பக்கத்துக் கடை-



யிலகிட்டே குடுத்து ஒரு செல் வாங்கியிருக்கேன் ஆனா, வீட்ல திட்டுவாங்கன்னு நீங்க வாங்கிக் குடுத்தீங்கன்னு சொல்லியிருக்கேன். நீயும் அப்படியே சொல்லிருக்கா.. ன்னா.. நானும் சரின்னேன். ஏதாவது வம்பில மாட்டியிருப்பாளோ! நான் அப்பவே நினைச்சேன். இந்தக் கிராமத்துல இவளுக்கு எதுக்கு செல்லுன்னு" என்றாள் ஹம்சவர்த்தினி.

வழி நெடுக வருத்தத்தோடு பேசிக் கொண்டு வந்தார்கள்.

காரில் வந்து இறங்கியதுமே மீனாவின் அக்கா ஓடி வந்தாள்.

"யம்மா! நீங்கதான் மெட்ராஸ்க்காரங்களா வர்த்தினி யக்கா.. நீரஜா.. அக்கான்னு சொல்லிகிட்டே கிடப்பாளே.. பாத்தீகளா.." என்று வெடித்து அழுதாள்.

அவர்களும் கதறி அழுதார்கள்!

எல்லாம் முடியும்வரை இருந்தார்கள். இரவு புறப்பட வேண்டாம். காலையில் போகலாம் என்று எல்லோரும் வற்புறுத்தவே தங்கினார்கள்.

முத்து தன் வீட்டில் அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தான்.

ஹம்சவர்த்தினியின் அப்பா சீனிவாசனுக்கு முன்னறையிலேயே ஒரு கட்டில் ஏற்பாடு செய்து கொடுத்தான்.

உள்ளறையில் அவர்களுக்குப் படுக்கை விரித்துக் கொடுத்தான். மளிகைப் பொருட்களின் கடையில் சாக்குகளின் வாசம் எதுவும் அவர்களுக்குத் தெரியவில்லை.

தனது துக்கத்தையெல்லாம் விழுங்கிக் கொண்டு பக்கத்திலிருந்து 'கிளப்புக்' கடையில் அவர்களுக்கு உணவு வாங்கிக் கொடுத்தான். அழுத களைப்பில் கண்ணயர்ந்தார்கள் தோழிகள்.

நள்ளிரவு இருக்கும்!

யாரோ சுவற்றில் முட்டிக் கொள்கிறாற் போல சத்தம் கேட்க ஹம்சவர்த்தினி விழித்துக் கொண்டாள்.

பின்கட்டில் எட்டிப் பார்த்தாள். சிறிய சிம்னி விளக்கின் ஒளியில் எதையோ காகிதத்தைக் கையில் பிடித்துக் கொண்டு முத்து சுவற்றில் முட்டி முட்டிக் கதறிக் கொண்டிருந்தான்.

"முத்து.. முத்து..! என்னதிது" என்று ஹம்சவர்த்தினி தடுக்க முயற்சிக்க.

"பாவி! அவளைக் கொலை செய்ய எனக்கு சான்ஸ் தராம தானே செத்துட்டாளே" என்று மறுபடியும் புலம்பினான்.

"ப்ளீஸ்! அழுறதை நிறுத்துங்க..! என்ன நடந்துச்சுன்னு சொல்லுங்க" என்றாள் கலங்கிய குரலில்.

"சத்தம் போடாதீங்க" என்றான். அதற்குள் நீரஜாவும் எழுந்து வந்தாள்.

முத்து செல்போனை எடுத்து நீட்டினான். அதில் இருந்த படங்களைப் பார்த்த ஹம்சவர்த்தினியும், நீரஜாவும் அதிர்ந்து போனார்கள்.

"அப்பாகிட்டே!" என்று எழுந்த ஹம்சவர்த்தினியின் காலைப் பிடிக்கப் போன முத்து.

"வேண்டாம்மா! யாரும் இதைப் பார்க்க வேண்டாம்.." என்று அழுதான்.



ஹம்சவர்த்தினி சட்டென்று செல்லை ஆப் செய்து அவன் கையில் கொடுத்தாள்.

"பாவி.. மகா! கல்யாணம் பண்ணிகிட்டு குருவிக் கூடு மாதிரி குடும்பம் நடத்தலாம்னு இருந்தேனே" என்று புரண்டு அழுதான்.

"என்னம்மா?" என்று அப்பா குரல் கொடுக்க ஹம்சவர்த்தினி எழுந்துபோய்,

"அப்பா..! முத்துவைத்தான் கல்யாணம் பண்ணலாம்னு இருந்திருப்பா.. போல! ரொம்ப வருத்தப்படறான்.. நாங்க ஆறுதல் சொல்லிகிட்டிருக்கோம்" என்றாள்.

"சரிம்மா..!" என்றார் அப்பா.

மறுபடியும் உள்ளே போனார்கள்.

"யம்மா! வர்த்தினிக்கா, நீரஜா அக்கான்னு அடிக்கடி சொல்லிகிட்டே இருப்பா..! உங்க யார்கிட்டயாவது கேட்டிருக்கலாமே! என்கிட்டயாவது உள்ளதைச் சொல்லியிருக்கலாமே!" என்று புலம்பினான்.

"முத்து..! அழுவாம.. என்ன நடந்துச்சுங்கறதை சொல்லுங்க..!" என்றாள் நீரஜா.

"அம்மா! நானும் அவளும்.. கல்யாணம் பண்ணிக்கிறதா இருந்தோம். என்னைப் பத்தியும் அவங்க வீட்டுல நல்ல அபிப்ராயம்தான். சொல்லி ஏற்பாடு பண்ணலாம்னு இருந்த நேரத்துல எங்கம்மாவுக்கு டி.பி. வந்துருச்சு. அதனால பெருந்துறை ஆஸ்பத்திரிக்கு கூட்டிகிட்டுப் போய் வைத்தியம் பார்க்க வேண்டியதாப் போச்சு. நான் போன அந்த இடைவெளியில என்னென்னமோ நடந்துருச்சு. பாருங்கம்மா!" என்று கடிதத்தைக் காட்டினான்.

ஹம்சவர்த்தினியும், நீரஜாவும் இதயம் துடிக்கப் படித்தார்கள்.

முதலில் கோவிலில் போட்டோக்கள் எடுத்தது. அந்த சமயத்தில் எல்லாம் மிகவும் கண்ணியமாகப் பழகியது எல்லாவற்றையும் எழுதியிருந்தான்.

ஒரு வாரம் கழித்து ஊருக்கு வந்தபோது தன்னைப் பார்க்க வேண்டுமென்று யதார்த்தமாகத் தான் போனது எல்லாவற்றையும் எழுதியிருந்தான்.

"என்னவோ அந்த காபியில் கலக்கிக் கொடுத்துட்டான்.. பாவி! என்னோட கை கால் எதுவுமே என் கட்டுப்பாட்டில் இருக்கலை! அந்த நிலையிலேயும் "நான் உன் முத்துதான்.. முத்துதான்னு" சொல்றான், என்னோட பழும் மனசிலே முத்துதான் என்கூட இருக்கற மாதிரியே தோணுச்சு" என்று எழுதியிருந்த இடத்தைப் படித்தபோது அவன் முகத்தைப் பார்த்தார்கள்.

முகத்தில் இரத்தம் வடிந்து போய் சுவற்றில் சாய்ந்திருக்கிற அந்த இளைஞனைப் பார்க்கும்போது அளவற்ற பரிதாபம் அவர்களுக்குள் தோன்றியது.

மேலே படித்தார்கள்.

"முத்து..! அந்தப் பாவி எல்லாத்தையும் படம் பிடிச்சிருக்கான். செல்போன்ல அந்தப் படங்கள் அனுப்பி அனுப்பி "நீ மட்டும் வர்லேன்னா.. என் பிரண்ட்ஸ்கெல்லாம் வீடியோவை அனுப்புவேன்கறான். மானத்தைக் காப்பாத்திக்கறதுக்காக மானத்தை இழக்கறது எங்காவது உண்டா? என் விஷயத்துல அது நடந்துச்சு! கல்யாணம் பண்ணிக்கறேன்னான். சரி.. அப்படியாவது அவனையே கல்யாணம் பண்ணிகிட்டுத் தாலின்னு ஒண்ணை கௌரவமா வாங்கிக்கலாம்னு மனசைத் தேத்திகிட்டேன். ஆனா, கடைசியில நீ என் கூடவா இருந்தே! மனதளவுல அந்த முத்து கூடத்தானே இருந்தே! உன்னைப் போய்க்



கல்யாணம் எப்படிப் பண்றதுங்கறான்! அது மட்டுமில்லை தலைச்சுக்க..! இது மாதிரிப் பொண்ணுங்களையெல்லாம் கல்யாணம் பண்றதுன்னா.. எத்தனை பேரைக் கல்யாணம் பண்றதுங்கறான்! அப்பத்தான் முடிவெடுத்தேன். இவனால பாதிக்கப்பட்ட கடைசி பொண்ணு நானாகத்தான் இருக்கணும்னு. இந்த மானக்கேட்டுக்குப் பிறகும் உயிர் வாழணுமா? ஆனா.. அப்படிச் சாகும்போது இவனையும் கூடக் கூப்பிட்டுகிட்டுத்தான் போகணும்னு. ஏன்.. தெரியுமா? நான் செத்துப் போனதுக்கப்புறம் இந்த விஷயம் எல்லாம் தெரிஞ்சா.. நீ அந்தக் காரியத்தை செய்யக் கிளம்புவே.. அதனால்தான்" என்று எழுதியிருந்ததைப் பார்த்ததுமே மூவரும் கதறி அழுதார்கள்.

சத்தம் கேட்டு அப்பா எழுந்து வந்து விட்டார்! அவருமே அந்தக் கடிதம் பார்த்து அதிர்ந்து போய் விட்டார்.



# 21

விக்கி விக்கி அழுது கொண்டிருந்தாள் ஹேமசுவர்த்தினி.

தன் மார்பில் சாய்ந்து கொண்டு கண்ணீரை மழையாகக் கொட்டிக் கொண்டிருக்கிற தன் அன்புக்குரியவளை வாஞ்சையுடன் தடவிக் கொடுத்துக் கொண்டு நின்றிருந்தான் கவியரசன்.

"கறுப்பா இருந்தாலும் அவ்வளவு அழகா இருப்பான். கடைசியில அத்தனையும் அந்தக் காமுகனுக்குப் பலியாகவா?" என்று பொங்கித் தீர்த்தாள்.

கவியரசன் மௌனமாகக் காது கொடுத்துக் கேட்டானே ஒழிய எதுவும் பேசவில்லை. எத்தனை வார்த்தைகள் சொன்னாலும் அவளது துக்கத்தை அடக்க முடியாது என்று தோன்றியது.

இருவரும் மனதில் உள்ளதைப் பரிமாறிக் கொண்டதற்குப் பிறகு கடந்த ஒரு வாரமாக அங்கங்கே சந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

இன்றைக்கு ஆபீசுக்கு லீவு! ஆனால் அவனுக்குக் கணக்கு வழக்குகள் ஏதோ பார்க்க வேண்டியிருந்தது. வந்திருந்தான்.

உணவு நேரம்!

நறும்சவர்த்தினி போன் செய்தாள்!

"எனக்கு.. உங்களைப் பார்க்கணும் போல இருக்கு!" என்றாள்.

"ம்ஹூம்!" என்றான் மகிழ்ச்சியாக.

"நான் அங்க வரட்டுமா?" என்றாள்.

"ம்.. வரலாம்! இங்க வந்தா சும்மா பார்மாலிட்டிக்கு ரெண்டு வார்த்தை பேசலீங்க" என்றான்.

"சரி.. நீ இங்க வா!" என்றான்.

"எங்கே? உங்க வீட்டுக்கா?" என்றாள்.

"அதுக்கு இன்னும் கொஞ்ச நாள் இருக்கு! இப்ப ஆபீஸ்ல இருக்கேன்..." என்றான்.

"ஆபீஸ்லயா?" என்றாள் வியப்பாக.



"ஆமா! இந்த மாதிரி நாள்ல அக்கவுண்ட்ஸ் கொஞ்சம் அமைதியாய் பாக்க முடியும்."

"ஓஹோ!"

"அதனால என்ன? நீ வந்தா இருந்தா எல்லா வேலையும் ஒத்தி வச்சற வேண்டியதுதான்" என்றான்.

"ஜொள்ளு பார்ட்டி" என்றாள்.

"ஆமா! யாருகிட்டே... என்னோட நறும்சவர்த்தினி கிட்டேதானே வழியறேன். ஐம் நாட் அட் ஆல் அஷேம்ட் ஆஃப் இட்."

"சரி.. சரி..! நான் வரேன்! ஆனா அரை மணி நேரம் தான் இருப்பேன்."

"வா.. வா..! உன்னை எவ்வளவு நேரம் இருக்க வக்கறதுன்னு நான் முடிவு செஞ்சுக்கறேன்."

"ஹலோ!.. என்னமோ மிரட்டற மாதிரித் தெரியுது."

"புறப்பட்டு வா! அது மிரட்டலா இல்லையான்னு அப்புறம் தீர்மானிக்கலாம்" என்று அவன் அதே பிடியில் நிற்கவும் "வந்து பேசிக்கறேன்" என்று மிரட்டி விட்டுப் புறப்பட்டாள்.

அம்மாவின் காரை வாங்கிக் கொண்டு போனாள்!

அவன் நுழைவது கூடத் தெரியாமல் அவன் கம்ப்யூட்டரில் ஆழ்ந்திருந்தான்.

"க்கும்" என்று கனைத்தபின்தான் அவன் திரும்பிப் பார்த்தான்.

"ஹாய்! வந்துட்டியா?" வா...!" என்றான் உற்சாகமாக.

"கிரேட் இன்சல்ட்" என்றாள்.

"ஏது.. வான்னு வரவேற்கிறேனே.. அதுவா?" என்றான்.

"இதுக்கு! நான் வர்றேன்னு சொல்லியிருக்கேன். ஒரு பரபரப்பு இருக்க வேணாம்" என்றான்.

"நேரம்!" என்று சிரித்தபடி அருகில் இழுத்தான்.

"ரொம்பப் பரபரப்பா இருந்துச்சு. அதை மறக்கறதுக்குத்தான் இப்படி" என்றான்.

"நான் நம்ப மாட்டேன்" என்றாள்.

"எப்படி நம்ப வக்கிறது?" என்றான்.

திரும்பிக் கம்ப்யூட்டர் ஸ்கிரீன் காட்டினான்.

"பாக்கியா! இந்த ஒரு பேஜை செக் பண்ணவே ஒரு மணி நேரமாகப் போராடிக்கிட்டிருக்கேன்" என்றான்.

"ஏனாம்?"

"மனசு பூராவும் வரப்போற தேவியாரைப் பத்தியே நினைப்பு!"

அவள் புன்னகைத்தாள்.

சுற்று முற்றும் பார்த்தாள்.

"என்ன ஒன் மேன் ஷோ மாதிரி நீங்க மட்டும் உட்கார்ந்துகிட்டிருக்கீங்க" என்றாள்.

"ஆமா! பின்னே! சன்டே அன்னிக்கு வேலைக்கு வாங்கன்னு சொன்னா நியாயமா இருக்குமா? ஆனா.. சில நேரங்கள்ல தேவைன்னு இருந்தா என் ஸ்டாஃப் எல்லாமே நேரம் காலம் பாக்காம ஒத்துழைப்பாங்க" என்றான்.



தனது அலுவலகம் முழுவதையும் சுற்றிக் காட்டினான். காலிங் பெல் அடித்து வெளியே இருந்த பியூனை அழைத்து காபி வாங்கி வரச் சொன்னான்.

யோசனையுடன் நிற்கிற நளினவத்தினியைப் பார்த்துக் கவியரசன் கேட்டான்.

"என்ன என்னவோ தீவிர யோசனையிலே இருக்கே?" என்றான்.

"இல்லே! அப்பாகிட்டே உங்களைப் பத்தி ரொம்ப மட்டமா சொல்லி வச்சேன்" என்றாள்.

அவன் எதும் பேசவில்லை. அவளே பேசட்டும் என்று அமர்ந்து கொண்டான். அவளும் எதிர் சோபாவில் அமர்ந்தாள். சிந்தனையில் ஆழ்ந்தபடியே சொன்னாள்.

"இப்ப.. எப்படி.. நம்ப விஷயம் சொல்லி கன்வின்ஸ் பண்றதுன்னு தெரியலே" என்றாள்.

"அதைப்பத்தி நீ கவலைப்படாதே! நான் பாத்துக்கறேன்" என்றான்.

'எப்படி?' என்பது போல் அவள் பார்க்க "தமயந்தி ஆன்ட்டி கிட்ட சொல்லி கன்வின்ஸ் பண்ணலாம்."

"ஆமா! உங்களுக்குத்தான் எங்கம்மா பிரண்டாச்சே" என்றாள்.

அவன் சிரித்தான்.

"ஆமா! அவங்க டக்குன்னு என்னைப் பத்திப் புரிஞ்சுக்கிட்டாங்க! நீ லேட்டாத்தான் புரிஞ்சுகிட்டே..." என்றான்.

"அதுக்கும் காரணம் இருக்கு!" என்றாள்.

"பாத்தினி! எனக்கும் அப்படித் தோணுச்சு. நீ காட்டின வெறுப்பு என் மேல வந்த கோபம் இல்லே! வேற ஏதோ விஷயத்தில நீ காட்டின வெறுப்பு அப்படின்னு என் மனசுக்குள் பட்டுச்சு" என்றான்.

அதே நேரம்!

ஃப்ளாஸ்கில் இருந்த காபியை பியூன் இரு கப்புகளில் ஊற்றிக் கொண்டு வந்து நீட்ட அவன் ஒரு கப்பை எடுத்து அவளிடம் நீட்டினான்.

"சரி. நீ முன்னாடி இரு!" என்றான்.

பியூன் போய் விட்டான்.

கையில் வாங்கிய கோப்பையை டீபாயின் மேல் வைத்து விட்டு அந்தக் கோப்பையையே ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஹம்சவர்த்தினிக்கு அந்தக் காபிக் கோப்பை மீனாவையும் அவள் வாழ்க்கையில் நடந்த அசம்பாவிதங்களையும் நினைவு படுத்தினவோ என்னவோ முகத்தில் சொல்லவொண்ணாத வேதனை பிரதிபலிக்க அமர்ந்து கொண்டாள்.

கவியரசன் எதிரிலே அமர்ந்திருந்தவன் சற்று முன்னாலே சாய்ந்து அமர்ந்து

"என்னடா?" என்றான்.

"எனக்கு ஏதோ பழைய ஞாபகம் வந்துருச்சு" என்றாள்.

"வாட் இஸ் எட்டிங் யூ? ஏன் என்கிட்டே நீ அதை ஷேர் பண்ணிக்கக் கூடாது?" என்றான்.



நிமிர்ந்து பார்த்தாள்.

"முதல்ல காபியைக் குடி!" என்று வற்புறுத்தவே வேண்டா வெறுப்பாகக் குடித்தாள். அவன் முகம் பார்த்தாள்.

கண்கள் கலங்க அந்தப் பழைய நினைவுகளை மீட்டெடுத்து வந்து அவனிடத்திலே கொட்டினாள்.

அப்பாவே கூட அந்தப் பெண்ணுக்கு நேர்ந்த கொடுமை அறிந்து கதி கலங்கிப் போனார்.

'இத்தனைக்கும் அந்தப் பெண் செய்த தவறு என்ன? கயவன் ஒருவனை நம்பியதும், நல்லவன் என்று நம்பித் தனியாகப் போனதும்தான்.'

மீனா தொடர்ந்து எழுதியிருந்தாள்.

"இன்னைக்கு நான் மறுபடியும் வர்றேன்னு சொன்னவுடனே அவனுக்கு ரொம்ப சிரிப்பு. ஏதோ பழகிப் போய் அந்த சுகத்தை விட முடியாம வர்றேன்னு நினைச்சுட்டான். அப்படியே இருக்கட்டும் இவன் இது மாதிரி எத்தனை பெண்களை இன்னும் சீரழிக்கப்போறானோ? கூடவே கூடாது! இன்னைக்கு ஒரு முடிவு கட்டியாகணும். இந்த முயற்சிக்குப் பின்னாலே நானும் முடிஞ்சு போயிடுவேன்.

முத்து மாமா! இப்படித்தான் நான் என் வாழ்நாள் முழுவதும் கூப்பிடணும்னு நினைச்சிருந்தேன். ஆனா, முடியாமப்போச்சு. மறுபடியும் சொல்றேன். நான் போனதிலே என் பிரச்சினை தீரும் வரைக்கும் வருத்தமாத்தான் இருக்கும். ஆனா, என்ன செய்ய?

நான் உன்கிட்டே உண்மை சொல்லி அழுதிருந்தால் கூட நீ ஒத்துகிட்டிருப்பே! ஆனா ஒரு உறுத்தல் என்னைத் தின்றுகிட்டேயிருக்கும்.

முத்து மாமா! ஹம்சவர்த்தினியக்காவும், நீரஜா அக்காவும் வந்தா.. நீயும் அவர்களுமா சேர்ந்து இந்த ரிதீஷைப் பத்திப் பேப்பர்ல விவரமா வர்ற மாதிரி செய்ங்க! என்ன, என்னைய மாதிரிப் பொண்ணுங்க எல்லாத்தையும் யதார்த்தமா எடுத்துகிட்டு அழிஞ்சு போற நிலைமை மாறும் இல்லே!

என் பேர் கெட்டுப் போனாலும் பரவால்லே! எத்தனையோ பொண்ணுங்க.. புரிஞ்சுக்குவாங்க...! அவன் சொல்றான்.. செல்போன்ல இன்னும் என்னவெல்லாமோ செய்யலாமாம். என் கதையைக் கேட்டாவது பொண்ணுங்க இனிமே ஜாக்கிரதையாயிருப்பாங்க.. இல்லே!

இந்த உலகத்துல மச்சான் மாதிரி உன்னைய மாதிரி நல்லவங்களும் இருக்காங்க.. ரிதீஷ் மாதிரி கேவல மானவர்களும் இருக்காங்க.. என் தலையெழுத்து இப்படி யாச்சன்னு ஒரு வருத்தம் இருந்தாலும் நான் சும்மா சாகலே! அந்த நாயைக் கொன்னுட்டுத்தான் சாகறேன்னு சந்தோஷமாய் போறேன்.

நீயாவது நல்லாயிரு... முத்துமாமா!'' என்று எழுதியிருந்தாள்.

அதற்குப் பிறகு ஹம்சவர்த்தினி அப்பாவிடம் சொன்னாள்.

''அப்பா! போலீஸ்கிட்டே லெட்டரைக் காமிச்சுடுவோம். முடிஞ்சவரைக்கும் மீனாவைப்பத்திய விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம்னு கேட்டுக்குவோம்'' என்றார்கள்.



சீனிவாசனையும் அந்தப் பெண்ணின் மரணம் மிகவும் பாதித்திருந்தது. அவரும் ஒத்துழைத்தார்.

''இன்வெஸ்டிகேடிவ் ஜர்னலிஸ்'' என்ற பெயரில் தமிழ் நாட்டில் வந்து கொண்டிருக்கிற எல்லாப் பத்திரிகைகளிலும் தினசரி வாரப் பத்திரிகைகளிலும் ரிதீஷின் பெயர் நார் நாராகக் கிழிக்கப்பட்டது.

காவல் துறையினர் இளம் பெண்களுக்கு நிறைய எச்சரிக்கைகள் கொடுத்தார்கள்.

முன், பின் தெரியாதவர்களுக்கு செல்போனில் போட்டோ எடுக்க அனுமதி கொடுக்காதீர்கள்.

எந்த ஒரு இளைஞனையும் அவன் எவ்வளவு நல்லவனாக உங்களுக்குத் தோன்றினாலும் தனியாகப் போய் சந்திக்காதீர்கள்.

''சில பெண்கள் தெரிந்தே உடன்படுகிறார்களே!'' என்று கேள்விகள் கேட்டார்கள்.

''அவர்களுக்கு எல்லாவிதமான ரிஸ்க்கும் இருக்கு! ஏன்.. எய்ட்ஸ் கூட வரலாம்'' என்று எச்சரித்தார்கள்.

எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லிவிட்டுத்தான் மீனாவுக்காக அவள் மரணத்துக்காக அவன் மார்பில் புரண்டு அழுது கொண்டிருந்தாள் ஹம்சவர்த்தினி.

அவனுக்கும் மனதில் பாரம் தொற்றிக் கொண்டது.

''பாவம்! அந்த மீனா!'' என்று மிகவும் வருத்தப்பட்டான்.

"அதனாலதான்... செல்போன் ராங்கால் இதனால ஏற்பட்ட தொடர்புங்கறதுன்னாலதான் அவ்வளவு வெறுப்போ?"

"ஆமா..!" என்றாள்.

கவியரசன் சிந்தனையுடன் பேசினான்.

"வர்த்தினி! வளர்ச்சின்னு ஒண்ணு நடக்கறப்போ, அதுக்குண்டான சாதக, பாதகங்களும் இருக்கத்தான் செய்யும். நீ சொல்ற மாதிரிக் கவலை எனக்கும் இருக்கு. பெண்கள் இப்ப சுதந்திரமா வெளியே வர்றாங்க! ஆனா, எது சரியான சுதந்திரம்னு புரிஞ்சுகிட்டாங்களான்னு தெரியலே! எந்த எல்லைக் கோட்டைத்தாண்டினா விபரீதம்னு புரிஞ்சுகிட்டாங்கன்னாத்தான்.. நிலைமை சீராகும். அஞ்சுவது அஞ்சாமை பேதைமைன்னு வள்ளுவர் சொல்லியிருக்காரு...! அது மாதிரி எதெதுக்குப் பயப் படணுமோ... அதுக்கு பயப்படணும்! பிளஸ் டு படிச்ச பொண்ணு. ஆனா, ஒரு இளைஞன்... அவன் தனியா ஒரு இடத்துக்கு வரச் சொன்னா... போயிர்றதா?" என்றான்.

"எல்லாம் நம்பிக்கைதான். அதுவரைக்கும் அவன் ஒரு வார்த்தை கூட தப்பாய் பேசினதில்லையாம். தப்பாய் பார்த்ததில்லையாம்" என்றாள் ஹம்சவர்த்தினி.

"அதெல்லாம்.. ஒரு விதமான டெக்னிக்.. சரி... விடு. நடந்தது நடந்து போச்சு... உங்க பங்குக்கு நீங்களும் அவனைப் பத்தி எல்லா விஷயங்களும் வெளிய வர்ற மாதிரிப் பண்ணிட்டீங்க" என்றான்.



"இல்லைங்க! இது மாதிரி எத்தனை பொண்ணுக எங்கெங்கே எப்படி ஏமாறாங்களோ.." என்றாள். அவள் இதழ்கள் துடிப்பதை அவன் காதலுடன் பார்த்தான்.

"ஹேய்! என்ன இவ்வளவு சென்சிட்டிவ்வா இருக்கே! உலகத்துல எத்தனை விஷயங்கள் நடக்குது. தெரிஞ்சே தவறுகள்ல சிக்கிக்கிறவங்க! சூழ்நிலையால சிக்கிக் கறவங்கன்னு எவ்வளவோ இருக்கு. நம்ம எல்லைக் குட்பட்ட அளவுக்கு நாம உதவி செய்யலாம். அவ்வளவு தான் நம்ம சக்திக்கு அப்பாற்பட்ட விஷயங்களுக்காக நாம கவலைப்பட ஆரம்பிச்சா.. நாம உருக்குலைஞ்சு போயிடுவோம்" என்றான்.

விதவிதமாகத் தேற்றினான். பிறகு பெருமையுடன் பார்த்தபடி சொன்னான்.

"பரவால்லே! ராங் கால் மனிதர்கள் மேலே உன்னோட கோபம்.. ரொம்பத் தார்மீகமானதுதான்...! நியாயமானது தான். ஆனா.. நான்தான் தப்பான இலக்கு!" என்றான் அவளது பாணியிலேயே.

சிரித்தாள்.

அவள் முகத்தில் சற்றே வெட்கம் தோன்றி மறைந்தது. "நீங்களும்தான் என்னை மிரட்டினீங்க.. இல்லே.. வேணும்னே... சீண்டினீங்க.. இல்லே! அது மட்டும் சரியா...?!" என்றாள்.

"ஆமா! நீ என்னை சந்தேகக் கண்ணோடவே பார்த்தே...! அதான் எனக்குக் கோபம்" என்றான்.

அவள் சமாதானப்படுத்துவது போல அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

ஒற்றை விரலால் அவன் மார்பை நீவியபடி "சரி, இப்பவாவது சொல்லுங்க! எதுக்கு எங்கம்மாகிட்டே கூடிக் கூடிப் பேசுறீங்க" என்றாள்.

அவன் குறும்பாகச் சிரித்தான்.

"கஸ்டமர்ங்கற முறையிலதான்."

அவள் நம்பவில்லை! கோபமாக அவனைப் பிடித்துத் தள்ளி விட்டாள். அவனும் பொத்தென்று அவளைத் தள்ளி விட்டான்.

"பின்னே.. நீ மட்டும்.. தாலுக்குப் புடவை கட்டினாக் கூடன்னு என்னைக் கேட்கலாமா?"

அவள் வருத்தத்துடன் அவனைப் பார்த்தாள்.

"தப்புதான்! என்றாள். ஆனா, இந்த விஷயத்துல எத்தனையோ லக்கிரக்காரர்கள் இருக்காங்க இல்லே. நான் சொன்னேனே! மீனாவோட இறப்புக்கப்புறம்.. எல்லாமே எனக்கு பயமாப் போயிருச்சுன்னு" என்றாள்.

"ஓ.கே...! ஓ.கே..! ஐ அண்டர்ஸ்டாண்ட்? ஆனா... நீ கேட்ட விஷயத்துக்கு மட்டும் இப்ப பதில் இல்லே! அது சஸ்பென்ஸ்!" என்றான்.

அவள் முறைத்தாள்!

அவன் சிரித்தான்! அப்படி சிரிக்கும் போதே இன்னொரு முகமும் அவன் மனதுக்குள் மின்னி மின்னி மறைந்தது.



## 22

வீடே கலகலப்பாக இருந்தது!

உள்ளே நுழைந்தாள் ஹம்சவர்த்தினி. அண்ணன் சந்திரகுமார், அண்ணி சுதா, பாட்டி வரலட்சுமி எல்லாம் வந்திருந்தார்கள்.

"பாட்டி" என்று ஓடிப்போய்க் கட்டிக் கொண்டாள், கொஞ்சினாள்.

பாட்டி அதற்கு மேலே கொஞ்சிக் கொண்டார். சுதாவும், சந்திரகுமாரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"இந்தா.. வர்த்தினி! பாட்டியைப் பத்திரமாக் கொண்டு வந்து சேர்த்துட்டோம்" என்றான் சந்திரகுமார்.

சற்று நேரம் கலகலப்பாக பேசிக் கொண்டிருந்தார்கள்.

"அது சரி! ஞாயிற்றுக்கிழமை எங்கே.. போயிட்டு வரே...!" என்றான்.

"ஒரு பிரண்டைப் பாத்துட்டு வரேன்" என்றாள். இது வரை இல்லாத கள்ளத்தனம் அவள் முகத்தில் தெரிந்தாற் போல இருந்தது.

சந்திரகுமார் மறுபடியும் மனைவியைப் பார்க்க அதே போல அவளும் பார்த்தாள்.

"அருணி.. அம்மா.. எங்கே?" என்றான் பேச்சை மாற்றி.

"நாங்க வரும்போது இருந்தாங்க...! நீ வருவேன்னு எதிர்பார்த்துட்டு இருந்தாங்க! ஒன் அவர்ல வர்றேன்னு சொன்னியாம். வர்லயேன்னு கொஞ்சம் டென்ஷனா இருந்தாங்க! அப்புறம்.. ஏதோ லோன் மேளா இருக்குன்னு கிளம்பிப் போனாங்க" என்றான் சந்திரகுமார்.

"ஆமா! அட்டை அடிச்சதுல நேரம் போறதே தெரியலை..." என்றாள்.

"யாரு அப்படி பிரண்டு?" என்றான் சந்திரகுமார் வாயைக் கிண்டுவது போல.

"உனக்குத் தெரியாது! புதுசா இந்த வருஷம் வந்து சேர்ந்திருக்காங்க..." என்றாள்.

"பாட்டி! சமையல் பண்ணலையா?" என்று ஏதோ சமையல் செய்கிறாற் போலப் போக.

"வேண்டாம்! வேண்டாம்! நான் அங்கிருந்து கிளம்பறப்பவே பொரியல் எல்லாம் செஞ்சு கொண்டு வந்துட்டோம். இங்க கொஞ்சமா பருப்பு சாதம் வச்சோம்" என்றார் பாட்டி.

"நல்லாருக்கே! அண்ணனும், அண்ணியும் வந்திருக்காங்க பருப்பு சாதமா? நான் ஏதாவது செய்யறேன்... காளான் இருக்கே? காளான்பிரியாணி பண்றேன்" என்று சமையல் அறைக்குள் உற்சாகமாக நுழைய மற்றவர்கள் எல்லாரும் ஒருவரையொருவர் வியப்பாகப் பார்த்துக் கொண்டார்கள்.

"என்னதிது? அதிசயமா இருக்குது. கொஞ்சமா பாலைக் காய்ச்சிக் குடின்னாக் கூட குடிக்க மாட்டா...!



இப்ப என்ன ஆச்சு!" என்று கன்னத்தில் வரலட்சுமிப் பாட்டி கை வைக்க.

"ஜாதகம் பாக்கணும்! குரு பலன் வந்துருச்சோ என்னமோ?" என்றான் சந்திரகுமார் தனக்குள் முணுமுணுத்துக் கொள்வது போல.

* * *

ரஞ்சனி ஆழ்ந்த அமைதியுடன் நடமாடிக் கொண்டிருந்தாள்!

அவள் வாய் திறந்து எது கேட்டாலும் மறுக்கப் பட்டதில்லை அந்த வீட்டிலே. தாய், தந்தையரை இழந்து நின்றபோது தாய் மாமன் என்ற முறையில் தியாகேசவரன் அவளைத் தன் வீட்டுக்கு அழைத்து வந்தார். அப்போது அவளுக்குப் பத்து வயது.

அப்போது அத்தை அரவணைத்துக் கொண்டார். இப்போது வரைக்கும் அவளைத் தன் சொந்த மகளாகவே நடத்துகிறார்.

கணவருடைய தங்கை மகள்தானே என்று அவர் நினைத்ததே இல்லை. ஆனால் யாரும் எப்போதும் கவியரசனுக்கு அவளைக் கல்யாணம் செய்து வைப்பது என்று பேசியதும் இல்லை.

அவளுக்குள் அந்த நப்பாசை இருந்ததோ என்னவோ தெரியவில்லை. இதுவரையிலும் அவள் அது குறித்து யோசிக்கவும் இல்லை. ஆனால் ஒன்று புரிந்தது. ஹம்சவர்த்தினியின் வருகை அவளுக்குள் ஒரு ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.

"நரம்சவர்த்தினி, நரம்சவர்த்தினி..." என்று மாற்றி மாற்றி அத்தான் தன்னிடத்தில் பேசிச் சிரிப்பது முதலில் அவளுக்கு வலித்தது. அது எதனால் என்று யோசித்தாள். தான் மட்டுமே உரிமைக்காரியாக வலம் வந்த அந்த வீட்டில் நரம்சவர்த்தினி வந்து ஆட்சி செய்யப் போகிறாள் என்பதனால் ஏற்பட்ட ஏமாற்றம் என்றுதான் தோன்றியது.

ஜவுளிக் கடையில் வைத்து அவளைப் பார்த்த போது அவளுக்கு முற்றிலும் புரிந்து போனது. ஏன், கவியரசனுக்கு அவளைப் பிடித்துப்போனது என்று.

தறுதறுவென்ற நடை உடை பாவனையும், சுழன்று அடிக்கிற கருவண்டு விழிகளும், அளவான அழகான உடல் அமைப்பும், "வெடுக்" வெடுக்கென்று கை வீசி நடக்கிற கம்பீரமும் அத்தானுக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும் தோன்றியது.

மறுபடியும் ஏமாற்றம் தாக்கியது!

வீட்டிற்கு வந்த பின் யோசித்தாள். ஒருவேளை அத்தான் மேல் தனக்கு நாட்டம் இருக்கிறதோ என்று.

வீட்டில் அடிக்கடி பேச்சு நடக்கும். சென்ற வருடத்தில் ஒரு நாள்!

உதவிக்காரப் பெண் ஒருத்தியை சொந்தத் தாய் மாமனுக்கே திருமணம் செய்தார்கள் என்று. வீட்டிற்கு வந்து கவியரசன் சொல்லிக் கொண்டிருந்தான்.

"அப்பா...! நியாயப்படி க்ளோஸ் ரிலேடிவ்ஸ் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுங்கறாங்க... அதிலயும் தாய் மாமன்... ஆகவே.. ஆகாதுப்பா..." என்று.



"அது சரிடா! அவங்க குடும்ப விஷயம்" என்றார் அப்பா.

"அது இல்லப்பா! எனக்குத் தெரிஞ்சு ரெண்டு ஃபாமிலியில பாத்திருக்கேன். முதல் குழந்தை மூளை வளர்ச்சி இல்லாமப் பொறந்து ரொம்பக் கஷ்டப் பட்டாங்க" என்று.

அப்போதெல்லாம் ரஞ்சனி அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், தங்கள் வீட்டில் முதன் முதலாக.

"டேய்! பொண்ணுப் பாக்கலாமா?" என்று மாமா கேட்டபோது

"ரெண்டு வருஷம் போகட்டும்பா..." என்றான் கவியரசன்.

"இருபத்தைஞ்சாச்சேடா?"

"இருபத்தேழாகட்டும்பா!" என்றான். அதோடு சரி அதற்குப் பிறகு கல்யாணப் பேச்சே எடுக்கவில்லை.

ரஞ்சனி இப்போது இருபத்தோரு வயதின் ஆரம்பத்தில் இருந்தாள்.

அத்தானுக்கேற்ற பெண் என்பதையெல்லாம் விடத் தான் இந்த வீட்டை விட்டுப் போவதுஎன்பதை நினைத்தாலே அவளுக்குப் பிடிக்கவில்லை.

என்ன இருந்தாலும் கவியரசனின் மனைவிதான் இந்த வீட்டிற்கு அதிகாரியாக இருப்பாள். தான் வந்து போக வேண்டும் என்ற கவலை தோன்றியது.

ரஞ்சனியின் பெற்றோர் சொத்து என்று எதையும் வைத்து விட்டுப்போகவில்லை என்பதால் தாய் மாமன்

என்ற அளவில் பொறுப்பெடுத்துக் கொண்டு அழைத்து வந்து வீட்டில வைத்து வளர்த்ததே பெரிய விஷயம். இதில் தான் உரிமை கோர முடியுமா? என்று யோசித்தாள்.

நூலகக் கடையில் ஹம்சவர்த்தினியைப் பார்த்து விட்டு வந்தவுடனேயே அவள் முடிவெடுத்துக் கொண்டாள். இனிமேல் தன் மனதில் அத்தானைப் பற்றிய எந்த நினைவையும் வைத்துக் கொள்ளக் கூடாது.

'அது சரி! இதுவரைக்கும் அப்படி நினைத்தோமா என்ன? ஆனாலும் இதுவரை அப்படி நினைப்பதற்கான ஒரு சுதந்திரமாவது இருந்தது. இனிமேல் அது இல்லை.'

தெளிவான ஒரு முடிவெடுக்க வேண்டிய நிலையில் இருந்தாள். எடுத்தாள். இனிமேல் கொண்டு மாமா தன்னை அழைத்துத் தன் திருமணம் பற்றிக் கேட்டால் என்ன சொல்வது என்று முடிவெடுத்துக் கொண்டாள்.

அதன் பிறகு மனம் லேசாகியது. 'இது என்னுடைய முடிவு. அந்தக் கவியரசனும், ஹம்சவர்த்தினியும் இந்த முடிவை மாற்றி விட முடியாது' என்று எண்ணிக் கொண்டாள்.

தன் முறைக்காகக் காத்திருந்தாள்.

* * *

''ஹலோ!'' என்றாள் ஹம்சவர்த்தினி. அவனுக்கு ஆச்சரியம்.



'இந்த நேரத்தில் யார் அழைக்கிறார்கள் என்று எடுத்துப் பார்த்தான். இதுவரையில்லாத எண். இந்த ஒரு வார காலத்துப் பழக்கத்தில் ஆச்சரியம் என்னவென்றால் அவள் கவியரசனின் செல்போன் நம்பரை வாங்கிக் கொள்ளவேயில்லை.

''யார்?'' என்றான்.

''மேடம்! ராங் நம்பர் பேசறேன்'' என்று குரல்.

புரிந்து போனது கவியரசன்.

''ஹலோ...! உங்களுக்கு விஷயம் தெரியலையா? ராங் நம்பர் ரைட் நம்பராயிருக்க...'' என்றான்.

அவன் சிரித்தான். பிறகு சொன்னான். ஆழ்ந்த குரலில் சொன்னான்.

''வர்த்தினி! இன்னைக்கு நீ சொன்ன விஷயங்களைக் கேட்டவுடனே என் மனசு ஒரு மாதிரி ஆயிருச்சு...'' என்றான்.

''நான் இப்பத்தான் ஒருவழியாத் தேறியிருக்கேன்'' என்றாள் ஹம்சவர்த்தினி.

''ஆமா! காலமும், மறதியும் தான் சில காயங்களை ஆத்தணும்'' என்றான்.

''அது சரி! இந்த நேரத்துல கூப்பிடறீங்க?'' என்றாள்.

''ஏன்? கூப்பிடக் கூடாதா? எந்தெந்த நேரத்துல கூப்பிடணும்னு ஒரு அட்டவணை போட்டுக் குடு.''

''ஆமா! உங்ககிட்டே அட்டவணை போட முடியுமா? அந்த அட்டவணையைக் கூட என் இஷ்டத்துக்குத்தான்

போடுவேன்னு மிரட்டுவீங்க." என்றவள் மெல்லச் சிரித்துக் கொண்டு கேட்டாள்.

"ஏன்...! கவியரசன்! என் முகத்துல என்ன அப்படி வெளிச்சமாவா தெரியுது?" என்றாள்.

"ஏது.. அடடா! அதுதான் டன் கணக்கில வழியுதே..."

"அது.. உங்களுக்கு! நான் கேட்பது என் முகத்துல சேன்ஜ் அப்பட்டமாவா தெரியுது?"

"ஏன் கேக்கறே!?"

"இல்லே! அண்ணா வந்திருக்கான்! நான் உங்களைப் பாத்துட்டு வந்தேனே... என்னத்தைக் கவனிச்சானோ தெரியலை...! எந்த பிரண்டைப் பார்த்துட்டு வரேன்னு குடைஞ்சு குடைஞ்சு கேட்டான்."

"அப்புறம்!" என்றான் ஆர்வமாக.

"அப்புறம்... விழுப்புரம்தான்!" என்றாள் எரிச்சலாக.

"ஏன்.. கண்ணாபுரமா இருக்கக் கூடாதா? திருவனந்தபுரமா.. இருக்கக் கூடாதா?" என்றான்.

"விளையாடாதீங்க...!"

"நீ அங்கே... நான் இங்கே...! என்னத்தை விளையாடறது..."

"ஐய்யோ!" என்று அவள் சிணுங்க அவன் சிரித்தான்.

"சரி...! சரி..! சொல்லு!" என்றான்.

"அப்புறம்.. என்ன? நான் இந்தப் பக்கம் வந்ததும் எங்கண்ணகிட்டே குருபலன் வந்துருச்சு போல இருக்கு. ஜாதகம் பார்க்க வேண்டியதுதான் அப்படிங்கறான்."



"ஆமா...! பேக் பண்ணி அனுப்பச் சொல்லு! இல்லேன்னா சரின்னு சொல்லச் சொல்லு.. குண்டு கட்டாத் தூக்கிட்டு வந்துடறேன்" என்றான்.

"கை சுளுக்கிக்கும்!"

"நீதி விட நீ இருக்கியே?" என்றான்.

"எல்லாத்துக்கும் பதில் வச்சிருக்கீங்க...!" என்றாள்.

"ம்.. அப்படியா!" என்றான் பொருள் பொதிந்த சிரிப்புடன்.

அவள் ஒரு கணம் மௌனமாகிவிட்டாள்.

"ஹேய்! என்ன பேச்சைக் காணோம்?" என்றான்.

"போதும் பேச்சு.. நாளைக்குப் பேசலாம்" என்றாள்.

அவன் சிரித்து விட்டு "எங்க வீட்லயும் கல்யாணப் பேச்சை ஆரம்பிக்க வேண்டியதுதான்."

"நீங்களேவா பேச்சை ஆரம்பிப்பீங்க!"

"ஆமா."

"ஐயே! நல்லா இருக்குமா?"

"என்னத்தை நல்லா இருக்கிறது? நேரடியாக கேட்பேன்! அப்பா ரஞ்சனிக்குக் கல்யாணம் பண்ணலாம்ப்பான்னு சொல்லுவேன்."

"ஓ...!" என்றாள்.

அந்த நேரத்தில் அவள் மனதில் அந்த எண்ணம் தோன்றியது.

ரஞ்சனியைப் பார்த்து கவியரசனுடைய மனைவி என்று தான் நினைத்ததைப் போலவே ரஞ்சனியின்

மனத்திலும் ஏதோ ஒரு மாற்றம் இருந்தாற்போலத் தோன்றியது. வாடிய முகம் நினைவுக்கு வந்தது.

மெல்லிய குரலில் கேட்டான்!

"என்.. கவியரசன்! உங்க பாமிலியில எல்லாம் முறைப் பொண்ணைக் கல்யாணம் பண்ண மாட்டாங்களா?"

"சேச்சே! அந்தப் பழக்கமே கிடையாது. அதுவும் நானும் ரஞ்சனியும் ஒண்ணா வளர்ந்தவங்க தெரியுமா?" என்றான்.

அவன் மனம் அமைதியடைந்தது.

"இப்ப... நான் எதுக்கு கூப்பிட்டேன் தெரியுமா?"

"குட்நைட் சொல்றதுக்கு!"

"உதைப்பேன்...! நம்ம மேரேஜ்க்கு முதல் ஸ்டெப் எடுக்கப் போறேன்...! எனக்காக பிரே பண்ணிக்க..." என்றான்.

"பண்ணிக்கறேன்! ஆனா, என் பிரண்ட்ஸ் எல்லாம் எனக்காக இப்பவே பிரே பண்ணிக்கறாங்களாம். ஒரே அனுதாபம்தான். போயும் போயும் இந்த ஆள்கிட்டே போய் மாட்டிகிட்டிருக்காளேன்னு..."

"அதெல்லாம் சும்மா சொல்றது. எல்லாருக்கும் உன் மேல பொறாமை..." என்றான்.

"நினைப்புத்தான்!"

"ஆமா! இப்பல்லாம் எப்பவும் உன் நினைப்புத்தான்..."

"போதும்...!" என்றாள் வெட்கத்துடன்!



"அதெப்படி? வெறும் நினைப்பு மட்டும் போதும்னா.. அது எப்படி? நினைக்கணும். நினைக்கறதெல்லாத்தையும் பேசணும் பேசறதெல்லாத்தையும்.. செயல்ல..."

"ப்ளீஸ்! கவியரசன்" என்றாள் வெட்கத்துடன்.

"தட்ஸ்... குட்! வெட்கம் வருதுன்னா ஏதோ புரியுதுன்னு அர்த்தம்..." என்றவன் பேச்சை மாற்றி, "நிஜமாத்தான் பெஸ்ட் ஆஃப் லக் சொல்லு! நான் இன்னைக்கு அப்பா கிட்டே போயி அப்பா... அப்பா! ரஞ்சனிக்கு மேரேஜ் ஏற்பாடு பண்ணிடலாம்னு சொல்லப்போறேன்" என்று அறிவித்தான்.

அவளுடன் மேலும் சற்று நேரம் பேசிவிட்டு அப்பாவின் அறைக்குப் போனான். ஈஸிசேரில் சாய்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்த அப்பாவிடம் சொன்னான்.

"அப்பா! ரஞ்சனிக்கு மாப்பிள்ளை பாத்தர்லாம்பா" என்று.

அப்பா அதை ஏற்றுக் கொண்டார். கூடவே மகனின் முகத்தை உற்றுப் பார்த்தபடி யோசனையிலும் ஆழ்ந்தார்.



23

சந்திரகுமார் சிந்தனையிலாழ்ந்தான்.

வந்த இரண்டு நாட்களாக கவனித்துக் கொண்டிருந்தான்.

வருடத்தில் இரண்டு முறையாவது இப்படி நாலைந்து நாட்கள் விடுமுறை எடுத்துக் கொண்டு பெற்றோருடன் தங்க வேண்டுமென்று வருவான். அப்போதெல்லாம் அம்மா மற்ற எல்லா வேலைகளையும் ஒதுக்கித் தள்ளி வைத்து விட்டு அவனோடு நேரம் கழிப்பார்.

இந்த முறை மேனேஜர் ஆனாலும் ஆனார்... எப்போது பார்த்தாலும் லோன் மேளா, ரீஜனல் ஆபீஸ்ல மீட்டிங் என்று ஓடிக் கொண்டிருந்தார்.

தங்கை ஒரு பக்கம் கல்லூரி விட்டதற்குப் பிறகு மாலை நேரங்களில் தாமதமாக வந்தாள். வீட்டிலும் கதவைச் சாத்திக் கொண்டு செல்போனில் பேசு.. பேசு என்று பேசுகிறாள்.

அப்பாவும் வெளிநாடு போயிருக்கிறார். என்ன நடக்குது இந்த வீட்டிலே!

பாட்டி வேறு ஒரு விதமான கதை சொன்னார்.

"டேய்! சந்திரகுமார்.. எனக்குத் தெரிந்து அம்மாவும் மகளும் இப்படி சண்டை போட்டதில்லை. யாரோ கவியரசன்னு ஒரு பையன் வந்தான் பாரு! அதில் இருந்து அம்மாவுக்கும் மகளுக்கும் ஆகவே மாட்டேங்குது'' என்று வேறு சொல்லி வைத்தார்.

சந்திரகுமார் சிந்தனையில் ஆழ்ந்தான்.

அன்றைக்கு அம்மா வரும்வரை காத்திருந்தான். தமயந்தி இரவு ஒன்பது மணிக்குத்தான் வந்தார்.



சுதாவையும், வரலட்சுமிப்பாட்டியையும் வசதியாக சினிமாவுக்கு அனுப்பி வைத்தான்.

அம்மா வருவதற்கு சற்று முன்தான் ஹம்சவர்த்தினி வந்தாள்.

எட்டு மணி வாக்கில் வந்தவள் எல்லாம் எங்கே என்று விசாரித்து விட்டு.

"சாப்பிட்டியா?'' என்றாள்.

"ம்.. தோசை வார்த்துக் குடு'' என்றான்.

ஹம்சவர்த்தினி தோசை வார்த்துக் கொடுத்தாள். வரலட்சுமிப் பாட்டி எப்போதுமே மிளகாய்ச் சட்டினி அரைத்து வைத்திருப்பார். இன்றைக்கு சாயங்காலமே ஏதோ குருமாவும் வைத்து விட்டுப் போயிருந்தார். அதனால் சூடாக தோசை வார்த்து ஹம்சவர்த்தினி தட்டில் போடப் போட சந்திரகுமார் ஆசையாக உள்ளே தள்ளினான்.

"என்ன இருந்தாலும் வர்த்தினி. உங்கண்ணிக்கு நம்ம வீட்டுல சுடற மாதிரி முறுகலா தோசை வார்க்க வர்றதில்லே...!'' என்றான்.

ஹம்சவர்த்தினி உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள். அங்கே சுதாவிடம் சரண்டராகி விடுவான் என்று தெரியும்.

இரண்டு தோசை உள்ளே போனதும் மெதுவாகக் கேட்டான்.

"ஏண்டி! வர்த்தினி... அது யாரு கவியரசன்!'' என்று.

ஹம்சவர்த்தினி அடுப்பு மேடையை நோக்கியபடி நின்று தோசை வார்த்துக் கொண்டிருந்தவள் ஒரு நிமிடம்

திடுக்கிட்டாள். அண்ணன் எந்த அளவுக்கு விவரம் தெரிந்து கொண்டு கேட்கிறான் என்று தெரியவில்லை. அதனால் எச்சரிக்கையாகக் கேட்டாள்.

"என்ன.. கேட்கிறே!" என்று.

சந்திரகுமார் அடுத்த விள்ளலை வாயில் போட்டுக் கொண்டே சொன்னான்.

"இல்லே! அந்த ஆள் விஷயமா உனக்கும், அம்மாவுக்கு அடிக்கடி சண்டை வருதாமே... ஏன்.. அப்படி?" என்றான்.

ஹம்சவர்த்தினி இந்த நேரத்தில் அதுவும் அவளுக்கும், கவியரசனுக்கும் எல்லாம் ஒத்துப்போகிற நேரத்தில் இப்படி ஒரு விஷயத்தை எதிர்பார்க்கவில்லை. இதை எப்படி சமாளிப்பது என்று தெரியவில்லை. ஒரு கணம் யோசித்தாள். பிறகு சமீபத்தில் தனக்கும், கவியரசனுக்கும் ஏற்பட்டிருக்கிற உறவு நிலைமையை இப்போதைக்குச் சொல்ல வேண்டாம் என்று தீர்மானித்தாள். பிறகு சொன்னாள்.

"அது வந்துண்ணா! அந்தக் கவியரசன் சார் ராங் கால் மூலமா அறிமுகமானாரு. இந்த ராங் கால் சமாச்சாரம்தான் எனக்கும் பிடிக்காதில்லே. அது மட்டுமில்லாம ரெண்டே நாள்ளே அம்மாவை வந்து பார்த்து பிரண்ட்ஷிப் டெவலப் பண்ணிட்டாரு. அப்ப எனக்கு அது கொஞ்சம் அதிகமாத் தோணுச்சு. அதான்..." என்றாள்.

கவனிக்காதவன் போலவே தங்கையின் முகத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான் அண்ணன் என்று அவளுக்குத் தெரியவில்லை.



"ம்..!" என்றான். "சரி! இப்ப ஒண்ணும் பிரச்சினையில்லையே! இப்ப அம்மாவுக்கு பிரண்டாயிட்டாரா?" என்றான்.

அவள் அடுப்பை நோக்கித் திரும்பி நின்று கொண்டு சொன்னாள்.

"எனக்கும் நல்ல பிரண்ட்டாயிட்டாரு" என்றாள். அப்படிச் சொல்லும் போது தங்கையின் குரல் குழைந்தாற் போலத் தோன்றியது.

அதை மனதில் நன்றாகக் குறித்துக் கொண்டான் சந்திரகுமார். ஆனால் அம்மாவிடம் பேசும்போது அம்மா தேர்மாறாகச் சொன்னார்.

"கவியரசன்கிட்டே பிரண்டாயிட்டேன்னு சொன்னாளா? சும்மா கதை...! தேடித் தேடிப் போய் சண்டை போட்டா! அது அந்த மீனா விவகாரத்துலருந்தே அவளுக்கு கொஞ்சம் பயம்."

"அது சரி.. இப்ப நிலைமை என்ன?"

"அதென்னமோ! இந்தப் பத்து நாளா கவியரசனைப் பத்திப் பேசறதேயில்லை. நானும் அந்த மேட்டரை சீரியஸா எடுத்துக்கலே!" என்றார்.

"ஏம்மா! உனக்குக் கவியரசனை ரொம்பப் பிடிக்குது போல இருக்கு!"

"ரொம்ப நல்ல பையன்ப்பா! இவகிட்டே சரிக்குச் சரியா வம்புக்கு நின்னான். இவளும் அவனை சும்மா சீண்டுவா அதான். மத்தபடி எத்தனை கஸ்டமர் கொண்டு வந்து விட்டிருக்கான் தெரியுமா?" என்றார்.

"ம்...!"

"அது மட்டுமில்லே! இன்னொரு விஷயமும் இருக்கு" என்று அந்த விஷயத்தையும் சொன்னார்.

முழுவதும் கேட்டதும் சந்திரகுமாருக்கே கொஞ்சம் கவலையாகிப் போனது.

எதற்கும் இந்த விஷயத்துக்கு ஒரு முடிவு கட்டி விட்டுப் போவதுதான் நல்லது என்று நினைத்தான்.

அதற்கேற்ப இன்னொன்றும் நிகழ்ந்தது!

அன்றிரவு!

எட்டு மணியிருக்கும்!

அன்றைக்கு அலுவலகத்தில் வேலை கொஞ்சம் இருந்தது.

முடித்து வீட்டுக் கிளம்பிய கவியரசன் தன்னைத் தேடிவந்த ஆளைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தான்.

பரிச்சயமான முகம் போல இருந்தது.

"நீங்க?" என்றான்.

வந்தவர் தான் யார் என்பதைச் சொன்னார். இருவரும் ஒருவரையொருவர் சற்று அளவெடுத்தாற்போல் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

* * *

"அப்பா!" என்று ஓடிப் போய்க் கட்டிக் கொண்டாள் ஹம்சவர்த்தினி.

அப்பா அன்புடன் மகளின் தலையைத் தடவிக் கொடுத்தார்.



"மூணு மாசம்! போங்கப்பா!" என்று சிணுங்கிய மகளைப் பார்த்து மறுபடியும் அன்புடன் சிரித்தார்.

சந்திரகுமாரும் அன்புடன் தழுவிக் கொண்டான். மகளைத் தடவிக் கொடுத்த அதே அன்புடன் மருமகளின் தலையையும் தடவி ஆசீர்வதித்தார்.

மனைவி ஏனோ அமைதியாகவே நிற்பதைப் பார்த்தார். சந்திரகுமாரின் காரிலும், தமயந்தியின் காரிலுமாக வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

"அண்ணா! அம்மாவும் அப்பாவும் பேசிகிட்டு வரட்டும்" என்று கண் சிமிட்டிச் சிரித்த ஹம்சவர்த்தினி சகோதரனின் காரில் ஏறிக் கொண்டாள்.

தமயந்தி காரை ஓட்ட சீனிவாசன் ரிலாக்ஸ்டாக அருகில் அமர்ந்து கொண்டார்.

"கஸ்டம்ஸ் அது இதுன்னு படுத்தி எடுத்துட்டாங்க!" என்றார். மெதுவாக ஒரு கேள்விக்குறியான ஒரு பார்வையுடன் மனைவியைத் திரும்பிப் பார்த்தார்.

"என்ன தமயந்தி! ஒரு விதமா சைலன்டாயிருக்கே..." என்றார்.

"இல்லையே! அப்படியொன்றும் இல்லையே" என்றார் தமயந்தி.

அவர் சிரித்தார். பொருள் பொதிந்த சிரிப்பு.

"உனக்கு என் மேல கோபம்" என்றார்.

"இல்லையே!"

"அப்ப வருத்தமோ?" என்றார்.

தமயந்தி ஒன்றும் பேசவில்லை.

"தமயந்தி! உனக்குத் தெரியாது. அந்த மீனாப் பொண்ணுக்கு அந்த மாதிரி ஒரு அசம்பாவிதம் நடந்தப்ப உன் மக என்ன கஷ்டப்பட்டான்னு. எனக்கே அந்த நிகழ்ச்சியால மனசு கலங்கிப் போச்சு. அதனாலதான் அவனுக்கு செல்போன் நட்புன்னு சொன்னவுடனே ஒரு பயம். அதுல நியாயமிருக்கற மாதிரி எனக்குத் தோணுச்சு. ஆனா மறுபடியும் பேசினா... அப்ப நல்ல விதமா சொன்னா..." என்றார்.

"என்ன?" என்றார்.

"அதான்.. கவிதனா நம்ம பிரண்ட்கிட்டே ஓராத கம்ப்ளெயின்ட் குடுத்து..."

"ஓ! அப்படியெல்லாம் செய்ய வேண்டிய அவசியம் என்ன?"

"உனக்குத் தெரியாதா? உன் மகளை என்னன்னு நெனச்சே! ரொம்பப் பிடிவாதமான ஆளு...! அப்புறம்தான் தெரிந்தது அந்தப் பையன் தியாகேசவரனோட பையன்னு."

"ஓ...! தியாகேசவரனோட பையனா? சொல்லவே இல்லையே."

"சரி.. அதை விடு! ஆனா.. இப்ப ரெண்டு பேரும் பிரண்ட்ஸாயிட்டாங்க தெரியுமா?"

"ஓஹோ...!" என்றார் இறங்கிய குரலில்.

"ஓ.. அதையும் சொல்லலையா? சொன்னா ஒரு வேளை திட்டுவேன்னு நினைச்சிருப்பா.. விடு...! அவளும் சின்னக் குழந்தையில்லலே! யோசிக்கிற பொண்ணு தான்..." என்றார்.



"ரொம்ப இளைச்சுட்டீங்க" என்றார் தமயந்தி கணவனைத் திரும்பிப் பார்த்து.

"அப்பாடா! இத்தனை விளக்கத்துக்கப்புறம்தான் என்னைப் பத்தி நினைக்கத் தோணிச்சாக்கும்" என்றார்.

தமயந்தியின் முகம் சற்றே சிவந்தது.

"இல்லே! நீங்களே என்னைத் தப்பா நினைச்சீங்களோன்னு."

"மக்கு...! உன்னைப் போய்த் தப்பா நினைப்பேனா! இன்றைய காலத்துல ஆபத்து எதிர்பாராத இடத்துல இருந்தெல்லாம்.. வருது.. அதுக்காக சொன்னேன்" என்றார்.

தமயந்தி ஒன்றும் பேசவில்லை.

"தமயந்தி! உன் கைச்சாப்பாடு எப்படா சாப்பிடுவோம்னு ஏக்கமா இருக்கு! உங்கம்மா செய்வாங்களே.. புளிக்குழம்பு... அதுக்கெல்லாம் ஏங்கிப் போயிட்டேன்..." என்றார்.

"நீங்க இந்த அசைன்மெண்ட்டை அவாய்ட் பண்ணியிருக்கலாம்" என்றார்.

"அப்படியில்லம்மா! ஒண்ணு கிடைச்சா ஒண்ணு கிடைக்காது தெரியுமில்லே! இருக்கறது இன்னும் நாலு வருஷ சர்வீஸ்! அதுல வெளிநாடு கிளிநாடுன்னு போய்ப் பாத்துட்டு வந்தா வேண்டியதுதான்.." என்றார்.

அதற்குப் பிறகு தமயந்தியும் சீனிவாசனும் உற்சாகமாகப் பேசிக் கொண்டு வந்தாலும் கவியரசனுடன் நட்பாகி விட்டது என்பதை ஏன் மகள் தெரிவிக்க வில்லை

என்ற எண்ணம் தோன்றி உறுத்திக் கொண்டேதான் இருந்தது.

இன்னொரு விஷயம் இருக்கிறதே! அதை வேறு கணவரிடம் சொல்ல வேண்டும் அதற்கு என்ன சொல்வாரோ என்று பயமாகவும் இருந்தது.

அந்த நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது.

* * *

"கவியரசன்! அப்பா.. வந்துட்டாங்க" என்று மகிழ்ச்சியோடு போனில் கிசுகிசுத்தாள் ஹம்சவர்த்தினி.

"தெரியும்! மேடம் சொன்னாங்க! ஆக்சுவலா இன்னைக்கு முழுமையான ஒரு அசைன்மெண்ட் ஒண்ணு இருந்தது" என்றான்.

"கவியரசன்.. என்ன அது சஸ்பென்ஸ்" என்று மறுபடியும் கேட்டாள்.

"அதுதான் சஸ்பென்ஸ்னு சொல்லிட்டேனே கொஞ்சம் பொறுக்க வேண்டியதுதான்" என்றான் கவியரசன்.

"அப்பா.. வேற வந்துட்டாங்க! பாத்து எதுவும் பிரச்னை இல்லாமப் பாத்துக்குங்க" என்றாள் ஹம்சவர்த்தினி.

"மேடம்! அதெல்லாம் எங்களுக்குத் தெரியும்! அது விடு.. இப்ப நீ என்ன பண்ணிகிட்டிருக்கே!"

"நான் சும்மாதான் இருக்கேன். இன்னைக்கும் நாளைக்கும் லீவில்லே! அம்மாவும், அப்பாவும் மாங்காட்டு கோயிலுக்குப் போயிருக்காங்க... அண்ணனும் அண்ணியும் கிளம்பிப் போயிட்டாக! பாட்டி நல்லா தூக்கத்துல இருக்காங்க..." என்றாள்.



"அப்பப் புறப்பட்டு வா! அன்னைக்கு வீடு நாங்க வந்து சண்டை போட்டே..."

"இன்னைக்கி வொர்க்கிங் நாளா வந்து என்ன நடக்குதுன்னு பாரேன்..." என்றான்.

"ஹை! இது நல்ல ஐடியாவா இருக்கே" என்று உற்சாகமாய் புறப்பட்டாள்.

அலுவலகம் மட்டும்தானாம் அது!

ஓரளவு பெரிய அலுவலகமாகவே இருந்தது. உதவியாளர்கள் அவன் கண்ணசைவிற்கு ஏற்ப நடமாடுவதை வியப்புடன் கவனித்துக் கொண்டிருந்தாள்.

அன்றைக்கு ராகவ் வேறு வந்திருந்தான்.

"ராகவ்! இவங்க ஹம்சவர்த்தினி" என்று அறிமுகப் படுத்த.

"அப்படிப்போடு!" என்று சிரித்தான்.

ஹம்சவர்த்தினி கேள்விக் குறியாக கவியரசனைப் பார்க்க அவன் புன்னகையுடன் சொன்னான்.

"இவன்தான் யார் யாரையோ பிடிச்சு உங்க அட்ரஸைக் கண்டு பிடித்துக் கொடுத்தவன்..." என்றான்.

அவள் ஒருவிதமாகப் பார்க்க.

"சேச்சே! நீ நினைக்கற மாதிரி இல்லே ரொம்பப் பொறுப்பான பையன். நான்தான் சொன்னேனே ஒரு குறிப்பிட்ட காரணத்துக்காக உங்க அம்மாவைச் சந்திக்க வேண்டியிருந்ததுன்னு..."

அதற்குப் பிறகு உள்ளே அழைத்துப் போனான்.

"ப்ளீஸ்! உங்க தொழிலைப் பத்தி சொல்லுங்களேன்" என்றாள் ஆர்வமாக.

"தட்ஸ் குட்! வருங்கால கணவர் என்ன செஞ்சுகிட்டிருக்கான்னு தெரிஞ்சுக்கறதுல ஒண்ணும் தப்பேயில்லை" என்றான்.

அவள் ஆர்வமாகக் கேட்க ஆரம்பித்தாள். மூனு மாடிகளில் இருந்த அவனது அலுவலகத்தை ஒவ்வொரு இடமாகக் காண்பித்துக் கொண்டே சொன்னான்.

"பப்ளிசிட்டின்னு சொன்னா டார்கெட்டட் ஆடியன்ஸ்னு கிடையாது. பொதுவா எல்லாருக்கும் தெரிஞ்சுக்க வேணும்னு நினைக்கறோம்ன்னா.. அதுக்குப் பேரு பப்ளிசிட்டி. ஆனா அட்வர்டைஸ்மெண்ட்னா அப்படியில்லே... இன்னாரைத்தான் இது போய்ச் சேரணும்னு முடிவெடுத்து அதுக்கேற்ப அந்த விளம்பரம் செய்யணும்."

"ம்..." என்றாள் ஆர்வமாக. அந்தக் கணம் ஆர்வம் நிறைந்த அவள் முகம் அவன் மனத்தைக் கொள்ளை கொள்ள கூர்ந்து பார்த்தான்.

அவள் செல்லமாகத் தோளில் அடித்தாள்.

"வழியாதீங்க" என்று.

அவன் புன்னகைத்தான். "நீ அப்படி படபடன்னு புறா சிறகை அடிச்சக்குமே அது மாதிரி கண்ணை அடிக்கறப்ப... எனக்கு கான்ஸன்ட்ரேட் பண்ண முடியலே..." என்றான்.

"போதும்...! விஷயத்துக்கு வாங்க!" என்றாள்.



"வாரேன்!" என்று நெருங்கி அவளைத் தன் கைப்பிடியில் கொண்டு வர முயற்சிக்கையில் அவள் சொன்னாள்.

"நான் இதைச் சொல்லலே! உங்க பிஸினெஸ் பத்தி எக்ஸ்ப்ளெயின் பண்ணீங்களே.. அதைச் சொன்னேன்" என்றாள்.

"ம்...!" என்று சோகப் பெருமூச்சு விட்டு விலக.

"உங்க அஸிஸ்டெண்ட்ஸ் எல்லாம் பாக்கறாங்க" என்றாள்.

"அவனுங்க கிடக்கிறாங்க.." என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்தான். ஆனால் ஹம்சவர்த்தினி என்ன நோக்கத்திற்காக வந்திருக்கிறாள் என்று அவனுக்குத் தெரியவேயில்லை.

தெரிந்த போது...!

## 24

"சொல்லுங்க... அட்வர்டைஸ்மெண்ட் பத்திச் சொல்றேன்னீங்க" என்றாள்.

"அதான்.. சொல்றேன்.. பாரு...! அட்வர்ட்டைஸ்மெண்ட்னா டார்கெட் ஆடியன்ஸ் இருப்பாங்க.. யாருகிட்டே இதைக் கொண்டு போய்ச் சேர்க்கறோம்.

எப்படிப்பட்ட லைஃப் ஸ்டைல் உள்ளவங்கக்கிட்டே போய்ச்சேரப் போகுதுன்னு முடிவு செய்யணும்'' என்றான்.

''ம்...''

''அதுக்கு முக்கியமான மீடியம்னு சொல்றயில்லே, வழிமுறைகள் அது வேற வேற விதமா.. இருக்கு...! அச்சு மூலமா.. அதாவது பத்திரிகைகள் வார, மாத இதழ்கள் மூலமா செய்யற அட்வர்டைஸ்மெண்ட்...! அப்புறம் அவுட்டோர் மூலமாக கொண்டு போவது...''

''அதாவது.. அந்தப் பொருள் இருக்குங்கறது மனசுல பதியணும். அதானே!''

''ஆமா! வாங்கப் போறவங்க.. யாரோ.. அவங்க கவனிக்கணும்.. உதாரணம் ரேடியோ, டி.வி. இது மாதிரி லெக்ட்ரானிக் மீடியா...!''

''ஓ...!''

''ஒரு ஸ்லாட்ங்கறது 20 செகண்ட்ஸ்ல இருந்து 30 செகண்டு வரைக்கும். வெறும் அறிவிப்பு மாதிரியோ அல்லது உரையாடல் மாதிரியோ.. அல்லது பாட்டு மாதிரியோ சொல்லுவோம்.''

''லைஃப்பாய் இருக்குமிடம்... ஆரோக்கியம் இருக்குமிடம் அப்படீம்பமே...! அது மாதிரியா?''

''ஆமா!''

''அதுக்குப் பேருதானே ஜிங்கிள்ஸ்!'' என்றாள்.

''குட்! தெரிஞ்சு வச்சிருக்கே!''

''இன்ட்ரஸ்டிங்கா இருக்கு...'' என்றாள்.

''ஆமா...! ரொம்ப இன்ட்ரஸ்டிங்கா இருக்கும்! ஒரு குறிப்பிட்ட பொருளை ஜனங்க எல்லா புரிஞ்



சுக்கணுங்கறதைத்தான் நாம பொஸிஷனிங்குன்னு சொல்லுவோம்.

''உதாரணமா?

''ஒரு ஹெல்த் டிரிங் இருக்கு! அது வெறும் ஹெல்த் டிரிங்க் மட்டுமில்லே... குழந்தைகளுக்கும் பிடிக்குதுன்னு சொல்லுவோம்.. சரியா?'' என்றான்.

''சரிங்க... மாஸ்டர்!'' என்றாள்.

அவன் சிரித்தான்.

''ஒரு அட்வர்டைஸ்மெண்ட் ஏஜென்சி நடத்தணும்னா... என்னென்ன வேணும்?''

''இரண்டு விஷயம் முக்கியமா வேணும். ஒண்ணு வந்து பிரண்ட் ஆபீஸ் இன்னொண்ணு வந்து அக்கவுண்ட்ஸ்.

''அவ்வளவுதானா?''

''அவ்வளவுதானவா? அதுலே கிரியேட்டிவ் டிபார்ட்மெண்ட், கிளையண்ட் சர்வீஸ், மீடியா டிபார்ட்மெண்ட்... அப்படீன்னெல்லாம் இருக்கு!''

''விளம்பரத் தொழில் நல்லா இருக்கும் போல இருக்கே...''

''ஆமா! விளம்பரங்கள் எழுதறவங்களை பிரெய்ன் அப்படீன்னு சொல்லுவோம். அப்புறம் சி.ஜி.எம் அதாவது காபி குரூப் ஹெட், சீனியர் ஆர்ட் டைரக்டர்.. கிரியேட்டிவ் ஹெட் அப்படீன்னு நிறைய இருக்காங்க.''

அவனைத் திடீரென்று ஒரு கேள்வி கேட்டாள்.

''அவுட் டோர்ன்னா.. என்னென்ன செய்வாங்க'' என்றாள்.

"ஹோர்டிங்ஸ், வாம்ப்போஸ்டர், ரோடு டிவைடர்ஸ், பஸ்ஷெல்டர்ஸ், சுவுண்டரை இந்த மாதிரி இடமெல்லாம் அடிட்டோர்னு சொல்லுவோம்."

"சரி...! இதெல்லாம் யார் தயார் செய்வா?"

"கிரியேட்டிவ் டைரக்டர்தான்! ஆக்சுவலா நான் ஏஜென்ஸி நடத்தறேன். நார்மலா ஏஜென்ஸிக்காரங்க யாரும் கிரியேட்டிவ் டைரக்டர் வேலை பார்க்கறதில்லோ! ஆனா.. எனக்கு அந்தத் திறமை இருக்கு! அதுலயும் கொஞ்சம் செய்வேன்...!"

"ஆமாமா! உங்க திறமையைப் பத்தி எனக்குத் தெரியாதா?" என்றாள்.

அவன் சுற்று முற்றும் பார்த்தான். யாரும் இல்லை எனத் தெரிந்ததும் அருகில் நெருங்கி நின்றான்... அவள் குறும்பாகப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

"என்னோட திறமையைப் பத்தி உனக்கு என்ன தெரியும்?" என்றான்.

"தெரியும்.. தெரியும்...!" என்று சொன்னாள் குமிழ் சிரிப்போடு.

"ஹேய்...! என்ன தெரியும்.. சொல்லு" என்றான்.

"சண்டை போடறவர்களையே வளைச்சுப் போடத் தெரியும்.." என்றாள்.

"சரி.. விஷயத்துக்கு வாங்க!" என்றாள் மறுபடியும்.

"என்ன விஷயம்? நான் ஏஜென்டாவும் வொர்க் பண்றேன். நெருங்கின பிரண்ட்ஸ் மூலமா கிரியேட்டிவ் வொர்க்கும் பண்றேன். இது தவிர இவன்ட் மேனேஜ்மென்ட்டும் ஒண்ணு பண்றேன்" என்றான்.



"பரவால்லை அட்ராக்டிவாத்தான் இருக்கு!"

"ஆமா படிப்பை முடிச்சுட்டு.. வா...! இன்னும் என்ன மூணு மாசமா? முடிந்தவுடனே நீயும் ஹெல்ப்புக்கு வந்தர்லாம்" என்றான்.

"ஐயோ.. உங்களோடவே வேலையா?"

"வேலையில்லை.. பொண்ணே! நீ முதலாளியா இரு...! நான் வேலைக்காரனா இருக்கேன்.."

"நீங்கதானே! பெரிய வேலைக்காரன் ஆச்சே..." என்றவள் மெதுவாகத் தான் வந்த காரியம் பற்றிப் பேசத் தொடங்கினாள்.

அவன் குறுகு சிரிப்புச் சிரித்தான்.

"சஸ்பென்ஸ்னு சொன்னா.. நம்பணும்" என்றான்.

அவள் முறைத்தாள்!

"சரி.. சரி.. கோவிச்சுக்காதே! எனக்கு மனசே உடைஞ்சு போகும்! அடுத்த வாரத்துல ஒரு முக்கியமான ஃபங்ஷன் இருக்கு! அதுக்கு நீ முக்கியமா வரணும். உனக்கு ஸ்பெஷல் இன்விடேஷன்தான்" என்று ஒரு அழைப்பிதழ் கொடுத்தான்.

அழைப்பிதழே வெகு ஆடம்பரமாக இருந்தது.

"ரொம்ப விலை இருக்கும் போல இருக்கே?"

"இந்தத் தொழில்ல.. இதெல்லாம் சகஜம்! அதெல்லாம்.. கண்டுக்கப்படாது..." என்றான்.

அந்த அழைப்பிதழைப் புரட்டிக் கொண்டிருக்கையில் அவன் சொன்னான்.

"ஹேய்! நீ கண்டிப்பா... வரணும்...! நான் திரும்பத் திரும்ப உன்னை அழைக்கறதுக்கு ஒரு காரணம்

இருக்கு...! வந்தின்னா.. உனக்கு வி.ஐ.பி. ட்ரீட்மென்ட் தான்'' என்றான்.

''சரி... வரேன்!'' என்றான்.

''தாங்க்ஸ்...!'' என்றான்.

''அப்புறம்...!'' என்றான்.

''அப்பாகிட்டே சொல்லி.. ரஞ்சனிக்குக் கல்யாணம் ஏற்பாடு பண்ணச் சொல்லியிருக்கேன்'' என்றான்.

''ஓ...!''

''ஆமா! வீட்டுப் பொண்ணுக்கு கல்யாணம் ஆகாம இருக்கும்போது.. நாம கல்யாணம் பண்ணிக்கிட்டா நல்லா இருக்காது.. இல்லே...'' என்றாள்.

''ஆமா...! மூணே மாதத்துல ரஞ்சனி கல்யாணம் அப்புறம் ஆறு மாசத்துக்குள்ள நம்ம கல்யாணம்'' என்றான்.

''அதென்ன... அப்படியொரு கணக்கு.''

''எல்லாமே... ஒரு விதமான கணக்குதான்! இப்ப ரஞ்சனிக்கு அம்மாவோ.. அப்பாவோ இருந்திருந்தா கணக்கு வேற மாதிரியிருக்கும். இப்ப எனக்கும் அவளுக்கும் அடுத்தடுத்துக் கல்யாணம் நடந்தா.. ரஞ்சனி தலை தீபாவளி, பொங்கல்ன்னு நம்ம வீட்டுக்கு வரும் போது நாம கிளம்பிகிட்டிருந்தா.. நல்லாவா இருக்கும்.''

தன் வருங்காலக் கணவனை அன்புடன் பார்த்தாள் ஹம்சவர்த்தினி.

''ரொம்ப.. யோசிக்கறீங்க?'' என்றாள்.



''ஆமா...! எதிர்காலத்துல நம்ம வாழ்க்கை எப்படி இருக்கணும்னு ரொம்ப தூரம் திட்டம் போட்டு வச்சிருக்கேன் தெரியுமா!'' என்றான் கிறக்கமான குரலில்.

அவள் இப்போது அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''எனக்கு இது ரொம்பப் பிடிச்சது'' என்றாள்.

''எது?''

''எல்லாத்திலயும் நம்ம நம்மனு சொல்றீங்களே! அது...'' என்றாள்.

''ம்...'' என்று கிறக்கமாகப் பார்த்தான்.

அவள் ''ம்...!'' என்று மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

* * *

''ஹேய்! நல்லா டிரஸ் பண்ணிட்டு வரணும்...'' ரொம்ப கிராண்டாவும் வேண்டாம். அதுக்குன்னு ரொம்ப சிம்பிளாவும் வேண்டாம் தெரியுதா?'' என்று திரும்பத் திரும்பச் சொல்லியிருந்தான் கவியரசன்.

''என்ன.. இந்தப் பாடு படுத்தறீங்க?'' என்று சிணுங்கினாள் ஹம்சவர்த்தினி.

''ஆமா! என்னா.. ஃபங்ஷன் அமைச்சுக் கொடுக்கற கம்பெனியோட எதிர்கால முதலாளியம்மா.. நீங்க'' என்றான்.

காதுக்குக் குளிர்ச்சியாக அடிக்கடி இந்த வார்த்தைகள் இருந்தன என்பதால் உற்சாகமாக இருந்தாள்.

ஆச்சரியம் என்னவென்றால் அவர்கள் குடும்பத்தையும் நேரில் அழைத்திருந்தான். அப்பா கூட அவளிடம் இயல்பாகப் பேசினார்.

"மேடம்! நீங்க மட்டும் கொஞ்சம் முன்னால வந்துடுங்க" என்றான்.

சீனிவாசனையும் திரும்பி "வேறொண்ணும் இல்ல, சார்! அவங்க பாங்கும், எங்க ஏஜென்சியும் இணைஞ்சு ஒரு இவண்ட் இருக்கு" என்றான்.

"ஓஹோ...!" என்றார்.

நிகழ்ச்சி நான்கு மணிக்கு என்றபோதும் அம்மா பிற்பகல் இரண்டு மணிக்கே போய் விட்டார். மற்றவர்கள் எல்லாரும் மூன்றே முக்கால் மணிக்கு அங்கே இருக்கிறாற் போல பார்த்துக் கொண்டார்கள்.

விழா சரியாக நான்கு மணிக்கு ஆரம்பித்தது. ஏதோ திரைத்துறை சம்பந்தமான விழா.

உண்மையாகவே மலைத்துப் போனாள் ஹம்சவர்த்தினி.

முக்கியப் பிரமுகர்களுக்கெல்லாம் முன்வரிசையில் இடம் ஒதுக்கியிருந்தார்கள் என்றால் ஹம்சவர்த்தினியின் குடும்பத்துக்கு ஐந்தாவது வரிசையில் இடம் ஒதுக்கியிருந்தார்கள்.

ரொம்பவும் பின்னால் இல்லாமல், ஆனால், எல்லா நிகழ்வுகளையும் பார்ப்பதற்கு வசதியாகவும் இருந்தது.

விழா துவக்கத்தில் இருந்தே கவனித்தார்கள். தமயந்தி ஏதோ முக்கியமானவர் போல ஏற்பாடுகளில் இருந்தார்.

"ஸ்பான்சர்ஸ்" என்ற வகையில் மேடையில் ஒரு புறம் அவர்களது வங்கியின் விளம்பரம் இருந்தது.

அறிவிப்புகள் ஆரம்பமாயின!

ஹம்சவர்த்தினியின் குடும்பத்துக்கு இனிய அதிர்ச்சி காத்திருந்தது.

அழகான ஆங்கிலத்திலும், தமிழிலும் அறிவிப்புகளைச் செய்தவர் தமயந்தி!

அதே நேரம் ஹம்சவர்த்தினியின் அருகில் காலியாக அடுத்த இரண்டு இருக்கைகளில் சந்திரகுமாரும், சுதாவும் வந்து அமர்ந்தார்கள்.

"அப்பா! அம்மா... மாஸ்டர் ஆஃப் செரிமனி பண்றாங்க" என்று வியப்பாகச் சொல்லிக் கொண்டிருக்கும் போது சந்திரகுமார் மனைவியுடன் வந்தது இன்னொரு இனிய அதிர்ச்சியாக இருந்தது.

தமயந்தி விழாவுக்குத் தகுந்த மாதிரிதான் அலங்காரம் செய்திருந்தார். தூக்கிக் கட்டினாற் போன்ற சிறிய கொண்டை. அணிந்திருந்த அழகான புடவையை வெகு நேர்த்தியாக அணிந்திருந்தார்.

தனது இனிய குரலில் அவர் அளித்த அறிவிப்புகளுக்கு அருமையான வரவேற்பு.

ஒவ்வொருவரும் பேசி முடித்த பின்பு பொருத்தமாக அவர் கொடுத்த "கமெண்ட்" கலகலப்பை வரவழைத்தது.

சீனிவாசன் ஒருவித பிரமிப்பில் இருந்தார்.

"வர்த்தினி! உங்கம்மாவுக்கு இந்த டேலண்ட் எல்லாம் இருக்குன்னு இதுவரைக்கும் தெரியலயே!" என்றார்.

குரலில் பெருமிதம் தெரிந்தது!

"எல்லாம் கவியரசனின் கண்டுபிடிப்பு" என்றான் சந்திரகுமார்.

அவனுக்குத் தான் அன்றைக்குக் கவியரசனுடைய அலுவலகம் சென்ற நாள் நினைவு வந்தது.

முதலில் ஆச்சரியமாகப் பார்த்தாலும் "வாங்க! வாங்க!" என்று அறிமுகப்படுத்திக் கொண்டதற்குத்தான் அந்த வரவேற்பு.

தேநீர் கொடுத்து உபசரித்தான்.

பிறகுதான் சந்திரகுமார் விஷயத்துக்கு வந்தான்.

"சார்! செல்போன் மூலமா மதரோட தொடர்பு ஆகி விருக்குப் போல இருக்கு. வீட்ல கொஞ்சம் வொரி பண்றாங்க.. அதனால நீங்க எப்படின்னு தெரிஞ்சுக்க லாம்னு வந்தேன்" என்று நேரடியாகவே விளக்கம் சொன்னான் சந்திரகுமார்.

கவியரசன் அதற்குப் பிறகு தான் எப்படி தமயந்தியை சந்தித்தோம் என்பதைச் சொன்னான். பிறகு.

"சார்! கடவுள் ஒவ்வொருத்தருக்கும் ஏதாவது ஒரு வரம் குடுக்கறான். அது அவங்களோட பிளஸ் பாயிண்ட். உங்க மதருக்கு அருமையான குரல். இனிமையான குரல். தெவிட்டாத குரல். திகட்டாத குரல்னெல்லாம் சொல்லலாம். ஒரு விழாவுல அறிவிப்பாளரா இருக்கறவர் சிறப்பாய் செஞ்சா அந்த விழா களை கட்டிடும். அதனால சென்னையில நடக்கற விழாக்களுக்கு மட்டுமாவது.

"மாஸ்டர் ஆஃப் செரிமனி" பண்ணுங்கன்னு கேட்கறதுக்குக் கூப்பிட்டேன்.. முதல்ல மறுத்தாங்க.. அப்புறம் ஒத்துக்கிட்டாங்க" என்றான்.

"ம்...!" என்று சிந்தனையுடன் உள்வாங்கிக் கொண்டான் சந்திரகுமார்.



"மேடம்! அதுல வர்ற வருவாயில ஒரு பகுதியை சாரிட்டிக்குக் கொடுக்கப் போறாங்க! அது மட்டுமல்ல... நாங்க தயாரிக்கிற விளம்பரப் படங்களுக்குக் கூட வாய்ஸ் கொடுக்கறாங்க" என்றான்.

சந்திரகுமார் குபீரென்று சிரித்தான். கேள்விக் குறியாகப் பார்த்த கவியரசனிடம் சொன்னான்.

"இதுதானா.. விஷயம்? என் சிஸ்டர் பண்ணின கலாட்டாவுல எல்லாரும் அரண்டு போயிட்டோம்" என்றான்.

கவியரசனும் ரசித்துப் புன்னகைத்தான்.

"ஆமா! என்கிட்டயும் ஒரே சண்டைதான்...! போலீஸ் கம்ப்ளெயின்ட் லெவலுக்குப் போயாச்சு...!" என்று சிரித்தவன் மறுபடியும் சொன்னான்.

"ஆனா...! வர்த்தினியோட டென்ஷனுக்கும் ஒரு காரணம் இருக்கு...!" என்றான்.

"என்ன காரணம்?" என்று தெரியாதவன் போலக் கேட்டான் சந்திரகுமார்.

"மீனாங்கற பிரண்ட் இந்த செல்போன் விவகாரத்துனால ரொம்ப ஷாக் ஆயிருக்கா..." என்றான்.

"ஆமாமா!" என்றான் சந்திரகுமார். "உங்ககிட்டே அவளே சொன்னாளோ?" என்றான்.

"ஆமா! ஒரு தடவை ரொம்ப சண்டை போட்டோம். அப்புறம் சொன்னா..." என்றவன் ஒரு இடைவெளிக்குப் பிறகு "ங்க" என்று சேர்த்துக் கொண்டான்.

"அப்புறம்.. வழக்கம் போல அந்த ஷீப் இந்த ஷீபா மாறிடுச்சே" என்றான் சந்திரகுமார்.

கவியரசன் புரிந்தும் புரியாமலும் பார்க்க,

"இல்லே! டைப்பிங் மாறி பிரண்ட்ஷிப்பா மாறி கிச்சோ..." என்றான்.

"ம்...!" என்று கலகலவென்று சிரித்தான்.

சந்திரகுமார் கூர்ந்து கவனித்தபடி கேட்டான்.

"அவ்வளவுதானா? அதுக்கும் மேல போயிருக்கா? அடிக்கடி யாரையோ பிரண்டைப் பார்த்துட்டு வரேன்னு வாரளே.. அது நீங்கதானா?" என்றான்.

கவியரசன் அச்சப்படுவான் ஏதோ தயங்குவான் என்றோ சந்திரகுமார் எதிர்பார்த்தால் ஏமாந்துதான் போனான்.

மெல்லியதாக ஒரு பெருமூச்சு விட்டான். 'எப்படியும் தெரியத்தான்.. போகுது!' என்று எண்ணிக் கொண்டான்.

"ஆமா.. சார்! நாங்க ஒருத்தரை ஒருவர் லைக் பண்றோம். முறைப்படி வந்து பொண்ணு கேட்கறேன்" என்றான்.

"ம்..." நினைச்சேன்! என்றான் சந்திரகுமார். அதற்குப் பிறகு இரண்டு பேரும் தங்களுக்குப் பிடித்த அந்த பெண்ணைப் பற்றி பிரியமும் அன்புமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

புறப்படும்போது கவியரசன் சொன்னான்.

"குமார்! மேடம்தான் அறிவிப்பாளர்ன்னு ஹம்சவர்த்தினிக்குத் தெரியாது! சஸ்பென்ஸ்னு சொல்லி வச்சிருக்கேன்" என்றான்.

"ஓ.கே...! கவி...! நாம சந்திக்கவேயில்லை.. ஓ.கே வா..." என்று விடைபெற்றான் சந்திரகுமார்.



ஒரே சந்திப்பில் தன்னை வீழ்த்தி விட்ட தனது வருங்கால மைத்துனனைப் பார்த்துவிட்டுத் திரும்பித் தங்கையைப் பார்த்தான்.



# 25

கெட்டி மேளம் முழங்கியது!

ரஞ்சனிக்கும், தனசேகரனுக்கும் திருமணம் விமரிசையாக நடந்து முடிந்தது.

வீட்டுப் பொண்ணுக்கு முதலில் கல்யாணம் முடிந்து அவளுக்குச் செய்ய வேண்டிய சீர்களைச் செய்து முடித்த பிறகுதான் தன் கல்யாணம் என்று சொன்ன கவியரசனை சீனிவாசனுக்கும் சந்திரகுமாருக்கும் மிகவும் பிடித்தது. ஆனால், அதற்காக தங்கையின் கல்யாணத்தைத் தள்ளிப் போடுவதில் சந்திரகுமாருக்கு சம்மதமில்லை.

தனசேகரன் சந்திரகுமாரின் நெருங்கிய நண்பனின் தம்பி, சந்திரகுமாரே வரன் பார்த்துக் கொடுத்தான். இரண்டு குடும்பங்களுக்கும் பரஸ்பரம் பிடித்துப் போனவுடனே ஒரே மாதத்தில் திருமணம் என்றார்கள்.

"ஹம்சவர்த்தினி தேர்வெழுதி முடிக்கட்டும் முடிந்தவுடனே திருமணம்" என்றார் சீனிவாசன்.

அப்படியே ஏற்பாடு செய்தார்கள்.

முதல் கட்டமாக இப்போது ரஞ்சனியின் திருமணம், திருமணத்துக்காகப் போக்குவரத்துக்கள், பேச்சு வார்த்தைகள் என்று போய் வந்து கொண்டு இருந்த போது தன் மனதில் இருந்த சந்தேகத்தை ரஞ்சனியிடம் கேட்டுத் தெளிவாக்கிக் கொண்டாள் ஹம்சவர்த்தினி.

"ரஞ்சனி! எனக்கொரு சந்தேகம்" என்றாள் மெல்ல.

"சொல்லு.. வர்த்தினி!" என்றாள்.

"இல்லே! கவி உனக்கு முறை மாப்பிள்ளை உனக்கு ஏதாவது ஐடியா இருந்துச்சோ! நான் வந்து கெடுத்தேனோ..." என்றாள்.

ரஞ்சனி ஒரு நிமிடம் அமைதியாக இருந்தாள்! பிறகு ஒரு பெருமூச்சுடன் சொன்னாள்.

"அப்படியெல்லாம்.. எதுவும்.. இல்லே!" என்று.

ஹம்சவர்த்தினி சந்தேகமாகப் பார்த்தாள்!

ரஞ்சனி அன்புடன் அவளைப் பார்த்து சிரித்தாள்.

"நானும் என்னப் பத்தி அப்படி சந்தேகப்பட்டேன், எங்கம்மா.. அப்பா.. போனதற்குப் பிறகு அந்த வீட்டுக்கு வந்ததுலேர்ந்து நானும் அத்தானும் ஒண்ணா வளர்ந்தோம். அத்தான் இருக்காங்க... அவ்வளவுதான். அவரை ரொம்பப் பிடிக்கும். வேறெதுவும் நான் யோசிச்சதில்லே! ஆனா.. நீ அவரோட வாழ்க்கையில வந்ததுக்கப்புறம் நான் யோசிச்சேன்... அத்தான்... மேல் அந்த மாதிரிப் பிரியம் இருக்கான்னு நானே அனலைஸ் பண்ணிகிட்டேன். நாம முழுமையா ஆட்சி பண்ணிகிட்டிருந்த வீட்ல இனிமே நீதான் மகாராணியா இருக்கப் போறேங்கற பொறாமைதான் அதுன்னு புரிஞ்சுகிட்டேன்.. அதுதானே.. நிதர்சனம்! நான்



வேற வீட்டுக்குப் போக வேண்டியதுதானே! எங்கம்மா அப்பா எதுவும் சொத்து வச்சிட்டுப் போகலே! அப்படி இருக்கும்போது எங்க மாமா என்னை இவ்வளவு தூரம் ஆதரிச்சதே பெருசுன்னு புரிஞ்சதுக்கப்புறம்.. தெளிவா விட்டேன்" என்றாள்.

ஹம்சவர்த்தினி ஆழ்ந்து பார்த்தாள்.

"என்னைச் சமாதானம் பண்றதுக்காக சொல்றீங்களோ?" என்றாள்.

"இல்லல்லே! நல்லா யோசிச்சுத்தான் சொல்றேன். ஒரு தாய்க்கு மருமகள் வந்தா ஏற்படற உரிமைப் போராட்டம். ஒரு சகோதரிக்கு அண்ணி வந்தா ஏற்படற உரிமைப் போராட்டம் அவ்வளவுதான்" என்றாள்.

ரஞ்சனி தெளிவாகத்தான் இருக்கிறாள் என்று தெரிந்தவுடனே ஹம்சவர்த்தினியின் மனம் தெளிவானது. அதற்குப் பிறகு இருவரும் நெருங்கிய தோழிகளாகி விட்டார்கள்.

கவியரசனுக்கும், ஹம்சவர்த்தினிக்கும் நிச்சயதார்த்தம் முடிந்திருந்தது. அதனால் சுதந்திரமாகப் பழகிக் கொண்டார்கள்.

ரஞ்சனியின் திருமணத்தில் ஹம்சவர்த்தினி முன்னின்று எல்லா ஏற்பாடுகளையும் செய்தாள்.

தனசேகரன் விரைவில் ஒட்டிக் கொண்டான். கவிரசனை நன்றாகவே கலாட்டா செய்தான்.

"ம்... உங்களுக்கு ஆள் ரெடியானவுடனே... ரஞ்சனியைக் கழட்டி விட்டுட்டீங்க..." என்று சிரித்தான்.

"ரஞ்சனியைக் கழட்டி விடலே! அழகான இடம் பார்த்து மாட்டி விட்டிருக்கோம்" என்றான் கவியரசன்.

"ஹலோ..." பொம்பளைங்களை என்னன்னு நினைச்சீங்க! என்னமோ போட்டோவை மாட்டிக் கழட்டற மாதிரி பேசிக்கறீங்க...! என்றாள் ஹம்சவர்த்தினி.

"வந்துட்டாங்கப்பா! பெண்ணுரிமை பேசிக்கிட்டு..." என்றான் சந்திரகுமார்.

"ஹலோ...! நாங்க.. உரிமை பேச ஆரம்பிச்சோம்... உங்க பாடு ரொம்பத்திண்டாட்டமாய் போயிடும்" என்றாள் சுதா.

எல்லாரும் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். சுதா பொதுவாக அவ்வளவு வாயடிக்க மாட்டாள்.

"இத பாரா...! நம்ம வைஃப் கூடப் பேச ஆரம்பிச்சுட்டாப்ல. மூவர் அணியாக்கும்?" என்றான் சந்திரகுமார்.

"மேடம்! ஆணில்லாமல் பெண்ணில்லை! திருவிளையாடல் படம் பாத்திருக்கீங்க இல்லே! தாக்ஷாயணிகிட்டே சிவபெருமான் வசனம் பேசறதைக் கேட்டிருக்கீங்க.. இல்லே!" என்றான் தனசேகரன்.

"ஆமா! ரொம்ப ரோஷமா தாண்டவம் எல்லாம் ஆடிட்டு.. அப்புறம்.. உடம்புல பாதியையே குடுத்துட்டாரு.. அதைப் பாக்கலையா?" என்றாள் ஹம்சவர்த்தினி.

"அப்படிப் போடுறி...!" என்றாள் தமயந்தி.

"யப்பா! நீங்கள்ளாம் சின்னப் பசங்க.. உங்களுக்கு அனுபவம் பத்தாது. ரொம்ப ஓவரா உரிமை பேசி சிக்கல்ல சிக்கிக்காதீங்க.. அடுத்த வேளை சோத்துக்கு திண்டாட



னும். எனக்கு வேற சுடுதண்ணி வைக்கறதுக்கும் கூடத் தெரியாது" என்றார் சீனிவாசன் சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு.

மறுபடியும் எல்லாரும் சிரித்தார்கள்.

"அப்பா! என்னப்பா.. இப்படிக் காலை வாரிட்டீங்க! ஜோரைச் சத்தியும் ஓட்டல் இருக்கு" என்றான் சந்திரகுமார்.

"நீ பேசுவ! உங்களுக்கெல்லாம் சின்ன வயசு எதைச் சாப்பிட்டாலும் சரி.. வரும்..! எனக்கெல்லாம் ஓட்டல் சாப்பாடு.. சரி.. வராதுடா" என்றார் மறுபடியும் சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு.

எல்லாரும் சிரித்தார்கள்!

கலகலவென்று சிரித்துக் கொண்டு திரும்பிய ஹம்சவர்த்தினி கவியரசன் கண்களால் தன்னை விழுங்குவதைப் பார்த்தாள்.

"ம்ஹூம்!" என்று கண்களாலேயே மிரட்டினாள்.

கவியரசன் சிரித்துக் கொண்டான்.

விழா முடிந்த மறுநாள்!

அதிகாலையிலேயே ஹம்சவர்த்தினியிடம் இருந்து போன்.

"மிஸ்டர். ராங்கால்! நான் இன்னைக்கு உங்களைச் சந்திச்சே ஆகணுமே..."

"ராத்திரி.. பூராவும் கூடதானே இருந்தே..." என்றான் கவியரசன்.

"வ்வாட்!" என்று அதிர்ந்தாள் ஹம்சவர்த்தினி!

"ஓ..! அதுவெல்லாம்.. கனவா?" என்றான் அலட்டிக் கொள்ளாமல்..."

"ஹூ- ஹூ..!" என்று கோபம் போல நடித்தாள் சிரித்து விட்டாள்.

சந்தித்தார்கள்!

"இதுதான் அந்த சஸ்பென்ஸாக்கும்" என்றான்.

"ஆமா! பார்த்தியில்ல..! உங்கம்மா.. பர்ஃபாமென்ஸ்..."

"பயங்கரமான ஆள்.. நீங்க!"

"ஏன்?" என்றான். நெருங்கி நின்றான்.

"முதல்ல... மாமியாரைக் காக்கா.. பிடிச்சவராச்சே!"

"ஹேய்! என்ன நீ! காடியாட்டமா கத்தினாங்க... உங்கம்மா..! குயில் குரல்ல பேசினாங்க.. எவ்வளவு அருமையாக இருந்தது பர்ஃபாமன்ஸ்!" என்றான்.

"ஆமா" என்றாள். அவன் இன்னும் கொஞ்சம் நெருங்கி நிற்க அனுமதித்தாள்!

"கவி..!" என்று அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

"பரவால்லை! நீங்க என் வாழ்க்கையில வந்ததுல இருந்து நல்லதாத்தான் எல்லாம் செய்யறீங்க. ஆனா.. நான்தான் உங்க மேலே சந்தேகப்பட்டேன்" என்றாள் வருத்தத்துடன்.

"அது என் மேல வந்த சந்தேகம் இல்லே! ரிதீஷ் மாதிரி ஆட்களால ஏற்பட்ட பின் விளைவு."

"ஆமா..! இப்பவும் கூட என்னால மீனாவுக்கு நேர்ந்த விஷயத்தை ஜீரணிக்க முடியலே!" என்றாள் ஹம்சவர்த்தினி கவலை தொனிக்க.



"ஆமா..! என்னாலயும் தான்! அப்புறம் அந்த முத்து- என்னவானாப்ல..!"

பெருமூச்சு விட்ட ஹம்சவர்த்தினி சொன்னாள்.

"என்னவானான்! கொஞ்ச நாள் பைத்தியம் போல ஆயிட்டான்! இப்பத்தான் கொஞ்சம்.. கொஞ்சமாத் தேறிட்டு வரான். அவனுக்கு ஏதாவது ஒரு விதத்துல உதவி செய்யணும்."

"ஆமா..! பாவம்! நமக்கே இப்படி இருக்கே! அவனுக்கும், மீனாவுக்கும் ஏற்பட்டது ரொம்ப எளிமையான காதல். மீனாவைக் கல்யாணம் பண்ணிகிட்டு அவங்க லெவலுக்கு எளிமையா ஒரு வாழ்க்கை வாழலாம்னு எவ்வளவோ கனவு கண்டிருப்பான்" என்றாள்.

"ஆனா.. மீனா.. ஒரு வகையில தைரியசாலி. தான் மட்டும் போகாம.. அந்த ரிதீஷையும் சேத்து முடிச்சுட்டுத்தானே.. போனா.."

"செத்ததுக்கப்புறம் எப்படியும் எல்லா விஷயமும் செத்ததுக்கப்புறம் வெளியே வரத்தானே போகுதுன்னு துணிஞ்சுட்டா..." என்றான் சோகமாக.

சட்டென்று ஹம்சவர்த்தினி அவன் மார்பில் சாய்ந்து கதறி விட்டாள்.

"எங்க..! மீனா.. மாதிரிப் பொண்ணுக்கு அப்படி நேரணும்" என்று தேம்பினாள்.

கவியரசன் சற்று நேரம் அவள் முதுகைத் தடவிக் கொடுத்தான்.

"நம்ம பெண்களுக்கு நிறைய சொல்லித் தரணும்! எவ்வளவுதான் நல்லவனாத் தெரிஞ்சாலும் தனியாப் போய் சிக்கிக்கக் கூடாது. புதியவர்கள் கிட்டே பழகும் போது ஜாக்கிரதையா இருக்கணும். சட்டுன்னு செல்போன் நம்பரையெல்லாம் யாருக்கும் குடுக்கக் கூடாது. இது மாதிரி விஷயங்கள் சொல்லித் தரணும்" என்றாள்.

"அவனோட இன்னொசன்ஸே அவளுக்கு ஆபத்தாய் போயிருச்சு.." என்றாள். மெல்ல மெல்லத் தேறினாள்.

கவியரசன் அவள் நெற்றியில் இதழ் பதித்தான். "எப்படியோ... மீனாவோட சாவு என்னையும் ஒரு கலக்குக் கலக்கிருச்சு..! அதை வச்சுகிட்டுத்தானே.. என்னைச் சந்தேகப்பட்டே" என்றான்.

"ஐ ம் சாரி! அது மட்டுமில்லை.. இரண்டாம் நாளே எங்க வீடு தேடி வந்தீங்களே! அதுல ஒரு அவசரம் தெரிந்தது. அதனாலதான் எனக்கு இன்னும் சந்தேகம்" என்றாள்.

"சரி.. இனி... சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவன் தானே!" என்று கவியரசன் ஆழமாகப் பார்த்தபடி கேட்டான்.

"ம்.. சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவர்தான்! ஆனா.. எல்லாமே... கல்யாணத்துக்கு அப்புறம்தான்" என்றாள்.

அவன் சிரித்து விட்டான்.

"ரொம்ப எச்சரிக்கையா இருக்கே! ஏய்! சின்னதா.. ஒரு அலவன்ஸ்.. மாதிரி..!"

"ம்.. அது தந்தாப் போச்சு.." என்றாள்.

வாங்கிக் கொண்டான்.



இப்போது அதெல்லாம் நினைவு வர ஒரு மாதிரி சிவந்த முகத்துடன் சிரித்துக் கொண்டாள் ஹம்சவர்த்தினி.

* * *

ஒரு மாதம் வேகமாக ஓடியிருந்தது.

நேற்றுக் காலையில்தான் ஹம்சவர்த்தினிக்கும், கவியரசனுக்கும் திருமணம் நடந்து முடிந்திருந்தது!

உறவுக்காரர்கள் கூட்டம்!

தியாகேசவானுக்கு வேண்டியவர்கள் கூட்டம்! கவியரசனுடைய தொழில் ரீதியான நண்பர்கள் கூட்டம் என்று ஏகக் கூட்டம்.

இத்தனைக்கும் திருமணத்துக்கு உறவினர்கள் முக்கிய மானவர்களை மட்டும் அழைத்திருந்தார்கள். ரிசப்ஷனுக் குத்தான் எல்லாரையும் அழைத்திருந்தார்கள்.

இதுதான் நல்ல நாளாம்!

முதலிரவு ஏற்பாடு செய்திருந்தார்கள்!

ஹம்சவர்த்தினியின் வருகைக்காகக் காத்திருந்தான்.

வந்தாள்!

பால், பழம்.. என்று சினிமாவில் காட்டுகிறாற்போல இல்லாமல் எளிமையாக மாடிப் படிகள் ஏறி வந்தாள்.

பின்னாலேயே அவள் தோழி நீரஜாவும், ரஞ்சனியும் வந்தார்கள்.

மாடியில் உள்ள ஹாலில் சோபாவில் அமர்ந்து ஏதோ பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான்.

படித்துக் கொண்டிருப்பது போல பால்லச் செய் தாளோ..!

நீரஜா கையில் ஒரு டேப் ரெக்கார்டரைக் கொண்டு வந்தாள்.

"மிஸ்டர்.. ராங் கால்..! நாங்க போனதுக்கப்புறம்.. இந்த கேசட்.. போட்டுக் கேப்பீங்களாம்.." என்று சிரித்து விட்டுப் போனாள்.

கவியரசன் கையில் பார்த்துக் கொண்டிருந்த கேசட்டைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான்.

"ஹேய்! ஹம்ஸ்..! என்னதிது.." என்றான்.

"தெரியலே! ஏதாவது வம்படியா பண்ணிகிட் டிருப்பாங்க" என்றாள்.

கேசட்டைப் போட்டுக் கேட்டான்.

"ஹலோ.. உங்களுக்கு இனிமே ராங் கால் வந்தா ஜாக்கிரதையாயிருங்க! அது உங்களுக்கு வர்ற மாப் பிள்ளையாக கூட இருக்கலாம்..! அப்படி வர்ற ஆளுங்க..! லேசுப்பட்டவங்களா இருக்க மாட்டாக! மாமியாரைக் காக்கா அடிப்பாங்க! புடவை கிஃப்ட் வாங்கிக் குடுப்பாங்க! அப்புறம், உங்களையே மடக்கிப் போடுவாங்க! இப்படி ஒரு விளம்பரம் உங்க ரேடியாவில வந்தா.. அது கவியரசன் கம்பெனி விளம்பரமாத்தான் இருக்கும்'' என்று இப் படியே போனது.

சிரித்துக் கொண்டே கவியரசன்.. ஆப் செய்தான்.

"ஏய்! எல்லாரும் என்னமோ ராங் கால் மூலமா உன்னைக் கையில அள்ளிப் போட்டுக்கிட்ட மாதிரியே பேசறாங்களே! தப்பாய் பேசறாங்க!" என்றான்.



நெருங்கி இழைந்தாள்.

"எதை வச்சுச் சொல்றீங்க?" என்றாள் அவன் கைகளுக் குள் அடங்கியபடி.

"நானும் என்னைத் தொலைச்சுட்டேனே! அதைப் புரிஞ்சுக்கணும்" என்றான்.

"ம்..!" என்றாள்.

"நான் ஸ்கூல் டேஸ்ல குற்றாலக் குறவஞ்சி படிச் சிருக்கேன். அதுல.. தேனருவித் திரையெழும்பி வானின் வழி ஒழுகும்னு அது மாதிரி.. ஒரு ஸ்வீட் வாய்ஸ் கிடைச்சது. ஆனா.. அவங்க வாரிசோட வாய்ஸோ.. அதை விட ஸ்வீட் அந்த இனிய ஒலி.. அப்படியே வானத்தின் வழியா தேனருவியாய் பொழிஞ்சு.. என்னையே வாரிக் கிச்சே! அத யாரும் சொல்ல மாட்டேங்கறீங்க..!" என் றான்.

அவள் 'களுக்'கெனச் சிரித்தாள்.

"நல்லா உளர்றீங்க!" என்றாள்.

"குட்! அப்பக் கரெக்டான பாதையில போய்க்கிட்டிருக் கேன்னு அர்த்தம்.." என்றான்.

ஹம்சவர்த்தினி தொடர்ந்து சொன்னாள். "மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்னு ஒரு வரி அதுல வரும் தெரியுமா?"

"அப்படீன்னா" என்று அர்த்தம் தெரியாதவன் போலக் கேட்டான்.

"இல்லே! பெண் குரங்குகள் சாப்பிட்டுட்டு குடுக்கற மிச்ச கனிகளுக்காக ஆண் குரங்குகள் கெஞ்சிகிட்டு நிக்குமாம்."

"ஆமா! குரங்குக்கே அந்த நிலைமை! அப்புறம் மனுஷனுக்கு கேட்கணுமா?" என்று அவன் கெஞ்ச ஆரம்பிக்க..!

அவள் மிஞ்சினாள்..

கெஞ்சுவதும், மிஞ்சுவதும், கொஞ்சுவதுமாக அவர்கள் இல்லறம் தொடர்கையில் நல்லறமாக இருக்கும் என்று நகர்வதுதானே நல்லவர்களுக்கு அடையாளம்.

அதோ! "புரிஞ்சாச் சரி" என்று சிரிக்கிறார்கள் கவியரசனும், ஹம்சவர்த்தினியும்!